# நன்மறை காட்டும் நன்னெறி.

முதற்பங்கு.

Q6:21
N18
77254

# நன்மறை காட்டும் நன்னெறி.

27 MAR 1918

## முதற்பங்கு.

## திருமறையியல்.

கருணாநிதி வைத்தியசாலை மானேஜர்,

மு. ஆபிரகாம் பண்டிதரால்,

இயற்றப்பெற்றது.

தஞ்சை, கருணாநிதி வைத்தியசாலை,

லாலி எலெக்டிரிக் அச்சுக்கூடத்தில்,

அச்சிடப்பட்டது.

தஞ்சாவூர்.

1918.

*All Rights Reserved.*

27 MAR 1918
MADRAS





# முகவுரை.

பொன்னெனச் சிறந்து விளங்கும் நன்மறையையும் உயிரிலும் மேலான நன்னெறியையும் அறிய விரும்பும் எனது அன்பர்களே! நன்மறையை அறிவதற்குப் பரமான்மாவின் கிருபையே முதற் காரணமாய் இருக்கிறது. பரமான்மாவின் கிருபை இன்னதென்றும் அதை எப்படி அடைவதென்றும் நன்மறை நமக்குக் காட்டுகிறது. நன்மறையின் உட்பொருளை அறிந்து அதன்படி நாம் நடப்பதே நமது முக்கிய கடமையாகும்.

ஒரு உத்தம பலனை அடையச் சொல்லும் விதிமுறைகள் வேறு; அவ்விதி முறையின்படி சாதனைக்குக் கொண்டுவருவது வேறு. சாதனைக்குக்கொண்டுவராமற் போனால் விதிமுறைகளால் பயன் என்ன? விதித்தவைகள் இன்னவையென்றறியாமல் சாதிப்பதொரு பருவம். அவ்வுண்மையை அறிந்து தம் அனுபவத்திற்குக்கொண்டுவருவது மற்றொரு பருவம். இப்படியே நன்மறையிற் சொல்லப்படும் மெய்ப்பொருளை அறிந்தவர்களும் அறியாதவர்களுமாய் நாம் இருக்கிறோம்.

எங்குமுள்ள மெய்ப்பொருளை நாம் உடையவர்களாய் இருக்கிறோமென்று கண்டு அம்மயமாயிருக்கவேண்டுமென்று வருந்தித் தீமையை விட்டு நீங்குவதே நன்னெறியாம். இந்நன்னெறிக்குப் பரமான்மாவே துணைவராகவும், பிரமமே நாம் நோக்கும் தலைவராகவும் இருக்கிறார். ஆணவம், காமம், மாயை என்ற மும்மலமற்ற இடமே வீடாகவும் சீவகாருண்யச் செயல்கள் விளங்க நடக்கும் சீவியமே சீவபாதையாகவும் இருக்கின்றன.

இப்பெரும் பொருளைச்சொல்ல நான் தகுதியற்றவனாக இருந்தாலும் உண்மையை அறியாதவர்கள் ஏளனம் செய்தாலும் நன்னெறியில் நடக்கத் தவறிப்போகும் பலர் குறை கூறினாலும் நன்னெறியை விரும்பும்சிலருக்காவது பயன்படும் என்பதை நினைத்தே இதை எழுதத் துணிந்தேன்.

பரமான்மாவை அறிவதற்கும் அவரோடு இணங்கியிருப்பதற்கும் அவரைப்போல் தன்னை வெறுத்துச் சீவகாருண்யம் உடையவர்களாய் நடந்து அழிவில்லாத நித்திய பேரின்பத்தை அடைய விரும்புகிறவர்களுக்கே இந்நூல் சொல்லப்பட்டது.

இதில் கிறிஸ்து பரமான்மாவின் சீவியமும் அவரைச் சீவனாகவுடைய உத்தமர்களின் சீவியமும் சொல்லப்படுகின்றன. அருள்வேதத்தின் முடிவை அறிய எவன் விரும்புகிறானோ அவன் முடிவில் ஞானமடைகிறான்; ஞானியாகச் சீவிப்பான். தெய்வத்தையே உடையவனாகிறான். தெய்வத்தின் பிள்ளையாகிறான். தெய்வ சித்தத்தையறிந்து அதன்படி நடக்கிறான்.

உலகத்தில் தெய்வசித்தத்தை அறிந்து அதன்படி நடப்பதற்கு அந்தந்த தேசத்திற்குத் தகுந்தபடியும் சனங்களுக்குத் தகுந்தபடியும் அருளப்பட்டிருக்கும் வேதத்திலும் அநேக படித்தரங்கள் உண்டு. அவைகளில் ஒன்றையாவது விட்டுவிடாமல் அனுசரித்து அதாவது கடந்து எல்லாப் படிகளையும் தாண்டி யாவரும் வீடடையவேண்டுமென்று விரும்புகிறேன். வீடடைய உதவியாயிருக்கும் படிகளில் எந்தப்படியிலாவது நின்றுவிட்டால் நாம் வீடடையமாட்டோமே.

எனக்கு அருமையானவர்களே! வேதத்தின் மறைபொருளை நான் சொல்வதென்று நினைத்தாலும் இப்போது சொல்லக்கூடியவைகளை மாத்திரம் சில சொன்னேன். மற்றவைகளைச் சொல்லாதிருக்கவேண்டியதாயிருக்கிறதென்று வருத்தமடைகிறேன். நீங்கள் தேவ புத்திரர்களாயிருக்கிறீர்கள் என்றும் அந் நிலையைக் கீழ்ப்படியாமையினால் எப்படி இழந்தீர்களென்றும் சிவகாருண்யத்தினால் அவ்வுன்னதநிலையைத் திரும்ப அடையலாமென்றும் உலகத்திற்குச் சொல்ல வந்த உத்தமனை உலகத்தவர் என்ன செய்தார்கள் என்பதை நாம் அறிவோம். ஆயினும் உண்மையில் சிலவற்றையாவது சொல்லுவது என் கடமையாகும். என் கடமைகளை நான் செய்கையில் பரமான்மாவும் அவரைப் பின் பற்றி நடக்கும் தாசர்களும் எனக்கு ஆதரவாயிருப்பார்களென்று நம்பியே இதை எழுதினேன்.

கிறிஸ்து பரமான்மாவைச் சோதித்த சாத்தானின் மூன்று கேள்விகளையும் அவைகளின் மறு உத்தரவையும் முதலாக எடுத்துக்கொண்டு அம் மூன்றின் பொருளை மூன்று பாகமாகப் பிரித்தும் அவற்றை அறிவதற்குப் பரமான்மாவின் சில வசனங்களையும் சில பொதுக்குறிப்புகளையும் முதல் பாகமாகச் சேர்த்தும் சொல்லியிருக்கிறேன்.

நான்கு பாகங்களில் ஒவ்வொன்றையும் தனித்து வெளிப்படுத்தவேண்டுமென்று சில அன்பர்கள் கேட்டுக்கொண்டதனால் நான்கு பாகங்களும் முடியுமுன் முதல் பாகத்தைத் தனியாக வெளியிட நேரிட்டது.

நன்மறையின் பொருள் பூரணமாய் விளங்கிக்கொள்ளும்படி மற்றும் மறைகளிலுமிருந்து சில திருஷ்டாந்தங்களும் இதனுடன் சேர்க்கவேண்டியதாயிற்று.

இங்ஙனம்

**மு. ஆபிரகாம் பண்டிதர்.**

# நன்மறை காட்டும் நன்னெறி.

## முதற்பங்கு.

## பொருளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| 1-வது பொதுக் குறிப்புகள் ... ... ... ... ... ... | 1 |
| கிறிஸ்து பரமான்மாவின் சிறு பிராயத்தின் வளர்ச்சி ... ... ... | 2 |
| இயல் வேதம் அருள் வேதத்தின் கருத்து ... ... ... ... | 3 |
| பரமான்மாவின் சித்தப்படி செய்தல் ... ... ... ... ... | 4 |
| இந்தியாவின் பெருமை ... ... ... ... ... ... | 6 |
| தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான் ... ... ... ... | 7 |
| தன்னை அறிந்தவன் அடையும் நாலு படிகள் ... ... ... | 8 |
| பரமான்மா எப்பொழுதும் உங்களோடு இருக்கட்டும் ... ... ... | 10 |
| பரமான்மாவை எல்லாவற்றிற்கெல்லாமாய்க் கண்டு அடைதல் ... | 11 |
| 2-வது பொதுக் குறிப்புகள் ... ... ... ... ... ... ... | 12 |
| பல மார்க்கங்களின் ஒற்றுமை ... ... ... ... ... | 13 |
| மந்திரத்திற்கு மாறுன நடை ... ... ... ... ... ... | 14 |
| பரமண்டல மந்திரத்திற்கு மாறுன நடை ... ... ... ... | 15 |
| நன்மை நிறைந்த நீங்களே பரமான்மாவிற்குக் காணிக்கை ... ... | 16 |
| தீமைகளை விட்டு விடுவதே அவருக்கு உகந்த பலி ... ... ... | 17 |
| நன்மைகளைச் செய்வதே அவருக்குத் தகுந்த காணிக்கை ... ... | 18 |
| அருள் வேதத்தின் மறை பொருள் ... ... ... ... ... | 19 |
| அண்டத்தின் உற்பத்தி ... ... ... ... ... ... | 20 |
| பிண்டத்தின் உற்பத்தி ... ... ... ... ... ... | 22 |
| பிண்டத்தின் உயர்வு ... ... ... ... ... ... ... | 25 |


## திருமறையியல்.


| | |
|---|---|
| 1. மறையின் அருள் மொழி ... ... ... ... ... ... | 29 |
| 2. பிதா குமாரன் சீவான்மா ... ... ... ... ... | 31 |
| 3. கிறிஸ்து பரமான்மாவின் வேண்டுதல் ... ... ... ... | 34 |
| 4. பரமான்மா சீவான்மாவிற்கு உதவுதல் ... ... ... ... | 34 |


OFFICE ... MADRAS

| | | பக்கம். |
|---|---|---|
| 5 | பிதா | 36 |
| 6. | சுத்த ஆவி | 38 |
| 7. | மாமிசம் | 40 |
| 8. | பொல்லாத ஆவிகள் | 42 |
| 9. | ஆலயம் | 44 |
| 10. | பரலோக இராச்சியம் | 48 |
| 11. | சீவவிருட்சம் | 55 |
| 12. | பருவதம் சிங்காசனம் | 57 |
| 13. | கடவுளையறியும் நல்லறிவு அதாவது ஞானம் | 63 |
| 14. | அறிவுறுத்தல் | 69 |
| 15. | நன்னெறிக்கு முன்னெறி | 73 |
| 16. | உடம்பு | 77 |
| 17. | பரமான்மாவும் உடம்பும் | 79 |
| 18. | கடவுளும் உடலும் | 82 |
| 19. | மண் கோவிலும் உடலும் | 84 |
| 20. | கோவிலில் நடக்கும் ஆராதனைகளும் உடலும் | 86 |
| 21. | நமது உடல் தெய்வத்திற்குப் பூந்தோட்டமாயிருக்கிறது | 91 |
| 22. | நமது உடல் தெய்வம் வசிக்கும் ஒரு மலையாயிருக்கிறது சீயோன்மலை | 108 |
| 23. | சீயோன் மலையின் அழகு | 110 |
| 24. | மலையின் அடிவாரம் | 112 |
| 25. | மலை அடிவாரத்தின் வேள்வி | 113 |
| 26. | சீயோன் குமாரத்தி | 115 |
| 27. | மாயாபுரியின் சந்தை | 118 |
| 28. | மாயாபுரியின் மக்களுக்கு நன்னெறி புகட்டும் முனிவர் | 124 |
| 29. | மாயாபுரியார்க்கு நன்னெறி உணர்த்தும் துறவி | 126 |
| 30. | துன்பம் இன்னதென்பது | 130 |
| 31. | துன்பத்தின் காரணம் | 131 |
| 32. | துன்பத்தை நீக்கும் வழி | 132 |
| 33. | துன்பத்தின் முடிவு | 132 |
| 34. | சீயோன் குமாரி உணர்வடைதல் | 134 |
| 35 | பரமான்மாவின் பெருமையைச் சொல்லும் முனிவர் | 135 |
| 36. | பர்வத புத்திரிக்கு முனிவர் பரமான்மாவைப்பற்றிச் சொல்லுதல் | 139 |
| 37. | நம்பியார் | 142 |
| 38. | சீயோன் குமாரத்தி நம்பியாரின் வரலாறு வினவுதல் | 143 |
| 39. | பரமான்மாவின் வரலாற்றுச் சுருக்கம் | 145 |
| 40. | பரமான்மா பிறந்தபொழுது தேவதூதர்கள் பாடியது | 147 |
| 41. | பரமான்மாவை மேய்ப்பர்கள் சந்தித்தல் | 148 |

OFFICE OF THE ... MADRAS. 27 MAR 1918



பக்கம்.

42. பரமான்மாவை மூவரசர் பணிதல் ... ... ... ... ... 149
43. மூவரசர் நம்பியாருக்குப் பரமான்மாவின் நட்சத்திரத்தைப் பற்றிச் சொல்லுதல் ... ... ... ... ... 149
44. மூவேந்தரும் பரமான்மாவைக்கண்டு வணங்குதல் ... ... ... 158
45. பரமான்மாவைக் காண வாக்குப்பெற்ற ஒருவர் குழந்தையைக் காணல் 159
46. பரமான்மாவாகிய குழந்தையை அன்னகாமமன்னவன் கொல்ல வழி தேடல் ... ... ... ... ... ... 159
47. சீவர்களின் நன்மையாவும் பரமான்மா அடைதல் ... ... ... 160
48. பரமான்மா சீவர்களைக்காத்து அலங்கரித்தல் ... ... ... ... 162
49. பரமான்மா சீவர்களை மகிழ்வித்து விருத்தியாக்கல் ... ... ... 163
50. பரமான்மாவால் கொடுக்கப்பட்ட நீதியின் வெள்ளுடைகள் ... ... 166
51. அன்னமயகோசம் நற்குணங்களைச் சிறைப்படுத்தலும் பரமான்மா அவற்றை விடுவித்தலும் ... ... ... ... ... 167
52. சீவான்மா சிறு பிராயமாயிருக்கையில் பரமான்மாவின் பிரியப்படி செய்ய விரும்புதல் ... ... ... ... ... ... 172
53. சீவான்மா மாயாபுரியின் மயக்கத்தை வெறுத்து ஞானதீட்சை பெற்று சோதிக்கப்படுதல் ... ... ... ... ... ... 173
54. சோதனைக்காரன் ... ... ... ... ... ... ... 175
55. திருமறையியல் முடிவுரை... ... ... ... ... ... 180

கடவுள் வணக்கம்.



OFFICE OF THE ... 27 MAR 1918 MADRAS.

# நன்மறை காட்டும் நன்னெறி.

## 1-வது போதக்குறிப்புகள்.

1. அமுதினும் இனிய எனது அருமை மக்களே! ஆருயிரினும் சிறந்த மனுகுலத்தோர்களே! உங்களுக்கு மங்களமுண்டாகுக.

2. நீங்கள் உலக காரியங்களிலும் ஆவிக்குரிய காரியங்களிலும், இம்மை, மறுமை என்ற இருநிலைகளிலும் நன்மையும் மேன்மையுமுடையவர்களாயிருக்க நான் மிக விரும்புகிறேன்.

3. நாம் உடலுக்கேற்றவண்ணம் நன்றாய் வளர்ந்து வலுக்கொண்டு வாழவும், நம்மைத் தவிர நமது சுற்றத்தார், அயலார், நம் நாட்டார் யாவரையும் நம்மை நாம் நேசிப்பது போலவே நேசித்து, நம்மால் அவர்களும் அவர்களால் நாமும் பெறவேண்டிய நன்மைகள் யாவும் பெறவும் வேண்டுகிறேன்.

4. நாம் அடையவேண்டிய எல்லாப் பொருளிலும் சிறந்த நம்மையே நாம் அறியவும், நம்மை அறிந்தபின் நமது உயிரினும் சிறந்த பரமான்மாவை அறிந்து அவர் சொல்லிய நல் வழியில் நடக்கவும், அதன்பின் நம்மை வெறுத்து அவரிடத்திலேயே அன்பு பாராட்டவும், தமது அன்பர்களுக்கு அவர் கொடுக்கும் அளவில்லாத இன்ப நிலையைப் பெறவும் விரும்பிச் சில சொற்களைச் சொல்லுகிறேன்.

5. இவைகள் உங்களுக்குப் பயன் தரக்கூடியவைகளாயிருக்குமென்று நம்புகிறேன். இவைகளின் உண்மை உங்களுக்கு நன்றாய் விளங்கும்படி பரமான்மாவைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

6. நீங்கள் தீமை செய்யாமல் நன்மை செய்யவும் தீமையினின்று உங்களைக் காத்து நல்வழியில் நீங்கள் நடக்கவும் வழிகாட்ட வந்த கிறிஸ்து பரமான்மா, தாம் சிறு குழந்தையா யிருக்கையில் உடல் வளர்ச்சியிலும், மனித அன்பிலும், ஞானத்திலும், தேவ அருளிலும் எப்படி வளர்ந்தாரோ அப்படியே நீங்களும் மேன்மேலும் வளரவேண்டு மென்று நினைத்தே இவைகளைச் சொல்லுகிறேன்.

7. "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை யல்லாமல் ஒருவனும் ஜீவனைக் கண்டடையான், சத்தியத்தைக் குறித்து சாக்ஷி கொடுக்கவே பிறந்தேன், சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்று திருவாய் மலர்ந்தருளிய கிறிஸ்து பரமான்மா, தம்மைக் கண்டடையும்படி உங்களுக்கு அருள் புரிவாராக.

8. உடம்பின் வளர்ச்சிக்கு உதவியாக நீங்கள் அறியவேண்டிய சில உலக காரியங்களையும், நம் அயலாரை உள்ளபடியே நேசித்து அவர் களால் நாம் அடைய வேண்டிய நன்மைகளுக்காக அறிந்துகொள்ள வேண்டியவைகளையும், ஞானத்தை அதாவது பரமான்மாவைக் கண்ட டைந்து அவர் அருளைப்பெறுவதற்கான சில காரியங்களையும் உங்களுக் குச் சொல்வது நல்லதென்று என் மனம் நெடுநாளாக என்னைத் தூண்டிக் கொண்டே இருந்தது.

9. நான் சொல்வதில் சில சொற்கள் அதாவது மார்க்கத்திற்கடுத்த சில மொழிகள் இயல் வேதத்தின் சாரமாயும் மறைபொருளாயும் இருக்கும்.

10. அவைகளை உள்ளபடியே அறிந்துகொள்ள முயற்சி செய்யவேண் டும்; அதில் ஒரு உண்மை உங்களுக்கு விளங்குமானால் மற்றவைகளை நீங் கள் அறிந்து கொள்வது மிக எளிதாகும்.

11. அறிந்துகொள்வதைப் பார்க்கிலும் பழக்கத்திற்கு வந்துவிடு மானால் இவற்றினும் அருமையானவைகளை நீங்களே கண்டு கொள்ளலாம்.

---

12. உலகத்தவர் யாவருக்கும் பெரியோர்களால் அருளப்பட்ட அருள் வேதம் இயல் வேதத்தின் மறைபொருளையே வெளிப்படையான குறிப்பு களால் வேதமாக அடக்கிக் கொண்டிருக்கிறது.

13. எவன் ஒருவன் அருள் வேதத்தின் மறைபொருளை அறிய முயல் கிறானோ அவன் இயல் வேதத்தின் உயிராகிய பரமான்மாவையும் காணும் படி பெரியோர்கள் மறைதந்தார்கள்.

14. அவைகள், வசிக்கும் நாடுகளாலும், பேசும் மொழிகளாலும், காலங்களாலும் வெவ்வேறு மார்க்கங்களாக ஏற்பட்டிருந்தாலும், அவைகள் யாவும் அவைகளைக் கைக்கொண்டு நடக்கிறவர்களுக்கும் பெரும்பான்மையும் அறிந்து கொள்ளக் கூடாத மறைபொருளாயிருக்கின்றன.

15. இது காரணமாக மார்க்க வேறுபாடுகளும் நிந்தனைகளும் பிரிவினைகளும் உண்டாகிக் கொண்டே வருகின்றன.

16. சத்திய வேதத்தைக் குறித்து சாட்சி கொடுக்க வந்த கிறிஸ்து பரமான்மாவின் மார்க்கம் மற்றைய மார்க்கங்களிலும் பிந்தினதா யிருக்கிறது போலவே மேலானதாகவுமிருக்கிறதென்று நீங்கள் அறியவேண்டும்.

17. நற்போதனையின்படி பழக்கமும், நல் விருப்பத்தின்படி செய்கையும் ஒருமித்திருக்க அவருடைய வாழ்நாளில் நீங்கள் காணலாம்.

18. அவர் எந்த மார்க்கத்தையும் எந்த வணக்கத்தையும் குறைகூறவில்லை. ஆனால் விளங்காத இடத்தை விளங்கிக்கொள்ளச் சொல்லுகிறார்.

19. அவருடைய வாழ்நாள் மாசு மறுவற்றுத் தூய்மையுடையதாயிருப்பதாலும் உங்கள் நன்மையையே விரும்பி அதாவது நீங்கள் நன்மையை எப்படிச் செய்ய வேண்டுமென்று உங்களுக்குக் காட்டவே வந்திருப்பதாலும் அவர் சொற்களின்படி நீங்கள் செய்யும் பொழுது உங்களில் பிறக்கும் பரமான்மா கிறிஸ்து பரமான்மாவின் சாயலாகவே இருக்கும் என்பதை நீங்கள் நன்றாய் அறிந்துகொள்ள அங்கங்கே பொதுவாகக் குறிக்கப்படும் சில காரியங்கள் உங்களுக்குள்ளேயே இருப்பவைகளாக உவமித்துச் சொல்லுகிறேன் என்று நீங்கள் அறியவேண்டும். சொல்லியவைகள் உங்கள் பழக்கத்திற்கு வரும்பொழுது அவற்றின் உண்மையைத் தெரிந்துகொள்வீர்கள்.

20. அருள் வேதத்தின் முடிவான மறைபொருள்கள் இயல் வேதத்தின் மிக எளிதான வெளிப் பிரகாரங்களுக்கு மட்டும் வந்து எட்டக் கூடியவைகளாயிருக்கும்.

21. அவைகளின் உதவியால் பரமான்மா கோவிலாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் உள் வீடாகிய உங்கள் மனதுள் சென்று தெய்வ பதியாகிய பரமான்மாவையும் அவரோடு கூட அவரை வணங்கி நிற்கும் அன்பர் திருக்கூட்டத்தையும் அவர்களுக்கு வேண்டும் ஏவல் புரிந்து நிற்கும் பணிவிடை ஆவிகளையும் நீங்கள் நேரில் காணும்பொழுது உங்களுடைய மகிழ்ச்சி மிகுதியாயிருக்கும்.

22. தெய்வ உண்மை அறிய வேண்டுமென்று இதன்முன்னிருந்த கலக்கமும் தவிப்பும் ஓடிப்போம்.

23. "நாங்கள் மீட்கப்பட்டிருக்கிறோம்" என்கிற உறுதியும் "உங்களுக்கு சமாதானம்" என்றும் "இன்றைக்கு இந்த வீட்டிற்கு ரக்ஷிப்பு வந்த"தென்றும் சொல்லும் கிறிஸ்து பரமான்மா உங்களோடு கூடவே இருக்கிறார் என்றும் நீங்கள் திட்டமாய் அறிந்துகொள்வீர்கள்.

24. தெரியாத இடத்தில் வழிகாட்டி, துன்பம் நேரிட்டபொழுது துயர் நீக்கி, குறைவானவைகளை நிறைவாக்கி உங்கள் செயல்கள் யாவிலும் பரமான்மா தாமே உயர்ந்திருப்பதையும் பிதா பெருமைப் படுவதையும் நீங்கள் நேர்நோக்காணலாம்.

---

25. உலகம் செய்யும் துன்பங்களினால் நீங்கள் மிகுந்த மயக்கமுற்றுத் தள்ளாடிக் கரையேற முடியாத பள்ளத்தாக்கில் ஆருமின்றித் தவித்துக் கொண்டிருக்கிறதாக அறிந்தாலும் முடிவில் பரமான்மாவின் திருக் கரங்களில் சுமக்கப்படும் குழந்தைகளைப் போல மிகவும் பத்திரமாய் இருக்கிறீர்களென்பதை அறிவீர்கள்.

26. நீங்கள் கண்டு மலைத்த துன்பங்கள் எத்தனையோ அத்தனையும் உங்களுக்கு நன்மையையே தரும்படி திறந்து வைக்கப்பட்ட களஞ்சியங்கள் போலிருக்கின்றனவென்று உண்மையாகக் காண்பீர்கள்.

27. இவை யாவற்றிலும் பரமான்மாவின் விருப்ப மிருந்ததென்றும் இவைகளால் உங்களுக்கு நன்மையுண்டாக வேண்டுமென்று அவரே இப்படிச்செய்தாரென்றும் நீங்கள் அறியும்பொழுது அவருடைய திருவருள் எவ்வளவு ஏராளமென்று அவரைப் போற்றுவீர்கள்.

28. எல்லைபற்றதாய் எல்லையுடையதாய் பெரிதாய் மிகச் சிறியதாய் நீங்கள் காணும் எல்லாப் பொருள்களுமாய், அவைகள் அல்லவுமாய், எல்லா அதிகாரமும் எல்லாவல்லமையும் உடையவராய் விளங்கும் அவரை, உங்களில் நீங்கள் அறிந்தது போலவே, படைப்புகள் யாவற்றிலும், முடிவற்றதாய் என்றுமுள்ளதாய் தூய்மையுடையதாய் எங்கும் நிறைந்ததாய் உள்ளும் புறமும் நிறைந்திருக்க நீங்கள் காணும்பொழுது உங்களுடைய மகிழ்ச்சி குறைவற்றதாகும்.

29. இதன்பின் உங்களை இதுவரையும் அருளாலும் இரக்கத்தாலும் முடிசூட்டி நின்ற பரமான்மாவின் செயல்களை அறியும் அறிவினால் நீங்கள் நிரம்பப்பெற்று, அவரால் தீமையினின்றும் விலகி நீங்கள் காணும் எவையும் உள்ளபடியே அவர் வடிவாகக் கண்டு அங்கங்கே பரமான்மாவின் விருப்பம் நிறைவேறச் செய்யவேண்டியவைகள் யாவையும் மிக்க மகிழ்ச்சியுடன் குறைவின்றி இடைவிடாமல் செய்யவும் இடர் தீர்க்கவும் இரங்கவும் முற்படுவீர்கள்.

OFFICE OF THE ... 27 MAR 1918 MADRAS

30. நாளடைவில் அருட்பெரு வாரியில் கலந்துகொள்வீர்கள். தன்னைப் போல் பிறனை நேசிக்கும் உயர்நிலை (நிர்விகற்பசமாதி) கைகூடும். நற்குணம் நற்செய்கை நிறைந்தவர்களாவீர்கள். இருவினையாலும் துன்பப் படாத நிர்வாண திசை (முத்தி நிலை) பெறுவீர்கள்.

31. உலகத்தில் நீங்கள் உயிரோடிருக்குமளவும் செய்வன யாவும் பரமான்மாவின் கட்டளையென்றும் அவற்றைச் செய்வது நமது கடமையென்றும் அவைகளால் வரும் மகிமை பரமான்மாவுக்கே என்றும் விருப்பு வெறுப்பற்றுச் செய்வீர்கள்.

32. உண்பதும் உடுப்பதும் கூட அவருக்கென்றே நினைத்து அளவாக உண்டு உடுத்து வருவீர்கள். அப்படியே மற்றும் உலக காரியங்கள் ஒவ்வொன்றும் ஒழுங்குபடும்.

33. ஓரே சீரான நடையும் ஒழுங்கும் உங்கள் வாழ்நாளில் உறுதிப்படும்.

34. நீங்கள் எதைச் செய்தாலும், பேசினாலும், நினைத்தாலும் பரமான்மாவின் திருவுளம் இதில் எப்படியிருக்கிறதென்று ஆராய்ந்து செய்வீர்கள்.

35. அப்படி நடப்பீர்களானால் உலகத்தார்க்கு மலையில் கட்டப்பட்ட பட்டணம்போலவும் இருள் நீங்கவிளங்கும் ஒளியைப் போலவும் தன்னுருக் கரைந்து சுவை கொடுக்கும் உப்பைப் போலவும் நீங்கள் இருப்பீர்கள்.

36. உங்கள் நற்செய்கைகளால் உங்களைத் தீவினையினின்றும் மீட்டவராகிய பரமான்மாவும், அவர் தந்தையும் உங்கள் தந்தையுமாகிய பரமபிதா மகிழ்வடைவார். உலகமும் அவரைப் பெருமைப் படுத்தும். அவரும் உங்களை மேன்மைப் படுத்துவார்.

37. இம்மேலான நிலையை ஒவ்வொருவரும் அடையவேண்டுமென்ற உள்நோக்கமுற்ற பெரியோர் தாம் கண்ட உண்மைகளைத் தம்மை அடுத்தவர்க்கும் தம் மரபில் வந்தவர்க்கும் உணர்த்திவந்தார்கள்.

38. அவைகளில் உயர்வானவைகளையும் உங்களால் அறிந்துகொள்ளக் கூடியவைகளையும் அவர்களால் விளக்கமாகச் சொல்லப்படாதவைகளையும் தவறுதலாய்ப் பொருள்படும் சில மறைபொருள்களையும் உங்களுக்குச் சொல்வது நன்மையாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது.

39. உலகத்தில் தொன்றுதொட்டு நாகரீகத்தை யடைந்திருந்த நம் இந்தியா, உலகத்தின் எல்லா நாடுகளின் தன்மையையும், வளப்பத்தையும், செல்வத்தையும், வெப்பங் குளிர்ச்சிகளையும், பெரிய ஆறுகளையும், மலைகளையும், அருமையான பச்சிலைகளையும், அறுசுவைப் பொருள்களையும், மணந்தருபொருள்களையும், மண் இனப் பொருள்களையும், புல் பூண்டு வகைகளையும், உயிர் இனங்களையும், மக்கள் வேறுபாடுகளையும், மார்க்க வேறுபாடுகளையும் உடைய இடமாயிருக்கிறது.

40. எல்லாக் கலைகளையும் நன்மார்க்கங்களையும் தெய்வ மறைபொருள்களையும் எல்லா நாடுகளுக்கும் கற்பிக்கும் விதை நிறைந்த களஞ்சியம் போல் இருக்கிறது.

41. இதில் தோன்றிய பெரியோர்களில் பலர் மிகவும் அரிய தவம் செய்து அருட் செல்வங்களைப் பெறவும் அதனால் என்றும் அழிவற்ற நிலையையும் நிர்விகற்ப சமாதியையும் அடையவும் இம்மை மறுமைக்கான காரியங்கள் யாவையும் நன்குணர்ந்து பிறர்க்கு உதவியாக நூல்கள் இயற்றவும் கற்பசித்தி பெற்று நெடுநாள் உயிரோடிருக்கவும் எற்ற கல்லூரியைப்போலவுமிருக்கிற தென்று நீங்கள் அறியவேண்டும்.

42. நம் இந்தியாவிலுள்ள பெரியோர்களின் உட்கருத்தையும் கிறிஸ்து பரமான்மாவின் வாழ்நாளில் காட்டிய நன்னடக்கையையும் ஒன்று சேர்த்து நன்மார்க்கத்தில் நீங்கள்செல்வதற்கு இன்றியமையாதவைகள் எவைகளோ அவைகளைமட்டும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

43. ஒவ்வொரு மார்க்கத்திற்கும் தலைவர்களாகத்தோன்றிய பெரியோர்கள் என்ன செய்தார்களோ என்ன சொன்னார்களோ அவைகள் மிகவும் சிறந்தவைகளாய் இருக்கவேண்டுமென்று அந்தந்த மார்க்கத்தைக் கொண்டாடும் மக்கட் பெருக்காலும் காலநீடிப்பாலும் நன்மார்க்கத்தாலும் அறிந்துகொள்ளலாம்.

44. ஆனால் அவர்கள் மறைந்த பின்பு அவர்கள் கூடவேயிருந்த அடியார்களின் கருத்து வேறுபாடுகளாலும் கைக்கொண்டு வரும் முறையாலும் பல காரியங்கள் உலகத்திற்கேற்ற வண்ணம் திருப்பப்பட்டு உண்மை மறைந்துபோய் ஒன்று மற்றொன்றாய் மாறிப்போகின்றது.

45. இது எப்படியோ அப்படியே மார்க்கத்தின் உண்மையை அறிந்து கொள்ளக்கூடிய அறிவாளிகளும் மிகச் சிலரே. அறிந்த உண்மையைச் சொல்லவும் அஞ்சி அறிஞர்களும் ஒதுங்கி நின்றார்கள்.

---

46. அறிஞர்கள் தம் நெடுநாள் தியானத்தின் முடிவில் தன்னை அறிவதும் அல்லது தான் யாரென்று அறிவதும் தனக்குத் தலைவனை

பரமான்மாவை அறிவதும் அவர் விருப்பத்தின்படி செய்வதுமே முடிவென்று கண்டார்கள்.

47. கிறிஸ்துபரமான்மா வேதத்தின் முடிவாகிய வேதாந்தத்தைச் சொல்லவில்லை என்று பலர் குறைகூற நான் கேட்டிருக்கிறேன்.

48. ஆனால் அவரோ வேதாந்தத்தில் இதுவரையும் சொல்லப்பட்ட தன்னை அறிதல் என்ற முதற்படியை ஒப்புக்கொண்டு அதற்கு மேல் உள்ள மூன்று படிகளையும் கற்பித்தும் அப்படியே நடந்தும் நடத்தியும் முன்மாதிரி காட்டினார்.

49. அவர்காட்டிய முன் மாதிரியை அறிந்துகொள்ளத் திறமை இல்லாதவர்களுக்கு அதன் உண்மை அறியாதவர்களே குருவாகிறார்கள்.

50. அவர்கள் தன்னை அறிதல் இன்னதென்று தெரியாமையினால் கிறிஸ்து பரமான்மாவின் குருமொழியை முற்றிலும் மறந்தார்கள். அதற்கு முற்றிலும் மாறானவைகளைச் செய்கிறார்கள்.

51. இதனால் நீங்கள் குறைவற்றவராகிய கிறிஸ்துவைப் போலாக வேண்டும். அதாவது நீங்களும் நற்குண நிறைந்தவர்களாயிருக்கவேண்டுமென்ற பொன்மொழியை யறிந்து பழக்கத்தில் கொண்டுவரவேண்டும்.

---

52. ஒருவன் தன்னை இன்னானென்று அறிந்தபிறகே தனக்குத் தலைவனான பரமான்மாவை இன்னாரென்று அறிவான்.

53. அறிந்தபின் தான் தெய்வத்தினுடைய பிள்ளையாயிருக்கிறதை அறிந்து இது வரைக்கும் தான் இருந்த உடலையும் அதன் விருப்பத்திற்கேற்ற இன்பங்களையும் வெறுப்பான்.

54. பரமான்மாவின் விருப்பப்படி செய்யும்பொழுது இந்த உடலும் அதன் விருப்பங்களும் தனக்குச் சுமையாயிருந்தாலும் அவைகளைத் தனது உயிர் நிலைத்திருக்கும் பொருட்டு மட்டும் பேணிக்கொண்டு அதாவது உடம்பு விரும்பியபடி தான் நடக்காமல் தான் விரும்பிய நற்செய்கைக்கு ஏற்றவாறு உடல் நடக்கும்படியாக ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் தன் உடம்பாகிய சிலுவையைச் சுமக்கப் பழகுவான்.

55. பழகியபின் கிறிஸ்து பரமான்மா காட்டிய நல்வழியில் அதாவது சீவர்கள் நடக்கவேண்டிய நெறியில் அல்லது அழியாத சீவனைத் தரும் வழியில் அல்லது நன்மையைச் செய்யும் வாழ்நாளுடையவனாய் கிறிஸ்து

பரமான்மாவைப் பின்பற்றுவான். அதாவது கிறிஸ்து பரமான்மாவைப் போல் நன்மையையே செய்பவனுவான்.

---

56. இந்த நாலுபடிகளையும் குறித்தே கிறிஸ்து பரமான்மா தம்மைப் பின்பற்றிவரும் அடியார்கள் இப்படிச் செய்யாதிருப்பார்களானல் ஒருபொழுதும் பேரின்பம் பெறமாட்டார்களென்று வாக்குறுதி கூறி குருமொழியாக 'ஒருவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்பின்னே வரக்கடவன். என்னைப் பின்பற்றாதவன் என் அடியானயிருக்கமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.' என்கிறார்.

57. இதில் தன்னை அறிதல், தன்னை வெறுத்தல், தன்னைச் சுமத்தல், கிறிஸ்து பரமான்மாவைப் பின்பற்றல் அல்லது அவர் காட்டிய முன் மாதிரியின்படி எல்லாருக்கும் நன்மை செய்தல் அவர் கொடுத்த கற்பனைகளின்படி எல்லாரிடத்தும் அன்பாயிருத்தல் என்ற நாலு படிகளில் முதற் படியை நீங்கள் யாவரும் அறிந்திருக்கிறீர்கள் என்றும் அதை அறிந்தவர்களே பின்காட்டியவைகளைப் பழகக் கூடியவர்களென்றும் திட்டமாய் அறிந்திருந்தும் பின் மூன்றுபடிகளை மட்டும் சொன்னார்.

58. அவர் காலத்திருந்தவர்கள் இக்காலத்திலுள்ளவர்களைப்போலவே அறிந்தவர்களும் அறியாதவர்களுமாயிருந்தார்கள். இவர்களில் அறியாத பேதைகளுக்கு இவைகளைக் கற்பிப்பதும் அவர்களை ஈடேற்றுவதும் அவருக்கு மிகவும் விருப்பமாயிருந்தது.

59. தான் விரும்பிய தீமைகளைச் செய்வதைப் பார்க்கிலும் தனக்கும் பிறருக்கும் இன்பந்தரும் நன்மைகளைச் செய்வதற்கு மிக்க அறிவு வேண்டியதில்லை.

60. எவரும் மிகவும் எளிதாகச் செய்யக்கூடியவை அன்பான செய்கைகளே.

61. தெய்வத்திற்காக யாவையும் தன்னைப்போல் நினைத்து நேசிப்பதே தெய்வத்தை நேசிக்கிறதாகவும் உண்மையின் பொருட்டு அல்லது சத்தியத்திற்காகச் செய்யப்படும் எந்தச் சிற்றுதவியும் தெய்வத்திற்கே செய்ததாக ஒப்புக்கொண்டு கைம்மாறில்லாத அழிவற்ற பேரின்பத்தைத் தருவேன் என்பதாய் மிகவும் உறுதியாக உபதேசித்தார்.

62. அன்பு கூர்வதற்கும் நன்மை செய்வதற்கும் முதற்படி தெரிந்திருப்பது இன்றியமையாததல்ல என்பதாக அதை முற்றிலும் விட்டுவிட்டார் என்று நினைக்க வேண்டாம்.

63. தன்னை இன்னானென்றும் அதாவது தான் தெய்வத்தினுடைய பிள்ளையென்றும் தெய்வம் தனக்குள் இருக்கிறார் என்றும் தெரிந்து செய்யும் செய்கையே மேலானது. இப்படித் தெரிந்தும் அதற்கேற்ற செய்கை இல்லாத வனாயிருப்பது மிகவும் தாழ்வானது.

64. "தன் ஆண்டவன் சித்தத்தைத் தெரிந்தும் அதன்படி செய்யாதவன் அநேக அடிகளால் அடிக்கப்படுவான்" என்ற கிறிஸ்து பரமான்மாவின் சொற்படி தண்டனை அடைவான்.

65. தன்னை அறிய உணர்த்திய பெரியோர் தம்மாபில் வந்தவர்களுக்குப் போதனையோடு அதன் முடிவான நல்லொழுக்கத்தையும் கற்பித்து வந்தார்கள்.

66. போதனையோடு பழக்கமும் இன்றியமையாததென்று திட்டமாய்த் தெரிந்திருந்தும் பலர் அவற்றை வெற்றுரையாக மட்டும் பாடம்செய்திருந்தார்களே யொழிய பழக்கத்திற்குக் கொண்டு வரவில்லை.

67. அதுபோல் கிறிஸ்து பரமான்மாவின் அருமையான நற்போதனைகளும் பழக்கத்திற்கு வராமல் பாடம் மட்டும் ஆகியிருக்கின்றன.

68. அவைகளில் சில மறைபொருள்களை உங்கள் பழக்கத்திற்கு வரும்படி சொல்வதும் நீங்கள் அதன்படி செய்வதும் குறைவற நிறைவேறும் பொழுது கிறிஸ்து பரமான்மாவின் மார்க்க உயர்வும் இந்தியாவிலுள்ள எல்லாமார்க்கங்களின் முடிவும் ஒன்றற்கொன்று வேறுபாடில்லாதிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

69. அப்பொழுது மத வேற்றுமைகளும் சாதி பிரிவினைகளும் கலகங்களும் ஒழிந்து எல்லோரும் பரமான்மாவால் மீட்கப்பட்ட திருக்கூட்டங்களென்று தத்தம் மீட்புக்கானவைகளை மிகுந்த அச்சத்தோடும் நடுக்கத்தோடும் தேடுகிறவர்களாகி நன்மையைக் கண்டடைவீர்கள்.

70. நீங்கள் நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படி விளங்காத இடத்தை விரித்து விளக்கியும் எளிதான இடத்தைச் சுருக்கிச் சொல்லியும் சொல்லாமலும் விட்டிருக்கிறேன். நீங்கள் தீமைக்குவிலகி நன்மையைக் கண்டடைய வேண்டுமென்ற விருப்பத்தால் அதைப்பற்றி அடிக்கடி அங்கங்கே சொல்லியிருக்கிறேன்.

71. எனக்கு அருமையானவர்களே! நீங்கள் அடிக்கடி படித்துச் சிந்திப்பீர்களாயின் உண்மை ஒருவாறு நன்றாய் விளங்கிவிடும். இது தவிர உங்களுக்கு விளங்கவேண்டுமென்று எனக்குத்தோற்றிய இடங்களை மிகவும் விரிவாகச் சொல்லியிருக்கிறேன். நேரில் வாய் மொழியாகச் சொன்னவைகளைக்கொண்டு எழுதப்பட்டவைகளின் கருத்தைத் திட்டமாய் அறிந்துகொள்ளலாம். உங்களுக்குச் சொன்ன யாவற்றை

யும் எழுதிவைக்க இடமும் நேரமும் இல்லையே. கருத்துடன் கவனிப்பவர்களுக்கு இவைகளில் எந்தப்பாகத்திலாவது சிலவரிகளே போதுமானவை.

72. சன்மார்க்கங்களில் படித்தரமான நற்போதனைகள் பல இருந்தாலும் அவைகள் யாவும் மனிதர்களின் குணவேற்றுமைக் கேற்ற வண்ணம் பயன்படுகின்றன. பேதைகளுக்கு அச்சமுண்டாகும்படியான பல கற்பனைகளும் அடங்கி இருக்கின்றன. புதிது புதிதாக பல கற்பனைகளும் உண்டாகிக்கொண்டிருக்கின்றன. இவைகளில் எதனாலும் உங்கள் மனம் கலங்காதிருப்பதாக.

---

73. 'உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக' என்று சொன்ன கிறிஸ்து பரமான்மாவே உங்களுக்குப் போதிக்கட்டும். 'இன்றைக்கு இந்த வீட்டிற்கு ரக்ஷிப்பு வந்தது' என்று சொன்ன அவரே உங்கள் உள்ளமாகிய வீட்டிற்கு வரட்டும். 'இதோ வாசற்படியிலிருந்து தட்டுகிறேன். எவனொருவன் என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத்திறக்கிறானோ அவனோடு நான் வீற்றிருந்து போஜனம் பண்ணுவேன்' என்று சொன்ன பரமான்மா உங்கள் உள்ளமாகிய வீட்டில் எப்போதும் இருக்கட்டும். ஒரு போதும் அவரை உங்களைவிட்டுப் போகவிடாதிருங்கள்.

74. 'ஆண்டவரே சொல்லும், உமதடியேன் கேட்கிறேன்' என்று சொன்ன அடியானைப் போலவும், 'ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்' என்று கேட்ட அன்பனைப்போலவும், அவர் திருவடியின் அருகிலிருந்து திருவாய் மொழிகளைக் கேட்டு நல்ல பங்கைத் தெரிந்து கொண்டதைப்போலும் அவருடைய சொல்லைக் கேட்டு அதன்படி பிதாவுக்கு விருப்பமான நன்மைகளைச் செய்யுங்கள்.

75. அப்போது நீங்கள் அறியாமற் செய்த குற்றங்களை யெல்லாம் இரங்கி மன்னித்து அவர்பேரால் நீங்கள் செய்த நன்மையாவற்றையும் நினைவு கூர்ந்து அருளாலும் இரக்கத்தாலும் அவர் உங்களை முடிசூட்டுவார்.

76. நீங்கள் வேண்டுமளவு உங்கள் வாயை நன்மையால் நிரப்புவார்.

77. நன்மையையே செய்யும் உங்கள் வாழ்நாள் அவர்க்கு மனமுவந்த காணிக்கையாயிருக்கும்.

78. நீங்கள் உலகத்தாருக்கு ஒளியைப் போலிருப்பீர்கள்.

79. எல்லா உயிர்க்கும் இரங்கி இடர்தீர்க்க நீங்கள் முயற்சிக்கும் பொழுது இடருற்றால், எங்கும் நிறைந்த பரமான்மா உங்களுக்குத் தெரியாமலே உங்கள் அருகிலிருந்து உங்களைத் தாங்குவார். இடருறாத இடத்தில் மகிழ்ச்சிகொள்வார்.

80. அவர் தாயினும் சிறந்த அன்புள்ளவர். தந்தையைப் பார்க்கிலும் உங்கள் நன்மையை விரும்புகிறவர். கணவனைப் பார்க்கிலும் மிகுந்த ஆதரவுடையவர்.

81. அவர் சொல்லுக்குச் செவிகொடுக்கிறவன் செல்வவானாகிறான்.

82. அவர் விருப்பத்தை அறிந்து அதன்படி செய்கிறவன் அவரையே அடைகிறான். அவரையே பெறுகிறான்.

83. அவரினும் உயர்வானது உலகத்திலே உங்களுக்கு ஒன்றும் இருக்க வேண்டாம்.

84. நீங்கள் கேட்கவிரும்பும் பொழுது அவரைக் கேளுங்கள். பேச விரும்புகையில் அவரோடு பேசுங்கள். உங்கள் இன்ப துன்பங்களில் அவர் உங்களோடு கூடவே இருக்கட்டும்.

85. தெரியாத இடத்தில் அவரையே உங்களுக்குத் துணையாகக் கொள்ளுங்கள். தெரிந்த இடத்தில் அவரைப் பெருமைப் படுத்துங்கள்.

86. நன்மை எல்லாவற்றிற்கும் அவரை முன் மாதிரியாக வைத்துக் கொண்டு அவரைப்போல் நடக்க இடைவிடாது கவலை கொள்ளுங்கள்.

87. அப்படி நடந்து கொள்வீர்களானால் இவ்வுலகத்திலேயே பேரின்பத்தை அல்லது தீமையினின்று விடுதலையைப் பெறுவீர்கள்.

88. மறுமையிலும் மேன்மை யுடையவர்களாய் அவர் சாயலாகவே இருப்போமென்று நீங்கள் இம்மையிலேயே அறிந்துகொள்வீர்கள்.

89. நீங்கள் போக்கிலும் வாத்திலும் நன்மையைக் கண்டடைவீர்கள்.

90. நீங்கள் கையாற்செய்யும் எல்லாக்காரியங்களையும் தெய்வ நாமம் பெருமைப்படும்படி செய்வீர்கள்.

91. நீங்கள் தெரிந்து கொண்ட உண்மையை உங்கள் சொற்களுக்குச் செவிகொடுக்கும் அன்பர்களுக்குச் சொல்லுங்கள்.

92. சொல்லும்பொழுது பரமான்மாவே உங்கள் சொல்லோடு கலந்து உங்களுக்குத் தெரியாதவைகளை விளக்குவார்.

93. அவர் சொல்லை அறிந்து அவர் சொல்லுக்குச் செவிகொடுப்பது பழக்கத்திற்கு வந்தபின் எல்லாக்காரியங்களையும் அவரே நடத்துகிறாரென்றும் இன்னும் நடத்துவாரென்றும் உறுதிகொள்வீர்கள்.

94. உண்மையாய் அவரை நம்புகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது.

95. நீங்கள் குறைவற்றவர்களாய் இருப்பதற்கு இவைகளை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

96. எல்லா நல்விருப்பங்களும் நன்மைகளும் வளர்ந்தோங்க அருள் புரியும் கிறிஸ்து பரமான்மா என் எண்ணங்களைக் குறைவற முடித்து உங்களெல்லோரையும் தமது குறைவற்ற நன்மைகளினால் நிரப்புவாராக.

## 2-வது போதுக் குறிப்புகள்.

1. உலகத்தில் நாம் அறியவேண்டியவைகளும் அடையவேண்டியவைகளுமாகிய நல்ல காரியங்கள் யாவையும் நீங்கள் அறிந்துகொள்ள அப்போதைக்கப்போது கொஞ்சம் கொஞ்சமாகத் தனித்தனி பல தடவைகளில் சொல்லியிருக்கிறேன்.

2. நீங்கள் எல்லோரும் நான் சொன்னவைகளை அறிந்துகொள்ளவும் பழக்கத்திற்குக் கொண்டு வரவும் வேண்டுமென்பதை விரும்பி இந்தச் சபை ஏற்படுத்தப்பட்டது.

3. இது சத்தியவேத சமரச சன்மார்க்க சபை என்று பெயர்பெறும். இந்தப் பெயருக்குத் தகுந்தபடி கிறிஸ்து பரமான்மாவின் உண்மையையும் மற்றும் எல்லா நாட்டிலுமுள்ள எல்லா மார்க்கத்தின் உண்மைகளையும் ஒன்று சேர்த்து கிறிஸ்து பரமான்மா காட்டிய நன்னெறிகளில் நடக்க உதவியாயிருக்கும் போதனைகளை எடுத்துக்கொண்டு மற்ற மதங்களையும் அம்மதங்களைக் கைக்கொண்டவர்களையும் இகழாமல் அவர்களை நல்ல மார்க்கத்தில் செல்லும் தோழர்களாக்கிக் கொள்வதே இந்தச் சபையின் முதன்மையான நோக்கம்.

4. கிறிஸ்து பரமான்மாவே அல்லது பூரணமுள்ளவரே இந்தச் சபைக்குத் தலைவர். நாமெல்லோரும் அவருடைய சபையார்.

5. இந்தச் சபையில் சொல்லப்படும் எந்தச் சொல்லும் கிறிஸ்து பரமான்மாவை அன்றி வேருக இருப்பதாக நீங்கள் நினைக்கவேண்டாம்.

6. எந்த மார்க்கத்தின் நற்போதனைகளையும் இகழ்ச்சி செய்வதாகவும் நீங்கள் நினைக்கவேண்டாம்.

7. மற்றவர்களைத் தாழ்வாகவும் தங்களை உயர்வாகவும் நினைத்துக் கொள்ளும் தீய எண்ணம் எள்ளளவாவது உங்கள் உள்ளத்தில் உண்டாகாதிருக்க மிகவும் விரும்புகிறேன்.

8. "நீங்கள் ஆக்கினை அடையா திருக்கும்படி மற்றவர்களையும் ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கவேண்டாம்" என்ற கிறிஸ்து பரமான்மாவின் சொல்லை நினைவுகூர்ந்து அவனவன் தன்தன் மீட்புக்கானவைகளை அச்சத்தோடும் நடுக்கத்தோடும் தேடக்கடவன்.

9. மீட்புக்கான வழிகளைச் சொல்லுவதை விட்டுப் பிறர் மதங்களைக் குறைசொல்வதும் ஆக்கினை கூறுவதுமே வேலையாகி நின்றார்கள்.

10. இதனால் கிறிஸ்து பரமான்மாவின் உண்மையான வழியையும் மற்றைய மதங்களின் உண்மையையும் எல்லாரும் அறிந்துகொள்ளக் கூடாமல் வெறுக்கும்படியாயிற்று.

11. கூடியவரையும் நீங்கள் அறியவேண்டுமென்று எப்படி விரும்புகிறேனோ அப்படியே மற்றெல்லாரும் கிறிஸ்து பரமான்மாவின் மார்க்கத்தின் உண்மையை அறிந்துகொள்ள வேண்டுமென்று மிகவும் விரும்பி இவைகளைச் சொல்லுகிறேன்.

12. சொல்லும் சொற்கள் உண்மையானவைகளென்றும் நீங்களும் மற்றெல்லோரும் நன்மையான வழியில் நடந்து நன்மையைக் கண்டடைய வேண்டுமென்று உண்மையாகச் சொல்லப்பட்டவைகள் என்றும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

13. உலகத்தில் நாம் அறிந்ததும் அறியாததுமான எல்லாப்பொருளினும் சிறந்த பொருளாய், அவற்றிற்கு உயிராய், காரணமாய், மறைபொருளாய், எங்கும் நிறைந்திருந்த பரமான்மாவின் அருளைக்கொண்டே இதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

14. நீங்கள் உலகத்தையும், அதிலுள்ள பொருள்களையும், புல் பூண்டுகளையும், உயிரினங்களையும், மக்களையும், அவர்களின் நடை உடை உணவு பழக்க வழக்கங்கள் மார்க்கங்கள் யாவையும் உற்றுநோக்கும்போது ஒன்றற்கொன்று மிகுந்த வேறுபாடுடையதாய் இருப்பதாகக் கண்டாலும் அவைகள் யாவற்றிற்கும் பரமான்மாவே உயிரென்று அறியுங்கள்.

15. அவைகள் யாவும் கண்ணுக்கழகாகத் தோன்றும்படி கறுப்புக்கு இருபுறமும் வெள்ளையும், வெள்ளைக்கு இருபுறமும் சிவப்பும் போல ஒரே நூலில் கோக்கப்பட்ட நவமணிமாலையாக நீங்கள் நினைக்கவேண்டும்.

16. வேறுபாடில்லாமல் எல்லாவற்றிற்கும் நடுவாய் நின்ற அல்லது எல்லையாய் நின்ற பரமான்மாவை நீங்கள் அறியவேண்டும் என்பதே என் நோக்கம்.

17. குணவடிவாயிருக்கும் அவருடைய உண்மைநிலையைத் தெரிந்து அவர் இன்ன குணமுடையவராய் எல்லாப் படைப்புகளிலும் நிறைந்திருக்கிறாரென்றும் என்ன செய்ய விரும்புகிறாரென்றும் நீங்கள் பழக்கத்தில் காணவும் அதன்படி பழகவும் வேண்டும்.

18. நீங்கள் உங்கள் வாழ்நாளை பரமான்மாவுக்கென்றே செலவு செய்து அவர் காட்டிய நன்மாதிரிப்படி நடந்து, முடிவில் நன்மையையும் அழியாத நிலையையும் கண்டடைய வேண்டும் என்று விரும்பியே இவைகளைச் சொல்லுகிறேன்.

---

19. இந்தப் பெரிய உண்மையைச் சொல்லவேண்டுமென்று நினைத்த பெரியோர்கள் தம்மைப் பின்பற்றி வரும் அடியார்களின் குண வேறு பாடு

களைத் தெரிந்து அவர்கள் தீய பழக்கவழக்கங்களைக் கைவிடும்படி நோன்பு, ஆசனபேதம், மந்திரங்கள், யாத்திரை முதலிய கடுமையான சில பழக்கங்களைக் கற்பித்தார்கள்.

20. கற்பிக்கும் காலத்தில் இன்னின்ன தீயகுணங்கள் உன்னைவிட்டு நீங்குமானால் நீ இன்னின்ன நற்பயனை அடைவாயென்று திட்டமாய் உபதேசித்தார்கள்.

21. எனக்கருமையானவர்களே! உபதேசம் பெற்றுக்கொண்டவர்கள், ஒருவனை நல்வழியில் நடத்துவதற்கு காரணமாயிருந்து அழியாதபேரின்பத்தைக் கொடுக்கும் குருமொழியை மறந்து விட்டு வெறும் மந்திரம் சொல்லும் பழக்கங்களையே ஓயாது செய்து பயனடைய விரும்பும் எண்ணம் நிறைந்தவர்கள் ஆனார்கள்.

22. உதாரணமாக ஒரு நாள் முழுவதும் பட்டினியாயிருந்து அடுத்த நாள் காலையில் உண்ணவேண்டுமென்ற ஒரு விரதத்தைக் கற்பித்து நூலுடையோனுக்கும் அந்த விரதநாளில் ஆசையையும் சினத்தையும் விட்டு விடுவேன் என்று நூறாயிரம்தரம் சொன்னால் அவன் தவத்திற் சிறந்தவன் அல்லது இருபிறப்பாளன் அல்லது பிரமத்தின் உண்மையைத் தெரிந்தவன் ஆகிறான் என்றும் இப்படி ஆண்டுதோறும் செய்வானானால் கடவுட்டன்மையை அடைவான் என்றும் சொன்னார்கள்.

23. ஆசையால் விளையும் கெடுதல்களையும் துன்பங்களையும், சினத்தால் விளையும் தீமைகளையும் கேட்டையும் நன்றாக ஆய்ந்தறிந்து அவைகளைப் படிப்படியாய் அதாவது நூறாயிரத்தில் ஒவ்வொன்றாய் அதாவது தன் தீய குணத்தில் நூறாயிரத்தில் ஒன்றையாவது விட்டுவிடப் பழக வேண்டுமென்பதே பெரியோர்களின் நோக்கம்.

24. ஆனால் உபதேசம் பெற்றவுடன், மந்திரத்தையே சொல்லுவதினால் குறித்த பயனைப் பெறலாமென்று மிக வேகமாய் உருப்போடுவார்கள்.

25. உருப்போட்டு முடிந்தவுடன் விரும்பிய பயனை அழைப்பது போல மணியையும் அடிப்பார்கள். ஏதும் வரக்காணோம். என்ன செய்வார்கள்?

26. பூசை முடிந்து எழுந்தவுடன் இலைகளில் நிரம்பப்படைக்கப் பட்டிருக்கும் ஆசையைப் பெருக்கும் உணவுகளை விலாப்புடைக்கத் தின்று தங்கள் மந்திரத்தினால் தங்களை விட்டுவிலக வேண்டுமென்று கேட்டுக் கொண்ட தீயகுணங்களை மிகவும் விரும்பித் தாம்பூலம் வைத்து அழைப்பார்கள். அவைகள் முன்னிலும் பதின்மடங்காக வலுக்கொண்டு அவர்களிடத்தில் விளங்கும்.

27. ஒருவன் தன் அயலானுக்குத் துன்பமான காரியங்களை நினைக்காமலும், சொல்லாமலும், செய்யாமலும் இருக்கவேண்டும். பிறர் தனக்குச் செய்த தீமைகளை முற்றிலும் மறக்கவேண்டும். தூய்மையான மனதுடன் செய்யும் வணக்கமே அதாவது பிறர் செய்த தீமைகள் யாவையும் மன்னித்த பின்பு செய்யும் வணக்கமே பயனுள்ளதென்று தாம் கற்பித்த தின்படியே சிலுவையில் இறக்கப்போகும்போதும் "பிதாவே இவர்களுக்கு மன்னியும். இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று தெரியாமல் செய்கிறார்கள்" என்று கிறிஸ்து பரமான்மா தம் நன் நடக்கையில் காட்டினார்.

28. அவர், பிறர் குற்றங்களை நீ மன்னித்த பின்னே உனக்கெல்லா நன்மையும் உண்டாகிறதென்றும் தெய்வத்தை வேண்டிக் கொள்வதற்குத் தகுதியுள்ளவனாகிறாய் என்றும் காட்டும்படி தாம் கற்றுக்கொடுத்த பரமண்டல மந்திரத்தில் "எங்களுக்கு விரோதமாகக் குற்றஞ் செய்கிறவர்களை நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்" என்று கற்பித்தார்.

29. இதன் உண்மையைத் தெரியாமல் வெறும் மந்திரத்தை மட்டும் சொல்லி நன் மனம் பொருந்தும் எவ்வித முயற்சியுமின்றி இரவுபகலாய் ஆயிரம் ஆயிரமாக வேண்டிக் கொள்ளுகிறார்கள். வேண்டிக்கொள்ளும் இடத்திலேயே பகையைப் பெருக்கிக்கொண்டும் இருக்கிறார்கள்.

30. "உங்கள் உதடுகளினால் அறிக்கையிட்டும் உங்கள் உள்ளமோ எனக்குத் தூரமாயிருக்கிறது" என்று சொன்ன கிறிஸ்து பரமான்மா இந்த விண்ணப்பத்தில் விருப்பங்கொள்வாரோ? மந்திரத்தைச் சொன்னவர்களும் பயனடைவார்களோ?

31. "நீங்கள் மற்றவர்கள் குற்றத்தை மன்னித்தால் பரமபிதாவும் உங்களுக்கு மன்னிப்பார். நீங்கள் மன்னியாதிருந்தால் பரமபிதாவும் மன்னியாதிருப்பார்" என்ற குருமொழியை அல்லது முதன்மையான மந்திரத்தை முற்றிலும் மறந்தார்கள்.

32. "என் நாமத்தினிமித்தம் இங்கே நிற்கிற சிறுவர்களில் எவனுக்கு எந்த நன்மையைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" என்று சொன்ன முடிவான சொல்லையும் ஒரு பொருட்டாயெண்ணாமல் முற்றிலும் விட்டு விட்டார்கள்.

33. மந்திரத்தை மட்டும் வாயாற் சொல்லி மந்திரத்திற்கு முற்றிலும் வேறுபாடான செய்கையுடைய முரட்டாட்ட முள்ள மனிதர்களைப் பார்த்து, "உனக்குக் கிடைத்திருக்கிற இந்த நாட்களிலாகிலும் உன் ரக்ஷிப்புக்கானவைகளைத் தேடிக்கொள்ளமாட்டாயா?" என்று சொல்வதை விட்டு பரமான்மா வேறென்ன சொல்வார்?

34. நீங்கள் எண்ணமற்ற மந்திரங்களை அல்லது தோத்திரங்களைச் சொல்லி உங்கள் வாழ்நாளைப் போக்கவேண்டாம்.

35. தெய்வம் விரும்பும் நற்செய்கைகளைச் செய்வதற்குவேண்டிய உங்கள் உடம்பை நோன்பு முதலியவைகளைச் செய்து ஏன் கெடுக்க அல்லது வருத்தவேண்டும்?

36. கருத்தில்லாத உங்கள் காணிக்கை பரமான்மாவுக்கு மிகவும் அருவருப்பாயிருக்கிறது.

37. உங்கள் வாழ்நாள் தூய்மையாகவும் நன்மை நிறைந்ததாகவும் இருக்குமானல் நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்களென்று பரமான்மா உங்களை விரும்புவார்.

38. ஒளியை மரக்காலால் மூடிவைக்காமல் உங்கள் ஒளியினல் மற்றவர்களும் பயனடையும்படி உங்களை உயர்ந்த இடத்தில் வைப்பார்.

39. நீங்கள் மெழுகுவத்தியைப் போலவும் ஊதுவத்தியைப்போலவும் விளக்கைப்போலவும் இருக்கிறீர்கள். உங்கள் வாழ்நாளும் அதில் நீங்கள் செய்யும் நன்மையான செய்கைகள் யாவும் பரமான்மாவுக்கு கண்ணிற்கு உவந்த வெளிச்சமாகவும் மனதிற்கு உவந்த நன்மணமாகவும் இருக்கின்றன.

40. இதைவிட்டு வெறும் மெழுகுவத்தியையும் ஊதுவத்தியையும் கொளுத்தி என்ன பயன் அடையப்போகிறீர்கள்?

41. அழுக்கடைந்த ஒரு குத்துவிளக்கை நன்ருய் விளக்கித் தெளிவான எண்ணெய் நிரப்பி மெல்லிய நூல்களினல் திரிபோட்டு மலராலும் குங்குமத்தாலும் அழகுபடுத்தி விளக்கேற்றி மனமகிழும் நீங்கள், உண்மையான குத்துவிளக்காகிய உங்களை உங்கள் ஆண்டவர் பார்த்து மனமகிழும்படி விளக்கவேண்டாமா?

42. அன்பாகிய அழுக்கற்ற எண்ணெயை அதில் வார்க்க வேண்டாமா? நற்செய்கைகளாகிய திரி போடவேண்டாமா? அவைகளே ஞானநூல்களின் உண்மையென்று நீங்கள் தெரிந்துகொள்ளவில்லையா? அவைகளில் பரமான்மா மேன்மைப்படும்படி அவருக்கே உங்களை ஒப்புவித்தலாகிய தீபம் ஏற்றிவைத்தீர்களா?

43. நீங்கள் உங்களுக்காகவும் அதன்பின் பரமான்மாவுக்கென்றும் தீமைகளைவிட்டு நன்மைகளைச் செய்கையில் உங்களால் தீமை அடைந்தவர்கள் நன்மை அடையும் பொழுது "இவைகள் யாவையும் எனக்கே செய்தீர்கள்" என்று உள்ளம் மகிழ்ந்து ஒப்பற்ற பயனைத் தருகிருர் என்பது உங்களுக்கு நன்ருய்த் தெரிந்திருக்கட்டும்.

44. நீங்கள், தீமைகள் யாவையும் அல்லது தீவினைகள் யாவையும் விட்டுவிட நினைப்பதே உங்களுடைய நோன்பாக இருக்கட்டும். இதையே பரமான்மா விரும்புகிறார்.

45. தீய பழக்கங்கள் யாவும் விட்டு விடுவதே நீங்கள் அவருக்கென்று கொடுக்கும் பலிகளைப்போல இருக்கட்டும்.

46. உங்களுடைய நற்செய்கைகள் யாவும் அவர்க்கு உவந்த காணிக்கையாகட்டும்.

47. உலகத்திலுள்ள யாவும் அவருடையவை. அவருக்கு விருப்பமிருந்தால் உங்களிடத்தில் கேட்கமாட்டார்.

48. "சகல காட்டு ஜீவன்களும் மலைகளில் ஆயிரம் ஆயிரமாகத் திரியும் மிருகங்களும் என்னுடையவைகள்."

49. "மலையிலுள்ள பறவைகளை எல்லாம் அறிவேன். வெளியில் நடமாடும் சீவஜந்துக்களெல்லாம் என்னுடையவைகள்."

50. "நான் பசியாயிருந்தால் உன்னிடமா சொல்லுவேன். பூமியும் அதன் நிறைவும் என்னுடையவை."

51. "மிகவும் அற்பமாகிய உன் தொழுவத்திலிருந்து ஆட்டுக்கடாக்களை நான் வாங்கிக்கொள்வதில்லை."

52. "நான் எருதுகளின் ஊனைத்தின்று, ஆட்டுக்கடாக்களின் இரத்தத்தைக் குடிப்பேனோ"?

53. "உன் அற்பமான பலவகை சுவையுடைய தின்பண்டங்களையும் தூபதீபங்களையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை."

54. "சர்வாங்க தகனபலிகளினாலும் மற்றும் பழுதற்ற ஆடு, மாடு, பட்சி முதலியவைகளின் இரத்தத்தைச் சிந்துவதினாலும் நான் திருப்தி அடைவேனோ"?

55. "ஆயிரம் ஆயிரமான ஆட்டுக்கடாக்களின் இரத்தத்தையும் எண்ணெயாய் ஓடும் பதினாயிரம் ஆறுகளையும் நான் விரும்பவில்லை."

56. "உன் அக்கிரமத்தைப் போக்க உன் முதற்பேறான குமாரனையும் உன் பாவத்தைப் போக்க உன் கர்ப்பத்தில் பிறக்கும் பிள்ளையையும் பலியிட்டாலும் அவற்றால் நான் திருப்தி அடைவதில்லை."

57. "அறிவில்லாத மனுஷரே! நீங்கள் அவனவன் தன்தன் தீமைகளுக்காக மனவருத்தப்பட்டு மனந்திரும்பி தீமைக்குச் செத்தவன்போல் ஆவதே அல்லது செயலற்றவனாவதே நான் விரும்பும் பலி."

58. "நன்மை இன்னதென்று உனக்கறிவித்திருக்கிறேன். நியாய மானவைகளைச் செய்து, அதாவது, நன்மையைச் செய்து, இரக்கத்தை நேசித்து எனக்கு முன்பாக நீ பணிவாக நடந்து கொள்வதை அல்லாமல் வேறு எந்தக் காணிக்கையை உன்னிடத்தில் விரும்புவேன்?"

59. "நீயோ சிட்சையைப் பகைத்து, அதாவது என் வார்த்தை களுக்குக் கீழ்ப்படியாமல் என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்து போடுகிறாய்."

60. "நீ திருடனைக் காணும்போது அவனோடு சேர்ந்து போகிறாய். விபசாரக்காரரோடும் உனக்குப் பங்குண்டு."

61. "உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய். உன் நாக்கு சர்ப்பனையைப் பிணைக்கிறது. நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கும், உன் அயலானுக்கும் விரோதமாய்ப் பேசி அவதூறு உண்டாக்குகிறாய்."

62. "இவைகளை நீ செய்யும் போது நான் மௌனமாயிருந்தேன். உன்னைப்போல் நானுமிருப்பேன் என்று நினைவுகொண்டாய்."

63. "ஆகிலும் நான் உன்னைக் கடிந்துகொள்வேன். அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாய் நிறுத்துவேன்."

64. "நீ செய்த தீமைகளையே உனக்குத் திரும்ப வரும்படி செய் வேன்."

65. "இவைகளைச் சிந்தித்து உணர்வடையுங்கள். இல்லாவிட்டால் தப்புவிப்பார் ஒருவருமின்றி நித்திய தண்டனையை அடைவீர்கள்."

66. "என்னைத் தோத்தரிக்கிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான். தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்கு என்னுடைய ரக்ஷிப்பை வெளிப்படுத்துவேன்."

67. "ஆபத்துக்காலத்தில் என்னைநோக்கிக் கூப்பிடுவான். நான் அவனை விடுவிப்பேன். அவன் என்னை மகிமைப்படுத்துவான்" என்று பரமான்மா சொல்லுகிறார்.

---

68. நீங்கள் பெரும்பாலும் அருள்வேதத்தால் அறியும் எல்லாம் இயல் வேதம் பிறந்த இடத்திலேயே இருக்கின்றனவென்று திட்டமாய் அறிய வேண்டும்.

69. அங்கே, வானமும், உலகமும், அவற்றின் நிறைவும், மேல் நடு கீழ் என்ற மூன்று உலகங்களும், மும்மூர்த்திகளும், பஞ்சகர்த்தாக்களும், எழு வகைத் தோற்றங்களும் இவையாவற்றிற்கும் முதல்வனாயிருந்து,

அங்கங்கே திருவிளையாடல் புரியும் பரமான்மாவும், யாவுமாய் அவையல்லவுமாய் யாவற்றிற்கும் சான்ருக நின்ற அவர் தந்தையாகிய பிரமமும் இருக்கிறதாக அறிய வேண்டும்.

70. பிதாவின் வலது புறத்தில் வீற்றிருந்து பாவிகளுக்காகப் பரிந்து பேசும் பரமான்மாவையும், சூரியகலையாகிய கரும்பாம்பில் பள்ளிகொண்ட அழகே உருவெடுத்த ஆன்மநாதனையும், தேவ அவையில் இடக்கால் வாங்கி வலத்தில் ஊன்றி இன்பக் கூத்தாடும் அழிவில்லாத சீவநாதனையும் நீங்கள் அங்கே காணலாம்.

71. அங்கே எல்லா வளங்களாலும் சிறந்த ஒரு தோட்டத்தையும், அழகான ஒரு மலையையும், அதில் கைகளால் கட்டப்படாத எண்ணிறந்த கதிரொளியுடன் பரமான்மா வீற்றிருக்கும் ஒரு கோவிலையும், அதற்கு எதிரில் அவரது அடியார் திருக்கூட்டத்தில் சீவான்மாக்களாகிய நீங்கள் கூடி இருப்பதையும், அவர்வீற்றிருக்கும் அரியணையிலிருந்து என்றும் வற்ருத ஒரு ஆறு, ஓடி வருவதையும், அதன்கரையில் சீவவிருட்சம் நிற்பதையும் நீங்கள் காணலாம்.

72. இவைகளில் ஒவ்வொன்றின் விவரமும் பெருமையும் மிகுதி. இவைகள் யாவையும் அறிந்து பழக்கத்திற்குக் கொண்டுவர பரமான்மாவின் அருள் மிகவும் வேண்டும்.

73. அவருடைய திருவருள் பெறுவதற்காக நீங்கள் செலவு செய்ய வேண்டிய தொன்றுமில்லை.

74. இடைவிடாத ஆராய்ச்சியாலும் ஊக்கத்தாலும் உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களுக்கும் வாயாரச் சொல்லும் சொற்களுக்கும் செய்கைகளுக்கும் காரணகாரியத்தை நீங்கள் அறிவீர்களாளுல் பரமான்மா உங்களுக்குள்ளிருந்து எல்லாவற்றையும் நடத்திவருகிருர் என்றும் இது போலவே எல்லாப் படைப்புகளிலுமிருந்து நடத்திவருகிருரென்றும் அறிவீர்கள்.

75. உங்கள் எண்ணங்களும் சொற்களும், செயல்களும் எழுதப்படுமாளுல் மிகவும் நன்மையாயிருக்கும். நீங்கள் எழுதாவிட்டாலும் நன்மையாயிருப்பினும் தீமையாயிருப்பினும் சிறிதும் தவருமல் நன்மை தீமைக்கேற்ற பயன்களைத் தருவதற்காக இயற்கை யாவும் எழுதிவைத்துக் கொள்ளும்.

76. அடுத்தடுத்தும் அநேக நாட்சென்ற பிறகும் உங்களுக்குண்டாகும் பயன்களை உற்று நோக்குவீர்களாயின் அவைகள்யாவும் உங்கள் சொற்களுக்கும் செய்கைகளுக்கும் ஏற்ற பதிலாகவே இருக்கின்றனவென்று உங்கள் நினைவிற்கு வரும்.

77. அப்படி நினைவிற்கு வரும்போது பரமான்மாவே முதற்காரணன் என்றும் அவரையன்றி ஒரு அணுவும் அசையாது என்றும் உறுதியாய்த் தெரிந்து கொள்வீர்கள்.

78. இம்மேலான அறிவை நீங்கள் அறிந்து கொள்ளும் பொழுது இவையாவிற்கும் உதவியாயிருந்த அல்லது இடமாயிருந்த உங்கள் உடம்பையும், அதனுள் உயிரையும், அவ்வுயிருள் பரமான்மாவையும் நீங்கள் நன்றாய் அறிவீர்கள்.

---

79. இதில் மரத்தில் விளைந்த வித்துப்போலவும், அந்த வித்தினால் விளங்கிய மரம்போலவும், உடலில் விளங்கும் பரமான்மாவும் பரமான்மாவால் நிலைக்கும் உடலும் மிகுந்த மேன்மையும் மறைபொருளாயுமிருக்கின்றன.

80. "ஆதியிலே வார்த்தை இருந்தது."

81. "அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது."

82. "அந்த வார்த்தை தேவனாயிருந்தது."

83. "அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்."

84. "சகலமும் அவர் சொல்ல உண்டாயின. அவர் அல்லாதபடி உலகத்திலுள்ள யாதொன்றும் உண்டாகவில்லை."

85. "அவருக்குள் சீவன் இருந்தது."

86. "அந்தச் சீவன் சிருட்டிகள் யாவிற்கும் ஒளியாயிருந்தது."

87. "அந்த ஒளி இருளிலே விளங்கும் தேவ ஆவியாயிருந்தது."

88. "தேவ ஆவி சலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்."

89. "ஆழமான சலத்தின்மேல் இருள் இருந்தது."

90. "பூமியோ ஆழமான சலத்தால் மூடப்பட்டு வெறுமையாயிருந்தது."

91. "அந்த வார்த்தை மாமிசமாகி கிருபையாலும் சத்தியத்தாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்"

92. வார்த்தையாயிருந்த அவர் கிருபையும் சத்தியமுமே காரண உருவாகி பின் சீவனாகி அதன்பின் சீவசரீரம் எடுத்தார்.

93. முதல் நாளில் வெளிச்சத்தை உண்டாக்கி பகல் இரவென்று இரு கூறாகப் பிரித்தார்.

94. இரண்டாம் நாளில் ஆகாயவிரிவினால் வானம், பூமி என்ற இரண்டும் தோன்றும்படி செய்தார்.

95. மூன்றும் நாளில் அகன்ற நீர் நிலைகளையும், கட்டாந்தரையையும் உண்டாக்கி, அக்கட்டாந்தரையில் புல் பூண்டு மரங்களையும் முளைக்கும்படி செய்தார்.

96. நாலாம் நாளில் பகல் இரவைக்குறிக்கும் சூரிய சந்திரர்களையும் வானசோதிகளத்தனையும் உண்டாக்கினார்.

97. ஐந்தாம் நாளில் நீரில் நீந்தும் உயிரினங்களையும் வானத்தில் பறக்கும் பறவைகளையும் உண்டாக்கினார்.

98. ஆறும் நாளில் நிலத்தில் வாழும் ஊர்வனவும், காட்டிலும், நாட்டிலும் வாழும் விலங்குகளுமாகிய எல்லா உயிரினங்களையும் உண்டாக்கினார்.

99. அதே நாளில் தமது சாயலாக தமது உருவம் போல ஆணும் பெண்ணுமாக மனிதரை உண்டாக்கித் தம்முடைய சீவஉயிர்ப்பை அவன் மூக்கில் ஊத மனிதன் சீவான்மாவானான்.

100. இவையாவையும் உண்டாக்கி ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.

101. எட்டாம் நாள் புல் பூண்டு மரங்களும், நிலத்தின் மேல் இன்னும் உண்டாகவில்லை.

102. ஒன்பதாம் நாள் ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, அதில் பார்வைக்கு அழகும், தின்னுதற்கேற்ற நலமுமுடைய பழந்தரும் பலவகைப்பட்ட மரங்களையும், தோட்டத்தின் நடுவில் சீவ விருட்சத்தையும், நன்மை தீமைகளை அறியத்தக்க விருட்சத்தையும், பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார். தோட்டத்திற்கு நாலு ஆறுகளால் தண்ணீர் பாயும்படி வசதிகளும் ஏற்படுத்தினார்.

103. பத்தாம் நாள் மனிதனைத் தோட்டத்திற்கழைத்துக் கொண்டு வந்து அதைப் பண்படுத்தவும், காக்கவும் செய்து, சீவவிருட்சத்தின் பழத்தைத் தின்னவும் தீயவிருட்சத்தின் பழத்தைத் தின்னாதிருக்கவும் கட்டளை தந்தார்.

---

104. எனக் கருமையானவர்களே! இவ்வுலகப் படைப்பின் முறையை நன்றாய் அறிந்திருப்பீர்கள். இதில் நம்முடைய உடலின் தோற்றத்திற்கும் இந்த உலகத் தோற்றத்திற்கும் மிக்க பொருத்தமிருக்கிறது.

105. ஆராய்ந்துபார்த்தால் ஒவ்வொன்றும் தனித்தனியே பொருத்தமுடையதாயிருக்கும். எல்லாவற்றிற்கும் முதற்காரணமாயிருந்த பரமான்மா, ஈரமுள்ள மண்ணிலிருந்து சாரத்தைப் பெற்று முளையாய்ச்

சிறு செடியாய் பின் மரமாய்த் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழமாகி மறுபடியும் வித்தைத் தந்த வித்துப்போல, தானே மேல் நடு கீழ் என்ற மூன்று உலகமாய், அவைகளின் எழுவகைத் தோற்றமாய், அவையாவையும் காக்கும் எழு அறிவாய், எழு கடலாய், எழு தீபமாய், எழு கிரகமாய், எழு மூர்ச்சனையாய், பன்னிரண்டு அங்கமாய் அல்லது இராசியாய், நிலம், நீர், தீ, காற்று, வான் என்ற ஐம்பூதமாய், புல், பூண்டு, மரமாய், உடல், உயிர், பரம் அதாவது தூலம், சூக்குமம் காரணமென்ற மூன்று நிலையாய், ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முச்செயலாய், பிதா, குமாரன், பரிசுத்தாவி என்ற திரித்துவமாய், பிர்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மும்மூர்த்தியாய், தாமசம், இராஜசம், சாத்வீகம் என்னும் முக்குணமாய் நிறைந்து இருந்தாரென்று நீங்கள் அறியவேண்டும்.

106. நாதமானது மந்தோச்ச சமம் என்ற மூன்று படிகளில் விளங்கி நிற்பதுபோல, மேல் கீழ் நடு என்ற மூன்று உலகங்களிலும், உடல் உயிர் பரம் என்னும் மூன்றுபடைப்புகளிலும் விளங்கிநின்றார்.

107. இதில் முதல் மூன்று நாளில் தூலதத்துவங்களும், இரண்டாவது மூன்று நாளில் சூக்குமதத்துவங்களும், மூன்றாவது மூன்று நாளில் காரண தத்துவங்களும் உண்டாயின.

108. ஒன்பது நாட்களை ஒன்பது சூரிய மாதங்களாகக் கணக்கெடுக்கும் போது பத்தாவது மாதத்தின் பத்து நாளும் சேர்ந்து இருநூற்று எண்பது நாள் அல்லது சந்திரமாதத்தின் பத்துமாதமாகிறது.

109. இந்த இருநூற்றெண்பது நாளில் மேற்காட்டிய முறைப்படி தூல சூக்கும காரணதத்துவங்களையுடைய ஒரு மனிதன் உண்டாகிறான்.

110. இதில் மந்தரஸ்தாயியாகிய கீழ் உலகத்தில் எழுவகைத் தோற்றத்தையும் ஏழுக்கு ஏழான உட் பிரிவையும் சிவன் அடைகிறது.

111. அதுபோலவே மூன்று உலகங்களிலும் ஏழு ஏழான இருபத்தொரு மூர்ச்சனை பேதங்களையும் அவைகளின் உட்பிரிவையும் ஏழு சுரங்களைப் போல் அடைகிறது.

112. ஒவ்வொரு கிராமங்களிலும் துத்தம் (ரி) கைக்கிளை (க) ஏழேழு சுருதி பேதம் பெற்று முப்பத்து நாலு பேதம் அடைவதுபோல விளரி (த) தாரம் (நி) என்னும் சுரங்களும் அடைந்து ரி, க வின் 34 பேதத்தோடு தனித்தனி கலக்கின்றன.

113. இவைகளில் உழை (ம) நாலு சுருதிபேதத்தை அடைந்து முற்பாகம் பிற்பாகங்களைச் சேர்ந்துவரும் பொழுது நாலாயிரத்து அறுநூற்று இருபத்துநாலு தாய் இராகங்கள் ஆகின்றன.

114. ஒவ்வொரு தாய் இராகத்திலும் பண், பண்ணியம், திறம், திறத்திறம் (சம்பூரண, ஷாடவ, ஔடவ, சுவராந்த) என்னும் சுரத்தில் சுர வரிசையில் ஒரு சுரம் இல்லாமற் போவதினாலும் முன்பின்னாவதினாலும் (வக்கிரவர்ஜியங்களினால்) நூற்று எழுபத்தோராயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற்றாறு கிளை இராகங்கள் உண்டாகின்றன.

115. இதுபோலவே சீவகோடிகளும் மேல் நடு கீழென்ற மூன்று உலகங்களிலும் தனித்தனி உண்டாகிறார்கள்.

116. எழுவகைத்தோற்றங்களில் எழுக்குள் ஏழாக அதாவது நாற்பத்தொன்பதாகவும், முக்குணங்களில் மூன்றுக்குள் மூன்றாக அதாவது ஒன்பதாகவும், ஐந்துக்குள் ஐந்தாக அதாவது இருபத்தைந்தாகவும் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருந்தார்.

117. இவைகளின் நுட்பமான சில காரியங்கள் பின்னால் உங்களுக்கு விரிவாகச் சொல்லப்படும்.

118. வியக்கத்தக்க விதமாய் உண்டான அண்டத்தையும், அதன் அமைப்பையும், அதிலுள்ள எழுவகைத் தோற்றத்தையும் போலவே உடலும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் கண்டபடியே தூல சூக்கும காரணங்களாக உடம்பிலும் அமையப்பெற்றிருக்கின்றன.

119. அவைகளைத் திட்டமாய் அறியும்பொழுது பரமான்மாவின் பெருமையையும், அவர் எல்லா உலகங்களிலும், எல்லாத்தோற்றங்களிலும், எல்லா உயிர்களிலும், முதற்காரணராய் விளங்குகிறார் என்று உறுதியாய்த் தெரிந்துகொள்வீர்கள்.

120. வியக்கத்தக்க விதமாய் உண்டாக்கப்பட்டபடியால் அவரைத் துதிப்பீர்கள்.

121. தான் உண்டாக்கப்பட்ட விதத்தையும் பரமான்மா இவை யாவுக்கும் காரணமாயிருந்தார் என்பதையும் அறியும்பொழுது "உமது கிரியைகள் அதிசயமானவைகள். அது என் ஆன்மாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு பூமியின் தாழ்ந்த இடத்திலே அதாவது பாதாளலோகத்தில் அந்தகாரத்தில் தண்ணீரின் மேல் அசைவாடிக்கொண்டிருந்த உம்மால் விசித்திர விநோதமாய் நான் உருவாக்கப்பட்டபோது என் கருவை உம்முடையகண்கள் கண்டன."

122. "என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும் உருவேற்படும் நாட்களும் உமக்கு நன்றாய்த் தெரியும்."

123. "என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை."

124. "நீர் என்னைப் பால்போல வார்த்து தயிர்போல் உறையப் பண்ணினீர் அல்லவோ."

125. "தோலையும் சதையையும் எனக்குத் தரித்து எலும்புகளாலும் நரம்புகளாலும் என்னை இசைத்தீர்.

126. "நீர் எனக்குச் சீவனைத் தந்ததுமல்லாமல் தயவையும் பாராட்டினீர். உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது."

127. "உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள். அவைகளின் தொகை எவ்வளவு மிகுதி. அவைகளை நான் கணக்கிடப் போனால் மணலைப்பார்க்கிலும் ஏராளம்."

128. "நான் நன்றாய்க் கவனிக்கும்பொழுது உமக்கு அருகிலேயே இருக்கிறேன். நீர் என்னோடு கூடவேயிருக்கிறீர்."

129. "நான் இவைகளை மறந்தாலும் நான் உமக்குள் இருக்கிறேன் என்று நீர் அறிகிறீர். நீர் என்னை மறக்கவில்லை."

130. "என் சிந்தனைகள் நினைப்புகள் யாவும் உமக்கு மறைவாய் இருக்க வில்லை" என்று அவரை ஓயாமல் துதிப்பீர்கள்.

131. ஆகாயத்தில் விளங்கும் சிறியவும் பெரியவுமான எண்ணிறந்த வானத்தின் படைப்புகளைப் பார்த்து பரமான்மா எப்படிப்பட்டவரென்று கேளுங்கள். அவைகள் உங்களுக்குணர்த்தும்.

132. ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பட்சிகளையும் சமுத்திரத்தையும் அதில் உள்ளவைகளையும் கேளுங்கள். அவர் மகா அதிசயமானவர் என்று அவைகள் உங்களுக்குச் சொல்லும்.

133. நிலப்பரப்பையும், நீர்ப்பரப்பையும் அவைகளிலுள்ள புல் பூண்டு மரங்களையும் உயிர்ப் பிராணிகளையும் கேளுங்கள். அவைகள் பரமான்மா நல்லவர், அவரை ருசித்துப் பாருங்களென்று சொல்லும்.

134. பலவித உயிர்ப்பிராணிகள் யாவையும் கேளுங்கள். அவைகள் கர்த்தருடைய கரம் எங்களை உருவாக்கிற்றென்று சொல்லும்."

135. "சகல பிராணிகளின் உயிரும் மாம்சமான எல்லா மனிதர்களின் ஆவியும் அவர் கையிலிருக்கின்றன."

136. "ஏற்ற வேளைகளில் அவைகளைப் போஷிக்கிறார். அவர் கொடுக்க அவர் கையிலிருந்தே எல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்ளுகின்றன."

137. "அவர் தமது கையைத் திறக்க அவைகள் எல்லா நன்மையாலுந் திருப்தியாகும். அவர் தமது முகத்தை மறைக்க அவைகள் தத்தளிக்கும்."

138. "அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள அவைகள் மாண்டு மண்ணுக்குத் திரும்பும்."

139. "அவர் தமது ஆவியை அனுப்பும்போது அவைகள் மறுபடியும் சிருட்டிக்கப்படும்."

140. பூமியின் உருவத்தைப் புதிதாக்கி தமது செய்கைகளில் மகிழு கிறார் என்று நீங்கள் நன்றாய் அறிந்து கொள்வீர்கள்.

141. நீங்கள் காணும் ஒவ்வொன்றிலும் எல்லா உயிர்களிலும் நிறைந்து தீமையை வெறுத்து நன்மையையே செய்துகொண்டு நன்மையையே போதிக்கிறார் என்று காண்பீர்கள்.

142. நாம் இந்த உடலையும் இதற்கு மறைகளில் சொல்லும் உவமை களையும் ஆழ்ந்து நோக்குவோமானால் உடம்பையும் அதற்குக் காரணமா யிருந்த பரமான்மாவின் செயலையும் அறிந்துகொள்வோம்.

143. இந்த உடம்பையும் இதனுள் சீவனையும் சீவான்மாவையும் சீவான்மாவில் பரமான்மாவையும் அதனுள் பிரமத்தையும் அறியும்பொழுது நாம் உடலின் வளர்ச்சியையும் நல்லறிவையும் மனித இரக்கத்தையும் தேவ அருளையும் ஒருங்கே பெற முயலுவோம்.

144. ஆகையால் உடலையும் பரமான்மாவையும் பற்றி உவமானங் களாகச் சொல்லப்படும் சிலவற்றை உங்களுக்குச் சொல்வது நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது.

145. அவைகளைத் தெரிந்துகொள்வதற்கு மிகவும் எளிதாகும்படி பழக்கத்திற்கு வந்தவைகளையும் வரக்கூடியவைகளையும் முடிவானவை களையும் மிக எளிய நடையில் உங்களுக்குச் சொல்லுவேன்.

146. இவைகளைத் திட்டமாய் அறிந்துகொண்டபின் இவற்றின் விரிவை அறிந்து கொள்ள விரும்பித் தன்னை அறியக் கற்பிக்கும் எந்த நூல்களை நீங்கள் பார்த்தாலும் அவைகள் உங்களுக்கு எளிதாய் விளங்கிவிடும்.

147. இதுதவிர இம்மை மறுமைகளையும், நன்மை தீமைகளை யும், பரலோக இராச்சியம், நல்வழி, சத்தியம், முதலிய சில சொற்களின் ஆழ்ந்த கருத்துக்களையும் நீங்கள் தெரிந்துகொள்ள நான் அறிந்தவைகளை என்னால் கூடியவரை உங்களுக்குச் சொல்லுவேன்.

148. எனக்கு அருமையானவர்களே! பரமான்மாவினாலும் அவரது அடியார்களாலும் நமக்குச் சொல்லப்பட்ட நன்மறையையும் அது காட்டும் நன்னெறியையும் அதன்படி நடக்கவேண்டிய விதத்தையும் அதனால் முடி வில் நாம் அடையும் வீட்டையும் பற்றி நான் உங்களுக்குச் சொல்லும்பொ ழுது அவை உங்களுக்கு நன்றாய் விளங்கும்படி, திருமறையியல், ஆணவ

இயல், காம இயல், மாயை இயல் என நாலு பாகங்களாகப் பிரித்துச் சொல்வது நல்லதென்று தோன்றுகிறது. இந்நான்கு பிரிவுகளும் அவற்றிற்கேற்ற பல உட்பிரிவுகளை உடையனவாயிருக்கும்.

149. உங்களுக்கு இவைகளைச் சொல்லவேண்டுமென்று என் எண்ணத்தில் வித்தாக முளைத்த பரமான்மா நீங்கள் எல்லோரும் இவற்றின் பயனை அடைந்து நிறைந்த நற்குணராயிருக்க அருள் செய்வாராக.

---



கடவுள் வணக்கம்.




# நன்மறை காட்டும் நன்னெறி.

## முதற்பங்கு.

## திருமறையியல்.

### 1-வது, மறையின் அருள் மொழி.

1. உலகத்தார் யாவரும் உண்மையைக் கண்டறிந்து அதன்படி நடந்து உய்யும் வழியைப் போதிக்கவந்த கிறிஸ்து பரமான்மா, தாமே அம் முதன்மையான நன்னெறியில் நடந்து உலகத்தவருக்கு முன் மாதிரி காட்டினார்.

2. அம் முன் மாதிரியில் நாம் எளிதாய் அறிந்துகொள்ளக் கூடாமலிருக்கிற சில மறைபொருள்கள் அவர் திருவாயால் அப்போதைக்கப்போது அவர் அடியார்களுக்குச் சொல்லப்பட்டன. அக்காலத்திலேயே சிலர் தவிர மற்ற யாவரும் அவர் சொல்லியவைகளை முழுவதும் விளங்கிக் கொள்ளவில்லையென்று கிறிஸ்து பரமான்மாவின் சொல்லால் அறிகிறோம்.

3. "சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான். நானே வழியும் சத்தியமும் சீவனுமாய் இருக்கிறேன். தேவன் அன்பாகவே யிருக்கிறார், அன்பில்லாதவன் அவரை அறியான். அன்புள்ள எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; தேவன் அவனில் நிலைத்திருக்கிறார். பரலோக இராச்சியத்தையும் அதன்

நீதியையுந் தேடுங்கள். நான் உங்களுடைய பாதங்களைக் கழுவினேன்; அப்படியே நீங்களும் செய்யுங்கள். ஒருவன் தன்னைத்தான் வெறுத்து அனுதினமும் தன் சிலுவையை யெடுத்துக்கொண்டு என்னைப் பின்செல்லக் கடவன். எனக்குப்பின் செல்லாதவன் எனக்குச் சீடனாய் இருக்கமாட்டான். இம்மையின் முடிவுபரியந்தம் நான் உங்களோடு கூடவிருக்கிறேன். நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். நீங்கள் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறீர்கள். என் நாமத்தினிமித்தம் இங்கே நிற்கிற சிறுவர்களில் எவனுக்கு ஏதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள். நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்; என்னைக்கண்டவன், பிதாவைக்கண்டான்; கிறிஸ்துவில் பிறந்தவன் இனிப் பாவம் செய்யான்; நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்; ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியசீவன்" என்னும் இன்னும் இவை போன்று குறிப்பாய் உணர்த்தும் பல சொற்றொடர்களையும் முன் மாதிரிகளையும் நாம் அடிக்கடி வாசித்தும் சிந்தித்துமிருப்போம்.

4. ஆயினும், அவைகளின் உண்மையான பொருளை நாம் அறிந்து கொண்டதாக எண்ண இடமில்லை. நாம் உண்மைப் பொருளை அறிந்து கொண்டிருப்போமானால் அவைகளின்படியே நாம் நடந்து கொள்ளுவோம்.

5. அப்படியில்லாமையால், உலக இயல்பு தெரியாத சிறுவர்களைத் துன்பத்தினின்று காப்பாற்றுவதற்காக அவர்களுக்குச் சொல்லும் ஐந்து கண்ணன் கதையைப்போல, அவைகள் சொற்ப பயனை மட்டும் தரக் கூடியவைகளாய் இருக்கின்றன.

6. அறிவுள்ள ஒருவன் அறிவில்லாத ஒருவனை அழிவினின்று தப்பித்துக்கொள்வதற்காகச் சொல்லும் வழிகளைக் கெட்டவையென்று நாம் சொல்லுவோமா?

7. அறியாப் பருவத்தில் அழிவினின்று காக்கப்பட்டவன் அறிவு வந்தபின் அழிவுக்குக் காரணமானவைகளை அறிந்து விலகி நன்னெறியில் நடக்க வேண்டாமா?

8. கிறிஸ்து பரமான்மாவின் வாழ்நாளில் நாம் காணக்கூடிய முன் மாதிரியும் நாம் சிந்திக்கக் கூடிய நற்போதங்களும் மிகப் பலவாகும். அவற்றுள் ஒவ்வொன்றையும் குறைவற அறிந்து பழக்கத்திற்குக் கொண்டுவர ஒருவன் ஆயுள்காலம் போதாது.

9. உவமைகளால் பல உண்மைப்பொருள்களை உலகத்திற்கு விளக்கினார்.

10. பரலோக இராச்சியம் எப்படிப்பட்டது என்பதைப்பற்றி 14க்கு மேற்பட்ட உவமைகள் சொன்னுரே. அவைகளைச் சொல்லியிருந்தும் அவற்றை விளக்கும் தனித்தனியான பல சொற்களும் சொல்லியிருக்கிருர். இவ்வளவு சொல்லியும் அவற்றின் கருத்து இன்னதென்று தெரிந்து கொள்ளக் கூடாமலிருக்கிறது.

11. ஏனென்ருல் அவர் காலத்தில் தங்களை ஞானிகளென்று சொல்லுகிறவர்களுக்கு உணர்த்துவதைவிட்டுப் பேதைகளென்று சொல்லப்படுகிறவர்கள் மேல் மனதுருகி அவர்களுக்கு எளிதாக விளங்கும்படி தேவ உண்மைகளைச் சொன்னுர்.

12. இப்படி எளிதாகச் சொல்லியிருந்தும் எளிதாகப் பழக்கத்துக்கு வரக்கூடியவையாயிருந்தும் அவைகளின் கருத்து வேறுவிதமாக மாற்றப்பட்டுச் சாரமற்றதாக எண்ணப்படுகிறது.

13. கிறிஸ்து பரமான்மா காட்டும் மேலான நல்வழியைக் கடைப்பிடித்து ஈடேற்றம் அடைவதற்கு அவர் மறையில் சொல்லிய சில அருமையான மொழிகளை ஆராய்ந்து பார்ப்பது நமது முதன்மையான கடமையாகும்.

14. கிறிஸ்து பரமான்மாவும் அவரது சிறந்த அடியார்களும் சொல்லும் சில மொழிகளைக்கொண்டு பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, ஆவிக்குரிய மனிதன், உலகத்துக்குரிய மனிதன், பொல்லாத ஆவி முதலியவைகள் இன்னவை இன்னவை என்பதையும், சீவ விருட்சம், சீவ விருட்சத்தின் கனிகள், தேவ ஆலயம், கர்த்தருடைய பருவதம், பரலோக இராச்சியம் என்று சொல்லப்படுபவைகளையும் சுருக்கமாக இன்னவை என நாம் தெரிந்துகொள்வோமானுல் பின் சொல்லப்படுபவைகள் நமக்கு நன்கு விளங்கும்.

15. 'என்னையல்லாமல் ஒருவனும் என். பிதாவினிடத்தில் வரமாட்டான்' என்று சொன்ன கிறிஸ்து பரமான்மா நம்மைப் பிதாவினிடத்தில் வழிநடத்துவாராக.

---

## 2-வது, பிதா, குமாரன், சீவான்மா.

16. எனக்கு அருமையானவர்களே! தேவாதி தேவனுகிய நமது பிதாவினிடத்தில் செல்ல நமக்கு வழி காட்ட வந்த கிறிஸ்து பரமான்மா நம்மில் பிறக்கவும் நம்மில் உருவாகவும் பிதாவினிடத்தில் தாம் கண்டவைகளை நமக்குச் சொல்லவும் கூடியதாக நாம் மிக முயலவேண்டும்.

17. அவர் சொல்லும் மெதுவான சொற்களை மிகக் கருத்தாய்க் கேட்கவேண்டும். நாம் வேறு வேறுன சிந்தையும் கருத்தும் உடையவர்களாயிருந்தால் அவர் சொல்வதைக் கேட்கத் தவறிப் போவோம்.

18. நத்தையின் எச்சிலினால் உண்டாகும் ஆணிமுத்தைப் போலவும், பவளப் பூச்சியின் எச்சிலினால் உண்டாகும் நற்பவளம் போலவும், பட்டுப் பூச்சிகளுண்டாக்கும் பட்டைப்போலவும், கரிய நிறமுள்ள நிலக்கரியிற் பிறந்து வெண்மையாய் விளங்கும் விலையுயர்ந்த வைரம் போலவும், நிலத்தில் ஊர்ந்துதிரியும் புழு பலநிறமுள்ள வண்ணாத்திப் பூச்சியாய் வானத்தில் பறப்பது போலவும் வாயாற் சொல்லிமுடியாத சிறந்த குணங்களை யுடைய மெய்ப்பொருளை மண்கலம் போன்ற வலுவற்ற இந்த உடம்பில் பெற்றிருக்கிறோம்.

19. வானமும் நிலமும் மதிக்க வொண்ணாத மெய்ப்பொருளை நாம் பெற்றிருந்தும் அப்பொருளை அறியாமலும், அப்பொருளினால் ஆகிய பயன் இன்னதென்று அறிந்து பயன்படுத்திக் கொள்ளாமலும் இருக்கிறோ மென்றும் அதைக் கெட்டவழியில் செலவிடுகிறோமென்றும் மிகவும் வருத்தத்தோடு சொல்லவேண்டியதாய் இருக்கிறது.

20. இருந்தாலும், பரமான்மா மிகுந்த இரக்கமுள்ளவராய் அப்போ தைக்கப்போது தம்மைக் காணும்படி நமக்கு அருள் செய்கிறார்.

21. அவர் அருளால் நாம் அறிய வேண்டிய மெய்ப்பொருள் இன்ன தென்று மிகுந்த அச்சமும் அன்புடனும் ஆராய வேண்டும். அப்படி ஆராயும் பொழுது அவர் திருவாய் மலர்ந்தருளிய சொற்களையும் அவரது மெய்த்தொண்டர்கள் அருளிய சொற்களையும் நாம் ஒன்று சேர்த்துப் பார்ப்பது நல்லது. அவை வருமாறு.

---

22. நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். (யோவா. 14 : 20.)

23. என்னையும் அறியீர்கள் ; என் பிதாவையும் அறியீர்கள் ; நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என்பிதாவையும் அறிவீர்கள். (யோவா. 8 : 19)

24. என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால் நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை ; செய்தேனேயானால் நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும் பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படிக்கு அந்தக் கிரியைகளையாவது விசு வாசியுங்கள். (யோவா. 10 : 37—38)

25. என்னை அனுப்பினவர் என்னுடனே கூடவிருக்கிறார். பிதா வுக்குப் பிரியமானதை எப்பொழுதும் நான் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே யிருக்கவிடவில்லை. (யோவா. 8 : 29)

26. என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான். (யோவா. 12 : 45)

27. என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள். (யோவா. 14 : 7)

28. அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள். (யோவா. 16 : 3)

29. நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன்; அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள். (யோவா. 10 : 32)

30. உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப்பேசுகிறான், பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். (யோவா. 3 : 31)

31. அந்த வார்த்தை மாமிசமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. (யோவா. 1 : 14)

32. அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவா. 1 : 12)

33. அவர்கள், இரத்தத்தினாலாவது மாமிச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். (யோவா. 1 : 13)

34. பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். (யோவா. 15 : 9)

35. அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்குத்தொண்டு செய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும். (யோவா. 16 : 2)

36. வேத வாக்கியத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள். (யோவா. 7 : 49)

37. இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போசனமாயிருக்கிறது. (யோவா. 4 : 34)

---

### 3-வது கிறிஸ்து பரமான்மாவின் வேண்டுதல்.

38. அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கும்படி, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல் அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். (யோவா. 17 : 21)

39. நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். (யோவா. 17 : 22)

40. ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும் நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும் நான் அவர்களிலும், நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். (யோவா. 17 : 23)

---

### 4-வது பரமான்மா சீவான்மாவிற்கு உதவுதல்.

41. நானே உயிர்த்தெழுதலும் சீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். (யோவா. 11 : 25)

42. நானே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவா. 14 : 6)

43. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனும் இருளில் இராதபடிக்கு நான் உலகத்துக்கு ஒளியாய் வந்தேன். (யோவா. 12 : 46)

44. நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன்; என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் சீவ ஒளியை அடைந்திருப்பான். (யோவா. 8 : 12)

45. சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்கப் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தத்தைக் கேட்கிறான். (யோவா. 18 : 37)

46. சீவ அப்பம் நானே. (யோவா. 6 : 48)

47. அவர் உனக்கு சீவத்தண்ணீரைக் கொடுப்பார்; (யோவா. 4 : 10)

48. என்னை விசுவாசிக்கிறவன் உள்ளத்திலிருந்து சீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும். (யோவா. 7 : 38)

49. சீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன். (வெளி. 2 : 7)

50. உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான். (யோவா. 8 : 56)

51. கிறிஸ்து பரமான்மா சொல்லிய மேற்கண்ட சொற்றொடர்களினால் பிதாவும் குமாரனும் ஒவ்வொரு சீவான்மாவிலும் நிலைத்திருக்கிறார்கள் என்றும், ஆனால் சீவான்மா கிறிஸ்து பரமான்மாவாகிய குமாரனையும் அவர் பிதாவாகிய தேவனையும் அறிந்துகொள்ளவில்லை யென்றும், தன்னை அறிகிறவன் தெய்வத்தை அதாவது பிதாவையும் அறிகிறானென்றும், சீவான்மா தம்மையும் பிதாவையும் அறிந்து கொள்ளப் பிதாவினிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறார் என்றும் அறிகிறோம்.

52. அழிந்து போகக்கூடிய இயல்புடைய சீவான்மாவுக்கு நான் உயிர்த்தெழுதல் ஆகவும், சீவன் ஆகவும், இருளில் இருப்பவர்களுக்கு ஒளியாகவும், ஆவியில் பசியுள்ளவர்களுக்கு சீவ அப்பமாகவும், வழி தவறிப்போனவர்களுக்கு வழிகாட்டியாகவும், சத்தியமாகவும் சீவத்தண்ணீராகவும் இருக்கிறேன் என்று கிறிஸ்து பரமான்மா சொல்லுகிறார்.

53. இதோடு சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் உலகத்திற்கு வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றும் என் சத்தத்தைக் கேட்டு முற்றிலும் கீழ்ப்படிந்த ஆபிரகாம் என் நாட்களைக் காண ஆசையாயிருந்தான், கண்டு களிகூர்ந்தான் என்றும், என்னைக் கண்டவன் என் பிதாவைக் கண்டான் என்றும் சொல்லுகிறார்.

54. அவர் சொல்லிய ஒவ்வொரு சொல்லும் மிக ஆழ்ந்த பொருளுள்ளது. அவைகளை ஒன்றோடொன்று சேர்த்து ஆராயும் பொழுது மாமிசத்தின்படியல்ல, ஆவியின்படி அறியப்படக்கூடியவைகள்.

55. இவர் மெய்யாகவே தேவகுமாரன் என்று நூற்றுக்கதிபதி கண்டான்; வலது பாரிசத்தில் நின்ற கள்ளன் அவரை அறிந்து 'இன்றைக்கு என்னோடு கூட பரதீசிலிருப்பாய்' என்ற வாக்குப் பெற்றான். மரியாள் அவர் பாதத்தருகில் உட்கார்ந்து அவர் சொல்லும் சொற்களைக் கேட்டுக்கொண்டிருக்கும் நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்.

56. தன் வயதுசென்ற காலத்திலும் தான் மரிக்குமுன் பரமான்மாவைக் காண வேண்டுமென்று காத்திருந்த சிமியோன் தன் கைகளில் அவரை ஏந்தும்படியான மேன்மையைப் பெற்றான்.

57. அவர் குழந்தையாய் இருந்தபொழுது அவரைச் சுற்றிவைத்த கந்தைகளையும், அவர் படுத்திருந்த புல்லணையையும், பார்த்துக் கொண்டிருந்த பசுக்களையும் போல, நாம் அவரை அறியாதவர்களாய் இருந்தாலும், அவர் இருந்த பசுத்தொழுவம் அவரால் ஒளி அடைந்திருந்தது போல, பரமான்மா நம்முள் இருப்பதினாலே தான் மனிதர் என்று சொல்லும் படியான பெரும்பேறு பெற்றோம்.

58. நமக்குள்ளிருக்கும் கிறிஸ்து பரமான்மாவையும் கிறிஸ்து பரமான்மாவுக்குள்ளிருக்கும் பிதாவையும் நாம் அறிந்துகொள்ளும்படி கிறிஸ்து பரமான்மா தாமே அருள் புரிவாராக.

## 5-வது பிதா.

59. நாம் எல்லோரும் கிறிஸ்துபரமான்மாவுக்கும் தேவனுக்கும் பிள்ளைகளாய் இருக்கிறோம் என்றும், கிறிஸ்து பரமான்மா தேவனுக்குப் பிள்ளையாய்இருக்கிறார் என்றும் அடியில் வரும் சொற்றொடர்களால் நாம் அறிவோம்.

60. நீங்கள் எல்லோரும் கிறிஸ்தேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. (கலாத். 3 : 26)

61. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர். (1 கொரி. 3 : 23)

62. ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார் என்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறான் என்றும் கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறார் என்றும் நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன். (1 கொரி. 2 : 3).

63. தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்கள் தேவனால் உண்டாயிராதபடியால் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடாமலிருக்கிறீர்கள். (யோவா. 8 : 47)

64. பிரியமானவனே, நீ தீமையானதைப் பின்பற்றாமல் நன்மையானதைப் பின்பற்று; நன்மை செய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்; தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை. (3 யோவா. 11)

65. தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசிக்கிறோம்; தேவன் அன்பாகவே யிருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (யோவா. 4 : 16)

27 MAR 1918

66. தேவனை ஒருவரும் ஒரு போதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். (1 யோவா. 4 : 12)

67. பிரியமானவர்களே, ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில், அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். (1 யோவா. 4 : 7)

68. அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். (1 யோவா. 4 : 8)

69. தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படி தேவன் அவரை இவ்வுலகத்தில் அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. (1 யோவா. 4 : 9)

70. தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான்; ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியால் பாவம் செய்யமாட்டான். (1 யோவா. 3 : 9)

71. தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத்தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். (யோவா. 4 : 24)

72. கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கம் உள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்; நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகள் எவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார். (பிலிப். 4 : 8—9)

73. இச்சொற்றொடர்களினாலும் இதற்குமுன் சொல்லியவைகளினாலும் பிதா குமாரன் சீவான்மா என்பவர்களின் ஒற்றுமை இன்னதென்று அறிகிறோம்.

74. பிதாவின் சித்தத்திற்கு கிறிஸ்து பரமான்மா செவிகொடுக்கிறார் என்றும், கிறிஸ்து பரமான்மாவுக்குச் செவிகொடுத்த சீவான்மா பிதாவின் சொல்லுக்குச் செவிகொடுத்து அதன்படி நடப்பான் என்றும் காணப்படுகிறது.

## 6-வது சுத்த ஆவி.

75. இதன்மேல் வரும் சில சொற்றொடர்களைக் கவனித்தால் ஆவியானவரைப் பற்றிச் சில குறிப்புகள் சொல்லப்படுகின்றன என்று அறிவோம்.

76. பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர்; பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே; இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். (1 யோவா. 5 : 7)

77. பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று; ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே; இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது. (1 யோவா. 5 : 8)

78. மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். (ரோமர். 8 : 14)

79. அவர் நம்மை முத்திரித்து நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையுங் கொடுத்திருக்கிறார். (II கொரி. 1 : 22)

80. இயேசு அவனுக்குப்பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (யோவா. 3 : 3)

81. அதற்கு நிக்கோதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப்பிறப்பான்? அவன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந் தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். (யோவா. 3 : 4)

82. இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (யோவா. 3 : 5)

83. உலகம், அந்தச்சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே யிருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள். (யோவா. 14 : 17)

84. மாமிசம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாமிசத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்று இருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்றன. (கலாத். 5 : 17)

85. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. (கலாத். 5 : 18)

86. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியோடு கூடச் சாட்சிகொடுக்கிறார். (ரோமர் 8 : 16)

87. நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது. (ரோமர். 9 : 2)

88. ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டவர்களாயிருந்து மாமிசத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை. (ரோமர். 8 : 1)

89. மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக் குரியவைகளை அறிவான்? (1 கொரி. 2 : 11)

90. அப்படிப்போல தேவனுடைய ஆவியினாலேயன்றி ஒருவனும் தேவ னுக்குரியவைகளை அறியமாட்டான். (1 கொரி. 2 : 11)

91. அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். (யோவா. 16 : 8)

92. மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினி மித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் சீவனுள்ளதாயும் இருக்கும். (ரோம. 8 : 10)

93. அன்றியும் மாமிசத்தின்படி நடக்கிறவர்கள் மாமிசத்துக்குரியவை களைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். (ரோம. 8 : 5)

94. ஜென்மசுபாவமானமனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாய்த் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைக ளானதால் அவைகளை அறியவுமாட்டான். (1 கொரி. 2 : 14)

95. ஜென்மசரீரம் விதைக்கப்படும் ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும், பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும் பலமுள்ளதாய் எழுந்திருக்கும்; அந்தப்படியே முந்தின மனுஷனான ஆதாம் சீவான்மா ஆவான் என்று எழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். (1 கொரி. 15 : 44, 43, 45)

96. ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவராலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். (1 கொரி. 2 : 15)

97. மாமிசசிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ சீவனும் சமாதானமுமாம். (ரோம. 8 : 6)

98. மேல் கண்ட வாக்கியங்களினல் தேவ ஆவி என்றும் மாமிசத்துக்குரிய ஆவி என்றும், தேவ ஆவியினல் நன்மையான காரியங்கள் யாவும் செய்யப்படுகின்றனவென்றும், மாமிசத்துக்குரிய ஆவியினல் பாவமான காரியங்கள் யாவும் செய்யப்படுகின்றனவென்றும் இவ் விரு ஆவிகளும் ஒன்ருேடொன்று போராடுகின்றனவென்றும் மாமிசத்துக்குரிய ஆவியின்படி நடப்பதே சீவான்மாக்களுடைய இயல்பென்றும் அதன்படி நடவாமல் தேவ ஆவியின் ஏவுதலால் நடத்தப்பட வேண்டுமென்றும், தேவ ஆவியும் மாமிசத்துக்குரிய ஆவியும் இந்த உடலுக்குள்ளேயே இருக்கின்றன என்றும் காணப்படுகின்றன.

---

## 7-வது மாமிசம்.

99. உடலின் இச்சை தீமை செய்ய ஏவுகிறதென்றும், தேவ ஆவியினல் நடத்தப்படுகிறவர்கள் மாமிசத்தின் இச்சையாவையும் ஒழித்து, பரிசுத்த ஆவியின் ஏவுதலினல் நடத்தப்படுவார்கள் என்றும், அதுவே தேவனுடைய சித்தமென்றும் பின் வரும் வாக்கியங்களில் காணலாம்.

100. இந்த ஜனங்கள் தங்கள் வாயினல் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினல் என்னைக் கனம் பண்ணுகிருர்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது. (ஏசா 29 : 13)

101. ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச்செய்தாலும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யுங்கள். (1 கொரி. 10 : 31)

102. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாமிசத்தையும் அதன் இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிருர்கள். (கலாத். 5 : 24)

103. அவனவன் தன் தன் சுய இச்சையினலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிருன். (யாக். 1 : 14)

104. ஏனெனில், மாமிசத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் சீவனத்தின் பெருமையாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினல் உண்டானவைகளல்ல; அவைகள் உலகத்தினலுண்டானவைகள். (1 யோவா. 2 : 16)

105. உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். (1 யோவா. 2 : 17)

106. மாமிசத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன, விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்; (கலாத். 5 : 19)

107. விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள்; (கலாத். 5 : 20)

108. பொருமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். (கலாத். 5 : 21)

109. அப்படியிருந்தும் உங்களுக்குச் சீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை. (யோவா. 5 : 40)

110. அழிந்துபோகிற போசனத்திற்காக அல்ல, நித்திய சீவன் வரைக்கும் நிலைநிற்கிற போசனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷ குமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார். (யோவா. 6 : 27)

111. ஏனெனில், மாமிசத்தின் மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்த சேதன முள்ளவர்கள். (பிலிப். 3 : 3)

112. அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். (பிலிப். 3 : 19)

113. என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருட்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன். (ஏசா. 66 : 2)

114. மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாகவும், ஆட்டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாகவும், காணிக்கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாகவும், தூபங் காட்டுகிறவன் விக்கிரகத்தை தோத்திரிக்கிறவனாகவும் இருக்கிறான்; இவர்கள் தங்கள் வழிகளையே தெரிந்து கொள்ளுகிறார்கள்; இவர்களுடைய ஆன்மா தங்கள் அருவருப்புகளின் மேல் விருப்பமாயிருக்கிறது. (ஏசா. 66 : 3)

115. நான் கூப்பிட்டும் மறு உத்தரவு கொடுக்கிறவன் இல்லாமலும், நான் பேசியும் அவர்கள் கேளாமலும், அவர்கள் என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, நான் விரும்பாததைத் தெரிந்து கொண்டதினிமித்

தம், நானும் அவர்களுடைய ஆபத்தைத் தெரிந்துகொண்டு, அவர்களுடைய திகில்களை அவர்கள் மேல் வரப்பண்ணுவேன். (ஏசா. 66 : 4)

116. மேற்கண்ட சொற்றொடர்களினால் மாமிசத்தின் இச்சையின்படி நம்மை நடக்க ஏவுகின்ற ஆவியே பொல்லாத ஆவிகள் என்றும் பிசாசுகள் என்றும் சொல்லப்படுகிறது.

117. தன் உடம்பின் பொறி புலன்களுக்கு ஏற்றவிதமாய் இச்சை கொள்ளும்படி செய்கிற ஆவியினால் சீவான்மா பல விதத்தாலும் சோதிக்கப்படவும் வாதனை அடையவும் கூடியவனாயிருக்கிறான்.

118. அசுத்த ஆவியினால் நடத்தப்படாமல் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படவேண்டுமென்பதைத் தெளிவாக அறிகிறோம்.

119. மாமிச இச்சையினால் வரும் கிரியைகள் இன்னின்னவையென்றும் அவைகளின் முடிவு மரணம் என்றும், அவர்கள் தேவன் வயிறு என்றும் அவர்கள் தங்கள் இச்சையினால் இழுக்கப்பட்டுத் தேவ சித்தத்திற்கு மாறாகத் தகாதவைகளைச் செய்து அழிந்து போகிறார்கள் என்றும் காண்கிறோம்.

---

## 8-வது பொல்லாத ஆவிகள்.

120. அடியில் வரும் சொற்றொடர்களில் பொல்லாத ஆவிகள் பிசாசுகள் இன்னார் என்றும், அவர்களின் தன்மை இன்னதென்றும், அவர்களால் தீமை அடையாதபடி நாம் செய்யவேண்டியது இன்னதென்றும் சொல்லப்படுகிறது.

121. ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. (யோவா. 3 : 19)

122. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். (யோவா. 3 : 20)

123. சத்தியத்தின்படி செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும் படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான். (யோவா. 3 : 21)

124. நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன்; நீங்களும் உங்கள் பிதாவினிடத்தில் கண்டதைச் செய்கிறீர்கள். (யோவா. 8 : 38)

125. நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்க வில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான். (யோவா. 8 : 44)

126. நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை. (யோவா. 8 : 45)

127. நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். (எபே. 6 : 11)

128. ஏனெனில், மாமிசத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு. (எபே. 6 : 12)

129. ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். (எபே. 6 : 13)

130. சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; (எபே. 6 : 14)

131. சமாதானத்தின் சுவிசேஷத்துக்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; (எபே. 6 : 15)

132. பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாச மென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். (எபே. 6 : 16)

133. இரட்சணிய மென்னும் தலைச்சீராவையும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். (எபே. 6 : 17)

134. எந்தச்சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். (எபே. 6 : 18)

135. மேற்கண்ட சில சொற்றொடர்களில் பொல்லாத ஆவிகள் அல்லது பிசாசுகள் இன்னார் என்பதைப் பற்றித் தெளிவாகச் சொல்லப் படுகிறது. கிறிஸ்து பரமான்மாவின் பிதா ஒன்றான மெய்த்தெய்வம் என்றும், மாமிச விருப்பப்படி நடக்கும் சீவான்மாவுக்கு, மனித கொலைபாதகனாயிருக்கும் பிசாசு பிதாவாயிருக்கிறான் என்றும், இவன் சொல்வது யாவும் பொய் யாயிருக்கிற தென்றும், இவன் பொய்யை நம்பாமல், தாம் சொல்லும் சத்தியமான நற் கிரியைகளைச் செய்யவேண்டும் என்றும், அப்படிச் செய்யும் பொழுது தேவ புத்திரராயிருப்பீர்கள் என்றும், பரமான்மா சொல்லுகிற தாகத் தெரிகிறது. இவனே சீவான்மாவுக்குப் பலவாறான விருப்பங்களை உண்டாக்கிப் பொல்லாத ஆவிகளாய் நமக்குள்ளேயேயிருந்து நம்மைக் கெடுத்து அழியாத இன்பத்தையல்ல, நீங்காத துன்பத்திற்கு ஆளாக்கு கிறான். இவ்வசுத்த ஆவிகள் எப்படியாவது சீவான்மாவின் பொறி புலன்களை வசப்படுத்திக் கொள்ளுவதினால் அவனை எதிர்த்துத் தடுத்து அவன் வசப்பட்டுப் போகாதபடி நற்குணங்கள் பலவற்றையும் உடைய வர்களா யிருக்கவேண்டுமென்று சொல்லுகிறார் என்று அறிகிறோம்.

---

## 9-வது ஆலயம்.

136. பின் வரும் சில சொற்றொடர்களில் தேவனுடைய ஆலயம் இன்ன தென்றும் அவரைக்கண்டு பணிந்துகொண்டு அவர் சித்தத்தின்படி செய்கிற சீவான்மா அவரால் எல்லா நன்மைகளையும் அழியாத சீவனையும் பெறுகிறா னென்றும் சொல்லப்படுகிறது.

137. நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும், தேவனு டைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர் களா? (1 கொரி. 3 : 16)

138. உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியு மிருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்கள் அல்லவென்றும் அறியீர்களா? (1 கொரி. 6 : 19)

139. நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாய் இருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும் தேவனுடைய மாளிகையுமாய் இருக் கிறீர்கள். (1 கொரி. 3 : 9)

140. நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயு மிருக்கிறீர்கள். (1 கொரி. 12 : 27)

141. ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லா வற்றையும் உண்டுபண்ணினவர் தேவனே. (எபிரே. 3 : 4)

142. சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். (எபிரே. 3 : 5)

143. கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராய் இருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம். (எபிரே. 3 : 6)

144. நான் அவர்களோடே சமாதான உடன்படிக்கை செய்வேன்; அது அவர்களுக்கு நித்திய உடன்படிக்கையாயிருக்கும்; நான் அவர்களை நிலைப்படுத்தி, அவர்களை வர்த்திக்கப்பண்ணி, அவர்கள் நடுவிலே என் பரிசுத்த ஸ்தலத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பேன். (எசேக். 37 : 26)

145. தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் என் சனங்களாய் இருப்பார்களென்று தேவன் சொன்னபடி, நீங்கள் சீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். (II கொரி. 6 : 16)

146. எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. (II தெச. 2 : 3)

147. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவது எதுவோ, ஆராதிக்கப்படுவது எதுவோ, அவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான். (II தெச 2 : 4)

148. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (II கொரி. 6 : 17)

149. ஆகையால், நீங்கள் இனி அன்னியரும் பரதேசிகளுமாய் இராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, (எபேசி. 2 : 19).

150. அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; (எபேசி. 2 : 20).

151. அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; (எபே. 2 : 21).

152. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள். (எபே. 2 : 22).

153. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது; அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய சனங்களா யிருப்பார்கள்; தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து, அவர்களுடைய தேவனா யிருப்பார். (வெளி. 21 : 3).

154. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. (வெளி. 21 : 4).

155. அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக் குட்டியானவருமே அதற்கு ஆலயம் (வெளி. 21 : 22).

156. நகரத்திற்கு வெளிச்சங் கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது; ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. (வெளி. 21 : 23).

157. ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம். (1 கொரி. 3 : 17)

158. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீடர்களென்று எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள். (யோவா. 13 : 35.)

159. நான் குழந்தையாயிருக்கும்போது குழந்தையைப் போலப் பேசினேன், குழந்தையைப் போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். (1 கொரி. 13 : 11)

160. இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன், (1 கொரி. 13 : 12.)

161. தேவன் நமக்கு நித்திய சீவனைத் தந்திருக்கிறார், அந்தச் சீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாம். (1 யோவா. 5:11)

162. அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவா. 14:6)

163. ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய சீவன். (யோவா. 17:3)

164. அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். (யோவா. 2:21)

165. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போசனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போசனம் பண்ணுவான். (வெளி. 3:20)

166. கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக் கடவது (ஆபகூக். 2:20)

167. மேற்கண்டசொற்றொடர்களில் மனிதனுடைய உடம்பேதேவனுக்கு ஆலயமாயிருக்கிறதென்றும், பிதா அதில் வாசமாயிருக்கிறாரென்றும், பரமான்மா அதற்கு விளக்காயிருக்கிறாரென்றும், சீவான்மா தெய்வத்திற்குப் பிள்ளையாயிருக்கிறான் என்றும் அவனுடைய எல்லாத்துன்பங்களையும் அவர் நீக்குவார் என்றும், சீவான்மா அழிவற்ற சீவனைப் பெறுவானென்றும் சொல்லப்படுகிறது. விளக்கு வெளிச்சத்தில் தங்கள் நிழலைக்கண்டு வியப்படைந்த பிள்ளைகள் தக்க பருவம் வந்த பொழுது தங்கள் முகத்தைக் கண்ணாடியில் பார்த்து மகிழ்வதும், தூரதேசம் போன பிள்ளையின் படத்தைவைத்துப் பார்த்துக்கொண்டிருந்த தாய் அவன் திரும்பி வந்த காலத்தில் முகமுகமாய்க் கண்டு மகிழ்வதும் போல, சீவான்மா வெளிப்பிரகாரமாய், நிழலாட்டமாய்க் கண்ட தெய்வம் தன் உடலாகிய ஆலயத்தில் இருக்கிறார் என்று தான் காணும் பொழுது மிகுந்த மகிழ்ச்சி அடைவான். அவரை முகமுகமாய்க்கண்டு அவரோடு பேசி உண்டு உயிர்த்து அவரால்பெறவேண்டிய ஆதரவு யாவும் பெறுவான்.

168. பிதாவின் சித்தத்தைக் குமாரன் அவனுக்கு வெளிப்படுத்துவார் என்றும், பரிசுத்த ஆவி குமாரனுடைய சொற்களை சீவான்மாவுக்கு அடிக்கடி நினைப்பூட்டி வழிநடத்துவார் என்றும் மிகத்தெளிவாகக் காண்கிறோம்.

## 10-வது பரலோக இராச்சியம்.

169. அடியில் வரும் சொற்றொடர்களில் பரலோக இராச்சியம் இன்னதென்றும் அதை அடைகிறதற்கு என்ன செய்யவேண்டுமென்றும் அது எதற்கு ஒப்பாயிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

170. என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். (மத். 6 : 31)

171. இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். (மத். 6 : 32)

172. முதலாவது தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (மத். 6 : 33)

173. இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித்தேடுகிறார்கள்; இவைகள் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார். (லூக். 12 : 30)

174. தேவனுடைய இராச்சியத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (லூக். 12 : 31)

175. பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு இராச்சியத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார். (லூக். 12 : 32)

176. உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள்; பழமையாய்ப் போகாத பணப்பைகளையும், குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. (லூக். 12 : 33)

177. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். (லூக். 12 : 34)

178. இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப் பட்டவனுமாயிருக்கிறான். (ரோம. 14 : 18)

179. அவர் தம்முடைய சீடர்களை நோக்கிப்பார்த்து: தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்; தேவனுடைய இராச்சியம் உங்களுடையது. (லூக். 6 : 20)

180. இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்: திருப்தியடைவீர்கள். (லூக். 6 : 21)

181. இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள். (லூக். 6 : 21)

182. மனுடகுமாரன் நிமித்தமாக சனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளி விடும்போது பாக்கியவான்களா யிருப்பீர்கள். (லூக். 6 : 22)

183. அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்திலே உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள். (லூக். 6 - 23)

184. சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள். (அப். 14 : 22)

185. அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத். 19 : 23)

186. ஐசுவரியவான் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார். (மாற். 10 : 25)

187. உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப் போடு, நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். (மாற். 9 : 47)

188. பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை யென்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். (கலாத். 5 : 21.)

189. விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய இராச்சியமாகிய கிறிஸ்துவின் இராச்சியத்திலே சுதந்தரமடைவதில்லை யென்று அறிந்திருக்கிறீர்களே. (எபே. 5 : 5)

190. ஆகையால், தேவனுடைய இராச்சியம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத்தருகிற சனங்களுக்குக் கொடுக்கப்படும். (மத். 21 : 43)

191. நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோப்பையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய இராச்சியத்திலிருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். (லூக். 13 : 28)

192. மாயக்காரராகிய வேத பாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோக இராச்சியத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறது மில்லை. (மத். 23 : 13)

193. இயேசு பிரதியுத்தரமாக: என் இராச்சியம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் இராச்சியம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என்ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் இராச்சியம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். (யோவா. 18 : 36)

194. பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத்தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் என்றார். (மத். 16 : 19)

195. நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய இராச்சியம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. (மத். 12 : 28)

196. வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள் என்றார்; அவர்கள் ஒரு பணத்தை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். (மத். 22 : 19)

197. அப்பொழுது அவர்: இந்தச்சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார், (மத். 22 : 20)

198. இராயனுடையது என்றார்கள்: அதற்கு அவர்: அப்படியானால் இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். (மத். 22 : 21)

199. நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் வழங்கி வந்தது, அது முதல் தேவனுடைய இராச்சியம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள். (லூக். 16 : 16)

200. பரலோக இராச்சியத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்களுமுண்டு. (மத். 19 : 12)

201. அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய இராச்சியத்தை எதற்கு ஒப்பிடுவோம்? அல்லது எந்த உவமையினாலே அதைத் திருட்டாந்தப் படுத்துவோம்? (மாற். 4 : 30)

202. பரலோக இராச்சியம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுடனுக்கு ஒப்பாகிறது. (மத். 13 : 24)

203. பரலோக இராச்சியம் புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது. (மத். 13 : 33)

204. பரலோக இராச்சியம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. (மத். 13 : 31)

205. பரலோக இராச்சியம் வீட்டு எஜமானாகிய ஒரு மனுடனுக்கு ஒப்பாயிருக்கிறது. (மத். 20 : 1)

206. பரலோக இராச்சியம் தன் குமாரனுக்குக் கலியாணம் செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. (மத். 22 : 2)

207. பரலோக இராச்சியம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. (மத். 18 : 23)

208. அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவன் தன் திராட்சத் தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. (லூக். 13 : 6)

209. பரலோக இராச்சியம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. (மத். 13 : 44)

210. பரலோக இராச்சியம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. (மத். 13 : 45)

211. பரலோக இராச்சியம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. (மத். 13 - 47)

212. அன்றியும், பரலோக இராச்சியம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது. (மத். 25 : 14)

213. அப்பொழுது பரலோக இராச்சியம் தங்கள் தீவெட்டிகளைப் பிடித்துக் கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். (மத். 25 : 1.)

214. இராச்சியத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத். 8 : 12)

215. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள். (மத். 21 : 31)

216. அன்றியும் மனுடகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். (மத். 25 : 31)

217. அப்பொழுது, சகல சனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து. (மத். 25 : 32)

218. செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். (மத். 25 : 33)

219. அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். (மத். 25 : 34)

220. பசியாயிருந்தேன், எனக்குப் போசனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்; (மத். 25 : 35)

221. வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப்பார்க்க வந்தீர்கள் என்பார். (மத். 25 : 36)

222. அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். (மத். 25 : 40)

223. அப்பொழுது சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். (மத். 13 : 10)

224. அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோக இராச்சியத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. (மத். 13 - 11)

225. உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும். (மத். 13 : 12)

226. அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும் உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன். (மத். 13 : 13)

227. அதற்கு அவர்: தேவனுடைய இராச்சியத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. (மாற். 4 : 11)

228. நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத். 18 : 3)

229. ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக இராச்சியத்தில் பெரியவனாயிருப்பான். (மத். 18 : 4)

230. இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; பரலோக இராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொன்னார். (மத். 19 : 14)

231. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத். 7 : 21)

232. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். (மத். 7 : 22)

233. அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். (மத். 7 : 23)

234. தேவனுடைய இராச்சியத்தினிமித்தம் வீட்டையாவது, பெற்றோரையாவது, சகோதரரையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்டு விட்ட எவனும், (லூக். 18 : 29)

235. இம்மையிலே அதிகமானவைகளையும், மறுமையிலே நித்திய சீவனையும் அடையாமற் போவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக். 18 : 30)

236. தேவனுடைய இராச்சியம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக தேவனுடைய இராச்சியம் பிரத்தியட்சமாய் வராது. (லூக். 17 : 20)

237. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும், சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ தேவனுடைய இராச்சியம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார். (லூக். 17 : 21)

238. தேவனுடைய இராச்சியம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. (ரோம. 14 : 17)

239. தேவனுடைய இராச்சியம் பேச்சிலே அல்ல, பலத்திலே உண்டாயிருக்கிறது. (1. கொரி. 4 : 20)

240. தன் சீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாக தன் சீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். (மத். 16 : 25)

241. இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராச்சியத்தைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக். 9 : 27)

242. மேற்கண்ட சொற்றொடர்களில் பரலோக இராச்சியம் என்றும் உலக இராச்சியம் என்றும் இரண்டு இருக்கிறதாகவும் உலக இராச்சியத்தின் புத்திரர் புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாகும் என்றும், மெய்யான ஒளியாகிய பரமான்மாவின் சொற்படி நடவாமல் மாமிச சித்தத்தின்படி தீமையானவைகளைச் செய்யும் சீவான்மா இருளில் இருப்பான் என்றும், அவனே உலகத்துக்குரிய மனுஷனென்றும், பரமான்மாவின் விருப்பப்படி நடக்கிறவனே பரலோக இராச்சியத்தின் புத்திரனாயிருக்கிறான் என்றும் அறிந்துகொள்ளுகிறோம்.

243. பரலோக இராச்சியம் இவ்வுலகத்துக்குரியதல்லவென்று சொல்லியிருந்தாலும் இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்பதினாலும் யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள். மனம் திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள், தேவனுடைய இராச்

சியம் உங்களுக்குள் இருக்கிறதே; தேவனுடைய இராச்சியத்தைக் காணு முன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்னும் சொற்களால் பரலோக இராச்சியம் என்பது ஒன்றான மெய்த்தெய்வத்தைத் தனக்கு அரசனாகவும் அவர் குமாரனாகிய பரமான்மாவைத் தனக்குத் தலைவனாகவும், அவர் தந்த பரிசுத்த ஆவியைத் தன் விசாரிப்புக்காரராகவும் ஒப்புக்கொண்டு, பிதா விரும்பிய நற்காரியங்கள் யாவையும் குமாரன் காட்டிய முன்மாதிரிப்படி செய்வதே பரத்துக்குரியதென்றும், பிதாவின் சித்தப்படி நன்மைகளைச் செய்வது குமாரன் காட்டிய நன்னெறியென்றும் அந்நன்னெறி பரலோகத்தில் சேர்க்குமென்றும் மேலான அந்த நன்னெறிப்படி நடக்கும் சீவான்மாவின் உள்ளத்திலேயே அவ்விராச்சியம் இருக்கிறதென்றும், மிகுந்த பிரயாசத்துடன் அநேகர் அதை அடைகிறார்களென்றும் காணப்படுகிறது.

244. பரமான்மா காட்டிய நன்னெறியில் நடவாதவர்கள் இராச்சியத்தின் புத்திரரென்றும் அவர்கள் பரமான்மாவை அடையாதவர்களாய் மாமிச விருப்பத்தின்படி தீமைகளைச் செய்து நரகத்திலிருப்பவர்கள் என்றும் சொல்லப்படுகிறது.

245. தீமைகளைச் செய்கிறவர்களிடமிருந்து தேவ இராச்சியம் நீக்கப்பட்டு அதற்கேற்ற நற்கிரியைகளைச் செய்கிறவர்களுக்கே கொடுக்கப்படும் என்று தெளிவாகக் காண்கிறோம்.

---

## 11 சீவவிருட்சம்.

246. அடியில் வரும் சொற்றொடர்களில் ஒவ்வொரு சீவான்மாவும் விருட்சத்துக்கு ஒப்பாகச் சொல்லப்படுகிறான் என்று காண்போம்.

247. நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். (யோ. 15 : 1)

248. தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார். (ஆதி. 2:8)

249. தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே சீவவிருட்சத்தையும், நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார். (ஆதி. 2 : 9)

250. தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று. (ஆதி 2 : 10.)

251. தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். (ஆதி. 2 : 16)

252. ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதி. 2 : 17)

253. என்னில் நிலைத்திருங்கள்; நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால், அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள். (யோவா. 15 : 4)

254. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத்தேடி வருகிறேன், ஒன்றையுங்காணவில்லை; இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். (லூக் 13 : 7)

255. அதற்கு அவன் ஐயா, இந்த வருஷமும் இருக்கட்டும், நான் இதைச் சுற்றிலுங் கொத்தி எருப்போடுவேன். (லூக் 13 : 8)

256. கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார். (லூக். 13 : 9)

257. மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள். (மத். 3 : 8)

258. இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். (மத். 3 : 10)

259. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற சீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது. (வெளி. 2 : 7)

260. ஆவியின் கனி, சகல நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் விளங்கும். (எபேசி. 5 : 9)

261. ஆவியின் கனியோ, அன்பு, சந்தோடம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலா. 5:22-23)

262. வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து சீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். (யோவா. 7 : 38)

263. பின்பு, பளிங்கைப்போல் தெளிவான சீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். (வெளி. 22 : 1)

264. நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கிய மடைகிறதற்கு ஏதுவானவைகள். (வெளி. 22 : 2)

265. நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரையிலும் புசிப்புக்கான சகல வித விருட்சங்களும் வளரும்; அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை; அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை; அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும்; அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்குமானவைகள். (எசேக் 47 : 12)

266. அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்தில் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான். (எரே. 17:8)

267. பிதா தோட்டக்காரர் அல்லது தோட்டத்துக்குடையவர் என்றும், குமாரனாகிய பரமான்மா, தோட்டத்தின் பலனைச் சேர்க்கிறவரென்றும், ஜீவான்மா தோட்டத்தில் நடப்பட்ட விருட்சமாயிருக்கிறானென்றும், விருட்சம் ஆவியின் கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயவு, விசுவாசம், சாந்தம் முதலிய நற்குணங்களாகிய கனிகளைக் கொடுக்க வேண்டியவனென்றும், அப்படிக் கொடாத மரம் தேவ சந்நிதியிலிருந்து விலக்கப்படும் என்றும், அம்மரம் நன்மையையும் தீமையையும் அறியக்கூடிய மரமென்றும், நன்மை தீமையான கனிகளைக் கொடுக்கக்கூடிய மரமென்றும், நன்மையானவைகளைச் செய்யும் பொழுது அது அழிவற்ற ஜீவனுடையதான ஜீவவிருட்சமாம் என்றும், தீமைகளைச் செய்யும் பொழுது நச்சு மரமாம் என்றுங் காணப்படுகிறது.

---

## 12 பருவதம், சிங்காசனம்.

268. அடியில் வரும் சொற்றொடர்களினால் ஒவ்வொருவனும் பரமான்மா தங்கும் தூய்மையான மலையாகவும் அவர் வீற்றிருக்கும் அரியணையாகவும் இருக்கிறான் என்று காண்போம்.

269. ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்த பர்வத மெங்கும் அவைகள் தீங்கு செய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா. 65 : 25)

270. அங்கே பெரும் பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதைகளாயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை. (ஏசா. 35 : 8)

271. அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்ட மிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். (ஏசா. 35 : 9)

272. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். (ஏசா. 35 : 10).

273. நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், சீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேரானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், (எபி. 12 : 22, 23)

274. புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள். (எபி. 12 : 24).

275. அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள் என்று கேட்டான். (வெளி. 7 : 13).

276. அதற்கு நான்; ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். (வெளி. 7 : 14).

277. ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். (வெளி. 7 : 15)

278. இவர்கள் இனி பசியடைவதுமில்லை; இனி தாகமடைவதுமில்லை. (வெளி. 7 : 16)

279. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை சீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். (வெளி. 7 : 17)

280. பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடே கூட அவருடைய பிதாவின் நாமம் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக் கண்டேன். (வெளி. 14 : 1)

281. அல்லாமலும், பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடி முழக்கம்போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்; நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது. (வெளி. 14 : 2)

282. அவர்கள் சிங்காதனத்திற்கு முன்பாகவும் நான்கு சீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப்பாடினார்கள்; அந்தப் பாட்டு பூமியிலிருந்து, மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக் கூடாதிருந்தது. (வெளி. 14 : 3)

283. ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப் பட்டவர்கள். (வெளி. 14 : 4)

284. துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன் மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். (ஏசா. 55 : 7)

285. அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். (ஏசா. 58 : 8)

286. அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார்; நுகத்தடியையும், விரல் நீட்டுதலையும், நிபச்சொல்லையும், நீ உன் நடுவிலிருந்து அகற்றி, (ஏசா. 58 : 9)

287. பசியுள்ளவனிடத்தில் உன் ஆன்மாவைச் சாய்த்து சிறுமைப்பட்ட ஆன்மாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப்போலாகும். (ஏசா. 58 : 10).

288. அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன். (ஏசா. 65 : 24).

289. அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான், சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான். (கலாத். 4 : 23).

290. இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய் மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளை பெறுகிறது, அது ஆகார் என்பவள்தானே. (கலாத். 4 : 24).

291. ஆகார் என்பது அரபிதேசத்திலுள்ள சீனாய் மலை; அந்த ஆகார் இப்பொழுதிருக்கிற எருசலேமுக்குச்சரி; இவள் தன் பிள்ளைகளோடேகூட அடிமைப்பட்டிருக்கிறாளே. (கலாத். 4 : 25).

292. மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள். (கலாத். 4 : 26).

293. மாமிச இச்சையாகிய பொல்லாத ஆவியினால் நடத்தப்படாமல் தேவ ஆவியாகிய பரிசுத்த ஆவியின் ஏவுதல்படி நடக்கிறவன் மீட்கப்பட்டவன் என்றும், சஞ்சலமுந் தவிப்பும் நீங்கி மிகுந்த சந்தோஷமும் மகிழ்ச்சியுமுடையவனாய் சீயோன் மலைக்கு வருவான் என்றும், அங்கே பரமான்மாவின் விருப்பப்படி நடந்துகொள்ளும் உத்தமர்களின் சபை இருக்கிறதென்றும் தேவாதி தேவன் அங்கே அரியணையில் வீற்றிருக்கிறார் என்றும் மீட்கப்பட்டவர்கள் அவரை எப்பொழுதும் துதித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் காண்கிறோம்.

294. சீயோன்மலை என்பது, தன்னைப்பார்க்கிறவன், அல்லது தன்னை அறிகிறவன் மலை என்று பொருள் படும். இவை ஞான அர்த்தமுள்ளவை. இதைப் பின் பார்ப்போம்.

295. கிறிஸ்து பரமான்மா காட்டிய நன்னெறியில் நடந்து முத்தி நிலையைப் பெற ஒவ்வொரு சீவான்மாவும் முதன்மையாய் அறிய வேண்டியவைகள் எவைகளோ அவைகளைப் பற்றி அறிவிக்கும் மறைமொழிகளில்

சிலவற்றை இங்கே பார்த்தோம். அவைகள் தலைப்பில் குறிப்பிடும் மெய்ப் பொருளை அறிந்துகொள்வதற்குப் போதுமானவை என்று எண்ணு கிறேன்.

296. உண்மைப்பொருளை அறிவதற்குப் பரமான்மாவின் திருவருள் மிகவும் வேண்டும். இருட்டான அறையில் வைத்திருக்கும் பொருளைக் காணவிளக்கு ஒன்று வேண்டுமே. எவனையும் விளக்கும் மெய்யான ஒளியின் உதவியினாலே நாம் அறிய முயல வேண்டும். பிதாவின் சித்தம் இன்னதென்று சீவான்மாவுக்குத் தெரிவிக்க வந்த கிறிஸ்து பரமான்மா நமக்கு அறிவிக்கவேண்டுமே யொழிய வேறுவிதமாய் நாம் அறிந்து கொள்ள முடியாது.

297. இதில் குறிக்கப்படும் சொற்றொடர்களில் ஒவ்வொன்றும் மிக ஆழ்ந்த கருத்துள்ளது. ஒவ்வொன்றாய்ச் சொல்ல நேரமில்லை. அவை கள் ஒன்றற்கொன்று மெய்ப்பொருளை உணர்த்தும் உரைபோல் உதவு கின்றன. மனதிற்கும் சொல்லுக்கும் எட்டாத மெய்ப்பொருளை அவைகள் அணுவணுவாக விளக்கிக்காட்டுகின்றன வென்று முடிவில் அறிவோம்.

298. மாமிசமும் இரத்தமும் பரலோக இராச்சியத்தை உரிமையாக்கிக் கொள்வதில்லை என்றபடி பாவமனுடன் இம்மேலான அறிவை அறிந்து கொள்ள மாட்டான். பாவமனுடனும் அவனை ஆண்டுகொண்டிருக்கும் பொல்லாத ஆவியும் அவன் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டாலொழிய பரலோக இராச்சியத்திற்குரிய நற்குணங்களைப் பெறமாட்டான். பரலோ கத்திற்குரிய பிதா குமாரன் ஆவி யென்னும் மெய்ப்பொருளைக் காண மாட்டான். உலகத்துக்குரிய மாமிசம், ஜலம் ஆவி யென்பவைகளினால் உண்டான தீய குணங்களுக்காளாகிப் பொல்லாப்பையே செய்து தேய்ந்து நித்திய சீவனை அடையாமற் போகிறான்.

299. இழுக்கும் செயல் தள்ளும் செயல் பெற்ற மின் சாரத்தின் அமைப் புப்போல முற்றிலும் வெவ்வேறான இரண்டு சக்திகளின் செயலால் ஒவ் வொரு சீவான்மாவும் நிலைபெற்றிருக்கிறான். உலகத்தில் காணப்படுகிற வைகள் யாவும் இப்படியே நிலைபெற்றிருக்கின்றன. இதன் உண்மையை அறிந்து கொள்ளுகிறவன் தெய்வ இரகசியத்தையறிந்து தெய்வசித்தத் தின்படி செய்து அழிவற்ற சீவனை அடைவான்.

300. ஆவி மாமிசத்துக்கு மாறாகவும், மாமிசம் ஆவிக்கு மாறாகவும் போராடுகிறது. மாமிசத்தையும் அதன் விருப்பத்தையும் முற்றிலும் வென்றவர்கள் நீதிக்குப் பிழைத்து முத்திநிலைக்கு உரியவர்களாவார்கள்.

முத்தி பெறுவதற்கு கிறிஸ்து பரமான்மா காட்டிய நன்னெறியே மேலானது. அம்மேலான நன்னெறியில் நடக்க கிறிஸ்து பரமான்மா தாமே அருள் புரிவாராக.

301. மேற் கண்ட சொற்றொடர்களினால் விளக்கப்படும் சில உண்மைகளை உங்களுக்கு விளக்கிச் சுருக்கமாகச் சொல்லவேண்டியது இன்றியமையாததென்று காண்கிறேன். அவைகள் பல உண்மைகளை விளக்கக்கூடிய பல நூல்களின் சாரமாயிருக்கும். அவைகள் கிறிஸ்து பரமான்மாவைப் பிசாசு சோதித்த முக்கியமான மூன்று சோதனைகளின் சாரத்தை நாம் அறிந்து கொள்வதற்கு உதவியாயிருக்கும்.

302. தூலம், சூக்குமம், காரணம் என்ற மூன்று உடல் பெற்ற ஒவ்வொருவனையும் கெடுக்கக்கூடிய ஆணவம், காமம், மாயை யென்னும் மூன்று தீயகுணங்களையும் பரமான்மா எப்படிவென்றார் என்றும், நாம் சாத்தானைவெல்ல எப்படி நடக்கவேண்டுமென்றும், தேவ அடியார்கள் அவனை எப்படி வென்றார்கள் என்றும், அடியார்கள் இதைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றும் நாம் அறிந்து கொள்வதற்கு உதவியாகச் சில சொல்லவேண்டியிருக்கிறது.

303. தூல உடம்பில் விளையும் அகங்கரித்தல் என்னும் ஆணவத்தையும், சூக்கும உடலில் உண்டாகும் இச்சையாகிய காமத்தையும், காரண சரீரத்தில் உண்டாகும் அறியாமையாகிய மாயையையும் பற்றி நாம் திட்டமாய் அறிந்து நன்னெறியில் நடப்பதற்கு முக்கியமாய் நாம் அறியவேண்டியவைகளை மறைமொழியாலும், கிறிஸ்து பரமான்மாவாலும், அவர் அடியார்களின் முன்மாதிரி யாலும் விளங்கிக் கொள்வது நமக்கு நல்லது.

304. இதோடு நம் இந்தியாவில் தெய்வ அன்பிற் சிறந்த முனிவர்களாலும், அடியார்களாலும் சொல்லப்பட்ட அரும் பொருள்களையும் அவைகளின் கருத்தையும் நன்னெறியை விளக்குவதற்கு உதவியாகச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. உண்மைப் பொருளை அறிந்து கொள்வதற்காகப் பல கலைகளையும் சாஸ்திரங்களையும், பல மறைகளையும் அவைகளின் சாரத்தையும், நாம் தெரிந்திருப்பது கிறிஸ்து பரமான்மாவின் நன்னெறி மிக மேலானதென்று அறிந்து கொள்ளுவதற்கு உதவியாயிருக்கும்.

305. ஆகையால் நாம் நம்மையே அறிவதற்கும் அதன்பின் பரமான்மாவை அறிவதற்கும், பரமான்மாவைக் கொண்டு பிதாவை அறிவதற்கும் உதவியாகச் சில குறிப்புகள் சொல்லவேண்டியதாயிருக்கிறது. நாம் நம்மை நன்றாய் அறிந்துகொள்ளுவோமானால் நமக்கு நாமே கெடுதல் செய்து கொள்ளாமல் நன்மையே செய்துகொள்ளச் சிறந்த உதவியாயிருக்கும்.

306. நாம் தெய்வத்தினுடைய தோட்டத்தில் அவர் கரத்தினல் நடப்பட்ட நாற்றுகளாகவும், அவரது சிங்காசனத்தினின்று ஓடிவரும் சீவ நதியின் அருகிலுள்ள சீவ விருட்சமாகவும், அவர் வீற்றிருக்கும் பரிசுத்த சீயோன் மலையாகவும், அதில் கைகளால் கட்டப்படாத கோவிலாகவும், அக்கோவிலில் அவர் வீற்றிருக்கும் சிங்காசனமாகவும், சிங்காசனத்தின் முன் அவரைப்பணிந்து நிற்கும் மீட்கப்பட்ட அடியார்களில் ஒருவனுகவும், அவர் இருக்கும் மலையில் அவரைத் தேடிக்கண்டடைய வேண்டுமென்று வழி நடந்தசீயோன் குமாரத்தியாகவும், மறைமொழிகளினல் சொல்லப்படும் சில முதன்மையான கருத்துக்களை உங்களுக்கு விளங்கும்படி எளிதாகச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது.

307. அவைகளின் கருத்தை அப்போதைக் கப்போது அங்கங்கே சொல்லுவேன். இவைகளில் உள்ளது உள்ளபடியே நீங்கள் அறிந்து கொள்ளும்போது மறை முடிவாய் நின்ற அநாதி தெய்வத்தை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். நித்திய சீவனைப் பெறுவீர்கள். நன்மையைச் செய்து நன்மையைக் கண்டடைவீர்கள். நன்னெறியில் நடந்துநன்னிலை பெறுவீர்கள். கிறிஸ்து பரமான்மா இந்நன்னெறியில் நடக்க அருள் செய்வாராக.

## 13 கடவுளையறியும் நல்லறிவு அதாவது ஞானம்.

308. பொன்னைப்பார்க்கிலும் அருமையுடையதெனப் போற்றப்படும் இவ்வுடம்பையும், அதனுள் சீவான்மாவையும் அதனுள் பரமான்மாவையும் அவர் தந்தையாகிய தெய்வத்தையும் அறிவதே நித்திய சீவன் என்று நாம் இதன் முன் பல மொழிகளால் பார்த்தோம்.

309. இதில் முதல் முதலாகத் தன்னை அறிந்தே அதன் பின் சொல்லப்படுபவைகளை அறியவேண்டும். காணப்படும் உலகப்பொருள்கள் யாவற்றிலும் மனுடனே மேலானவனென்றும், அம்மனுடத் தோற்றத்துள் தெய்வஉண்மையை அறிந்தவர்களே யாவரிலும் மேலானவர்கள் என்றும் நாம் வழக்கத்தில் அறிவோம்.

310. எப்படி பெரியோர்கள் தெய்வ வல்லமையைப் பெற்றார்கள் என்று நாம் ஆராய்வோமானல் அவர்கள் உடற்கூறுகளை நன்றாய் அறிந்து, மாமிசத்தின் விருப்பப்படி நடவாமல் அதைவெறுத்து, ஆன்ம தத்துவங்கள் இன்னவென்று அறிந்து பரமான்மாவின் சித்தப்படி செய்து, எல்லாவற்றிற்கும் காரணராகிய தெய்வத்தைத் தங்கள் உள்ளத்தில் விளங்கியிருக்கும்படி செய்து கொண்டார்கள். உலகத்தவர் இன்னபடியென்று நினைக்கவும் சொல்லவும் முடியாத மிகவும் வியப்பானவைகளையும் நற்போதகங்களையும் செய்து உலகத்திற்குத் துணை புரிந்தார்கள்.

311. இப்பெரியோர்கள் கிறிஸ்து பரமான்மாவைப் போல் சிறு வயதிலேயே, 'ஞானத்திலும், வளர்ச்சியிலும் தேவகிருபையிலும் மனுடதயவிலும் அதிக மதிகமாய் வளர்ந்தார்கள்,' என்பதற்கிணங்க நாமும் ஞானத்திலும் தேவகிருபையிலும் சரீர வளர்ச்சியிலும் மனுட தயவிலும் வளர வேண்டும்.

312. கடவுளருளைப் பெறாத ஞானமும், மனுடதயவைப் பெறாத உடம்பும் என்ன பயன்படும்?

313. காற்றில் வேகமாய் மேலெழும்பிய காற்றாடி தலைப்பாரத்தினால் ஆட்டங்கொடுத்து ஒரு இமைப்பொழுதில் தரையில் விழுவது போல முதிர்ந்த உலக ஞானமடைந்து தெய்வமே இல்லை என்று அகங்கரித்து அழிந்து போனவர் அநேகர். அறுசுவைப் பொருள்களை உண்டு ஒதியமரம்போல் பருத்து வளர்ந்து பயனற்றுப் போகாமல் இந்த உடம்பினால் மனுடருக்குச் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்து அவர்களின் தயவு பெறாமல் இறுமாந்து இருக்கும் மனுடர்கள் என்ன பயன் அடைவார்கள்?

314. ஞானத்தைத் தேடுவது முதன்மையானது தெய்வத்திற்கு அஞ்சி அவரது அருளைப் பெறாமற்போனால் அந்த ஞானத்தினால் என்ன பயன்?

315. 'மற்றவர்கள் உனக்கு எவைகளைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறாயோ அவைகளையே நீயும் அவர்களுக்குச் செய்' என்று சொன்ன பரமான்மாவின் சொற்படி பிறருக்கு நன்மையானவைகளைச் செய்து அவர்கள் தயவுபெறாத மனுடரை மக்கள் வகையில் சேர்க்காமல் மாக்களாகச் சொல்லவேண்டும். மற்றவர் உன்னிடத்தில் அன்பு கூருவதற்கும் தயவு பாராட்டுவதற்கும் நீயும் அவர்களிடத்தில் கீழ்ப்படிந்து அன்புவைத்து நற்செயல்களைச் செய்யவேண்டாமா?

316. ஒருவன் ஞானத்தைக் கண்டடைவது எளிதல்ல. விலைமதிக்கப் படாததும், எந்த அளவிலும் சீவர்களுக்கு உதவியாய் நிற்பதும், மேலானதென்று யாவராலும் கொண்டாடப்படுவதுமாகிய மெய்யறிவு கடவுளுக்கு அஞ்சி நடத்தலையே கற்பிக்கிறது. கடவுளருளை அடையாத ஞானம் பயனற்றதென்று சொல்வதற்காகவே தெய்வத்திற்கு அஞ்சி நடப்பதையே ஞானத்தின் துவக்கம் என்றார்.

317. கிறிஸ்து பரமான்மாவையும் அவர் தந்தையாகிய மெய்த் தெய்வத்தையும் அறிவதே அழிவற்ற சீவன் என்று சொல்லுகையில் தெய்வத்தை அறிந்து அவர் மொழியைக்கேட்டு, அவர் சொற்படி செய்வதாகும். அவர் சொல்லைக்கேட்டு அதன்படி செய்வது என்பது, கடவுள் தாமே 'இவர் என்தாயார் இவர் என் உடன் பிறந்தோர்கள்' என்று சொல்லும்படியான மேலான நித்திய சீவ நிலையை அடைவதற்குக்காரணமாய் இருக்கிறதென்று அறியவேண்டும்.

318. அப்படியே ஒருவன் தன்னை அறிகையில் தன்னுள் பரமான்மாவை யும் தெய்வத்தையும் அறிவான். தெய்வத்தை அறிகையில் தெய்வ சித்தம் இன்னதென்று அறிந்து அதன்படி செய்வான். அவனே மனுடன். அவனே ஞானத்தைக் கண்டடைந்தவன். இச்சிறந்த அறிவைப் பெறும்படி நம் முன்னோர் அநேகர் தவம் செய்தார்கள். ஓயாது கட வுளை வழிபட்டார்கள். ஞானத்தின் மேலான தன்மையைச் சிறப்பித்துச் சொன்னார்கள். என்றாலும் அதன் வடிவைச் சொல்ல முடியாமல் கட வுளுக்கு அஞ்சி நடத்தலையே ஞானத்தின் துவக்கம் என்று சொன்னார் கள். அடியில் வரும் சொற்றொடர்களில் காண்க :—

319. வெள்ளியைப் பார்க்கிலும் என் புத்திமதியையும், பசும்பொன்னைப் பார்க்கிலும் ஞானத்தையும் அங்கீகரித்துக்கொள்ளுங்கள். (நீதி. 8 : 10)

320. முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப்படத் தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல. (நீதி. 8 : 11)

321. ஞானமாகிய நான் விவேகத்தோடே வாசம்பண்ணி, நல்புத்தியான அறிவுகளைக் கண்டடைகிறேன். (நீதி. 8 : 12)

322. தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமை யையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டு வாயையும் நான் வெறுக்கிறேன். (நீதி. 8 : 13)

323. ஆலோசனையும் மெய்ஞ்ஞானமும் என்னுடையவைகள்; நானே புத்தி, வல்லமை என்னுடையது. (நீதி. 8 : 14)

324. என்னாலே ராஜாக்கள் அரசாளுகிறார்கள், பிரபுக்கள் நீதி செலுத்து கிறார்கள். (நீதி. 8 : 15)

325. என்னாலே அதிகாரிகளும், பிரபுக்களும், பூமியிலுள்ள சகல நியா யாதிபதிகளும் ஆளுகை செய்து வருகிறார்கள். (நீதி. 8 : 16)

326. என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். (நீதி. 8 : 17)

327. ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத் தில் உண்டு. (நீதி. 8 : 18)

328. பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் என் வருமானம் நல்லது. (நீதி. 8 : 19)

329. என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும் படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், (நீதி. 8 : 20)

330. அவர்களை நீதியின் வழியிலும், நியாய பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன். (நீதி. 8 : 21)

331. கர்த்தர் தமது கிரியைகளுக்கு முன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். (நீதி. 8 : 22)

332. பூமி உண்டாகுமுன்னும், ஆதி முதற் கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன். (நீதி. 8 : 23)

333. ஆழங்களும் ஜலம் புரண்டு வரும் ஊற்றுகளும் உண்டாகுமுன்னே நான் ஜனிப்பிக்கப்பட்டேன். (நீதி. 8 : 24)

334. மலைகள் நிலைபெறுவதற்கு முன்னும், குன்றுகள் உண்டாவதற்கு முன்னும், (நீதி. 8 : 25)

335. அவர் பூமியையும் அதின் வெளிகளையும் பூமியிலுள்ள மண்ணின் திரள்களையும் உண்டாக்கு முன்னும் நான் ஜனிப்பிக்கப் பட்டேன். (நீதி. 8 : 26)

336. அவர் வானங்களைப் படைக்கையில் நான் அங்கே இருந்தேன்; அவர் சமுத்திர விலாசத்தை வட்டணிக்கையிலும். (நீதி. 8 : 27)

337 உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, சமுத்திரத்தில் ஊற்றுக்களை அடைத்துவைக்கையிலும், (நீதி. 8 : 28)

338. சமுத்திர ஜலம் தன் கரையை விட்டு மீறுதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்துகையிலும், (நீதி. 8 : 29)

339. நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன். (நீதி. 8 : 30)

340. அவருடைய பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்து கொண்டிருந்தேன். (நீதி. 8 : 31)

341. ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள். (நீதி. 8 : 32)

342. நீங்கள் புத்தியைக் கேட்டு, ஞானமடையுங்கள்; அதை விட்டு விலகாதிருங்கள். (நீதி. 8 : 33)

343. என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து எனக்குச்செவிகொடுக்கிறமனுஷன் பாக்கியவான். (நீதி. 8:34)

344. என்னைக்கண்டடைகிறவன் ஜீவனைக்கண்டடைகிறான்; கர்த்தரிடத்தில் தயவையும் பெறுவான். (நீதி. 8 : 35)

345. எனக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனோ, தன் ஆன்மாவைச் சேதப்படுத்துகிறான்; என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள் என்று சொல்லுகிறது. (நீதி. 8 : 36)

346. ஆனாலும் ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே? புத்தி விளைகிற இடம் எது? (யோபு. 28 : 12)

347. அதின் விலை மனுடனுக்குத் தெரியாது; அது சீவனுள்ளோருடைய தேசத்திலே அகப்படுகிறதில்லை. (யோபு. 28 : 13)

348. ஆழமானது: அது என்னிடத்தில் இல்லை என்கிறது; சமுத்திரமானதும், அது என்னிடத்தில் இல்லையென்கிறது. (யோபு. 28 : 14)

349. அதற்கு ஈடாகத்தங்கத்தைக் கொடுக்கவும், அதற்குக் கிரயமாக வெள்ளியை நிறுக்கவுங்கூடாது. (யோபு. 28 : 15)

350. ஓப்பீரின் தங்கமும், விலையேறப்பெற்ற கோமேதகமும், இந்திர நீலக்கல்லும் அதற்கு ஈடல்ல. (யோபு. 28 : 16)

351. பொன்னும் பளிங்கும் அதற்கு ஒப்பல்ல; பசும் பொன்னுபரணங்களுக்கு அதை மாற்றக்கூடாது. (யோபு. 28 : 17)

352. பவளத்தையும் ஸ்படிகத்தையும் அத்தோடே ஒப்பிட்டுப் பேசலாகாது; முத்துக்களைப்பார்க்கிலும் ஞானத்தின் விலை உயர்ந்தது. (யோபு. 28 : 18)

353. எத்தியோப்பியாவின் புஷ்பராகம் அதற்கு நிகரல்ல; பசும் பொன்னும் அதற்குச் சரியல்ல. (யோபு. 28 : 19)

354. இப்படியிருக்க, ஞானம் எங்கேயிருந்து வரும்; புத்தி தங்கும் இடம் எங்கே? (யோபு : 20)

355. அது சீவனுள்ள சகலருடைய கண்களுக்கும் ஒளித்தும், ஆகாசத்துப் பறவைகளுக்கு மறைந்தும் இருக்கிறது. (யோபு. 28 : 21)

356. நாசமும் மரணமும், நாங்கள் எங்கள் காதுகளினாலே மாத்திரம் அதின் கீர்த்தியைக் கேட்டோம் என்கிறது. (யோபு. 28 : 22)

357. தேவனே அதின் வழியை அறிவார், அதின் ஸ்தானம் அவருக்கே தெரியும். (யோபு. 28 : 23)

358. அவர் பூமியின் கடையாந்தரங்களைப் பார்த்து, வானங்களின் கீழ் இருக்கிறதையெல்லாம் காண்கிறார். (யோபு. 28 : 24)

359. அவர் காற்றுக்கு அதன் நிறையை நியமித்து ஜலத்துக்கு அதன் அளவைப்பிரமாணித்து, (யோபு. 28 : 25)

360. மழைக்குத் திட்டத்தையும், இடி முழக்கத்தோடே கூடிய மின்னலுக்கு வழியையும் ஏற்படுத்துகிறார். (யோபு. 28 : 26)

361. அவர் அதைப்பார்த்துக் கணக்கிட்டார்; அதை ஆராய்ந்து ஆயத்தப்படுத்தி, (யோபு. 28 : 27)

362. மனுஷனை நோக்கி: இதோ ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டுவிலகுவதே புத்தியென்றார். (யோபு. 28 : 28)

363. மேற்கண்ட சொற்றொடர்களினால் ஞானம் என்பது மனுடரால் விரும்பக்கூடிய எல்லாவற்றிலும் மேலானதென்றும் தீமை செய்யும் இயல்புடைய மனுடர் பொல்லாப்பை விட்டு விலகி நன்மையைச் செய்வதே ஞானமென்றும், கர்த்தருக்கு அஞ்சுவதே ஞானத்தின் துவக்கமென்றும் இங்கே சொல்லப்படுகிறது.

364. 'பூமியுண்டாவதற்கு முன்னும் ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன்: பூமியிலுள்ள மண் திரள்கள் உண்டாக்கப்படுவதற்கு முன்னும் நான் ஜனிப்பிக்கப்பட்டேன். பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்துகையிலும் நான் அவர் அருகே செல்லப் பிள்ளையாயிருந்தேன். என்னைக்கண்டடைகிறவன் சீவனைக்கண்டடைகிறான்; கர்த்தரிடத்தில் தயையும் பெறுவான்; எனக்கு மாறாகத் தீமை செய்கிறவன் தன் ஆன்மாவை அழித்து விடுகிறான். என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள்' என்றுசொல்லுவதினால் ஞானத்தின் இன்றியமையாமை இன்னதென்று நாம் தெளிவாகக் காண்கிறோம்.

365. ஞானத்தினாலே நித்திய சீவனைக் கண்டடைகிறான் என்றும் ஒன்றான மெய்த்தெய்வத்தையும் அவர் அனுப்பின இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய சீவன் என்றும் சொல்வதை நாம் கவனிப்போமானால் தெய்வத்தை அறிகிற அறிவு அல்லது ஞானம் எவ்வளவு முதன்மையானதென்று நாம் காண்கிறோம்.

366. உலகிற்கு ஏற்றவிதமாய் நாம் அடைந்திருக்கும் அறிவைக்கொண்டு தெய்வத்தை அறியும் அறிவை நாம் அடைகிறோம். அவ்வறிவினால் பிதாவின் சித்தப்படி செய்யவேண்டும். பிதாவை ஒருவனும் ஒருபொழுதும் கண்டதில்லை. அவர் சித்தப்படி செய்யும் குமாரனாகிய பரமான்மாவே அவரை நமக்கு வெளிப்படுத்துவார்.

367. மின்சாரம் ஒருதந்தியின்ஊடு எப்படிச்செல்லுகிறதென்று இன்னும் அறியப்படாமலிருப்பது போலவே ஞானமானது தனக்கிடமான தூல சூக்கும காரண உடல்களில் பரந்து நிற்கினும் சீவர்களுடைய கண்களுக்கு மறைந்திருக்கிறது.

368. கர்த்தருக்கு அஞ்சித் தீமையை விட்டுவிலகி நன்மையைச் செய்து தன்னைப்போல் பிறரிடத்தில் அன்பு கூர்வதினால் ஒருவாறு அறியப்படுகிறது. இதனால் அறிவுக்குள் அறிவு என்றும்,அன்பினில் அன்பு என்றும் அடியார்களால் புகழப்படுகிறது.

---

## 14 அறிவுறுத்தல்.

369. நாம் இதுவரையும் மறைமொழிகளால் உணர்த்தப்படும் மெய்ப்பொருளையும் அவற்றின் கருத்தையும் ஒருவாறு பார்த்தோம். அவைகள் மனுட அமைப்பையும் கடவுளின் பெருமையையும் தெரிந்துகொள்வதற்குப் போதுமானவையென்று எண்ணுகிறேன். இவைகளை இன்னும் திட்டமாய் அறிந்துகொள்வதற்கு வேண்டியவைகளை இதன் பின் சொல்லுவேன்.

370. வானமும் நிலமும் மதிக்கக் கூடாத மேலான நிலையைப் பெறக் கூடியவர்களாயிருக்கிறோம். நம்மை அறிந்து அவ்வறிவினால் நமக்குத் தலைவாயிருக்கும் பரமான்மாவையும் பரமான்மா காட்டப் பிதாவையும் நாம் அறிந்துகொள்ளும்பொழுது இவ்வுடலையும் அதன் வாழ்நாளையும் மிக அருமையாக எண்ணி மிகுந்த அச்சமும் அன்பும் உடையவராய் நடப்போம்.

371. எல்லாவற்றிற்கும் முதற் காரணராகிய கர்த்தருக்கு இவ்வுடம்பு ஆலயமாயிருக்கிறதென்றும் அவர் தங்கும் தூய மலையாயிருக்கிறதென்றும் அறிந்து, அவர்க்கெதிரில் மிகுந்த அச்சமும் அன்பும் உடையவராய் வழிபாடுசெய்து துதித்து வணங்கி நிற்போம். இவ்வுடலின் செயல்கள் யாவையும் வெறுத்து பரிசுத்த ஆவியின் கட்டளையின்படி பரமான்மா காட்டிய நன்னெறியில் செல்லுவோம்.

372. இவைகளைப் படிக்கும் அன்பனே, இவ்வருமையான கடவுள் எங்கும் இருக்கிறார் என்று சொல்லுகிறாயே. உன் உள்ளத்தில் இருக்கிறார் என்று அறிந்தாயா ? அவ்விதம் நீ அறியாத வரையும் நீ கடவுள் சித்தம் இன்னதென்று அறியாதிருக்கிறாய் என்றே சொல்லவேண்டும்.

373. உன் உள்ளமாகிய ஆலயத்தில் இருக்கவேண்டிய கடவுளை நீ எங்கே வைத்தாய் ? மிகுந்த பொருள் செலவு செய்து பொன் தகட்டால் அலங்கரித்து வர்ணக்கற்களால் தளம் போட்டு அழகான மேடையில் வீற்றிருக்க வைத்தாயோ ?

374. பலர் கூடும் முச்சந்தியிலும் தண்ணீர்த்துறையோரங்களிலும் இடம் அமைத்து அவற்றில் இருத்திவைத்தாயோ ? விலையுயர்ந்த அணிகலன்கள் இட்டு ஆடை சுற்றித் தேரில் இருத்தித் தெருவோடு கட்டியிழுத்தாயோ ?

375. நீயே அவருக்குரிய ஆலயமாகவும் அவர் ஏறும் வாகனமாகவும் அவர் வீற்றிருக்கும் தூய மலையாகவும் இருக்க, அவையாவும் மறந்து இந்த மாறுபாடுகள் செய்யலாமா?

376. உனக்குள் ஆசைமுதலிய பதின்மூன்று குணங்களுக்கும் வித்தாக விளங்கும் பொல்லாங்கன் உன் மனதில் இருந்துகொண்டு தன்னைக் கடவுளென்று சொல்லி உன்னை ஆட்கொண்டிருக்கும் பொழுது நீ தெய்வத்தை ஆலயங்களிலும் சந்து பொந்துகளிலும் இப்படி வைப்பது இயல்புதானே.

377. உன் உள்ளத்தில் தீய எண்ணங்களை மூட்டிவிட்டுத் தீங்கானவைகளைச் செய்யச்செய்து உன்னை நாடோறும் நரகத்தில் தள்ளும் அசுத்த ஆவியின் பேச்சை மெய்யென்று நம்பிக்கொண்டாய். உன் உடலின் விருப்பத்திற்கேற்ப பொங்கல், பொரியல், பலகாரங்களில் விருப்பங் கொண்டாயேயொழிய, உன் தீமைகளை ஒழித்துவிட நினைக்கவில்லை.

378. நீ எண்ணுவதும் சொல்லுவதும் செய்வதும் உனக்குத் தீமையை விளைவிப்பதாயிருக்கிறது. உனக்கு ஒரு தீமையும் செய்து கொள்ளாதே: நன்மையைச் செய்துகொள்: என்று கண்டித்து உணர்த்தும் பரமான்மாவின் சொல்லை நீ அடிக்கடி கேட்க இடந்தராமல் சாத்தான் சேய்மையான இடங்களில் கோவில் கட்டிக் கும்பிட வைத்தானோ?

379. ஓயாது கடவுளைத் தரிசித்து அவரைத் துதித்து அவர் விருப்பத்தின்படி செய்யக் காத்திருக்கும் அவரது அடியார்கள் இப்படிச் செய்வார்களோ?

380. அடியார்கள் சொன்ன மேலான நன்னெறியை உணர்த்துவதற்கு உலகசம்பந்தமாக ஓர் ஆலயம் கட்டி அங்கே கர்த்தரை உண்மையுடன் வழிபடக்கூடினால் பெரியோர்கள் அதைக் குற்றமாக எண்ணுவார்களோ? 'குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல்' அங்கேயும் உன் அறியாமையை வளரச் செய்துகொண்டிருக்க உடன்படுவார்களோ?

381. உன் உள்ளத்திலேயே இருக்கவேண்டிய கர்த்தனை நீ எங்கே வைத்தாய்? கருத்தில் இருத்திக் காணவேண்டிய கர்த்தனைக் கட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைத்தாயோ?

382. உள்ளத்தில் இருத்தி மனக்கண் குளிரப் பார்க்கவேண்டிய கடவுளைக் கயிற்றில் கட்டிக் கழுத்தில் தொங்கவைத்தாயோ? உன் மன இருளைப்போக்கி அறியாமையை நீக்கி உன் உள்ளத்தில் விளங்கவேண்டிய அந்த மெய்மையான ஒளியாகிய கடவுளை எங்கே வைத்தாய்?

383. மாடத்தில் வைத்து மலரிட்டு மறுநாள் வரை மறந்துபோனையோ? தேட அரிதாகியபொருளைத் தெருவில் வைக்கலாமா?

384. 'கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படு வதில்லை'. (சங் 16-8) என்று அவர் அடியார்கள் சொல்லுகிறார்களே. நீ அவரை எங்கே வைத்தாய்? பிசாசின் தந்திரங்களினல் நீ அசைக்கப்படா திருப்பதற்கு உன் வலது பாரிசத்தில் அவரை வைத்தாயா? உன் உள் ளம் பூரித்துக் களிகூர்ந்து உன் மாமிசம் நம்பிக்கையோடே தங்கியிருக் கும்படி அவரை எங்கே வைத்தாய்?

385. உன் ஆன்மா கீழுலகத்தில் போகாமலும் நீ அழிவைக்காணு மலும் இருப்பதற்கு அவரை உனக்கு முன்பாக வைத்திருக்கிறயா? சிவமார்க்கத்தை உனக்கு உணர்த்துவதற்கு மெய்யான குருவாக உனக்குமுன் வைத்திருக்கிறயா?

386. நீ குறைவற்ற மகிழ்ச்சியோடு அழிவற்ற பேரின்பம் அடைவதற் காக எப்போதும் உன் முன் வைத்திருக்கிறயா? அல்லது அவரை எங்கே வைத்தாய்? இருள் நிறைந்த உலகத்தில் நீ நடக்கவேண்டிய நன்னெறி யைக்காட்டும் மெய்யான ஒளியாக அவரை உன்கையில் பிடித்திருக்கிறயா? துன்பம் நிறைந்த உலகத்தில் உன் துன்பத்தை நீக்கும் துணைவனுக உன்முன் வைத்திருக்கிறயா?

387. அவரை அரசர்க்கு அரசனுகவும், உன்னை அவரை மேன்மைப்படுத் தும் ஊழியனுகவும் நினைத்து, அவரை முன் வைத்தாயா? தீங்கனோடு எதிர்த்து எல்லாத் தீங்கினின்றும் உன்னைக் காக்க அவரைப் படைத் தலைவராக முன் வைத்தாயா?

388. பரமான்மாவின் திருவடிக்கு அருகில் இருந்து அவர் சொல்லும் நன்மொழிகளைக் கேட்க அவரை உன்முன் வைத்தாயா? உலகம் தரக் கூடாத பேரின்பத்தைத்தரும் ஞானமணவாளனுகிய அவரை எதிர்முகமாக உன் கண்முன் எப்போதும் வைத்திருக்கிறயா?

389. பிசாசானவனல் ஏற்படும் எல்லா இடையூறுகளினின்றும் நீக்கிக் காக்கும் உன் இரட்சகன் எப்போதும் உன்முன்னும் பின்னும் இருக்கிறரா?

390. நீ நினைக்கும் எண்ணங்கள் யாவையும் நிறைவேற்றி இன்னும் வேண்டுவன யாவும் செய்யக் காத்திருக்கும் மேலோனை எப்போதும் உன் முன்னிருக்க விரும்புகிறயா?

391. நீ மெய்யென்று நினைக்கும் உலகப் பொருள்களுக்குப் பின்னும் உன் மனைவி மக்களுக்குப் பின்னும் உன் பெருமைக்குப் பின்னும் வைத்தாயோ? முன்வைத்தாயோ?

392. உன் துணிமணிகள் வைக்கும் பெட்டிகளிலும் அலுமாரியிலும் மாடத்திலும் கோவில் குளத்திலும் சந்திலும் பொந்திலும், தெருமுச்சந்திகளிலும் தேர்களிலும் வைத்தாயா? உன் சிந்தையில் வைத்தாயா? நன்றாய் நினைத்துப்பார்.

393. உன் உள்ளத்தில் இருத்தி எப்போதும் அவரைக்கண்டு கொண்டிருப்பதும் அவர் சொல்லும் சொற்களைக் கேட்பதுமாகிய நல்ல பங்கைத் தெரிந்து கொள்ள அடியார்கள் தவம் செய்துகொண்டிருக்கிறார்களே.

394. உடலின் விருப்பப்படி நடக்கச் சாத்தான் எப்போதும் தூண்டிக் கொண்டேயிருக்கிறான்; அவன் விருப்பப்படி நடக்கும் ஒருவனுக்கு கர்த்தரை எப்பொழுதும் முன் வைத்துக் கொள்வது துன்பமாயிருக்கும். ஆகையினால் தன் உள்ளத்தில் கடவுளை வழிபட விரும்புகிறதில்லை.

395. தன் உள்ளத்தில் அவரை இருத்தி வணங்கத் தெரிந்த அடியார்கள் எப்பொழுதும் அவர்க்கெதிரில் களிகூருவார்கள். இதோ, வாசற்படியிலிருந்து தட்டுகிறார்; பனியினாலும் மழையினாலும் நனைகிறேன்: கதவைத் திற என்று சொல்லுகிறார். ஒருதாமதமும் செய்யாமல் கதவைத்திற. உள்ளமாகிய கோவிலில் அவரை வீற்றிருக்கச்செய். மகனே, மகளே, நான் வசிப்பதற்கு உன் இருதயத்தைக் கொடு என்று சொல்லும் பரமனுக்கு 'என் ஈரற்குலையை நாவல் மரத்தில் வைத்துவிட்டேன்' என்று முதலையை ஏமாற்றிய குரங்கைப்போல் செய்யாதே.

396. 'நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்' என்று சொன்ன அன்பனைப்போல் அவர் சொல்லைக்கேட்டு அதன்படி செய். (யோசு. 24 : 15)

397. குறைந்த அறிவுள்ளவர்களாயிருக்கும் நாம் இப்போது கண்ணாடியில் நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். நிறைந்த அறிவு வரும்பொழுது முக முகமாய்ப் பார்ப்போம்: என்று அடியார்கள் சொன்னபடி மறைமொழிகளின் உண்மையை அறிந்துகொள்ளும்பொழுது நம் மனக்கண்ணினால் பரமான்மாவைகண்டு அவர் விருப்பத்தின்படி செய்து அழியாத பேரின்பம் அடைவோம்.

398. அறிவில் அறிவாய் விளங்கும் பரமான்மா நம் உள்ளத்தில் உதித்துத் தமது அருளால் பிதாவை நமக்கு வெளிப்படுத்துவாராக.

## 15 நன்னெறிக்கு முன்னெறி.

399. நன்னெறி இன்னதென்று அறிய விரும்பும் எனது அன்பர்களே! அதை அறியுமுன் நன்னெறிக்கு முன்னெறி இன்னதென்று முதலில் நாம் அறியவேண்டும்.

400. நன்மறையில் யாவரும் பொதுவாக அறிந்துகொள்ளச் சொல்லப்படுபவைகளே முன்னெறியாம். இதைப்பொதுவாக நாம் அறிவோம்.

401. நன்மறையில் விளக்கமாகச் சொல்லாது விட்ட மறைபொருளே நன்னெறியாம்.

402. இவைகள் இரண்டும் ஒன்றற்கொன்று உதவியானவை. எழுத்துகள் தெரிந்த பிறகே முதலாவது இரண்டாவது முதலிய புத்தகங்கள் படிக்கவேண்டும். எழுத்துக்கள் வேறு; அவற்றால் உணர்த்தப்படும் பொருள்கள் வேறு. எவர் கண்ணுக்குந் தெரியாமல் நிலத்திற்குள் மறைந்திருந்தாலும், அடிப்படை போட்டே வீடு கட்டுகிறோம்.

403. உபாத்தியாயர் சொல்லிக்கொடுக்கும் பாடங்களைப் படித்த பின்பே அறிவுள்ளவர்களாகிறோம்; அதுபோலவே மறையில் சொல்லப்படுகின்றவைகளில் ஒன்றும் விடாமல் கைக்கொண்டு நடப்போமானால் முடிவில் நன்னெறி இன்னது என்று காண்போம்.

404. ஆகையினால், நன்னெறியினால் காட்டப்படும் முன்னெறியை இங்கே சொல்லவேண்டியதாயிற்று. நன்மறையால் உணர்த்தப்படும் யாவும் நன்னெறிக்கு உதவியாயிருக்கும்.

405. 'தேடுகிறவன் கண்டடைவான்: தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்' என்ற பரமான்மாவின் சொற்படி கடவுளைக் காண விரும்பும் ஒருவனுக்கு, 'முகம் காண உதவி நிற்கும் கண்ணாடிபோல்' நிற்பது நன்மறையே.

406. ஒளியினால் உண்டாகும் நிழலைப்போல் பெற்றோரால் உணர்த்தப்படும் பொருளும், கண்ணாடியில் பார்க்கும் நிழலைப்போல் நன்மறை உணர்த்தும் பொருளும், முகமுகமாய்ப் பார்க்கும் பொருள்போல நன்னெறியால் உணர்த்தப்படும் பொருளும் இருக்கின்றன.

407. முதல் முதல் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற சொற்களால் உணர்த்தப்படுகிறான். அதன்பின் மறைமொழிகளால் அவர் சிறந்த 'இலட்சணமும் வல்லமையும் உடையவராய் வானத்தில் இருக்கிறார்' என்று விரிவாய் அறிகிறான். இவைகளை அறிந்த பின் நன்மறையால் அறிந்தபடி

பழக்கத்திற்கு வராமல் தனக்குள்ளாகவே மெய்ப்பொருள் இருக்கிறதாக உணருகிறான். ஆகையால் நன்னெறிக்கு முன்னான நன்மறையைப்பற்றி இரண்டொரு சொற்கள் சொல்லவிரும்புகிறேன்.

408. நன்மறை நமக்கு உணர்த்துகின்றவைகளில் உண்மையாகவே ஒன்றும்விடாமல் நாம் கைக்கொண்டு நடக்கவேண்டும்.

409. அவைகள் செய்யச்சொல்லும் ஒழுக்கங்களையும், பெரியோர் சொல்லும் புத்திமதிகளையும், அடியார்கள் கைக்கொண்டு ஒழுகிய முன் மாதிரியையும் ஒன்றும் விடாமல் நம் பழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

410. நம் மனச்சாட்சிக்கும் நன்மறைக்கும் ஒவ்வாத எந்தத் தீமையையும் அல்லது பாவத்தையும் நம்மை விட்டு விலக்கவேண்டும்.

411. காலை மாலை நடுப்பகல்களிலும் நடு இராவிலுங்கூட கடவுளை மனதார நினைக்கவேண்டும்.

412. கடவுளைக் குறித்து அடியார்கள் இதன்முன் அன்புடன் பாடிய பாடல்களையும் நன்மறையின் மொழிகளையும் சொல்லிவரவேண்டும்.

413. நன்மறையினால் செய்யவேண்டும் என்று கற்பிக்கப்படும் எல்லா நற்செய்கைகளையும் சிறிதும் விடாமல் ஊக்கத்துடன் செய்து பழக வேண்டும்.

414. கடவுளையும் அவர் அடியார்களையும் வழிபடவேண்டும். கடவுளாலேயே நான் இருக்கிறேன், எனக்குரிய யாவும் இருக்கின்றன, கடவுள் அருளினாலேயே யாவும் நடத்தப்படுகின்றன, என்னால் யாதும் இல்லை என்று உணர்ந்து, நான் என்ற அகந்தை ஒழிந்த நன்னிலையில் நன்னெறி துவங்குகிறது.

415. கர்த்தருக்கு அஞ்சும் நல்லறிவு உண்டாகும் பொழுதே நன்னெறி துவங்குகிறது. தீமைக்கு அஞ்சும்பொழுதே அது ஆரம்பிக்கிறது.

416. இது வரையும் நன்மறையினால் நடத்தப்பட்டுவந்த இவன் இனி மேல் முகமுகமாய்க் கடவுளால் நடத்தப்படுகிறான். இவ்விரண்டும் நிழலாட்டமாய் அல்லது சொப்பனத்தில் கண்ட பொருள்போலவும், தான் விழித்திருக்கையில் நேர் நேராகக் கண்டபொருள்போலவும், இருக்கின்றன.

417. இதனால் மனுடன் மாறி விடவில்லை; ஆனால் அவன் மனம் முன்னிலையை விட்டு மாறுதலடைந்திருக்கிறது. கடவுளைக் கண்டதனால் முகம் விளக்கமுற்ற மோசேமுனிவர், ஸ்தேவான் முதலியவர்களைப்போல விளங்குவான்.

418. இதன்முன் தனக்கென்று நற்கருமங்களைச் செய்தான்; நன்னெறியிற் செல்லுகையிலே பிதாவுக்கென்று அவருக்குப்பிரியமான செய்கைகள் யாவும் செய்கிறான்.

419. இதன்முன் செய்யப்பட்டவைகள் யாவும் பிறவற்றால் அறிவுறுத்த செய்யப்பட்டவையென்றும் பிதாவின் விருப்பத்தின்படி செய்வதே தான் அறிந்து செய்ததென்றும் தெரிந்து மகிழ்ச்சியடைகிறான்.

420. உண்மை விளங்காத சிறு வயதில் சிறுமிகள் பொம்மைகளையும் பல விளையாட்டுக்கருவிகளையும் வாங்கித் தரச்சொல்வதையும் அவைகளைக் கொண்டு அவர்கள் விளையாடுவதையும் நாம் அறிவோம்.

421. பொம்மைகளுக்கு விதம் விதமான உடுப்புத்தைப்பதையும் தங்களுக்கு அழகாகத்தோன்றும் பொருள்களைக்கொண்டு அவைகளை அழகு செய்வதையும், அவைகளை அழகான இடத்தில் இருத்திவைப்பதையும், பால் ஊட்டித் தொட்டிலில் இட்டுத் தாராட்டி உறங்கவைப்பதையும், தன் பொம்மைக்கும் மற்றொரு பெண்ணின் பொம்மைக்கும் கல்யாணம் முடிப்பதையும், மண் சோறு சமைப்பதையும், சம்பந்தி முதலியோரை உண்ண அழைப்பதையும், மற்றும் கல்யாணச் சிறப்புகள் செய்வதையும் போன்ற பல விளையாட்டுகள் விளையாடுவதை நாம் பார்த்திருப்போம்.

422. ஆனால் தக்க பருவம் வந்து அவர்களுக்குக் கல்யாணம் ஆனபின் தம் நாயகனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளையும் தம் பிள்ளைக்குச் செய்யவேண்டிய யாவையும் மிகுந்த அன்போடும் கருத்தோடும் செய்கிறதை நாம் காண்கிறோம்.

423. தம் அறிவு விளங்காத காலத்தில் அவர்களிடத்தில் கண்ட எந்த விளையாட்டுக் குணமும் அறிவு வந்த பின் அவர்களிடத்தில் காணப்படுகிறதில்லை. ஆனால் விளையாட்டாகப் பழகியவை உண்மையான காரியங்களுக்கு முதற்பாடம்போல் உதவுகின்றன.

424. தம் அறிவு வருமுன் அவர்கள் வைத்து விளையாடியவை உயிரற்ற பொம்மைகள், உபயோகமற்ற பண்டங்கள், உண்மையற்ற மண் சோறு, எல்லாம் பாவனை. ஆனால் அறிவு வந்த பின்னே என்றால், வைத்து விளையாடும் பொம்மைகள் உயிருள்ள குழந்தைகள். சமையல் செய்வன மண் சோறல்ல, பசி தீர உண்ணும் உண்மையான உணவுகள்.

425. இதுபோலவே மறைபொருளும் இருக்கிறது. நன்மறையின் முறைப்படி ஒன்றுந் தவறாமல் செய்யும் மேலோனே நன்மறையின் உண்மைப்பொருளை அறிவான்.

426. நன்மறையின் கற்பனையைத் தன் பழக்கத்திற்குக் கொண்டு வருகிறவனே அதில் மறைந்திருக்கும் நுட்பத்தை அறிவான்.

427. பச்சைக் கற்களினால் கருக்கட்டியே வளைவுகள் கட்டவேண்டும். அழுக்கான உழமண் கலந்தே துணியிலுள்ள அழுக்கைப் போக்கவேண்டும்.

428. வீட்டு யானையைக்கொண்டே காட்டு யானையைப் பிடிக்க வேண்டும்.

429. இதுபோலவே நன்மறைகளால் கற்பிக்கப்படுகிறவைகள் யாவும் நன்னெறிக்கு முன்னெறியாய்த் துணை நிற்கின்றன.

430. நன்மறைகள் அறிவிற் சிறந்த பெரியோர்களால் நாளடைவில் உலகத்தவருக்குக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

431. அவைகளில் சில உண்மைகள் மறைந்தும் பின் வந்தவர்களால் மாற்றப்பட்டும் போவதினால் மெய்யான பொருளை அறிந்துகொள்ளக் கூடாமல் போயிற்று.

432. உண்மையான கருத்தை அறிந்துகொள்ளக் கூடாமல் செய்யும் சில வழக்க ஒழுக்கங்களும் நாளடைவில் உண்டாகிக்கொண்டேயிருக் கின்றன.

433. உண்மையை அறிந்துகொள்ள விரும்பும் ஒருவனுக்குச் சத்தி யத்தைக் குறித்து சாட்சி கொடுக்க வந்த பரமான்மா சத்தியத்தை உணர்த்துகிறார்.

434. ஆகையால் எனக்கு அருமையானவர்களே! நன்மறையினால் உணர்த்தப்படும் யாவற்றையும் குறைவறச் செய்து அதன் பின் நீங்கள் உண்மையைக் கண்டடையும்படிக் கடவுளை வேண்டிக்கொள்ளுங்கள்.

435. உங்களுக்குள் உறுதி இருக்குமானால் உங்கள் உள்ளத்தில் சத்தி யத்தைக் குறித்து சாட்சி கொடுக்கும் கிறிஸ்து பரமான்மாவின் சத்தத் தைக் கேட்பீர்கள்; பிதாவை அவர் உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

436. இம்மேலான மெய்ப்பொருளே நன்மறையுடையதாயிருக்கிறது. அம் மறையின் ஒவ்வொரு நல்லொழுக்கமும் நம்முடைய உடலின் தீமை களைநீக்கி நன்மைகள் உண்டாகும்படி உணர்த்துவதனால் முதல் பாடமாகிய நன்மறையைக் குறைவற நாம் பழக்கத்திற் கொண்டு வரவேண்டும். அதன் பின் அதன் உட்பொருளாகிய கடவுளை அறிந்து அவர் சித்தப்படி நன் னெறியில் நடப்போம்.

## 16 உடம்பு.

437. நன்மறையால்உணர்த்தப்படும் இம்மேலான அறிவை நாம் கண்டடைவதற்கு இவ்வுடலின் அமைப்பையும் அதன் கூறுபாடுகளையும் ஒருவாறு அறியவேண்டும். இவ்வுடம்பு பரமான்மாவிற்கு ஆலயமாயிருப்பதனல் எவ்வித அழிவும் உண்டாகாமல் இதனைப் பாதுகாத்து வளர்க்கவேண்டியது நமது முதல் கடமையாகும்.

438. நாம் நம்முடைய உடம்பைப்பற்றி என் முதலில் கவனிக்கவேண்டும்? அது நம்முடையதாயிருக்கிறது; அல்லது நமக்குரியதா யிருக்கிறது.

439. நாம் காணக்கூடியதும் நம்முடைய கவனத்தால் உயர்வையும் கவனக்குறைவால் தாழ்வையும் அடையக்கூடியதாயிருக்கிறது.

440. பசி, தவிப்பு, காணல், கேட்டல், சொல்லல், செய்தல், நினைத்தல் உயிர்த்தல் முதலியவற்றிற்கு இடமாயிருக்கிறது.

441. ஒரு வீட்டையும் அவ்வீட்டுள்ளிருக்கும் தலைவனையும் அத்தலைவனுக்குள்ளிருக்கும் சீவனையும்போல, நம்முடைய உடலும் நாமென்று சொல்லும் சீவான்மாவும், அவனை வீடாகக்கொண்டு வாழும் காரணப் பொருளும் இருக்கின்றன. ஆகையால் உடலைப்பற்றி முதலில் கவனிக்க வேண்டும்.

442. ஒரு மரத்தின் வளர்ச்சிக்கு அதன் வெளிப் புறமாகிய பட்டை, மேலே இருக்கிற கிளைகள், உள்ளிருக்கும் வைரம், அடியிலுள்ள வேர் முதலிய இவைகளில், ஒவ்வொன்றும் நன்ருயிருக்கவேண்டும். அதுபோல் நம் வளர்ச்சிக்கும் நம்முடைய பருவுடல், நுண்ணுடல், கருவுடல் என்ற மூன்றும் நல்ல நிலையில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் நடுவில் பொந்து விழுந்தும் மேற்புறத்தில் பட்டை உரிந்தும் மற்றும் கிளைகளும் வேரும் இல்லாமற்போனல் மரம் எப்படி இருக்குமோ அப்படிப்போல நாமும் இருப்போம்.

443. வீடில்லாத தலைவன்போலவும், தலைவனில்லாத வீடுபோலவும், நெய்யற்ற திரிபோலவும், வெளிச்சமற்ற விளக்குப்போலவும் இருப்போம்.

444. இவ்விடத்தில் வீட்டையொத்த சீவனும் வீட்டுக்குடையவனைப் போன்ற பரமான்மாவும், அத்தலைவனின் உயிரையொத்த கடவுளும் ஆக மூன்று பொருள்கள் சேர்ந்து, நானென்றும், நாமென்றும், நான்தான் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறதாக அறிந்துகொள்ளவேண்டும். இம்மூவரும் முறையே பருஉடல், நுண்ணுடல், கருவுடல், என்னும் மூன்றுடலுக்கும் உயிராயிருக்கிருர்கள்.

445. உடலை வளர்க்கும் அல்லது பேணும் முறையைத் தெரிந்து கொள்ளுகையில் இம்மூன்றைப்பற்றியும் சிறிதளவாவது தெரிந்து கொள்ள வேண்டும்.

446. இம் மூன்றுடலும் ஒன்றைவிட் டொன்று வேறுபடுமானால் உயிர்க்கே கேடுண்டாகும். எப்படி என்றால் வேர்ப்புழு விழுந்த செடி பட்டுப் போவது போலவும், நன்மனதுடைய ஒருவன் குடிமயக்கத்தால் ஒழுங்கின்மையை அடைவது போலவும், உப்புப்படிந்த மண்பானை இற்று இல்லாமற்போவதுபோலவும், அழகான உடம்பை உடைய ஒருவன் மனம் வேறுபடும்பொழுது வாடுவான். தூலம், சூக்குமம், காரணம் என்ற மூன்று தன்மைகளையும் முறையே பொருந்தி நிற்கும் செயல், சொல், நினைப்பு என்ற மூன்றும் தூய்மையாய் இருக்குமானால் அப்போது நல்வளர்ச்சியும் நல்வாழ்வு முண்டாகும்.

447. கூர்மையான முட்கள் முட்செடிகளை ஓங்கிவளரவிடாமல் எப்படி கீழே இருத்துகின்றனவோ அப்படிப்போலவும் மிகுதியும் வைரம்பற்றிய மரங்கள் எப்படி நீண்டு வளர்ந்து பருக்க மாட்டாவோ அப்படிப்போலவும் நம்முடைய மனமானது கொடுமை யாயிருக்குமானால் நம்முடைய வளர்ச்சியும் நன்றாயிராது.

448. அழுத்தமான மனதுடையோர் பொதுவாகக் குறுகின வளர்ச்சியுள்ளவர்களாகவும், இளக்கமுள்ள மனதுள்ளவர்கள் வைரமில்லாத வெள்ளை மரத்தைப்போல் வளர்ந்துமிருப்பார்கள்.

449. நூறு தரம் பரிந்து கேட்கும் ஒருவனுக்குக் கூடுமானால் பார்ப்போமென்று ஒருதரம் வாக்களித்தவன் முழுவதையும் நிறைவேற்றுவதையும், பத்துத்தரம் சொல்லுறுதிகொடுத்தவன் நூறிலொன்று செய்வதையும், நூறுதரம் வாக்களித்த ஒருவன் ஒன்றும் செய்யாமல் ஓடிப்போவதையும்போல, வாக்கானது தூலம், காரணம் இரண்டையும் தானாக வைத்துக்கொண்டு மனதில்லாமலும் செய்கையில்லாமலும் செய்யும்; செய்கை மிகுந்தால் வாக்குமில்லை மனது மில்லை; வாக்குமிகுந்தால் செய்கையுமில்லை மனதுமில்லை; மனது மிகுந்தால் வாக்குமில்லை செய்கையு மில்லை; ஒரு வீடு கட்டுவதற்கு குறைந்தது ஒத்த அளவுள்ள மூன்று சுவர்கள் எப்படி இருக்கவேண்டுமோ அப்படியே இம்மூன்றும் தத்தம் நிலையில் முறையே ஒழுங்குபட்டிருக்கவேண்டும்.

450. தூலம் சூக்குமத்தைப்பற்றியும், சூக்குமம் காரணத்தைப்பற்றியும் நடக்க வேண்டும். காரணத்தின் இயற்கையை சூக்குமம் விரும்பவேண்டும். சூக்குமம் சொன்னதை தூலம் செய்யவேண்டும். இல்லையானால் சூக்கும

மானது தூலத்தைப் பின்பற்ற வேண்டியதாயிருக்கும். அப்பொழுது தூலத்தின் பொறி புலன்களினால் ஏற்படும் விருப்பங்களின் படியே நடந்து தீமையைத் தேடிக் கொள்ளும். சீவனுனது காரணத்தைப் பின்பற்றி நடப்பதாயிருந்தால் தூலமும் அதன் விருப்பமும் சீவனைப்பற்றி நிற்கும். இதுவே ஒழுங்கானவழி. இதைப் பழகுவதே நம்முடைய வாழ்நாளில் நாம் அடையவேண்டிய பயனாகும்.

451. உலகத்தில் நல்வளர்ச்சியையும் நல்வாழ்வையும் விரும்புகிற ஒருவன் மனம் நன்மையையே நினைக்கவேண்டும். வாய் நன்மையைச் சொல்லவும், உடல் நன்மையைச் செய்யவும் வேண்டும்.

452. பிறர் உனக்கு நன்மையை நினைக்கவும், சொல்லவும் செய்யவும் வேண்டுமானால் நீயும் அப்படியே நன்மையை நினைக்கவும் சொல்லவும் செய்யவும் வேண்டும். அப்பொழுது உன் உடலும் உயிரும் நன்றாய் வளரும்.

## 17 பரமான்மாவும் உடம்பும்.

453. நமக்குச் சொந்தம் என்கிற சொல் சீவான்மா, பரமான்மா, என்னும் இவ்விரண்டிற்கும் சொந்தமாயிருக்கிறதென்று கொள்ளவேண்டும்.

454. உடலின் விருப்பங்களையே விரும்பி நிற்கும் சீவான்மாவைத் தடுத்தாண்டுகொண்டு தெய்வ நிலைக்குக் கொண்டுவரும் பரமான்மா இந்த உடற்குத் தலைவராகவும், சீவான்மா பணிவிடைக்காரனாகவும் நடந்து கொள்ளுகையில், பரப்பிரமம் அல்லது பிதாவின் சாயலை இந்த உடல் பெறுவதால் பரமான்மாவின் பிள்ளையாகக்கூடிய உரிமையையும் பரமான் மாவின் உடன்பிறப்பாகும் தன்மையையும் அடையக்கூடிய இவ்வுடம்பு உயர்வுடையது.

455. இப்படி மேன்மையான நிலையையுடைய இந்த உடல் மேல், நடு கீழ் என்ற மூன்று உலகங்களையும், மூன்றுலகில் உள்ளவர்களையும், அவர்களின் செய்கைகளையும், அவரது தன்மைகளையும் அடக்கிக்கொண்டிருப்பதாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

456. கீழுலகத்திற்கு இயல்பாயுள்ள இருள் அல்லது அறியாமையையும், ஆசையையும் அங்கலாய்ப்பையும், அழுகையையும், பற்கடிப்பையும், ஆசை முதலிய பதின்மூன்று தீயகுணங்களினால் வரும் தீய பயன்கள் யாவையும் நுகரும் கீழுலகத்தார் அத்தனைபேரையும் தப்புவிக்கமுடியாமல் தத்தளிக்கும் அவர்கள் தன்மையையும் உடைய கீழ்முக்கோணமாகிய கீழுலகத்தை முதலில் உடையதாகிறது.

457. அன்பு, மகிழ்ச்சி, ஒற்றுமை, பொறுமை, ஆசையடக்கல், இரக்கம், ஒழுங்குதவறுமை, உண்மை, கீழ்ப்படிதல், தன்னை ஒறுத்தல், பிறருக்கு நன்மையையே செய்தல் முதலிய நற்குணங்களை அடைந்து என்றும் இன்பத்துடன் தெய்வத்தில் நிலைத்த அன்பர்களாகிய மேலோர்களையும், அவர்கள் அடைந்த உறுதியான நிவிர்த்தியின் தன்மையையும் உடைய அறுகோணமாகிய நடு உலகத்தை இரண்டாவதாக உடையதாயிருக்கிறது.

458. கோடி கதிரொளியுடைய அரியணைக்குரியவராய், சீவாதிக்கும் சிவ விருட்சத்திற்கும் தலைவராய், நவமணிகளால் விளங்கும் வாயிலோடு கூடிய பொற்றளமுள்ள வீடுடையவராய், தேவர்களும், தேவதூதர்களும், மேலான அன்பர்களுமாகிய பரமசேனைகள் ஓயாது துதிக்கும் மேன்மையுடையவராய், தம் எண்ணத்தின்படி பரமான்மா செய்து காட்டியவாறு செய்து பரமான்மா காட்டிய வண்ணம் வழிபாடுசெய்யும் நடு உலகத்தார் அத்தனை பேரையும் பசியாவது தவிப்பாவது துன்பமாவது இருளாவது இல்லாத மோட்ச உலகில் சேர்த்துக்கொண்டு அவர்கள் யாவருக்கும் பிதாவாய் விளங்குகின்ற மேல் மூலமாகிய மேலுலகத்தையும் மூன்றாவதாக நம்முடைய உடம்பு உடையதாயிருக்கிறது.

459. சீவான்மா, 'கழுவப்பட்ட பன்றி திரும்பவும் சேற்றில் புரளுவது போல' கீழுலகத்திற்குரிய நினைப்பும் செயலும் உடையவனாகிறான். இதனால் சீவான்மா தீவினையின் பயனாகிய துன்பத்தையும் இறப்பையுமே பயனாக அடைகிறான். சீவான்மா இப்படி அழிந்துபோவதை அறிந்த பரமான்மா அவனைத் தீமையினின்று விலக்கிக்காத்து நன்மை செய்யும்படி ஒவ்வொரு நொடிப்பொழுதும் உணர்த்துகிறார்.

460. எல்லா நன்மையான காரியங்களிலும் அவனை வழிநடத்தி எல்லா நன்மையையும் அடையும்படி செய்து தமது பிதாவாகிய பிரமத்தை சீவான்மா தன் பிதாவென்று சொல்லும்படியான உரிமையையும் கைம்மாறின்றிக் கொடுத்து அவனுக்கு நன்மையையே கருதி நிற்கிறார்.

461. சீவான்மா தீமையினின்று நீங்கி நன்மையைச் செய்வதே அவர் விரும்பி நிற்கும் கைம்மாறு. சீவான்மா உடலின் விருப்பின்படி நடவாமல் தாம் சொல்லுகிறபடி நடக்கவேண்டுமென்பதே அவருடைய விருப்பம்.

462. பரமான்மாவினுடைய சொல்லுக்கிணங்கித் தீமையைவிட்டு விலகி உண்மையானநன்னெறியில் நடப்பவர்கள் எவர்களோ, எத்தனை துன்பங்கள் நேர்ந்தாலும் அத்தனையும் பொறுத்து நன்மையைச் செய்பவர்கள் எவர்களோ, தீவினைக்கு மரித்து நீதிக்குப் பிழைத்தவர்கள் எவர்களோ அவர்கள் அத்தனைபேரும் மீட்கப்பட்டோமென்ற உறுதியை அடைகிறார்கள்.

463. தீவினையும் அதன் பயனாகிய துன்பங்களும் இனிமேல் நம்மிடம் அணுகா என்ற உறுதியையும் அதாவது இருளணுகாத ஒப்பற்ற ஒளியையும் அடைகிறார்கள்.

464. பரமான்மா தமது தாயென்றும், உடன்பிறந்தவர்கள் என்றும் அழைக்கும்படியான உயர்ந்த நிலையான பேரின்பத்தைப் பெறுகிறார்கள்.

465. தீமையற்ற அல்லது தீவினை நீங்கிய மாமிசத்தின் சாயலையும் தீமையில் விருப்பமில்லாது நன்மையையே விரும்பி நின்ற சீவான்மாவையும் பரமான்மா அடையும்பொழுது அவர் தேவகுமாரன் எனப்படுகிறார்.

466. தீமையையே விரும்பிநின்ற உடம்பையும் அதையே நல்லதென்றிருந்த சீவான்மாவையும் பரமான்மா அடையும்பொழுது அவர் மனித குமாரன் என்று பெயர் பெறுகிறார்.

467. தீமையையே செய்துவரும் சீவான்மா நன்மையடைய வேண்டுமென்று இராப்பகலாய் இடைவிடாமல் பரமான்மா பாடுபட்டுக்கொண்டே இருக்கிறார்.

468. சில நேரங்களில் சீவான்மா தன்னுடைய தீயதோழர்களாகிய ஆசை முதலிய பதின்மூன்று தீய குணங்களையும் சேர்த்துக்கொண்டு, அவரைக் கொலை செய்து அதாவது அவரது நல்ல எண்ணங்களை அழித்து விடுகிறான். சில நேரங்களில் அவர் ஊரைவிட்டுப்போகும்படி முயலுகிறான்.

469. எப்படியிருந்தாலும் பரமான்மா அவனைவிட்டு நீங்காமல் அவனை எப்படியும் நல்வழிக்குக் கொண்டுவந்து இவ் வுலகில் நிறுத்தி நன்மை செய்யும்படிக் கட்டளை இட்டுக் கற்பித்து அவன் நன்மைகளுக்கு ஏராளமான பயனைத்தரும்படி மேலுலகத்திற்குச் சென்று பரமபிதாவின் வலப்புறத்தில் நின்று சீவான்மாவிற்காகப் பரிந்து வேண்டிக் கொண்டிருக்கிறார்.

470. பரமான்மாவின் வேண்டுதலுக்கிரங்கி பிதாவாகிய கடவுளினிடத்திலிருந்து அநேக நன்மைகள் வருவதை உண்மையிற் கண்டடைகிறான்.

471. சீவான்மா பரமான்மாவின் மகிமைக்கென்று வேண்டிக்கொள்பவைகள் எவைகளோ அவைகளைத் தடையின்றிப் பெறுகிறான்.

472. இப்பழக்கம் முதிர்ந்தபின் பிரமத்தைக் காட்டும்படியாக பரமான்மாவைக் கேட்கிறான். இதன் முடிந்த நிலையில் பரமான்மா (பரமகுரு) சீவான்மாவை கடவுளின் முன்னிலையிலேயே இருக்கும்படி செய்கிறார்.

473. தேவலோகத்தில் பத்துவித இன்னிசையும் முழங்க கோடி கதிரொளியுடன் விளங்கும் கடவுளுக்கெதிரில் கீழுலகினின்று மீட்கப்பட்ட இந்த சீவான்மாவின் மீட்பை நினைத்து தேவசேனைகளும் தேவ குமாரனாகிய பரமான்மாவும் மிக்க மகிழ்ச்சி அடைகிறார்கள்.

474. சீவான்மாவைத் தீமையினின்று காக்கவந்த தேவகுமாரனாகிய பரமான்மாவும் இவரே. நடக்கவேண்டிய எல்லா நன்னெறிகளையும் வேதத்தின் மறை பொருள்களையும் கடவுளின் சாயலையும் பிதாவில் தோன்றும் எல்லாவற்றையும் உள்ளபடியே உணர்த்தவந்த மெய்யான குருவும் இவரே.

475. சீவான்மாவுக்கும் கடவுளுக்கும் இடையே நின்று இவ்விருவரையும் ஒப்புரவாக்கிய நடுநிலைக்காரரும் இவரே. நாம் காணாத சீவவழியை நமக்குக்காட்ட வழிகாட்டியாக வந்தவரும் இவரே. உண்மை நெறியை நடந்துகாட்டக் கடவுளினிடத்திலிருந்து பிறந்தவரும் இவரே.

476. இவரை உயிராக உடைய இந்தச் சீவான்மா வாழும் இவ்வுடலானது தேவச்சாயலை அடைதற்குரித்தா யிருப்பதால் நம் உடலை நாம் பேணிவளர்க்கவேண்டும்.

---

## 18. கடவுளும் உடலும்.

நம் உடலை ஏன் முதலாவது கவனிக்கவேண்டும்?

477. எல்லாவற்றிற்கும் காரணமாகிய தெய்வத்திற்கு உரியதாயிருப்பதால் நமது உடலை முதலாவது கவனிக்கவேண்டும்.

478. சீவான்மாவிற்கு முதன்மையாக விளங்கும் மனமானது காரணப் பொருளாகிய கடவுளுக்கு உடலாகவும், அப்பொருளின் பிரதியாகிய பரமான்மா வாழும் இடமாகவும் நாமறிந்து கொள்ளவேண்டும்.

479. காரணப் பொருளின் செயல் மனதின் வழியாகவும், சூக்குமத்தின் செயல் சொல்லின் வழியாகவும், தூலத்தின் செயல் உடலின் வழியாகவும் காணப்படுகிறது.

480. இப்போது மனம் என்ற தெய்வத்தின் வீடானது சீவான்மா தங்குகின்ற இவ்வுடற்குள்ளாகவே திருமதிலும் கோவிலும்போலவும் வீட்டில் உள்வீடு போலவும் இருக்கிறதாக அறியவேண்டும்.

481. வீட்டிற்குடையவர் பிதாவும், அதாவது வீட்டின் உள்ளிடத்தி விருப்பவர் பிதாவும், வீட்டை நடத்தும் தலைவர் பரமான்மாவும் வீட்டை அடையவேண்டியவன் அல்லது உரிமையாக்கிக் கொள்ளவேண்டியவன் சீவான்மாவுமாக இருக்கிறார்கள்.

482. இவ்வித உரிமையுள்ள ஒரு இடத்தை நாம் உடையவர்களாயிருக் கிறோம். நமக்குள் தெய்வம் இருக்கிறார். இந்த வீட்டைப் பரமான்மா நடத்திக்கொண்டுவருகிறார்.

483. அவரே இதற்குத் தலைவராயிருக்கிறார். ஆகையினால் ஒவ்வொரு சீவான்மாவும் வெளியிடமாகிய தன் உடலையும் உள்ளிடமாகிய தன் மனதையும் எவ்விதமான பழுதும் படுத்தாமல் நல்வளர்ச்சியும் நல்வாழ்வு முடையதாய் வைத்திருக்கவேண்டும்.

484. இல்லாமற்போனால், அதாவது சீவான்மாவானவன் தன் விருப் பத்தின்படி நடந்து தன் தீய தோழர்களோடு தெய்வத்தின் வீட்டில் தான் விரும்பியவாறு கூத்தாடி ஒழுங்கீனமாய் நடக்கும்பொழுது அதற்குத் தலைவனான பரமான்மா 'என் பிதாவின் வீட்டைக் கள்ளர் குகையாக்கு கிறீர்கள். இது தெய்வத்தை வணங்குகிறதற்கென்றும் நீங்கள் தெய்வத் தோடு ஒற்றுமையுடன் வாழ்வதற்கென்றும் உண்டாக்கப்பட்ட இடம். இதில் தீய செய்கைகள் கூடாது' என்று வற்புறுத்திக்கொண்டிருக்கிற வராய் இருக்கிறார்.

485. அதோடு சீவான்மாவை விடாமல் உள்ளிடத்திலிருக்கும் தெய்வம் உனக்கு மிக உரிமையானவரென்றும் அவராலேயே நீ எல்லா நன்மைகளை யும் பெற்றுக்கொள்ளக் கூடியவனென்றும் நீ நன்மை செய்வதையே அவர் விரும்புகிறார் என்றும், பிதாவின் எண்ணத்தைப் பரமான்மா அடிக்கடி சீவான்மாவுக்குச் சொல்லி நல்வழியில் சீவான்மா நடக்கக் கற்பித்துக் கொண்டே இருக்கிறார்

486. அவர் சொற்குச் செவி கொடுத்த சீவான்மா எல்லா நன்மையை யும் பெற்று வாழவும் கடவுள் முன்னிலையில் அழிவற்ற இன்பத்தை அடை வதற்கும் தானும் ஒரு தோழனாய் பிதாவுக்கெதிரில் தன்னால் மீட்கப் பட்டவனென்று காணிக்கையாக வைக்கிறார்.

487. அப்பொழுது சீவான்மா, பகைவரைப்போல் கண்டித்து தனக்கு உணர்த்திய குருநாதனை தன்னோடு நட்பினனாக மகிழ்வடைவதைக்கண்டு, பரமான்மாவின் பெருமையையும், தான் அவருக்குச் செய்த நன்றிக் கேட் டையும், இப்போதடையும் கைம்மாறு இல்லாத நன்மைகளையும் நினைத்து தான் இன்னது செய்வதென்று தெரியாத மனமகிழ்ச்சியுடன் பிதாவிற் கெதிரில் நிற்கிறான்.

488. சீவான்மா தங்கும் இவ்வுடம்பையும் பிதாவாகிய தெய்வத்தின் வீடாகிய அல்லது உள்ளிடமாகிய மனதையும் தெரிந்துகொள்ள இன்னும் சிலவற்றைப் பார்ப்போம்.

489. சீவான்மா இந்த மனதைப் பெரும்பாலும் அடிக்கடி தன் தோழர்கள் கூடும் இடமாக்கிக்கொள்ளுகிறான்.

490. இதை அறிந்த பரமான்மா, தனக்குரியதென்று நினைத்துக்கொண்டிருக்கிற சீவான்மாவைப் பார்த்து 'எனக்கும் என் பிதாவிற்கும் இதை நீ கொடுத்துவிடு. நான் உன்னை என் பிதாவின் வீட்டில் எல்லா மகிழ்ச்சியோடும் நிலைத்திருக்கச் செய்வேன்' என்று வருந்திக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

491. அவர் நம்மோடு இருந்து நம்மோடு உலாவி தவறுதல் நேரிடா வண்ணம் கூடவே இருந்துவருகிறார். அவர் மிகப் பொறுமையாகவும் மெதுவாகவும் வழிநடத்தி, சீவான்மா களைப்புற்ற காலத்தில் தம்முடைய கைகளில் தாங்கி இவன் தவறுதல் எல்லாவற்றையும் மன்னித்து, அருளாலும் இரக்கத்தாலும் முடிசூட்டி அழிவற்ற நிலையையும் கொடுத்து தன்னை வெறுத்த இவனைத் தன்னை வணங்கும்படி செய்கிறார்.

492. பிதாவின் கோவிலாகிய மனதில் பிதாவின் வடிவத்துடன் சான்றுகப் பிறந்த இவர், தம் தாயாயிருந்த அல்லது உடலாயிருந்த மனது சீவான்மாவின் விருப்பத்தின்படி நடவாமல் பிதாவின் எண்ணப்படி நடக்க வேண்டாமா என்றும் வற்புறுத்திச் சொல்லுகிறதாகவும் இருக்கிறது.

493. நாம் இதே வேளையில் நமது உடல் நாம் காணுகின்ற மண்ணாலாகிய கோவிலை ஒத்திருக்கிறதென்பதைச் சற்றுக் கவனிப்போம்.

---

## 19. மண் கோவிலும் உடலும்.

494. மனதுள் நிறைந்த தெய்வத்தையும், நடு உலகிலுள்ள பரமான்மாவையும், கீழுலகத்திலுள்ள சீவான்மாவையும் அவரவர்கள் இடங்களையும் செயல்களையும் உடைய இவ்வுடம்பின் கூறுபாடுகளைத் திட்டமாயறிந்த மேலான பெரியோர்கள் தூலமாய் இதில் கண்டவைகளையே வெளித் தோற்றத்தில் அமைத்தார்கள்.

495. உள்ளதை உணராத பேதைகள் இப்படியாவது வணங்கி நல்வழியடையட்டும் என்று புறம்பான அடையாளம் குறித்தார்கள்.

496. தங்களுக்குக் கிடைத்த இடத்திற்கும் பொருளிற்கும் சொல்வன்மைக்கும் ஏற்றவிதமாக எட்டுப்பங்கு அகலமும் பன்னிரண்டு பங்கு நீளமும் உடையதாக ஒரு இடம் தெரிந்து கொண்டு அதில் நாலுபங்கு அகலமும் இரண்டு பங்கு நீளமும் உடையதாக முகப்புக்கோபுரவாயிலும்,

அதன்மேல் நீளத்தின் இரண்டுபங்கு இடத்தில் இடது பக்கத்தில் பொற்றுமரைக் குளத்தையும் வலது பக்கத்தில் மடைப்பள்ளி அறைகளையும் வெளிப்பிரகாரச் சுவர் வரையும் இருக்கும்படி அமைத்தார்கள்.

497. அதன்மேல் நீளத்தின் இரண்டுபங்கில் ஆறுவது சதுரத்தில் கொடிமரத்தையும் அதற்குமேல் நாலுபங்கு அகலமும் நாலுபங்கு நீளமும் உள்ள அறுகோணச் சக்கரத்தின் நடுவின் இடதுபக்கத்தில் சந்திரபுட்கரணியும் வலதுபக்கத்தில் அக்கினிகுண்டமும் ஏற்படுத்தினார்கள்.

498. அதன்மேல் இரண்டுபங்கு நீளமும் இரண்டு பங்கு அகலமுமுள்ள ஓங்கார வட்டத்தானத்தில் மூலத்தான கோபுரத்தையும் அதனுள் பதினோராவது அங்கணத்தின் நடுவில் மதியைத் தலையிற் சூடியவளும் என்றும் பதினாறாய் அழியாத கன்னியாய் ஆக்கினாத்தானத்தில் தோன்றும் சத்தியையும் அல்லது தெய்வத்தின் பிரதியாகிய பரமான்மாவையும் அமைத்தார்கள்.

499. அதன்மேல் அடுத்த அங்கணத்தில் அண்டவடிவாய் ஆறடுக்காய் கோபுரத்தின் சர்ப்பாய், ஒவ்வொன்றும் ஆயிரத்தெட்டு இதழுள்ள தாமரை மலராய், ஒவ்வொரு இதழிலும் தேவர்கள் வீற்றிருப்பதாய், ஆறுவதடுக்கின் நடுவில் கண்காணாப் பேரொளியாய் ஐந்து நிறங்களோடு விளங்கிக் கொண்டிருப்பதான கடவுளைக்குறித்து மூலத் திருவுருவம் ஏற்படுத்தினார்கள்.

500. கோபுரவாயிலின் முன் சுவரை முதல் அங்கணத்திலிருந்து மூலத்தானத்தின் மேல் ஒரு அங்கணம் விட்டு மொத்தம் நீளத்தில் பன்னிரண்டு அங்கணமாக வகுத்தார்கள்.

501. அகலத்தின் வலது இடது பாகங்களுக்கு பக்கத்திற்கு இரண்டு அங்கணமாக அகலத்தில் எட்டங்கணமும் மொத்தத்தில் எட்டுக்கும் பன்னிரண்டுக்கு மாகத் தொண்ணூற்றாறு அங்கணமுமுள்ள ஒரு கோவில் அமைத்தார்கள்.

502. இதில் உடலுக்குரிய கொடிமரம் வரை கோவிலுக்கு ஊழியஞ் செய்யும் சிவான்மாவும் அவனைச் சேர்ந்த மற்ற வேலையாட்களும் வரலாம். அதாவது அர்த்தமண்டபம் என்ற ஆறுவது அங்கணமுடிய வரலாம்.

503. அதன்மேல் நாலாவது அங்கணத்தின் நடுவில் தீவினைகளைப் போக்கும் பலிகள்யாவும் நாசஞ் செய்யும் பலி மேடை வலது புறமாகவும் தீவினைகளைப்போக்கும் சந்திரபுட்கரணி இடது பக்கமாகவும் உடைய மகாமண்டபம் என்ற இந்த அறுகோணத்தானத்தில் பரமான்மா குருவாக விளங்கி நிற்கிறார்.

504. சீவான்மா தான் வெறுத்து விடுவதாக வாக்குக் கொடுக்கும் தீய குணங்களாகிய காணிக்கையையும் பலியையும் பலிமேடையிலிட்டுத் தீய்த்து சீவான்மா தூயனுனென்றும் புதிதான நற்குணங்களில் வளரவேண்டும் என்றும் நீர்தெளித்து உட்கோவிலிலிருக்கும் கடவுள் முன்னிலையில் அழைத்துப்போய் ஒளிவடிவங்காட்டி எல்லா நற்செய்கைகளிலும் சீவான்மா உறுதிப்பட பிதாவின் அருள் பெறும்படி செய்கிறார்.

505. இதில் இவ்வுடலுக்கும் உலகத்தில் நாம் காணும் கோவில்களுக்கும் மிக ஒற்றுமையிருக்கிறது. நமது பரமபிதா கொடுத்த இயல் வேதம் பிறந்த இவ்வுடம்பாகிய கோவில் முந்தினது. அதன் பின் இதை அறிந்து கொள்ளக் கூடாத மற்றவர்கள் தெரிந்து வணங்கும்படி அருள் வேதத்தால் கற்பிக்கப்பட்ட மண்ணாலாகிய கோவில் பிந்தினது.

506. மிகப் பெருமையுள்ள இந்த உடலும் இதில் இருக்கும் சீவான்மாவும் அவனுக்கு உயிராயுள்ள மனமாகிய கோவிலும் நமக்கு உரியனவல்ல. இவை தேவனாகிய பரமான்மாவுக்கும் தந்தையாகிய தேவாதி தேவனுக்கும் உரியவையென்பது உண்மை.

507. இந்த ஒப்பற்ற மேன்மையை நினைத்து நாம் அவர் திருவடி முன்பாக வந்து அவரால் எல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்ளப் பணிந்து கொண்டு அவருடைய கோவிலாகிய நம் உடலை நன்றாய் வளர்க்கவேண்டும்.

---

## 20. கோவிலில் நடக்கும் ஆராதனைகளும் உடலும்.

508. தெய்வத்திற்குக் கோவிலாகிய மனதையும், மனதிற்கு இடமாகிய சீவான்மாவையும், சீவான்மாவிற்கு இடமாகிய இவ்வுடலையும், இதில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்கிற ஆறு இடங்களையும், அவ்விடங்களுக்குரிய தத்துவத்தைக் குறிக்கும் தலைவர்களையும், கடவுளுடைய செயல்களை விளக்கும் சத்திகளையும் உவமானமாகக் கோவில்களில் ஏற்படுத்தினார்கள்.

509. மேற்கே தலையாகவும் கிழக்கே காலாகவும் கிழக்குநோக்கிப் படுத்திருக்கும் ஒரு மனிதன் குத்துக்கால் மடக்கி முழங்தாளிரண்டும் சேர்த்து வைத்ததுபோலக் கீழ் அடிப்படை நாலிற்கும் இரண்டிற்குமாகவும் மேல் ஒன்றிற்கும் இரண்டிற்கு மாகவும் முகப்புக்கோபுரம் அமைத்தார்கள்.

510. படுத்திருந்த மனிதன் தெய்வத்தின் அடிகளைப் பிடித்திருப்பது போல் தன்கைகளை மேல் உயர்த்தி இருக்கும் விதமாகக் கர்ப்பக்கிரகக் கோபுரம்அகலம் இரண்டங்கணம் உடையதாகவும் கோபுரத்தின் மேல் அகலம் ஓரங்கணம் நீளம் ஓரங்கணம் உயரம் ஒரு அங்கணம் உடைய

குடத்தையும் குடத்தின்மேல் சீவான்மாவின் கையிலகப்பட்ட பரமான்மாவின் பொன்னடிகளைக் குறிக்கும் உச்சியையும் தீபத்தின் வடிவமாக அமைத்தார்கள்.

511. இந்த உடம்பில் பசுமுகம் நோக்கிய பசுபதியைப்போலக் கோவிலும் அமைத்தார்கள்.

512. கீழுலகத்தையும் அதன் செயல்களையும் வெறுத்து வந்த பசுவை அனுகதத்திற்கும் விசுத்திக்கும் நடுவில் மூன்றங்கணம் உயரமுள்ள கொடிமரத்தின் பின்புறமாகக் கட்டியிருப்பதாகக் குறிக்கும் நந்தியை அமைத்தார்கள்.

513. பசுவானது பரமபதியையே பார்த்துக் கொண்டிருக்கவும் பரமான்மா சீவான்மாவுக்கு உபதேசம் சொல்ல பசு கேட்டு உணர்வடைவதாகவும் கால் மடக்கிப் படுத்திருப்பதுபோல வைத்தார்கள்.

514. அந்தக் காலத்தில் தேவர்கள் எல்லாரும் பரமான்மாவின் வழிபட்ட சீவான்மாவை நினைத்துக் கொடிமரத்தில் கொடிகட்டித் தீயகுணங்களெல்லாம் அழிந்து நற்குணங்கள் தழைத்தோங்க காலம் வந்ததென்று மகிழ்வதையும் வளர்பிறைபோல் நடப்பதையும் கருதி வளர்பிறையில் திருவிழாத் தொடங்கினார்கள்.

515. இந்தத் திருவிழாவையும் முன் சொன்னபடியே அமைத்து முன்னால் பத்துவகை இன்னிசை முழங்க அதன் பின்னால் பரமபதியின்முன் நாயகியாகத் தன்னை நினைத்து இன்பக் கூத்தாடும் நடன கன்னிகைகளும் அதன் பின் ஆராதனை செய்துவைக்கும் குருக்களும் அதன் பின் பதியின் மூலத் திருவுருவத்தின் சாயலான திருவிழாத் திருவுருவையும் தகுந்த வாகனத்தில் ஏறிவரும்படி செய்தார்கள். இதன் பின் எவ்விதமான ஆடம்பரமுமில்லை.

516. ஆக்கினைத்தானத்திற்கு அதாவது சாக்கிரத்தானத்திற்கு மேல் மந்தம், உச்சம், சமம் என்னும் மூன்று நிலைகளில் நான்மறைகளைச் சொல்லிக்கொண்டு வரும் அந்தணர் கூட்டத்தையும் அதன் மேல் பத்துவகை இன்னிசை முழங்கக் கடவுளுடைய திருச்செயலைப் புகழ்ந்துபாடும் தொண்டர் கூட்டத்தையும் பதியின் பின்னால் சீவான்மா இவ்விதம் செல்லவேண்டுமென்பதைக் குறிப்பாக அமைத்தார்கள்.

517. சீவான்மாவிற்கு இடமாகிய இந்த உடம்பானது நன்றாக வாழ்ந்திருக்கவும் பரமான்மாவின் முன்னிலையில் தூயனாய்க் காணப்படவும் வேண்டுமென்பதைக் கருதி உடலை அழுக்கற்ற நீரினால் கழுவித் தூய மன

துடைமையைக் குறிக்கும்படி ஆடைகளைத் தண்ணீரில் துவைத்து வெண்மையாக்கிப் புனிதனாய்க் கடவுளுக்கெதிரில் செல்லவேண்டுமென்றும் கற்பித்தார்கள்.

518. சீவான்மா தனக்குக் கிடைத்த இந்த உடலானது வாதம் பித்தம் ஐயமென்ற மூன்று நாடிகளும் கூடுதல் குறைதலின்றிச் சரியான நிலையில் இருக்கும்படி செய்வதாக நினைத்து வாதத்தை மீறுமற் செய்யும் தன்மையுள்ள துளசியையும் சாம்பிராணி, மிளகு போன்ற பொருளையும் பித்தத்தைத் தணிக்கக்கூடிய வில்வமும் சாம்பிராணி, இஞ்சி, எலுமிச்சம்பழம் போன்றவைகளையும் ஐயத்தை அடக்கக்கூடிய சாம்பிராணி கற்பூரமும் அவைபோன்றவைகளையும் ஒவ்வொரு நாளும் கொஞ்சங் கொஞ்சமாவது உட்கொண்டு உடலின் பிணி நீங்கி நல்லறிவுடையோனுக இருப்பதற்காகப் பூசைக்குரிய பொருள்களை ஏற்படுத்தினார்கள்.

519. இதோடு விட்டுவிடாமல் சீவான்மா குறைவற்ற இன்பமும் மறைப்பற்ற அறிவும் உடையோனுயிருப்பதற்கு தமோ ரஜோகுண உணவுகளை நீக்கிச் சாத்வீக தன்மை பொருந்தும் உணவுகளையே உண்ணவேண்டுமென்று கற்பிக்கும் பாடம் போலப் பரமபதியை அடைய விரும்பும் எல்லோரையும் தன்னுடன் பிறந்தவராக நினைத்துக் கொடுக்கும்படி தினக்கட்டளையும் ஏற்படுத்தினார்கள்.

520. கடவுளுக்கெதிரில் வைத்தற்குரிய காணிக்கையுடன் சென்ற சீவான்மா தனது மனமாகிய மலரில் கடவுளை இருக்கும்படி பல தடவை கேட்டுக்கொள்வதாகவும் 'நற்குணங்களாகிய நன்மணம் தங்கிய உண்மையான மனதை நான் உமக்குப் படைக்கிறேன் நீர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று சீவான்மா பரமான்மாவைப் பலதடவை வேண்டிக் கொள்வது போலவும் கண்ணிற்கு இன்பத்தையும் நன் மணத்தையும் விரும்பும் சீவான்மா திருப்தியடையவும் பலநிறமும் மணமுமுடைய மலர்களைப் பறித்து தெய்வத்திற்குமாலையாகவும் உதிரியாகவும் அணியக்கற்பித்தார்கள்.

521. சீவான்மா இனிமேலடையும் மேம்பாட்டையும் தெய்வநிலையையும் தெய்வவடிவத்தையும் குறிக்கும்படியாக கற்பூரத்தைக் கொளுத்தி தெய்வத்திற்கெதிரில் எல்லோரும் பார்க்கும்படி மணியோசையினுல் கவனத்திற் கழைத்து ஏறெடுத்துப் பின் 'இந்த ஒளியால் குறிப்பிட்ட மெய்யான் பொருள் இங்கே இல்லை. அதைக் குறிப்பதற்காக இது ஏற்பட்டது. உன்னுள்ளத்தில் அவர் இருக்கிறார். அவரைக் கண்டுகொள்' என்பதாக அங்கேகாட்டி இங்கே கொடுத்தார்கள்.

522. உடலையும் உடைகளையும் தூய்மை செய்வதற்காகச் செய்யப்படும் நீராடலும் மூன்று நாடிகளின் கெடுதியை நீக்கும் பொருள்களைக்கொண்டு

முழுக்காட்டலும் மனதிற்கு இன்பத்தையும் தீவினைகள் நீங்கியதென்ற ஆறுதலையும் தரும்படி திருமஞ்சனமிடுதல், மலர்பெய்தல், அமுது படைத்தல், திருப்பதிகம் சொல்லல் முதலிய திருப்பணிகளைக் கற்பித்தார் கள். காலை, மாலை, நடுப்பகல், நடுயாமம் என்கிற காலங்களில் இப்பணி விடைகளைத் தவறாமல் கைக்கொள்ள வேண்டுமென்றும் கற்பித்தார்கள்.

523. சீவான்மாவிற்குத் தீய பழக்கங்கள் நீங்கி நல்ல பழக்கங்கள் உண் டாக வேண்டித், தீமை செய்ய விரைந்தோடும் கால்களைத், திருக்கோயிலை வலம்வரப் பண்ணினார்கள்.

524. கெட்டகாரியங்களைச் செய்யும் கைகளின் பழக்கத்தை நீக்குவதற்கு மலர் எடுத்தல், தொடுத்தல், அருச்சித்தல் முதலியவைகளையும் ஏற்படுத்தி னார்கள்.

525. தீமைகளையும் புறணிகளையும் பேசும் வாய் கடவுளின் பெயரை ஓயாது சொல்லிக்கொண்டிருக்கக் கற்பித்தார்கள்.

526. பிறர் நன்மையைப் பார்க்க விரும்பாமல் பிறர் தீமையையே பார்க்க விரும்பும் கண்களைப் பரமான்மாவின் திருவுருவம்போல் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருக்க வழிசெய்தார்கள்.

527. பிறர் கோளையே கேட்க விரும்புங் காதுகளைக் கடவுளின் திருப் புகழைக் கேட்டுக்கொண்டிருக்க வைத்தார்கள்.

528. சீவான்மா தன் தீய பழக்கங்களை எல்லாம் விட்டுவிட்டு இனி மேல் பரமான்மாவினால் உணர்த்தப்படும் நன்மைகளைச் செய்யக் கூடிய வனாகும்படி, கட்டிடத்தின் ஒரு வளைவுக்குப் பச்சையான கற்களால் கருக் கட்டுவது போல, ஞானம் போலத் தோன்றும் பிரதிஞானத்தைக் கற்பித் தார்கள்.

529. இவைகளை விட்டுச் சீவான்மா கீழ் நோக்குடையோனாய், உலக ஆடம்பரத்தையே விரும்பி அஞ்ஞானத்தில் முதிர்ந்தோனாய், பொறி புலன் களின் வழியாய்ச்செல்லும் உணர்வுடையவனாகும் போது முன் காட்டிய நற்குணங்கள் தேய்ந்து அறியாமை வளர்ந்து ஒன்றிருக்க ஒன்றாக அதாவது 'குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டவன்போல்' ஆகிறான்.

530. எப்படியிருந்தாலும் சீவான்மா தான் நடத்திவரும் எல்லாத் திருப் பணிவிடைகளையும் ஊக்கமாய்ச் செய்து உண்மை தெரிந்து கொண்டு அழியாத வழிக்குவரட்டுமென்று பரமான்மா பொறுமையோடு காத்துக் கொண்டே இருக்கிறார்.

531. மிகுந்த உறுதியோடு மூடபத்தி செய்யும் வஞ்சமில்லாத நெஞ்ச முடைய சீவான்மாவிடத்தில் தான் மனமிரங்கி தடுத்தாண்டுகொண்டு தானே உண்மையை விளக்கிக்காட்டிச் சற்குருவாகிறார்.

532. வஞ்சகமான மனதோடு வழிபடுகிறவர்களை அவர்கள் செல்லும் வழியிலேயே விட்டுவிடுகிறார்.

533. கீழுலகத்தின் இயற்கையையும் அதற்குச் சொந்தமானவர்களுடைய இயற்கையையும் பிறவிக்குணமாக உடைய சீவான்மா தன் புலன்களுக்கேற்ற விதமான துர்தேவர்களையும் தேவதைகளையும் ஏற்படுத்திக் கொண்டு தன் விருப்பத்தின்படி அன்னம் முதலிய அறுசுவைப்பொருள்களைப்படைத்துத் தின்று குடித்து, வெறித்து, தன்னறிவை இழந்து திண்டாடுகிறான்.

534. தன் தீய தோழர்களாகிய ஆசைமுதலிய பதின்மூன்று பேருக்கும் தன் உடலின் பொதிகளை ஒப்புக்கொடுத்து தன் உள் வீடாகிய மனதிற்குள் கூடும்படி செய்து பரமான்மாவையும் அவரது தந்தையையும் எண்ணாது அறியாமையிலேயே வளர்கிறவனாயிருக்கிறான்.

535. பரமான்மா இவனுக்கு மீட்பை அருள அதாவது தீய குணங்களை நீக்கி நற்குணங்களில் பழக உணர்த்திக் கொண்டேயிருக்கிறார். முடிவில் அவருடைய சினம் பற்றி எரிகிறது. அண்டிக்கொள்ளாதவன் அழிந்து போகிறான். அவர் சொல்லைக் கேட்கிறவனே செல்வவான்.

536. நீங்கள் இவ்வுலகத்திலும் மறுமையிலும் உலக காரியமாகவும் தேவ காரியமாகவும் தூல சூக்கும விஷயமாகவும் மேலானவர்களாயிருக்க விரும்புவீர்களேயானால், பிதாவின் எண்ணப்படி செய்ய மனதுள்ளவர்களேயானால், பரமான்மாவின் எல்லா உதவிக்கும் உரியவர்களாயிருக்க வேண்டுவீர்களானால், நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்க ஆவலுடையவர்களேயானால், அவரைத் தெய்வமாக உடையவர்களாயிருப்பீர்களேயானால், கடவுள் வீற்றிருக்கும் உங்கள் மனமாகிய ஆலயத்தை தீய குணங்களால் தீட்டுப்படுத்தாதிருங்கள்.

537. தேவாலயத்தின் வெளிப் பிரகாரங்களையும் திருமதில்களையும் போன்ற உங்கள் உடலைப்பேணுங்கள். பரமான்மா நம் வீட்டிற்குள் புகுந்தருளி நம்முடன் உண்டு உரையாடி 'இன்றைக்கு இந்த வீட்டிற்கு ரக்ஷிப்பு வந்தது' என்று சொல்லும்படி மிகவும் அன்புடன் அவரைப் பார்க்க விரும்புங்கள்.

538. உங்கள் உடம்பாகிய பரமான்மாவின் வீட்டைக்குறித்து மிகுந்த மனவுறுதியுடையவர்களாகி ஆசை முதலிய தீயர்களாகிய பதின்மூன்று கொள்ளைக்காரரைத் துரத்தி அவர்கள் உங்களை அணுகாதிருக்கும்படி முயலுங்கள்.

## 21. நமது உடல் தெய்வத்திற்குப் பூந்தோட்டமாயிருக்கிறது.

நம்முடைய உடலை ஏன் பேணவேண்டும்?

539. இந்த உடலுக்குள் சீவான்மாவுக்குச் சொந்தமான மனமானது அதற்குள் இருக்கும் தெய்வத்திற்கு ஒரு பூந்தோட்டமாக இருக்கிறது.

540. அது சீவான்மா விரும்பும் எல்லா நற்பயன்களும் நிறைந்து வளர்ந்தோங்கி நன்மை பயந்து நிற்கும் ஒரு சீவ விருட்சத்தையும், அவன் கீழ் நோக்குடையவனுகும்போது அவன் விரும்பிய தீயபயன்கள் நிறைந்து அவனுக்குத் துன்பம் விளைக்கும் இயல்புடைய ஒரு நச்சுமரத்தையும் நடுவில் உடைய பூம்பொழில்போலிருக்கிறது.

541. இச்சோலையில் அடிக்கடி கடவுள் உலாவிக்கொண்டிருக்கிறதாக வும், தமது குமாரனை பரமான்மாவோடும் தம் எண்ணப்படி நடந்து வரும் சீவான்மாவோடும் பேசிக்கொண்டிருக்கிறதாகவும் மனமகிழ்ச்சி யாயிருக்கிறதாகவும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

542. பிதா அல்லது பிரமம் தோட்டத்தை உடையவராகவும், பரமான்மா தோட்டத்திற்கு உரிமையுடையவராகவும், சீவான்மா தோட்டத்தைப் பண்படுத்திக் காத்து அத்தோட்டத்தின் நடுவிலுள்ள தீய பழத்தை அருந்தாமல் சிவகனியையே அருந்த ஏற்படுத்தப்பட்டவனுகவும் இருப் பதை நாம் அறியவேண்டும்.

543. சீவ விருட்சம், சீவனைத்தரும் விருட்சம், சீவனுகிய விருட்சம், சீவனுள்ள விருட்சமென்று பொருள்படக்கூடிய ஒன்றை நாம் இப்போது சற்றுக் கவனிக்கவேண்டும்.

544. இதைப் பல சமயத்தாரும் பல விதமாகச் சொன்னுலும் இவைகள் யாவும் ஒரு முடிவை அடையாமல் வேறுபட்டிருந்தாலும் ஒருவாறு அடுத்த அடுத்த படிகளையே விளக்கும்படியான ஒரே பொருளில் வழங்கி வருகின்றன.

545. எப்படி என்ருல் முதலாவது இந்த உலகத்தையே தோட்டமாகவும் அதன் நடுவில், ஆண் பெண் என்ற இருவரையே இரு உயிர் மரங்களாகவும் கடவுள்உண்டாக்கினதாகச் சொல்லப்படுகிறது.

546. ஆசைமுதல் பதின்மூன்று தீயகுணங்களையும் தனக்குத்துணையாகக் கொண்டு அவற்றின் வழியே நடக்கும் இயல்புடைய உலகத்தில் மனைவி யானவள் கணவனைத் தன் விருப்பப்படியே நடக்கச் செய்து, உலககாரியங் களிலேயே அவன் மனம் செல்லும்படி கற்பித்து, தனக்கும் தன் மக்களுக் கும், தன் இனத்தாருக்கு மாக அவன் நேரத்தையும் வன்மையையும் பொருளையும் செலவழிக்கும்படியாக ஓயாது செய்து வருகிருள்.

547. இதுவன்றி உலகத்தில் நடக்கும் பலவகையான தீச்செயல்களுக்கும் கொலைகளுக்கும், சண்டை சச்சரவுகளுக்கும், ஆசைகளுக்கும் காரணமாயிருக்கிறாள்.

548. இவள், தன் கணவன் கடவுளை நினைக்கவும் தவஞ்செய்யவும் நல்லறங்கள் நடத்தவும் இடங்கொடாமல் அவனுக்கு ஒரு நச்சுமரமாயிருக்கிறாள்.

549. இவளது சொற்கிணங்கி இவள் விருப்பப்படி நடக்கிற எவனும் தீயகனியைத் தின்பதாகிய தீமையையே செய்து அழிவற்ற சீவனை இழந்து நரகத்தையே அடைகிறான். அதாவது தீராத மனவருத்தத்தையே அடைகிறான்.

550. பரமான்மாவைத் தன் குருவாக நினைத்து, அவர் சொல்லப் பிதாவின் உள்ளம் இன்னதென்றறிந்து, அதன்படி செய்கிற ஒருவன், நன்மையான காரியங்களைச் செய்யும்பொழுதும் சொல்லும்பொழுதும் பயன் நிறைந்த ஒரு சீவவிருட்சம் போலிருக்கிறான்.

551. அவன் எல்லாக்காரியங்களிலும் பரமான்மாவைத் தனக்குத் தலைவனாகக்கொண்டு அழிவில்லாத இன்பத்தை அடைந்து அழிவற்ற சீவனைப் பெறுகிறான்.

552. அவனையே தனக்குத் தலைவனாகக்கொண்டு, அவன் மனப்படி நற்காரியங்கள் யாவிலும் உதவியாயிருக்கிற தலைவி, தானும் மகிழ்ச்சி நிறைந்த சீவனை அடைகிறாள்.

553. இவ்விருவரும் இல்லறம் துறவறம் என்றவற்றில் இல்லறத்திலிருந்து செய்யவேண்டுவனவாகிய மக்களை வளர்த்தல், பெற்றோரைப் பேணல், இனத்தாரைத்தாங்குதல், இறந்தோர் கடன் கழித்தல், விருந்தினரை ஓம்பல், இரப்போர் வேண்டுவன ஈதல், அரசிறைகொடுத்தல், தெய்வம் தொழுதல் முதலியவைகளை முறைதவறாமல் செய்து அழிவற்ற சீவனைப் பெறுகிறார்கள்.

554. இவ்வில்லறத்தை முறைப்படி செய்வது துறவறத்தைப் பார்க்கிலும் மேலானதாகத் தெரிகிறது.

555. தலைவனும் தலைவியும் கூடி நடத்தும் இல்லறத்தில் தன் தலைவன் சொல்லும் நன்மையான காரியங்களில் ஒன்றிற்கும் எதிர் நில்லாமல் மனம் ஒத்து நடக்கும் இல்லாள் இருக்கும் இடமானது நாம் காணக்கூடிய ஒரு இன்ப நிலையாய் இருக்கிறது.

556. இந்த இன்ப நிலைக்கு கணவனே தலைவனாகவும் இல்லாளே தலைவியாகவும் விளங்குகிறார்கள். தேவர்கள் எல்லோரும் இவர்களைப் பார்க்கவும் இவர்களோடு கூடியிருக்கவும் விரும்புகிறார்கள்.

557. இருள் நிறைந்த உலகத்தில் மலைமேல் ஏற்றிய விளக்கைப்போல் இவர்கள் விளங்குகிறார்கள்.

558. இப்படி விளங்கும் ஓர் இல்லறத்தானுக்குத் துணையாகக் கிடைத்த மனையாள், கணவனைப் பழிப்புக்கு ஆளாக்காமல் அவன் மனமொத்து நற் காரியங்களில் துணை நிற்பாளானால், 'இந்தப் பிடாரி வழிக்கு வந்தது தான் வியப்பு இவள் மானுடப்பெண் அல்லள்; தெய்வப்பெண்; இவளாலேயே இவனுக்கு எல்லாப் புகழும் வந்தது' என்று எல்லாரும் அவளையே கொண்டாடுகிறார்கள்.

559. இவர்கள் இருவரும் ஈருடலாக இருந்தாலும், ஒரே எண்ணமும், ஒரே வாக்கும் ஒரே செய்கையும் உடையவர்களாய் இருக்கிறார்கள்.

560. தங்களால் கூடிய வரையும், தங்கள் செயலுக்கும் தகுதிக்கும் சற்று மிகுதியாகச் செய்யும் இல்லறம்போக, மற்றும் விரும்பிய பயனுக் கும், தன் நாட்டவருக்கும் பிற நாட்டாருக்கும் உதவி செய்கிறார்கள்.

561. பழம் நிறைந்த மரமானது தன்னை நட்டு வளர்த்தவனுக்கும், அப்படியல்லாத நிலத்தில் ஊர்வனவற்றிற்கும், வானில் பறக்கும் பறவை களுக்கும், யாதொரு தடையும் சொல்லாமல் உதவி நிற்பதுபோலத், தங்கள் நற்குணம், நற்சொல், நற்செய்கையாகிய நலங்களைத் தரும் தளிர், மலர், பழமுடைய உயிர் மரமாக அடைந்தோர் யாவர்க்கும் விளங்குகிறார்கள்.

562. இப்படிப் புகழுடன் நடவாத இல்லறத்தில் ஓயாது சச்சரவுகளும் மன வருத்தங்களும் பகைமையுமுண்டாகக் கொடிய மனைவியோடு கூடி வாழ்தலைப் பார்க்கிலும் கொடிய விலங்குகள் நடமாடும் காடு நல்ல தென்று துறவறத்தை விரும்புகிறான்.

563. துறவறத்தை விரும்பி நின்ற ஒரு துறவிக்குத் தான் விட்டுவந்த தீமையான எண்ணங்களையே நினைப்பூட்டி, உடம்பின் விருப்பப்படியே நடக்கத் திரும்பவும் இடந்தந்து, அவனுடைய சீவனைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துச், சாவை உண்டாக்கும் இயல்புடைய சந்திர கலையென்று வழங்கும் இடது பக்கத்திற் செல்லுகிற மூச்சை, எல்லாத் தீமையையும் தரக்கூடிய நச்சு மரமென்றும், என்றும் பதினாறாய், எல்லா நன்மைக்கும் காரணமாய், என்றும் அழியாத நிலையைத் தரும் இயல் புடைய சூரியகலையை, அதாவது வலதுபக்கத்தில் ஓடும் மூச்சை, சீவ விருட்சமென்றும் பெரியோர்கள் உணர்த்த உணர்ந்து அவைகளின் விதி விலக்குகளையும் அவர்களால் அறிந்து பழகுகிறான்.

564. இந்த இரண்டு மரங்களும் ஒருவனுடைய உயிர்நிலையாயிருக் கின்றன. ஒருவனுக்குச் சீவனாய் விளங்கும் இம்மூச்சானது வலமன்

இடமன் என்ற இரண்டு மாடுகளாகவும், குதிரைகளாகவும், சூரிய சந்திராகவும், அகார உகாரமாகவும், நாத விந்தாகவும், ஆண் பெண்ணுகவும், ஆதி அந்தமாகவும், கார சாரமாகவும், உப்புப் புளியாகவும், வான் நிலமாகவும், ஒளி இருளாகவும், நட்புப்பகையாகவும், அழிவில்லாதது அழிவுள்ளதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

565. இதில் சந்திரகலையை பெண்ணின்கூறுகவும் சூரியகலையை ஆணின் கூறுகவும் தெரிந்துகொள்ளவேண்டும்.

566. சூரிய கலையானது நம்முடைய சீவனுக்குப் பற்றுக்கோடாகிய மூச்சில் பதினுறங்குல மூச்சை உள்வாங்கி, நாலங்குலம் மிச்சம் பண்ணி, பன்னிரண்டங்குல மூச்சை வெளியே விடுகிறது; ஆனுல் சந்திர கலையோ பன்னிரண்டங்குல மூச்சை உள்வாங்கிப் பதினுறங்குல மூச்சை வெளிவிடுகிறது. இதனுல் கணவன் தேட்டாளி என்றும் மனையாள் அழிப்பாளி என்றும் வழக்கச் சொல் உண்டாயிற்று.

567. சந்திரகலையானது சூரியகலையினுல் மிச்சம்பண்ணப்பட்ட நாலங்குல மூச்சையும் வெளிவிடுவதனுல் ஆயுளுக்குக் குறைவுண்டாகிறது.

568. சந்திர கலையை நிறுத்தும்படி அதற்கு உரிய அதிக ஊண், தூக்கம், சோம்பல், பெண்போகம், சினம் முதலியவைகளை நீக்க வேண்டும். சந்திரகலை வலது பக்கத்தில் திரும்பும்படியாக இடது காலின் இரத்த ஓட்டத்தை ஆசனபேதம் அல்லது உட்காரும் வகையால் நிறுத்தியும், இடது கையின் இரத்த ஓட்டத்தை அழுத்தும்படியாக யோகதண்டம் முதலியவைகளில் சாய்ந்தும், சூரியகலைக்கு உரிமையான கடவுளை வழிபடுதல், பூவைக்கொண்டு அருச்சித்தல், மந்திரங்களை உருவேற்றல், மறை ஓதுதல், கடவுளையும் அவர் அன்பர்களையும் புகழ்ந்து பேசுதல் ஆகிய இவைகளைச் செய்தும், எப்பொழுதும் சூரியகலையாகவே இருக்கும்படியாகப் பழகி வரும்படி பெரியோர்களால் உணர்த்தப்படுகிறுன்.

569. சூரிய கலையே எப்போதும் நடக்கும்படியாக விழிப்பிலும் தூக்கத்திலும் கண்ணும் கருத்துமாயிருப்பவன் துன்மரணம் நீங்கி நிறைந்த ஆயுளும் நல்லறிவு முடையவனுய்க் கடவுளுக்கு அன்பனுகிறுன். இப்படிப் பழகின இவன் மேலான நிலையை அதாவது என்றும் அழியாத நிலையை அடைய விரும்புகிறுன்.

570. சந்திர கலையை வசப்படுத்தித் துறவறம் நடத்ாதவன் என்றும் பதினுறுயிருக்கும் சீவ விருட்சத்தின் பயனை அடைகிறதில்லை.

571. அதன் மேற்படியை அடைய விரும்புகிறவன் தான் ஒருநாளில் விடும் இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்சையும், தனக்கு ஏற்பட்டுள்ள நாட்களின் ஒரு கூறாகவும், தான் தேடாது பெற்ற செல்வமாகவும் நினைத்துச், சற்று நிறுத்தி அல்லது மூச்சின் எண்களைக் குறைத்துச் செலவு செய்து வருவானாகில் நெடுநாளைக்கு மிச்சமிருக்கும் களஞ்சியமென்று அவைகளை உறுதியாக அறிகிறான்.

572. இப்போது உட்கொள்வதும் வெளிவிடுவதுமாகிய மூச்சின் அளவை எழுத்துக்களினால் இவ்வளவென்று முடிவு செய்து கொண்டு, அதாவது சூரிய கலையின் பதினாறங்குலம் மூச்சுவிடுகையில் அந்தப் பதினாறங்குலத்திற்கும் தகுதியாக தூல எழுத்தை முப்பத்திரண்டு தரம் சொல்லி மூச்சு வாங்கியும், அறுபத்து நாலு தரம் சொல்லி மூச்சை நிறுத்திக் கும்பித்தும், பதினாறுதரம் சொல்லி மூச்சு விட்டும் பழகி வருகிறான்.

573. தான் வாங்கும் மூச்சில் இப்போது சற்றேறக்குறைய இரண்டரைப்பங்கு மிச்சம் பண்ணுகிறான். இப்படி இரண்டரைப் பங்காக மூச்சை இரட்டிக்கும் பொழுதும், அதற்கு மேல் இரட்டிக்கும் பொழுதும், இந்த இரண்டரைப் பங்கும் நாளடைவில் இரட்டித்துக் கொண்டே போகிறது. அதாவது ஒரு நாளில் இரண்டரை நாளும், ஒரு ஆண்டில் இரண்டரை ஆண்டும் மிச்சப்படுகிறது.

574. நூறு மூச்சை ஒரு மூச்சாக்கும் காலத்தில் ஒரு நாள் நூறு நாளாகவும், ஒரு ஆண்டு நூறு ஆண்டாகவும் பெருகிப்போகிறது. இருநூறு மூச்சை ஒருமூச்சாகக் கும்பித்துப் பழகுகையில், ஓய்வில்லாது மாரிபெய்ய வெள்ளம் பெருகுவதுபோல், ஆயுள் எல்லையற்றுச், சிவகாருண்ணியத்தால் பல சித்துக்களாகத் திருவிளையாட்டயர்ந்து எல்லாவற்றிற்கும் காரணனாக விளங்கி, முடிவில் கடவுட்டன்மையை அடைகிறான்.

575. இப்படிப் பழகும் ஒருவன், கும்பிக்கும் பொழுது மூச்சானது உடலினுள்ள ஐம்பொறிகளைக் கெடுத்துவிடாதிருக்கும்படி 'அழுகிப் போகின்ற தோலைத் துவருள்ளவைகளினால் கெட்டிப்படுத்துவது போல,' அயம்காந்தம் அபிரேகம் முதலிய சத்துக்களின் செந்தூரத்தைக் காயகற்பம் உண்டு உடலை வலுப்படுத்துகிறான்.

576. மூச்சு நிலைப்பட்டுக் காய சித்தி பெற்ற பின், வானத்தில் செல்லச் செய்யும் கமனக் குளிகையின் உதவியால், பல இடங்களிலும் அண்டங்களிலும் செல்லும் திறமையும் அடைகிறான்.

577. இவ்விதம் நெடுநாள் உலகுக்கு நன்மை செய்பவனாக விளங்கிக், காய்ச்சிய இரும்பில் வார்த்த நீரைப்போலத், தூலம் சூக்குமத்திலும்,

சூக்குமம் காரணத்திலும் கலந்து, காலம் இடம் சீவன் என்னும் இவைகளில் வேற்றுமையற்று எல்லாம் தானாகவே நிற்கும் பழம் பொருள் ஆகிறான். இன்ப வீட்டை அடைகிறான்.

578. இப்படி மருந்துகளினால் தன் உடம்பையும், மூச்சினால் உயிரையும் நிலைப்படுத்திக்கொள்ளும் துறவியே மெய்யான துறவி. தன்னைவேண்டி வரும் இல்லறத்தானுக்கும் கடவுளுக்கும் ஏற்றவைகளைச் செய்து பல நற்காரியங்களுக்குத் துணையாக நிற்கிறான். சீவ விருட்சத்தின் பழத்தைத் தின்பவனாக விளங்கி அழிவற்ற நிலையைப் பெறுகிறான். இவனுடைய உடலே கடவுளுக்குரிய தோட்டம்.

579. யோகத்தில் பழகின ஒரு மெய்யான துறவி, தன் உடலையும் தன் ஆயுளையும் கெடுத்துத், தனக்குத் தீராத துன்பத்தையும் நரகத்தையும் தருவதான சந்திர கலையைத், தன்னைக் கெடுக்க வந்த பொல்லாத ஆவியாகக் கண்டு அதைத் தன் வசப்படுத்தி, அதனுடைய அஞ்ஞான ஆட்டமெல்லாவற்றையும் தன் உடல் வளர்ச்சிக்கும் சீவ வளர்ச்சிக்கும் உதவும்படி பல நாள் வருத்தத்துடன் அடக்கிக்கொள்ளுகிறான்.

580. அடக்கி ஆண்டு வருகையில் அடக்கிக்கொள்ளுகிறவனுக்கு என்றும் அழியாமையும், எல்லாச் சித்திகளையும், எல்லாமொழிகளையும், எல்லா உண்மைகளையும், முக்கால உணர்ச்சியையும் தெரிவித்து இவன் வேண்டுவன யாவற்றையும் குறைவறச் செய்து காக்கும் பரிசுத்த ஆவியாக விளங்கி நிற்கிறார்.

581. பரிசுத்தஆவியின் செயலைஉண்மையாக உள்ளத்தில் கண்டுஉணர்ந்த யோகி தீமையான யாவற்றையும் விட்டுவிட்டுத் தனக்கும் பரமான்மாவுக்கும் ஏற்ற நன்மைகளைச் செய்யும் தூயனாக விளங்குகிறான்.

582. நன்மை தீமை என்ற இருவினைகளின் தன்மை முழுமையும் தெரிந்து கொண்டு தீமையை நினைக்காமலும் சொல்லாமலும் செய்யாமலும் மனம், மொழி, மெய் என்ற மூன்றிலும் தூய்மை யடைகிறான்.

583. இப்படி மன மொழி மெய்களினால் தூயவனான இவன் நன்மையான காரியங்களை நினைக்கவும் சொல்லவும் செய்யவும் தக்கவனாகிறான்.

584. தான் இதுவரைக்கும் மூர்த்திவடிவமாக வழிபட்டு வந்த கடவுளும், சூக்கும வடிவமாக வழிபட்டு வந்ததெய்வமும், அவர்கள் இயல்பான உருவம் மாறிக் காரணத்தில் அவர் நன்மை வடிவாகவே இருக்கிறார் என்றும், நன்மை செய்யவே தன்னை உண்டாக்கினாரென்றும் அதற்காகவே தான் பிறந்தது என்றும், தன்னுடைய ஒவ்வொரு மூச்சும் நன்மைசெய்யவே தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அறிகிறான்.

585. நன்மையென்னும் இந்தச் சொல்லினால் குறிக்கப்படும் செயல்கள் பலவாயிருந்தாலும் அவைகள் எல்லாச் சீவரும் விரும்பத்தக்கதும் துன்பமே இல்லாததுமான செய்கைகளென்று காணக் கூடியவைகளாயிருக்கின்றன.

586. நன்மையானது, நன்றியறிதலுக்காகச் செய்யும் செய்கைகளும், பயனை விரும்பிச் செய்யும் செய்கைகளும், பயனை விரும்பாமல் செய்யும் செய்கைகளும் என மூன்று வகைப்படும்.

587. தன்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தைக்கும், கடவுளை வழிபடத் தனக்கு வழிகாட்டின குருவுக்கும், தன்னைப் படைத்துக் காத்து வரும் கடவுளுக்கும், தீயவர்களால் துன்பம் நேரிடாதபடி காத்து வரும் அரசனுக்கும், தனக்குத் தீமை நேர்ந்தபோது தம் நலங்கருதாது இடர் தீர்த்த பெரியோருக்கும், தன் மூத்தோனுக்கும், தன் வயதிற்கு மேற்பட்டோருக்கும், அறிவிற் சிறந்த பெரியோர்க்கும், செய்யும் வழிபாடுகளும் நன்றியறிந்த மனதுடன் செய்யும் செய்கைகளுமாம். இன்னும் அவர்கள் செய்த நன்மையை நினைத்து மனம் உருகுதலும், அவர்களது புகழை எடுத்துரைத்தலும், அவர்கள் தனக்கு எதிர்ப்படும்பொழுது வணக்கத்துடன் வழிபடுதலுமாகிய நற்காரியங்கள் யாவுமாம்.

588. அவர்கள் தனக்குப் பாராட்டின அன்பிற்குத் தான் செய்வது போதுமானதாய் இல்லாமலிருந்தாலும் அவர்கள் கொடுத்த கடனையே திரும்பச் செலுத்துகிறவனாயிருக்கிறான்.

589. அவைகளில் எல்லாக் கடன்களையும் திரும்பச் செலுத்தத் தகுதியற்றவனாயிருந்தாலும் இவனுடைய நன்மையையே கோரி நிற்கும் தந்தை தாய் குரு கடவுள் என்னும் இவர்கள், இவன் ஒன்று செய்தாலும் அதைக் கோடியாக ஏற்றுக்கொண்டு இவனிடத்தில் அன்புடையராகி மேலும் மேலும் பல நன்மைகள் இவனுக்கு உண்டாகும்படி விரும்பி நிற்கிறார்கள்.

590. இப்படி விரும்பி நிற்கும் அவர்கள் மேலும் மேலும் இவனுக்குக் கடன் கொடுக்கிறவர்களாகவே இருக்கிறார்கள். இந்தக் கடனைத் தீர்க்கும் நன்றியறிந்த செய்கைகள் இவனுக்கு நன்மையையே செய்வதனால், அதாவது கடவுளருளையே உண்டாக்குவதனால் உலகத்தில் பெருமையோடும் புகழோடும் பிறர் தனக்கு நன்மைகளையே செய்யவேண்டுமென்று விரும்புகிற ஒவ்வொருவனும், இந்த நிலையிலாவது நன்மையைச் செய்து கொண்டு வரவேண்டும்.

591. இது கடன் தீர்த்தலையொழிய வேறொன்றுமில்லை. வாங்கின கடனைக் கொடுக்காதவன் எப்படித் தண்டனை அடைவானோ அதுபோல நன்றியறிதலுக்காக நற்செய்கைகள் இல்லாதவன் அதாவது நன்றியறிதலில்லாதவன் வீடடைய மாட்டான்.

592. இரண்டாவது:—தான் இனி அடைய இருக்கும் அதாவது ஒருவன் அடைய வேண்டிய அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாலு பெரும் பொருள்களையும் கருதி இல்லறம் துறவறம் என்ற இரண்டு அறத்தில் இல்லறத்தானும் துறவறத்தானும் செய்யவேண்டிய நன்மைகள் எவைகளோ அவைகளில் ஒன்றும் விடாமல் செய்யவேண்டும்.

593. இவ்வுலகத்திற்கு வேண்டிய பொருளும், மறு உலகத்திற்கு வேண்டிய அருளுமாகிய இரண்டினையும் சிறிது சிறிதாகத் தேடிச்சேர்த்துக் காத்துப்பெருக்கித் தானும் நுகர்ந்து நல்வழியில் செலவு செய்யவேண்டும்.

594. இவ்வாறு செய்யாத பொருளும் அருளும் வீணும். நல்வழியில் செலவு செய்யாத பொருளும் அருளும் இல்லாமற்போகும்.

595. இவைகளை ஒழுங்காக அதாவது இல்லறத்திலிருந்து நல்வழியில் பொருளையும் துறவறத்திலிருந்து அருளையும் தேடிக்கொள்ளவேண்டும்.

596. இவ்விரண்டையும் ஒரே காலத்தில் கைக்கொள்ளமுடியாத ஒருவன் இல்லறம் துறவறம் என்ற இரு நிலைகளையும் வெவ்வேறாக நினைக்கிறான். வெளியில் பற்றுடையவனாகக்காணப்பட்டாலும் அகத்தில் பற்றில்லாதவனாகவும், வெளியில் உலககாரியத்தில் கவலைப்பட்டவனாகத் தோற்றினாலும் அகத்தில் அதிற் சிறிதும் பொருந்தாதவனாகவும், உலகத்தாருக்கு இல்லறத்தானாய்க் காணப்பட்டாலும் அகத்தில் துறவறத்தானாகவும், பொறிகள் தத்தம் புலன்களை நுகர்ந்திருந்தாலும் அவைகளில் தீமையை நீக்கி நன்மையையே விரும்பி நிற்பவனாகவும் இருக்கும் இல்லறத்தானே மெய்யான துறவி.

597. இவன் தேடும் பொருளே பொருள். இவன் தான் அடைய வேண்டிய இம்மை மறுமைக்குரிய பொருளுக்காக இடைவிடாது முயற்சி செய்துகொண்டே இருக்கிறான். இவன் எவ்வளவு முயற்சி பண்ணுவானோ அதற்குத் தகுந்தபடி இன்பங்களை அடைகிறான்.

598. தான் நுகரும் உலக இன்பங்களினால் தனக்குத் துன்பமே கிடைக்கிறதென்றும், அவைகள் நிலையற்றவைகள் என்றும், வாயில் தேனையும் வாலில் நஞ்சையுமுடைய கதண்டைப் போல் முடிவில் துன்பஞ் செய்யக் கூடியவைகளென்றும், படிப்படியா யறிந்து அருள் வழி நிற்றலே தகுதி என்றும் உணருகிறான்.

599. இது முதலில் சற்றுத் துன்பமாயிருந்தாலும் முடிவில் கொஞ்சங் கொஞ்சமாய் அழிவற்ற இன்பத்தையே அடைகிறான்.

600. அறம் பொருள் இன்பம் வீடு என்ற இந்த நான்கையும் அடையக் கருதிய இவன் தான் செய்யவேண்டிய நன்மையான காரியங்கள் யாவுக்கும் ஏற்ற பயனை அடைகிறான். இவன் செய்யும் நன்மையாவும் இவனுக்கே திரும்பக்கிடைப்பதனால் இவன் ஒருவாறு தனக்குக் கிடைக்கவேண்டிய நன்மைகளுக்காக மிக்க விழிப்புடன் செய்யவேண்டியவைகளை ஏற்ற வேளைகளில் செய்து வைக்கிறான்.

601. நிலத்தில் விதைத்து வைத்த விதைகளில் சில இரண்டு, மூன்று, நாலு, ஐந்து, ஆறு மாதங்களிலும், சில இரண்டு முதல் பத்து வருடங்களிலும் எப்படிப் பயன் கொடுக்கின்றனவோ, விதைத்தவன் பயனை நோக்குவதெப்படியோ, அப்படியே நற்செய்கைகளைச் செய்வதினால் ஒருவாறு கடன் கொடுக்கிறான்.

602. எல்லா நன்மைகளுக்கும் காரணரான ஒருவருக்குக் கடன் கொடுத்து வைக்கிறவனாகவும் இருக்கிறான். அவர் அவன் கொடுத்ததை ஒன்று நூறாகத் திரும்பக் கொடுக்கிறார்.

603. மூன்றாவது :—இப்படிப் பழகின ஒருவன் தான் இதுவரை செய்து வந்த நன்மைகள் யாவும் அவன் எதிர் நோக்கும் ஒருவிதமான பயனையே தருவதை அறிந்து, இச்சையற்ற அதாவது விருப்பமற்ற அல்லது பிறப்பற்ற, அல்லது நினைப்பற்ற அல்லது மனமற்ற நிலையையே விரும்பி, எல்லா நன்மைக்கும் காரணனும் நன்மையின் வடிவமுமாகிய என் தந்தையின் சாயல் இதுதான் என்றும், நான் செய்வதெல்லாம் அவருக்காகவே என்றும், நானும் அவரும் இரண்டற்று ஒன்றாயிருக்கிறோமென்றும் அறிந்துகொண்டு தான் அவனாகவே விளங்குகிறான்.

604. இப்படித் தெய்வம் அதாவது நன்மையின் வடிவம் இவனில் உருவாகும் காலத்தில் தெய்வம் இவனில் பிறந்தவராகவும், அதாவது கடவுட்செயல் இவனில் பிறந்ததாகவும், தெய்வத்தைப் பெற்றவனாகவும் அதாவது தெய்வச்செயலை உலகத்தாருக்குக் காட்டுகிறவனாகவும் ஆகிறான்.

605. இந்த நிலையில் தெய்வம் (நன்மை) இவன் எடுத்து விளையாடும் சிறு குழந்தைபோல இவனது மனமகிழ்ச்சிக்குக் காரணமாக இவனோடு விளங்கிக்கொண்டேயிருக்கிறார்.

606. இதையறிந்த மேலோர்கள் இவனைக் கடவுளுக்குரியவனென்றும் தெய்வ அருள் பெற்றவனென்றும் தெய்வமென்றும் கொண்டாடுகிறார்கள்.

607. இதோடு நில்லாமல், இவன் தனக்கு நன்மை செய்கிறவர்க்கும் செய்யாதவர்க்கும் அதாவது நட்பினர்க்கும் பகைவர்க்கும் தனக்கு உரிமையுள்ளவர்களுக்கும் உரிமையில்லாதவர்க்கும், வேண்டுமென்று விரும்பும் எல்லாச் சீவர்க்கும், புல் பூண்டுகளுக்குங் கூட இரங்கி நன்மை செய்கிறான்.

608. இப்படி எல்லாச் சீவர்க்கும் உதவியாய் நிற்கும் இவன் எல்லாச் சீவர்களும் என்றும் நினைக்கும்படியான மேலான நிலையை அடைகிறான். அதாவது அவன் இவன் என்ற வேறுபாடில்லாத நிலையைப் பெறுகிறான்.

609. இந்த மேலான நிலையை எவன் அடைகிறானோ அவனே வீடடைந்தவன், தீவினைக்குக்காரணமான இச்சையிலிருந்து விடுபட்டவன், உண்மையான அன்பன், உண்மையானயோகி, உண்மையான இல்லறத்தான், அவனே பொருளுடையவன், அவனே அருளுடையவன்.

610. அவனே கைம்மாறு விரும்பாமல் நன்மைகளைச் செய்தவன். தான் செய்த நன்மைகள் யாவும் கடவுளுக்கென்று செய்தவன். கடவுளை மேன்மைப்படுத்தினவன். அவனில் கடவுள் மேன்மைப்படுகிறார். தமது பிள்ளையாக அவனை ஒப்புக்கொள்ளுகிறார். அவன் அழிவற்ற இன்ப வீட்டை அடைகிறான். அவன் செய்வன யாவையும் கடவுள் தமதென்று ஏற்றுக்கொள்ளுகிறார்.

611. அவனே நன்றியறிதலுக்கென்றும், தனக்கென்றும் கடவுளுக்கென்றும் நன்மை செய்து முடிவில் வீடடைகிறான்.

612. இப்படிப்பட்ட மேலான நிலையைத் தருவதான சீவ விருட்சத்திற்குக், காரணமாகிய கடவுளே வித்தாகவும், பரமான்மாவே அடிமரமாகவும், சீவான்மாவே கிளைகளாகவும், பரமான்மாவில் நிலைத்திருக்கும் சீவான்மா செய்வதும் சொல்வதும் நினைப்பதுமாகிய நற்செய்கைகளே இலைகளாகவும், நற்குணங்களே மணமுள்ள மலர்களாகவும், சிந்தை கனிந்து செய்யும் மேலான செய்கை யாவும் கனிகளாகவும், அதன் இனிய சுவையே பரமான்மாவாகவும், இவை யாவற்றிற்கும் முதலாயிருந்தும் வேறாயிருக்கும் வித்தே கடவுளாகவும் அறியவேண்டும்.

613. இந்த மரத்தின் பயனை நாமடைய விரும்புவோமானால் மரத்தைச் செழித்தோங்கி வளரச் செய்யும் தண்ணீரைப் போலொத்த இரக்கமுடையவர்களாய் இருக்கவேண்டும். சீவ விருட்சத்தை ஆசை முதலிய கொடிய விலங்குகளினால் அழிந்துபோகாமல் காத்துக் களையெடுத்து இடைவிடா முயற்சியுடன் கண்ணுங் கருத்துமாயிருந்து வளர்த்து வரவேண்டும்.

614. சோம்பலுடையவன் நடுவான் தண்ணீர் விடமாட்டான் பயனுமடைய மாட்டான். ஆனால் நட்டேனென்றும் பட்டுப்போயிற்றென்றும் சொல்லுவான்.

615. முயற்சியுள்ளவனோ, 'அது மிகவும் எளிது நீயும் செய், விரைவில் பயனடையலாம்' என்பான். இதன் உண்மையை அறிந்து கொள்ளாத ஒருவன் கொஞ்ச நாள் முயற்சி செய்து பின் விட்டு விடுகிறான்.

616. நல்லவர் கூட்டுறவு என்னும் வேலியடைக்காமலும் அன்பாகிய தண்ணீர் விடாமலும் இருந்து முகபாடமட்டும் பண்ணும் ஒருவனில், சினமென்னும் முட்காடுகள் அடர்ந்து தீய குணங்களாகிய கொடிய விலங்குகளும் வஞ்சக நெஞ்சமாகிய மறைந்திருந்து பிறரைக்கொல்லும் மலைப் பாம்புகளும் மிகுந்து, கூடா ஒழுக்கமாகிய கொடிகள் மூடிப்படர்ந்து, தீய எண்ணங்களாகிய விடப்பூச்சிகள் நிறைந்து, இவனை அந்த மரத்தினிடத்திற்குப் போகவிடாமலும், அதன் பயனை நுகரவிடாமலும் செய்கின்றன.

617. எல்லா நன்மையையுந் தரும் அந்த மரத்தடியில் அவன் இருந்தாலும் அவனுடைய தீய எண்ணங்களினால் அது அவனுக்கு எட்டிப் பழத்தையே கொடுக்கிறது.

618. இதைப் படிக்கிறவனே! உனக்கு நன்மையையே தரும் சிவவிருட்சத்தினடியில் நீ இப்போதிருக்கிறாய். நீ நன்மையையே எண்ணுவாயானால் உனக்கு நன்மையையே கொடுக்கக்கூடிய நன்மரம் நீயாகவே இருக்கிறாய்.

619. இந்த மரத்தினடியில் விண்ணவர்களும் அன்பர்களும் மேலோர்களும் காத்திருந்து தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதாவது நன்மையைச் செய்யத் தங்களுக்கு ஒரு சமயம் கிடைக்கவேண்டுமென்று கடவுளைவேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

620. தெய்வம் மகிழும் படியான ஒரு நன்மையைத் தான் செய்யும் ஒரு நிலையைத் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிச் செய்யும்பொழுது அவர்கள் விண்ணவராலும் மண்ணவராலும் கொண்டாடும்படியான புகழுடம்பைப் பெறுகிறார்கள்.

621. இதற்காகவே சிவ விருட்சத்தடியில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீயும் இதற்காகவே உலகத்திற்கு வந்திருக்கிறாய்.

622. காலமிருக்கும்போதே சிவ விருட்சத்தைப் பாதுகாத்து அதன் பயனை அருந்துவாயாக.

77254

623. பழத்தைத்தின்னும் படியான நன்மையை ஆசைமுதலிய தீச்செய்கையின் வழிபட்ட சீவான்மாக்கள் யாவரும் இழந்து போனார்கள்.

624. நச்சு மரத்தின் பழமாகிய தீமையையே நலமென்று விரும்பிய சீவான்மா பாவியாகி தெய்வத்தை நினையாமல் எல்லாத் துன்பங்கட்கும் ஆளானான்.

625. அதை அறிந்த பரமான்மா நீ சிவ விருட்சத்தின் பழத்தைத்தின்ன வேண்டுமென்றும், நீ அழிவற்ற நிலையை அடைய வேண்டுமென்றும் சிவ விருட்சத்தின்மேல் நீ தலைவனாக வேண்டுமென்றும் வருந்தி அழைக்கிறார்.

96.2 N1

626. அவருடைய சொல்லைக் கேட்டுப் பிதாவின் விருப்பப்படி நன்மையையே செய்கிறவன் எவனோ அவனே நீயாகும்படி இப்போதே முயற்சி செய்.

627. நீ உள்ளபடி முயற்சிசெய்வாயானால், உண்மையான விருப்பம் உனக்கிருக்குமானால், இடைவிடாது சிந்திப்பாயானால், உன் விருப்பத்தையும் உன் உள்ளத்தின் ஆவலையும் அறிந்த பரமான்மா உன் தோழனாக உன்னோடு கூட நின்று உனக்கு வேண்டும் உதவிகளைச் செய்து உன் மலைப்பு நீக்கி எளிதாக்குகிறார்.

628. செய்யத்துவங்கும்பொழுது இது நன்றாக முடியுமென்ற உறுதியை உனக்குக் கொடுத்து, எல்லாக் காரியங்களிலேயும் நன்மையையே தருகிறதற்காகத், தளர்ந்த நடையைக் கண்டு மனமகிழும் தாய் தந்தையரைப்போல, அப்போதைக்கப்போது உனக்கு ஊக்கமுண்டாக்குகிறார்.

629. முடிந்த இடத்தில் 'இவன் என் உண்மையான அன்பன்; என் உள்ளத்திற்கு உகந்த அடியான்; நான் சொன்னவைகளை நிறைவேற்றினவன்; இவனில் நான் விருப்பமாயிருக்கிறேன்; இவனுக்காக வைத்திருக்கிற அழியாப் புகழாகிய சீவகிரீடம் சூட்டுகிறேன்; என் பிதாவின் இராச்சியத்தில் இவனையும் ஒரு சிங்காசனாதிபதியாக்குவேன்' என்று பரமான்மா சொல்லுகிறார்.

630. சீவான்மாவோ:—'நான் ஒரு எளியன், எவ்வளவு நன்மைக்கும் தகுதியுள்ளவனல்லேன்; நான் ஒரு துரும்பு; நான் ஒரு சிறு பூச்சி; நன்மைக்குரித்தான ஒன்றையும் செய்யவில்லை.'

631. 'உம்மையும் மறந்தேன் உமது அடியாரையும் நான் நினைக்கவில்லை; இரக்கமென்பது மருந்துக்குக்கூட என்னிடத்திலில்லை.'

632. 'உமது கற்பனைகளைக் கைக்கொள்வதென்றால் எனக்கு எட்டிக் கசப்பு. நான் என்னை நேசித்ததன்றி பிறரை நேசித்தறியேன். என் அயலாரை வருத்தி அவர்களால் பயனடைவேன். அவர்களுக்கு ஒரு நன்மையையும் செய்ய நான் நினைத்ததில்லை.'

633. 'பிறர் குறைகளையே நான் காண்பேன். என் குறைகளோ எனக்குத் தெரியாது. பூமியிலிருப்பேன் ஆனால் வானத்தில் நடக்கிறதாக மனதில் எண்ணுவேன்.'

634. 'உம்மைக் கடுகளவாயினும் நான் நினைக்கவில்லை. இப்படிக் குருடனாகிய என்னைக் கைப்பிடித்து நடத்திக் கருணையோடு ஆதரித்துக் காத்துக் கொண்டிருந்த உமது அருளை என்னென்று சொல்லுவேன்.'

635. 'ஒப்புயர் வில்லாத உமக்கு நிலையற்ற உலகப்பொருள்களில் எதைக் கொண்டு ஒப்பிடுவேன்? அழிந்துபோகும் உலகப்பொருள்களின் ஒளியும் உயிரும் சுவையும் என்றும் அழிவற்ற உமக்கு நிகராமா'?

636. 'நான் ஏதேது சொல்லி உம்மைப் புகழ்ந்தாலும் அவை யாவும் என் பேதைமையும் அறிவின்மையுமாகின்றன.'

637. 'என்னை ஒரு பொருட்டா யெண்ணி என்னைத் தெரிந்துகொண்டு என்னிடத்தில் அன்பு கூர்ந்ததை நினைக்க நினைக்க அவை யாவுக்கும் நான் தகுதியற்றவனாய் இருக்கிறேனென்று அறிகிறேன். நீர் செய்த நன்றிகளை நினைக்க நினைக்க நினைப்பற்ற நிலையை அடைகிறேன்.'

638. 'தண்ணீரிற் கலந்த உப்பைப்போல என்னைத் தன்மயமாக்கிக் கொண்ட உன் அருளை என்னென்று சொல்லுவேன்? யார் அறிவார்? யார் கேட்பார்? கேட்ட யாவரும் நகைப்பார்கள்.'

639. 'உலகத்தவருக்கு அஞ்சி ஒளித்திருப்பேன். உன் அன்பை அறிகிற மேலோருக்கு உள்ளம் உருகிச் சொல்லுவேன். வேறு தொழிலறியேன். என் தீவினை தீர்த்தாய். நல்வினை வளர்ந்தோங்க அருள் செய்தாய். அவை யாவையும் உன்னதாக்கிக் கொண்டாய். ஒப்பற்ற தெய்வமே!' என்று இடைவிடாது போற்றுகிறான்.

640. இவன் தெய்வத்தைத் துதிப்பதை எல்லா மறைகளும் எல்லா நூல்களும் எல்லா அன்பர்களும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இவன் அவனென்ற வேறுபாடற்று, இவன் செய்யும் எல்லா நன்மைகளையும் சிறிதானாலும் பெரிதானாலும், ஒரு கலயம் தண்ணீரையானாலும், கவனிக்கக்கூடாத இரண்டு காசையானாலும் கவனித்துக்கொண்டிருக்கிற பரமான்மா இவை யாவும் தனக்கே கொடுத்ததாக சன்மார்க்க சபையில் அன்பர்கள் நடுவில் பலபேரறிய வெளிப்படுத்தி முகமன் சொல்லி ஆசிகூறி என்றும் அழிவில்லாத மகிழ்ச்சியைத் தந்து கடவுளுக்கெதிரில் கடவுளோடு வீற்றிருக்கும் உயர்ந்த நிலையையும் தருகிறார்.

641. இதைப் படிக்கிறவனே! நீ இவ்வித நிலையை அடைய விரும்புவாயானால், முதலாவது உன் மனமொழி மெய்களில் தீமையை விலக்கு; நீ இம் மூன்றிலும் தூயனானபின் உனக்கே நன்மையைச் செய்துகொள்.

642. உன்னிலுள்ள தீமையை விலக்கி உனக்கு நீ நன்மையைச் செய்யக் கற்றுக்கொண்டபின் பிறருக்கு எப்படி நன்மையைச் செய்யலாமென்று எளிதாய்த் தெரிந்து கொள்ளுவாய்.

643. உன் மனமொழி மெய்களால் நீ பிறரைத் துன்பப்படுத்திக்கொண்டிருக்கும்போது உனக்கு எப்படி இன்பம் உண்டாகும்?

644. பிறருக்கு நீ செய்த நன்மை தீமைதானே உனக்கு இன்பமாகவும் துன்பமாகவும் வருகிறது. இதை அறிந்த நீ உனக்கே நன்மை செய்து கொள்ள விருப்பமற்றிருப்பதென்ன?

645. உனக்கே நன்மை செய்து கொள்ளவும் அதனால் இன்பமடையவும் விரும்பாதபோது பிறருக்கு எப்படி நன்மையை விரும்புவாய்? ஆகையால் உனக்கே நன்மை செய்துகொள். உனக்கு ஒரு கெடுதியும் செய்து கொள்ளவேண்டாம்.

646. இதை உள்ளபடியே பழக்கத்திற்குக் கொண்டுவருவாயானால் பிறருக்குத் தீங்கு நினையாமலும், சொல்லாமலும், செய்யாமலுமிருப்பதாலும் நன்மையையே நினைத்துச் சொல்லிச் செய்வதாலும் உனக்கு நன்மையே உண்டாகும் என்பதை நீ நன்றாயறிவாய்.

647. அப்போது என்றும் அழியாத இன்பம் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றிக்கொண்டேயிருக்கும். நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ? நன்றாய் நினைத்துப்பார்.

648. நீ அருமையாய்ச் சொல்லும் சொற்களே உனக்குத் திரும்பக் கிடைக்கின்றன. அது போலவே உனது தீமையான சொற்களும் எதிரொலிபோல் சிறிதும் குறையாமல் ஏழெழுபது தரம் திரும்புகின்றன.

649. நீ செய்த ஒரு சிறிய நற்செய்கை மரத்தின் பயனைப்போல ஏராளமாயும், செய்த தீமையினும் ஆயிரம் மடங்காகவும் திரும்புகிறதைப் பார்க்கிறாய்.

650. நற்பயனைத் தரும் மரங்களின் தளிர் மலர் காய் முதலியவைகளுக்குப் பல இடையூறுகளுண்டாகிச் சிறிது பயனையே தருகின்றன. நச்சு மரங்கள் அப்படிப்பட்ட கேடு யாதொன்றுமில்லாமல் ஏராளமாகப் பழுத்து அவைகளால் பெருகுகின்றன.

651. நீ செய்த நன்மை தீமை ஏராளமான நன்மை தீமைகளையே தருவதால் மிகவும் எச்சரிக்கையாயிரு.

652. உன்னைப்பற்றி யாவரும் நல்லெண்ணம் உடையவர்களாய் இருப்பதற்கு, எல்லாரையும் நன்மையாக எண்ணு; தீமையாய் எண்ணுதிருப்பதற்கு நீயும் ஒருவரைப்பற்றியும் தீமையாக நினையாதே.

653. தீமை வேண்டுமானால் தீங்கு நினை; கட்டாயம் அது கிடைக்குமென்பது உறுதி. வேண்டாமென்றால் தீங்கு நினையாதே.

654. நீ ஒருவருக்கு நினைத்த தீங்கு உனக்குத் தீங்கு வருமென்று முன்னடியே அறிவிக்கிறது போலிருக்கிறது.

655. நீ நன்மையாகிய அல்லது நன்மையைத்தரும் சிவவிருட்சத்தை வளர்த்து அதன் பயனையடையக் காத்துக் கொண்டிருக்கிறவனாயிருக்கிறாய். நீ கவனிக்கவேண்டுவது ஒன்றுண்டு.

656. நன்மை என்னும் மரம் சிறு கன்றாய் இளந்துளிரோடு புறப்படுகையில் அதாவது நல்லெண்ணங்கள் துளிர்த்து வருகையில் அதை அரித்து விடும் பூச்சிகளைப்போன்ற கொடியர்கள் கண்ணிற்படாமல் மிகுந்த காவலில் இருக்கட்டும்.

657. அது செடியாகும்பொழுது கொடியவிலங்குகளாகிய தீய குணங்களும் தீய பழக்கங்களும் அதை அழித்து விடாமல் நல்லவர் கூட்டுறவாகிய வேலியடைத்து வை.

658. நற்குணங்களாகிய பூக்கள் மலர்ந்திருக்கையில், பூவிலுள்ள தேனை எடுக்கவரும் ஈக்களினால் நச்சு மரங்களின் மகரந்தம் பட்டு பூவிலுண்டாகும் காயின் விதைகள் வேறு தன்மையடைவது போல, இச்சையாகிய அதாவது 'இதனால் இன்னது கிடைக்கும் இன்னது அடைவோம்' என்ற நஞ்சு கலவாத படிக்கும், கலந்து வேறு விதமான பயனைக் கொடுக்காத படிக்கும் மிக்க கவனமாயிரு.

659. அவைகள் பிஞ்சைப் போல் சிறிதாயிருக்கிற காலத்திலும் பழத்தைப்போலப் பெரிதாகிற காலத்திலும், நம்பிக்கையில்லாமையாகிய காற்று அதன் மேல் வீசாமலும் ஈரமில்லாமையாகிய சினமும் தாபமும் உண்டாகி உதிர்ந்து போகாமலும் பார்.

660. பழமானவுடன் காட்டில் வாழும் தீய சீவன்களும் வானத்தில் பறக்கும் பறவைகளும் அடித்துக் கொண்டுபோய் உனக்குக் கிடையாமற் செய்வது போல, தெய்வத்திற்கே இவை யாவும் செய்யப்பட்டனவென்று, அதாவது தெய்வத்தின் பெருமைக்கே புகழுக்கே என்ற நினைப்பை விட்டு, வீடடைய வேண்டு மென்ற விருப்பத்தையாவது, பிறருன்னைப் புகழ வேண்டு மென்ற எண்ணத்தையாவது, நீடித்த புகழையாவது, பிறரது அன்பை அடைய வேண்டு மென்றாவது செய்யாதே. மேற்கண்ட தீய எண்ணங்களாகிய வானத்தின் பறவைகள் உன்னை வஞ்சித்து விடும்.

661. எவ்வளவு முயற்சி செய்தும் நீ ஏமாற்றப் பட்டுப் போவாய். உனக்குள் எந்த எண்ணம் இருந்ததோ அதையே உன் செய்கை காட்டி விடும். நீ வஞ்சக நெஞ்ச முள்ளவனாயிருப்பா யானால் உன் செய்கைகளும் உன்னை வஞ்சித்து விடும்.

662. சீவ விருட்சம் பயிராயிருக்கையில் அது நன்றாய் வளருமோ? அது பயன் கொடுக்கும் வரை நான் இருப்பேனோ? அது பூக்குமோ வெறு மரமாகிப் போமோ? பூத்தாலும் காய்க்குமோ? காய்கள் முதிரும் வரை காத்திருப்பேனோ? காற்றடித்து விழுந்து விடுமோ? காவல் வைக்க வேண்டுமோ? அது கனியாகுமோ? கனிந்த போது காண்பேனோ? என் கைக்கு அகப்படுமோ? காட்டைப் பாழாக்கும் சஞ்சல மனக் குரங்கு

கவர்ந்து கொள்ளுமோ? அஞ்ஞானமாகிய கருமந்திகளின் கைப்படுமோ? தலை கீழாக்கும் வீணெண்ணங்களாகிய வௌவால் இரவில் வந்து அடித்துக் கொண்டுபோய் விடுமோ? என்று ஐயப் படாதே.

663. உன் ஐயம் உன்னைக் கெடுத்து விடும். நீ சிவ கனியை உண்பதற் கென்றே பரமான்மா உன்னை இவ்வுலகத்தில் பிறப்பித்திருக்கிறார். அவர் உன்னோடு கூடவே இணை பிரியாமல் இருக்கிறார்.

664. செய்ய வேண்டியவைகள் யாவையும் செய்து கைதேர்ந்த ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்குக் கற்பித்து, அவர்கள் செய்கையைக் கவனித்து, தவறும்பொழுது திருத்தி, இடையூறுகளில் தானும் துணை நின்று இடர் நீக்கி, செய்து முடித்தவுடன் அவர்களோடு மனமகிழ்வதுபோல, பரமான்மா உன்னோடு கூடவே இருக்கிறார் என்பதை அறி.

665. ஐயம் என்னும் கயிறுகளினால் உன் கைகளையும் கால்களையும் கட்டிக் கொண்டு கேடடைய வேண்டாம்.

666. ஐயம் கலக்கத்தையே கொடுக்கும். ஐயப்படுகிறவன் மகிழ்வடைய மாட்டான்.

667. பரமான்மாவினிடத்திலிருந்து எல்லா நன்மைகளையும் பெற்றுக் கொள்ளும் கைகளாகிய நம்பிக்கை இல்லாதிருக்குமானால் எப்படி நன்மையடைவாய்?

668. இது வாய்க்குமோ அது வாய்க்குமோ? இதைச் செய்வேனோ? எது எனக்கேற்றதோ? நான் அடைவேனோ? அடையாமற் போவேனோ? என்று நீ கலங்கவேண்டாம்.

669. ஐயப்படுகிறவன் ஊக்கங் கொள்ளமாட்டான். உறக்கம் அவனைப் பிடிக்கும். நாள் செல்லச் செல்ல ஒன்றுக்கும் உதவாத பெருஞ் சோம்பேறியாவான்.

670. ஒருகோடி எண்ணங்கள் அவன் மனதில் போராடும். பேராசை கொள்வான், பிழை செய்யத் தொடங்குவான். ஒழியாத வறுமையும் துன்பத்தையுமே அடைவான்.

671. அவன்கையில் சிவ விருட்சத்தின் சிறந்த பழங்கள் அகப்படுமானாலும், இது எட்டிப் பழமோ? இது என் கையில் ஏன் வந்தது? இதைத் தின்பேனோ? தின்றால் கசக்குமோ இனிக்குமோ? காகரப்புண்டாகுமோ? விழுங்க முடியுமோ? தொண்டையில் விக்கிக் கொள்ளுமோ? என் வினை எப்படி இருக்கிறதோ? எந்தப் புண்ணியத்தால் இது என் கையில் கிடைத்தது? ஒன்றும் செய்யவில்லையே வெகு அழகாயிருக்கிறது! இது மாயப் பழமாயிருக்குமோ? என் கையிலிருந்து பறந்து போய் விடுமோ என்று நினைப்பான்.

672. அப்படியே தன் கையில் கிட்டிய பழத்தை ஊக்கமுடைய மற்றொருவனிடம் இது தாழம் பழம் என்று தானே கொடுப்பான். ஏமாந்து போவான். ஏமாந்ததை யறிந்து துன்பப்படுவான்.

673. இன்னொரு பழம் கிடைக்குமோ? கிடைக்காது. விடா முயற்சி செய்கிறவர்களே அதை அடைவது மிகவருத்தமென்றால், தீராத ஐயம் உள்ளவனும், துன்பம் நிறைந்தவனும், சோம்பேறியும் அடைவானோ? அடையமாட்டான். அழுதாலும் யார் கொடுப்பார்? அவனவன் செய்த நன்மை தீமைகளுக்கேற்ற பயனை அவனவனே அடைவான்.

674. நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ? சீவ கனியைத் தின்னமாட்டாயோ? நீ தீமையை விட்டு விட்டவனாய் தீங்கு செய்யாதவனாயிருந்தாலும், உனக்குத் தெரிந்த நன்மைகளைச் செய்யாவிட்டால் பாவம் உன் வாசற் படியிலே படுத்திருக்கும். நீ எப்படித் தப்புவித்துக் கொள்வாய்?

675. இன்பந்தரும் சீவ விருட்சத்தின் பழம் ஐயம் நிறைந்த உனக்கு எப்படிக் கிடைக்கும்? ஆகையால் ஒவ்வொன்றையும் நன்றாய்க் கவனி.

676. எல்லா நன்மைகளையும் தரும் சீவ விருட்சத்தின் அடியிலிருக்கிறாய். நீயே சீவ விருட்சமாகவும் இருக்கிறாய். அதனால் வரும் நன்மைகளை அடைய வேண்டியவனாகவும் இருக்கிறாய். இல்லறமாகிய தூலத்திலும், துறவறமாகிய சூக்குமத்திலும், நல்லறமாகிய காரணத்திலும் நீ நன்மையாகவே இரு. இதுவே பரமான்மாவின் விருப்பம்.

677. இதற்காகவே இன்னுஞ் சில கால மிருக்கட்டும். இந்த மரத்தை வெட்டி விட வேண்டாமென்று பரிந்து வேண்டிக்கொண்டு நிற்கிறார்.

678. கனி கொடுக்காத மரம் வெட்டப்பட்டு நெருப்பிலே சுட்டெரிக்கப்பட வேண்டுமென்பது பிதாவின் சித்தம்.

679. கனிகொடுக்கும் மரங்களுக்கு வேலியடைத்து நன்றாய் நீர்பாய்ச்சிக் களையெடுத்து உரங் கொடுத்து வளர்க்கப் பிதா கட்டளை யிட்டிருக்கிறார்.

680. பரமான்மா கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துக் கொண்டிருக்கிறார். தம்முடைய தோட்டமாகிய உலகத்தில் இனிய பழத்தைக் கொடுக்கும்படி உன்னை வைத்து வளர்க்கிறார். இனிமையான பழத்தை விட்டுக் கசப்புள்ள பழமாகிய தீமையைத் தரவேண்டாம்.

681. அழிவற்றுத் தேவனோடு சஞ்சரித்து அவரோடு பேசி, அவரோடு மகிழ உனக்கு விருப்பமானால் சீவ விருட்சத்தின் கனிகளாகிய நன்மையையே அருந்து.

682. உன் உடம்பின் விருப்பங்கள் தீமை செய்ய உன்னைக் கட்டாயப் படுத்தும். நீ தீமை செய்தால் எல்லா நன்மையையும் இழந்து போவாய்.

683. விருப்பமாகிய துருக்கொண்டு தீவினையையே பிறப்பிக்கும். தீவினை இறப்பையே உண்டாக்கும். அழிந்து போக விரும்புகிறவன் தீமையைச் செய்வான்.

684. நீங்கள் அழிந்து போகாமலும் தண்டனை யடையாமலும் இருக்கும் படி, "பசியாயிருந்தேன் எனக்கு உணவு கொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள். அந்நியனாயிருந்தேன் என்னைச்சேர்த்துக் கொண்டீர்கள். உடையில்லா திருந்தேன் எனக்கு உடை தந்தீர்கள். வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள். சத்தியத்தி னிமித்தம் நீங்கள் எந்த நற் கருமங்கள் செய்தீர்களோ அதை எனக்குச் செய்தீர்கள். வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே. உலகத்தோற்ற முதற் கொண்டு என் பிதாவினால் உங்களுக்கென்று ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய இராச்சியத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்று பரமான்மா உங்களைப் பார்த்துச் சொல்லும்படியாக நடந்து கொள்ளுங்கள்.

---

## 22. நமது உடல் தெய்வம் வசிக்கும் ஒரு மலையாயிருக்கிறது. சீயோன் மலை.

685. நமது உடம்பு நமக்கு உரியதென்றும் பரமான்மாவுக்கு உரியதென்றும் கடவுளின் ஆலயமாயிருக்கிறதென்றும், பூந் தோட்டமாயிருக்கிறதென்றும் இதுவரையும் பார்த்தோம்.

686. இவைகளைத் தவிர இந்த உடம்பு கர்த்தருடைய பரிசுத்த மலையாயிருக்கிறது; கர்த்தர் அதில் இருக்கிறார்; அவரே அதைத் தெரிந்து கொண்டார்; சீயோன் மலை அல்லது தன்னையறிந்த மலையில் வீற்றிருக்கிறார்; சீயோன் மகளை அல்லது தன்னை அறிந்த சீவான்மாவைத் தனக்கு மனைவி ஆக்கிக்கொள்ளுகிறார் என்று நீங்கள் அறியவேண்டும்.

687. மலையினடிவாரம் உலகத்தாரையும் அதன் செய்கைகளையும், மலையின் நடு இடம் நடு உலகத்தையும் அதிலுள்ள அடியார்களையும் பரமான்மாவின் வழிபட்ட சீவான்மாவையும், மலையின் உச்சி பிரமத்தின் நிலையையும் அந்நிலையை அடைந்த சீவான்மாக்களையும் குறிக்கிறது.

688. உடம்பின் விருப்பப்படி நடக்கும் சீவான்மா கீழ் உலகத்தின் அருவருப்பான தகாத செய்கையையும் தனக்கு விருப்பமாகக்கொண்டு மலையினடிவாரத்திலிருக்கையில் அதாவது உடம்பின் அறக்கடைசியான தத்துவங்களின் கூறுடையவனாய் அன்னமயகோசமாகிய இந்த உடம்பின்

விருப்பத்திற்கு முற்றிலும் இணங்கி அதையே தெய்வமாக நினைத்து அறியாமையின் வழியில் செல்லும்பொழுது அவன் மலையாகவே இருக்கிறான்.

689. இப்படி அறியாமையிற் சென்ற சீவான்மா உடலின் விருப்பங்களை வெறுத்து அதற்குள் அறிவாய் விளங்கித் தன்னை உணர்த்தி அப்போதைக் கப்போது நீதியின் வழிகளைக் காட்டித் தனக்குள் ஒளியாகத் தோன்றும் பரமான்மாவை அறிகிறான்.

690. தலைவனாகிய பரமான்மாவை அறிந்து அவரோடு இருக்கவும் அவருக்கே அடங்கி நடக்கவும் நினைத்து உடம்பையும் உடம்பின் தத்துவச் செயல்களையும் திட்டமாய் அறிந்து இவைகளில் பட்டும் படாமலுமிருந்த பரமான்மாவை விரும்பி நிற்கிறான்.

691. விரும்பிநின்ற சீவான்மாவை இவ்வுடம்பாகிய மலையின் மகளாக வும் தன்னை அறிந்த மலைக்கு உடையவள் என்று பொருள்கொள்ளும் சீயோன் குமாரத்தியாகவும் பர்வத புத்திரி என்று பொருள்கொள்ளும் பார்வதியாகவும் மலையின் மகள் என்று அர்த்தங்கொள்ளும் மலைக்குறத்தி யாகவும் சொல்லப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறியவேண்டும்.

692. இதே சமயத்தில் பரமான்மாவை சீயோன் மலையாகிய இந்த உடம்பிற்கு உடையவரென்று, பொருள் கொள்ளும்படி கைலாசநாத னென்றும், மலைநாதனென்றும், மலையாண்டவனென்றும், மலைப்பெருமான் என்றும், மலை ஈசனென்றும், கிரிவாசனென்றும், பர்வதவாசனென்றும் பர்வத ராஜனென்றும், குன்றுடையானென்றும், சீயோனின் ஆண்டவ னென்றும், சீயோனின் மணவாளனென்றும், பரமான்மா இந்த மலையி லேயே இருக்கிறாரென்றும், இந்த பர்வத புத்திரியை நாயகியாக விரும்பினார் என்றும், இந்தப் பர்வதத்தில் அவளைத் தேடிக் கண்டுபிடிக் கிறார்என்றும், சீவான்மாவாகிய பர்வத புத்திரி பரமான்மாவைத் தேடிக் கண்டடைகிறாள், என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

693. சீவான்மாவைத் தனக்கு மனைவியாகக் கொண்ட பரமான்மாவும், அவரை அழியாத மணவாளனாகக்கொண்ட சீவான்மாவுமாகிய இருவரும் சேர்ந்து இந்த மலையின் அழகும் உயர்ச்சியுமான இடங்களில் சஞ்சரித்து, மலை, ஆறுகள், நந்தவனங்கள், குகைகள் முதலிய இடங்களில் சில சில காலம் தங்கி அவைகளைக் கடவுளின் இருப்பிடமாகவே ஆக்கிக்கொள்ள வேண்டுமென்று அநேக சீர்திருத்தமும் அழகும் செய்கிறார்கள்.

694. பர்வத புத்திரியாகிய சீயோன் குமாரியை அல்லது தன்னை அறிந்த சீவான்மாவை நாயகியாகக் கொண்ட பரமான்மா அழிவற்ற

மகிழ்ச்சி நிறைந்த மங்கள வீடாகிய மேலுலகத்தில் தம் பிதாவின் சந்நிதியில் என்றும் அழிவில்லாதிருக்கும்படி செய்கிறார்.

695. இந்த ஞான மணவாளனோடு குடியிருக்கும் பர்வத புத்திரி இந்த மலையிலேயே பரமான்மாவோடு ஒப்பற்ற மகிழ்ச்சியுடன் தெய்வ சந்நிதியில் அரசியாக விளங்கிக்கொண்டிருக்கிறாள்.

696. இவளது தோழிமார்கள் இவளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து இவளுடைய விருப்பத்துக்குக் காத்திருக்கிறார்கள்.

697. வேதமாகிய அறிக்கைக்காரன் "பர்வத புத்திரியே! அன்னமய கோசமாகிய உன் தகப்பன் வீட்டையும் மாயையாகிய உன் தாயின் வீட்டையும் ஆசை முதலிய தீய குணங்களாகிய உன் பழைய தோழரையும் மறந்துவிடு. நீ அவைகளை நினைக்கவேண்டாம். அப்பொழுது பரமான்மா உன் அழகில் பிரியப்படுவார்;" என்று பலமுறையும் சொல்லிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

698. இதோடு கூட மேற்காட்டிய மலையின் அழகும் அதன் அமைப்பும் அடிவாரத்தில் நடக்கும் சில காரியங்களும் நடுப்பாகத்தின் விவரங்களும் உச்சியின் பெருமையும் ஆகிய இவைகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

## 23. சீயோன் மலையின் அழகு.

699. மலையோ தனித்தமலை. பல குன்றுகளையும், தெளிந்த நீரோடும் ஓடைகளையும், நீரைத் தரும் வற்றாத அருவிகளையும், சீவ ஊற்றுக்களாகிய சுனைகளையும், தண்ணீர் நிறைந்த ஊருணிகளையும் உடையது.

700. இரவும் பகலும் ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரின் ஓசையும், ஆற்றோரத்திலுள்ள மரங்களில் வாழும் பறவைகளின் ஓசையும் கேட்க மிக இன்பமாயிருக்கும்.

701. சீவ நதியின் இருகரைகளிலும் சுனைகளின் ஓரங்களிலும் நீர் ஓடும் சிற்றாறுகளின் பக்கங்களிலும் வானத்தை அளாவி நிற்கும் மரங்களும், மலர்களையும் பழங்களையும் தரும் கொடிகளும் நிறைந்த சோலைகள் செழித்தோங்கி வளரும்.

702. மனமகிழ்ந்து பாடும் பறவைகளின் இனிய ஓசைகளும், தென்றல் அடித்துக்கொண்டுவரும் பூக்களின் மணமும், அழகான பள்ளத்தாக்குகளின் தோற்றமும் மனதைத் தன்வசமாக்கும்.

703. புலி, காடி, சிங்கம், யானை, நரி, கழுதை, காட்டுப்பன்றி முதலிய கொடிய விலங்குகள் அங்கங்கே கூட்டம் கூட்டமாகவும் கண்மறைவாகவும் தங்கியிருக்கும்.

704. மனமகிழ்ச்சியாய்ப் பொழுது போக்குவதற்குக் குளிர்ந்த நிழலைத் தரும் சோலைகளும், பூக்கள் நிறைந்த பெரு வெளிகளுமுண்டு.

705. தன்னையே மறக்கும்படி பசி தாகம் முதலியவைகளை நீக்கும் அருமையான பழங்கள் தேடுவாரற்றுத் தானகப் பழுத்து உதிர்ந்திருக்கும். தேன் கூடுகள் தேனைப் பொழிந்துகொண்டிருக்கும்.

706. தனித்துத் தவஞ்செய்யவும் செபஞ்செய்யவும் தெய்வத்தோடு ஒன்ருகக் கூடி மகிழவும் கூடிய தூய கற்பாறைகளும் அங்கங்கே பல உண்டு.

707. தான் இவ்வளவு தூரம் கடந்து வந்தது என்றும் தனக்குக் கீழாக இன்னின்ன இடங்கள் இருக்கின்றனவென்றும் மலையின் இயற்கை அமைப்பின் அழகைத் திட்டமாய்க் காட்டக்கூடிய உச்சிகளும் பலவுண்டு.

708. இந்த மலையில் தத்தமக்கு ஏற்ற இடங்களில் தங்கி காட்டிலுள்ள தேனையும் பழங்களையும் கிழங்குகளையும் உண்டு தவம் செய்துகொண்டு உலகத்தாருக்கு நீதிகளைப் போதித்துக்கொண்டிருக்கும் பெரியோர் வாழும் குகைகளும் பல உண்டு. இந்த மலையில் இயற்கை ஒளியமைந்த நவமணிகளும் ஏராளம்.

709. தன்னை அடுத்தவருக்கு அழிவற்ற சிவனையும் ஆறுதலையும் தரத் தக்கதும் ஆசை, பசி, துயர், தாகம், நரை, திரை, மூப்புச் சாக்காடு என்னும் துன்பங்களை வேரோடு நீக்கக் கூடியதுமான சஞ்சீவி மூலிகைகளும் நிறைந்திருக்கும்.

710. மலையின் உச்சியைச் சுற்றிச் சுற்றிப் போகுதற்கு ஏற்ற ஒரு பாதையும் அமைக்கப்பட்டிருக்கிறது. சூரியனும் சந்திரனும் வலம் இடமாக ஒளி கொடுத்துக்கொண்டேயிருக்கின்றன.

711. இதன் உச்சியில் தெய்வமே ஒளி வடிவமாக விளங்கிக் கொண்டிருக்கிருரென்றும், தெய்வமே இதைத் தமக்கு இருப்பிடமாக்கிக்கொண்டிருக்கிருரென்றும், இது கர்த்தருடைய பர்வதமென்றுஞ் சொல்லப்படுமானல் இதன் மேன்மையை வேறு சொல்லவும் வேண்டுமா?

712. எல்லா மொழிகளையும் பேசும் எல்லா நாட்டிலுள்ளவரும் தங்கள் தங்கள் மகிமையை இந்த மலையில் கொண்டுவந்து வைக்கிறதென்ருல் இதனுடைய மேன்மையை அளவிடவும் முடியுமோ?

713. பெரும் புயலுக்கும் பகைவரின் அழிப்புக்கும் பெருவாரிக்கொள்ளை நோய்க்கும் அஞ்சி வந்தோர்க்கு அடைக்கலமாகும் அரண்களும் அங்கங்கே உண்டு.

714. எல்லாச் சீவரும் விரும்பக்கூடிய மலையாகவும், தெய்வமும் விரும்பும்படி தெய்வச் சாயலாகவே விளங்கிக் கொண்டிருக்கும் மலையாகவுமிருக்கின்றது.

## 24. மலையின் அடிவாரம்.

715. இந்த மலையின் அடிவாரத்தில் நடக்கும் ஒரு பெரும் இரைச்சலை நீங்கள் கவனிக்கலாம். அது போரின் இரைச்சலல்ல. வெள்ளத்தின் இரைச்சலுமல்ல. சீவனுனவன் தன் தீய தோழர்களாகிய பதின்மூன்று கோத்திரத்தார் அனைவரையும் தன்னேடு சேர்த்துக்கொண்டு திருவிழாக் கொண்டாடும் ஆர்ப்பரிப்பின் முழக்கமாயிருக்கிறது.

716. பரமான்மாவை வழிபடும் சீவான்மா பரமான்மா இடத்தில் உலகத்தில் நானும் என்னைச்சேர்ந்தவர்களும் நடக்கவேண்டிய நீதியின் வழிகளை உணர்த்த வேண்டுமென்று கேட்கப்போகிறுன்.

717. அக்காலத்தில் நீங்கள் பிராணமயகோசம் அன்னமயகோசம் அவற்றின் பொறி புலன்களையும் பார்த்து, இந்த மலையைத் தொடவேண்டாம், தீமையினுல் தீட்டுப்படுத்தவேண்டாம். இது கர்த்தருடைய பர்வதம்; இதுமிகவும் பரிசுத்தமானது. நீங்கள் நோன்பிருந்து கடவுளைச் சிந்தித்துக்கொண்டிருங்கள். நீங்கள் நடக்கவேண்டிய நீதியையும் ஒழுங்குகளையும் மேலான வழிகளையும் உங்களுக்காக கேட்டுக்கொண்டு வருகிறேன் என்று கட்டளையிட்டு மலையில் சென்று சற்று தாமதிக்கிறுன்.

718. இதே வேளையில் ஆசைமுதலிய கோத்திரத்தார் பொறி புலன்களை வசப்படுத்திக்கொண்டு பிராணமயகோசத்தையும் அன்னமயகோசத்தையும் தலைவர்களாக்கிக்கொண்டு ஒன்று சேர்ந்து எங்களை நடத்திக்கொண்டு வந்த சீவான்மா மலைக்குப் போனுன் அவன் திரும்பி வரவில்லை. ஆகையால் நாங்கள் வணங்குவதற்கேற்ற ஒரு கடவுளை யுண்டாக்கவேண்டுமென்று பசுவின் குணம் அமைந்த இந்த உடம்பையே குறிக்கும்படி பசுவைப்போல ஒரு உருவம் அமைத்தார்கள்.

719. தாங்கள் செய்த வடிவத்தை உயர்ந்த மேடையில் அமைத்துக் கொண்டு தங்கள் விருப்பங்களின்படி பலிகளையும் படைப்புகளையும் தங்கள் நாவிற்குச் சுவையாகச் சமைத்துப் படைத்து மேளதாளம் முழக்கி ஆசை முதலிய தீயசெயல்களையே சீவியமாகக்கொண்ட தேவர்களின் சரித்திரமென்று நாடகங்கள் போட்டு, உண்டு, உடுத்திக், குடித்து, வெறித்துக் கூத்தாடிக் கூச்சலிடுகிறுர்கள்.

## 25. மலை அடிவாரத்தில் வேள்வி.

720. இதுவும் அன்றி அடிவாரத்தில் நடக்கும் வேறொரு திருவிழாவையும் நீங்கள் பார்க்கலாம். அன்னமயகோசமாகிய அரசன் தன் மனையாளாகிய மாயையோடும் தன் மரபினராகிய ஆசைமுதலிய வற்றோடும் சேர்ந்துகொண்டு மிகுந்தபொருளைச் செலவு செய்து ஒரு வேள்வி நடத்துகிறான்.

721. வேள்விக்கு வேண்டிய மிகுந்த பொருளையும் அறுசுவை உண்டிகளையும் வேண்டும் இடத்தையும் ஏற்படுத்தி தன்னுடைய நாட்டிலுள்ள மன்னவர்கள், அமைச்சர்கள், மறையவர்கள், பெரியோர்கள் எல்லோரும் வரவேண்டுமென்று வேள்வி விருந்தின் நாள் குறித்து எல்லோருக்கும் ஓலை அனுப்புகிறான்.

722. நகரமுழுவதும் தூய்மையாக்கி, வழிகளைச் செவ்வைப்படுத்தி மணல் தெளித்துத் தோரணங்கட்டி விளக்குகளினால் அணிபெறச் செய்து மிகுந்த அழகாக விளங்குகிறது.

723. வேள்வி விருந்திற்காகக் கொடுக்கப்படும் பொருள்களும் கொடைச் சீட்டுகளும் தயாராகிவிட்டன. வேள்விக்கு முன்னால் செய்யப்படும் நோன்புகளும் மந்திரங்களும் தோத்திரங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. வேள்விக்கு அழைக்கப்பட்டவர்கள் வேள்விச்சாலையை நோக்கிக் கூட்டம் கூட்டமாக வந்துகொண்டிருக்கிறார்கள்.

724. இந்த வேளையில் வேள்விக்குத் தலைமையாயிருக்கும் அன்னகாம மன்னவன் தன் ஒரு மகளாகிய பர்வத புத்திரியைப் பரமான்மாவுக்கு மணஞ்செய்து கொடுத்திருந்தும் தன் மகளாகிய சீவான்மாவையும் தன் மருமகனாகிய பரமான்மாவையும் தான் செய்யும் வேள்விக்கு அழைக்கவில்லை.

725. ஏனென்றால் பரமான்மா அன்னமயகோசம் பிராணமயகோசங்கள் சேர்ந்ததும் சீவான்மா அருமையாக வளர்த்ததுமாகிய பசுவைக் கொன்று அதன் ஐந்து மலங்களையும் நீக்கி ஐம்புலன்களையும் அவைகளின் நிணங்களையும் எடுத்து ஞானத்தீயிலிட்டு எரித்து ஒரு வேள்வி செய்தார்.

726. இந்த வேள்வியின் மேன்மையான கூறுகளை விண்ணவர்களுக்குக் கொடுக்கையில் சீவான்மாவின் தந்தையின் தன்மை இந்த வேள்வியில் பலியிடப்படும் பொருளாயிருப்பதனால் சீவான்மாவின் தந்தையையும் தாயையும் அழைக்கவில்லை. அழைக்காமல் வந்த அவர்களைப் பரமான்மா ஒரு பொருளாக நினைக்கவுமில்லை.

727. இந்தக் காரணங்களைக் கொண்டு பரமான்மாவுக்குத் தெரிவிக்காமலும் தன் மகளாகிய சிவான்மாவை அழைக்காமலும் இந்த வேள்வியைச் செய்து முடிக்க வேண்டுமென்றும் இதனால் பரமான்மாவை இழிவு படுத்தவேண்டுமென்றும் நினைப்புடையவனாய் இறுமாந்து வேள்விச் சாலையில் அன்னகாம மன்னவன் வீற்றிருக்கிறான்.

728. அப்பொழுது தன் அருமைத் தந்தை செய்யும் வேள்விக்கும் பெரிய கொண்டாட்டத்திற்கும் தான் போக வேண்டுமென்று பர்வத புத்திரி விருப்பம் கொள்ளுகிறாள்.

729. பரமான்மாவோ நீ போவது சரியல்ல. அவன் உன்னை மேன்மையாய் நடத்தமாட்டான். மலைக்கு நானே தலைவனாக இருக்கையில் எனக்கே தெரிவிக்கவில்லை. இங்கேயே இரு. போவாயானால் அவனால் இழிவடைவாய்.

730. அவன் கொடியவன், அவன் சனங்கள் யாவரும் மூர்க்கர்கள். உன் தாயோ அறிவற்றவள். அறியாமையே அவள் உரு. நீ மகளென்றும் நான் மருமகனென்றும் அவளுக்கு அறிவு கிடையாது. உன் தோழியர் யாவரும் உன்னை வெறுப்பார்கள்.

731. அவன் தன் தீய செயல்களை உடலாகவும் புலன் பொறிகளையே ஐந்து மலமாகவும் இருவினைகளையே கொம்பாகவும் விருப்பமே வாலாகவும் உடைய பசுவாகிய தன்னைக் கொன்று ஞானத்தீயில் பக்குவஞ்செய்து உன்னைச் சான்றாக வைத்துக்கொண்டு எனக்கும் என் தந்தை முதலாகிய விண்ணவர்களுக்கும் கொடுப்பதை விட்டுத் தன்னைப்போல் பேரில் மட்டும் ஒற்றுமையுடைய ஒரு பசுவைக் கொன்று அறுசுவைகளோடு சமைத்து தன் புலன்களுக்கேற்றபடி கொடுக்கப்போகிறான்.

732. அதில் உனக்குப் பங்கு கொடுக்கமாட்டான். நீயும் வாங்குவது சரியல்ல. அந்த வேள்வியை நான் விரும்பவில்லை. நீயும் போகவேண்டாம் என்று மிகுந்த பரிவாய்த் தடுக்கிறார்.

733. இவ்வளவு சொல்லியும், பரமபதியின் அருமையைத் தெரிந்திருந்தும், தன் கணவனையும் அவன் வீட்டையும் அதிலுள்ள செல்வம் முதலியவற்றையும் துரும்பாகவும் தன் தாயின் வீட்டைப் பெரிதாகவும் நினைக்கும் மூடப்பெண்களைப் போலக், கண்களைக் கசக்கிக்கொண்டு தானும் தன் பெண்தன்மையைக் கொஞ்சம் காட்டுகிறாள்.

734. இவள் துன்பமடைவதைக் கண்ட பரமான்மா இவளுடைய விருப்பப்படி விட்டு எச்சரிக்கிறார். தன் தந்தை வீட்டிற்கு மிக விரைவாகச் செல்லுகிறாள்.

735. இவளைக் கண்டஉடனே இவளுடைய செருக்கு அடங்கிவிட்டதென்று நினைத்த சீவான்மாவின் தந்தை, முகத்தைத் திருப்பிக்கொண்டான். தந்தையின் முகம் இவள் ஏன் வந்தாளென்று கடுகடுத்திருந்தது.

736. அதற்கு ஏற்றவாறு இவளுடைய தாயும் இவளுக்கு உற்ற தோழிகளும் சுற்றத்தாரும் ஒன்றும் பேசவில்லை. பர்வத புத்திரியோ தன் தந்தையின் விருந்தினர் யாவர் முன்னிலையிலும் மிகுந்த தாழ்வை அடைந்தாள்.

737. பரமபதி அறிவுறுத்தியவைகளையெல்லாம் நினைவு கூர்ந்தாள். தன் தந்தையின் கொடுமையையும் தாயின் அறியாமையையும் தோழிகளின் இகழ்ந்துரையாடலையும் பொறுக்க மாட்டாதவளாய்க் கண்ணீர் விட்டுக் கதறினாள்.

738. தன் கணவனாகிய பரமான்மாவை மதிக்காத தன் தாய் தந்தையரையும் இனத்தாரையும் அவர்களின் தீய செயல்களையும் நன்றி கேட்டையும் அவர்கள் தன்னை மறந்து போனதையும் நினைத்துப் புலம்பினாள்.

739. தன் கணவனாகிய பரமான்மாவின் இரக்கத்தையும் பெருமையையும் ஒவ்வொன்றாய் எடுத்துச் சொன்னாள்.

740. 'அவரால் நீ அடைந்த நன்மையையும் என் பொருட்டு அவர் உனக்குச்செய்த உதவியையும் நீ மறந்துவிட்டாய்' என்று தன் தந்தையை இகழ்ந்து 'உன்னிடத்தில் தோன்றிய இந்த உடலோடு பரமான்மாவினிடம் மீட்டும் போகவும், நாணமில்லாமல் நானென்று அவர் முன் நிற்கவும் மாட்டேன். நீ தந்த உடம்பை உன் முன்னே நெருப்பிலிடுகிறேன்' என்று சூளுரை சொன்னாள். மனவேதனையினால் பற்றிக்கொண்ட தீயானது அவள் சூக்கும உடலை ஒரு நொடிப்பொழுதில் மாற்ற, ஒளிமயமாகப் புடமிடப்பட்ட தங்கம்போலத், திரும்பவும் பரமான்மாவை அடைந்தாள்.

---

## 26. சீயோன் குமாரத்தி.

741. பர்வதபுத்திரி இப்படித் தன் தந்தையையும் தாயையும் இனத்தாரையும் முற்றிலும் வெறுப்பதற்குப் பல காரணங்களிருந்தன. எப்படி என்றால் இந்த மலையின் மூன்றிலொரு கூறாகிய அடிப்பாகம் கீழ் உலகமென்று வழங்கிவந்தது.

742. இந்த மலையின் அடிவாரத்தை முப்பத்துநான்குகூறாக்கி முப்பத்துநான்கு தலைவர்கள் ஆண்டு வந்தனர். ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு கோடியாக முப்பத்துநான்குகோடிக் குடும்பங்களும் அவர்களைச் சேர்ந்தவருமாகப் பலர் இருந்தார்கள்.

743. இவள் தந்தையாகிய அன்னகாம அரசனே இவளுக்குப் பதிலாக ஆண்டுகொண்டு வந்தான். இவள் தாயாகிய அஞ்ஞானவதி பர்வத புத்திரியை மிகவும் செல்லமாய் வளர்த்து வந்தாள்.

744. இவர்களுக்கு ஐந்து அமைச்சர்களும் பத்துபிரதானிகளும் வீட்டுக் காரியங்களையும் அரசகாரியத்தையும் கவனித்து வந்தார்கள். மலையின் அடிவாரத்தில் சற்று உயர்ச்சியும் மூன்றிலொரு கூறு தாழ்வும் மலையைச் சுற்றிலும் மிக அழகும் சன நெருக்கமுமுள்ள மாயாபுரியே இவர்களது. தலை நகரம்.

745. மலையைச் சுற்றிலும் இந்நகரத்தின் தோற்றம் மிக்க அழகாக இருக்கும். நகரத்திலுள்ள கழிவையும் அழுக்கையும் காலை மாலைகளில் ஒழுங்காக அப்புறப்படுத்த தனியான கூட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

746. இதுவன்றி சனங்கள் உல்லாசமாய்ப் பொழுது போக்குவதற்கும் கச்சேரிகள் செய்வதற்கும் பெரிய சாலைகளும் மண்டபங்களும் பூஞ்சோலை களும் அமைக்கப்பட்டிருந்தன.

747. இப்படிப்பட்ட நகரத்தை தனக்கு உரிமையாக உடைய அன்னகாம மன்னவனும் அவன் மனையாள் அஞ்ஞானவதியும் பிள்ளைப்பேறு இல்லா மையால் பர்வத புத்திரியையே தங்களுக்கு அரசுரிமைச் செல்வியாகப் பெற்றிருந்தார்கள்.

748. அவளுக்கு அறிவு வந்தவுடன் அந்த நகரத்திற்கும் அதிலுள்ள வர்களுக்கும் அரசியாகப் பட்டம் சூட்டும் உரிமை யுடையவளாய் இருந்ததனால் அவளைத் தாயும் தந்தையும் நகரத்தார் யாவரும் மிகுந்த செல்லமாய்த் தங்கள் உயிரைப்போல் அருமை பாராட்டி வளர்த்து வந்தார் கள்.

749. தங்கள் மகளையின்றித் தாயும் தந்தையும் ஒரு பொழுதும் தாமாக உண்பதில்லை. வீட்டிலானாலும் வெளியிலானாலும் தங்கள் மகளில் லாமல் போகார்கள்.

750. இவளைப் போற்றி வளர்க்கப் பல செவிலிமாரும் இவளோடு விளையாடி மகிழ்ந்திருக்கப் பல தோழிகளும் அமர்த்தப் பட்டார்கள்.

751. நிறைமதிபோன்ற நிறமும், முகமும், மாதுளம் விதைகளை ஒத்த கன்னங்களும், கருநெய்தல் மலர் போன்ற கண்களும், குமிழ் மலர் போன்ற மூக்கும், செவ்வாம்பல் போன்ற வாயும், வீலிப் பூக்களை ஒத்த உதடுகளும், செங்காந்தள் மலர் போன்ற கைகளும், தாமரை மலர் போன்ற கால்களும் உடையவளாய் வார்த்தெடுத்த பொற் பதுமைபோல் விளங்கி நின்றாள்.

752. இருளைப் பார்க்கிலும் கரிய நிறமும் பார்ப்பவர்க்கு அச்சம் தோன்றும் வளைந்த பற்களும் படர்கொடிகளின் நரம்புபோல் சுருண்ட தலை மயிரும் உடைய அஞ்ஞானவதியின் மடியிலும் கைகளிலும் பர்வத புத்திரியைப் பார்க்கும் பொழுது அவள் இனத்தார் யாவரும் மிகுந்த வியப்படைவார்கள்.

753. இருளையே விரும்பி நடமாடும் இவளுடைய இனத்தாரில் பலருடைய கண்கள் இவளைப் பார்த்து மங்கலடைந்து போயின. இவளுடைய குறைவற்ற அழகை விண்ணில் தோன்றி மறையும் மின்னலென்றே சொல்லலாம்.

754. இவள் தங்கள் மரபிற்கு வேறுபட்டு மிகுந்த அழகாய்த் தோன்றினபடியால் தாங்கள் மிகவும் செல்வவான்களென்று மிகச் செருக்குற்றிருந்தார்கள். எல்லாரும் எடுத்துச் சீராட்டுவதும் தங்கள் தலைவியென்று பாராட்டுவதுமாய் இருந்தார்கள்.

755. இவள் முகச் சாயையையும் அழகையும் கூர்ந்தறிந்த மாயாபுரியின் சில பெரியோர்கள் 'இவள் இம்மரபிற்குப் பெரிய பழியையும், கேட்டையும் உண்டாக்குவதன்றி, இந்த ஊரையும் தன் உறவையும் மறந்துவிடுவாள்; தன் தாய் தந்தையருக்கு இவள் ஒரு நச்சுப் பூண்டாகத் தோன்றியிருக்கிறாள்' என்று சொல்லி வருவார்கள்.

756. இவ்வுண்மை தெரிந்த தாய்தந்தையரும் அமைச்சரும் பிரதானிகளும் மற்றும் இவள் அரசாட்சிக்குட்பட்ட அரசர்களும் சனங்கள் யாவரும் இவளை மிகப் போற்றித் தன் இனத்தார் யாவரிடத்திலும் விருப்பமாயிருக்கும்படி வேண்டிய அறிவு புகட்டி பலவகையான வேடிக்கை காட்டி அழகான உடையும் நாவிற்கினிய தின்பண்டங்களும் கொடுத்து வளர்த்து வந்தார்கள்.

757. குழந்தையில்லாமல் தாய் தந்தையர் வெளியிற் போவதில்லை. போகும்பொழுதும் முன்னும் பின்னும் சூழ்ந்து வரும் குதிரை வீரரும் யானை வீரரும் காலாட்களும் எடுபிடி ஆட்களும் வாச்சியக்காரரும் கட்டியக்காரரும் எண்ணிறந்தவர் புறப்படுவார்கள்.

758. புட்ப விமானம் போன்ற சிறந்த வண்டியில் ஏறிக்கொண்டு மாயாபுரிக்கும் மலை அடிவாரத்திற்கும் நடுவில் இருக்கும் ஊர்கள், இடங்கள், கடைகள், குடியிருப்புகள், சந்தைகள் முதலியவைகளைப் பார்க்கக் கூடிய விதமாகப் பெருவழியில் சுற்றி வருகையில், கூட இருக்கும் மந்திரி அங்கங்கே தோன்றும் தோற்றங்களைச் சொல்லிக்கொண்டு வருவான்.

759. அரசன் தான் விரும்பிய இடங்களில் வண்டியை நிறுத்தி நேரில் போய்ப் பார்த்து வருவான். இப்படிப் போகும்பொழுது அவைகளின் ஒழுங்கையும் அழகையும் கண்டு பர்வத புத்திரி சிலகாலம் மிகவும் விருப்ப முற்றிருந்தாள்.

760. சற்று அறிவு வந்தபின் தன் நாட்டிலுள்ள யாவரையும் விசாரிக்க வேண்டித் தன் மந்திரியோடு தனித்துப் போவாள்.

---

## 27. மாயாபுரியின் சந்தை.

761. அணையினின்று விழும் வெள்ளத்தின் இரைச்சலைப் போலவும் கடல் அலையின் பேரொலிபோலவும் இராப் பகலாய்ச் சந்தடியுள்ள ஒரு சந்தை மாயாபுரியிலுண்டு.

762. தங்கள் அரசி சந்தைக்கு வருகிறாள் என்று மாயாபுரியார் கேள்விப்பட்டு அவள் விரும்பும்படி கண்ணுக் கெட்டும் வரையிலும் படிப் படியான மேடைகளிலும் தட்டுகளிலும் பலவகைப்பட்ட தின்பண்டங்களை அடுக்கி வைத்திருப்பார்கள்.

763. அவ்வீதி கடந்தால் பழவகைகள் சிவப்பாகவும் மஞ்சளாகவும் நீட்டமாகவும் உருண்டையாகவும் தோலுள்ளதாகவும் முள்ளுள்ளதாகவும் கொத்தாகவும், குலையாகவும் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும்.

764. அடுத்தவீதியில் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் வேண்டிய உடைகள் யாவும், பட்டினாலும் பருத்தியினாலும் பலவகை நார்களினாலும் மெதுவான மயிருள்ள தோல்களினாலும் கம்பளியினாலும் செய்து சரிகையினாலும் நவமணிகளினாலும் அலங்கரித்து அடுக்கியும் தொங்கவும் வைத்திருப்பதைக் காணலாம்.

765. இன்னொரு வீதியில் பலவகைப்பட்ட மலர்களும், மரு; மருக் கொழுந்து கதிர்ப்பச்சைகளும், வெட்டிவேர், சந்தனவில்லை, ஊதுபத்தி, அத்தர் வாசனைப்பொடி முதலிய வாசனைப் பொருள்களும் ஒழுங்காகவும் அழகாகவும் வைக்கப்பட்டிருக்கும்.

766. மற்றொரு வீதியில் வீட்டிற்கு உதவும் அழகான நாற்காலி, மேசை, கண்ணடி, கட்டில், அலமாரி, முதலிய தட்டுமுட்டுகள் மிகுந்த பளபளப்போடு மரங்களினாலும் யானைக்கொம்புகளினாலும் மிகுந்த வேலைப் பாட்டுடன் செய்து அமைக்கப்பட்டிருக்கும்.

767. பின்னொரு வீதியில் வீட்டிற்குவேண்டிய பெரிதும் சிறிதுமான பலவகைப்பட்ட உண்கலங்கள், வெள்ளியினுலும் செம்பினுலும் பித்தளையினுலும் ஈயத்தினுலும் செய்து அடுக்கிவைத்திருப்பதைக் காணலாம்.

768. மற்றொரு வீதியில் கண்களைக் கவரும்படி சிற்ப வேலையின் திறமை விளங்கப் பலவித மரங்களினுலும் தந்தத்தினுலும் செய்யப் பட்டிருக்கும் பொம்மைகளும் இலைகள், பறவையின் இறகுகள், பட்டுகள், பலநிறமான கடுதாசிகள் ஆகிய இவைகளால் செய்யப்பட்டிருக்கும் பல வகை விளையாட்டுப் பொருள்களும் அழகாய் அமைக்கப்பட்டிருக்கும்.

769. மற்றொரு வீதியில் நாவிற்கு இனிமையான நவதானியங்களும் பயறு வகைகளும் தூரதேசத்துக் கொட்டைவகைகளும், பழவற்றல்களும், சர்க்கரை, நெய், தேன், முதலியவைகளும் ஏராளமாய்க் கிடைக்கும் பண்டசாலைகள் வரிசை வரிசையாயிருக்கும்.

770. அதற்கடுத்த வீதியில், தானியங்களினுலும், பருப்பினங்களினுலும் பழவகைகளினுலும் செய்யப்பட்டிருக்கும் தின்பண்டங்கள் அமைக்கப் பெற்ற இடம் கண்களைக் கவரும்படி விளக்குகளினுலும் இரசக்குண்டு களினுலும் அலங்கரிக்கப் பெற்றிருக்கும்.

771. அடுத்த வீதியில் கண்களுக்கு எட்டும் வரையிலும், வீதியின் இருபுறத்திலும் அதிக கொழுமையுள்ள ஆடுகளும், மாடுகளும், பன்றி களும், மான்களும், பறவை இனங்களும், மீன்வகைகளும், ஊர்வனவும், உயிருள்ளனவும் உயிரற்றவைகளுமாகக், கட்டியும் தொங்கவும் வைத் திருக்கும்.

772. அவைகளைக் கொல்லும்போது இடும் கூச்சலினுலும் கட்டியிருக் கும்போது இடும் ஓசையினுலும் கால் தளையப்பட்டிருக்கும் பறவைகளின் ஒலியினுலும் மாமிசத்தை அடித்துச்செல்லும் பறவைகளின் இரைச் சலினுலும் அந்தத் தெரு மிகுந்த அல்லோலலப்படுகிறது.

773. பர்வத புத்திரி இவைகளைப் பார்க்கவும் கேட்கவும் வருந்துகிறுள். விலங்குகள் கொல்லப்படும்பொழுது உண்டாகும் இரத்தப்பெருக்கையும் உதப்பிகளின் நாற்றத்தையும் தனக்குப் பொறுக்கக்கூடாதிருப்பதனுல் கண் களை மூடிக்கொண்டும் மூக்கைப்பிடித்துக்கொண்டும் மிக விரைவாகத் திரும்புகிறுள்.

774. உப்பிப்போன மீன்களின் நாற்றத்தையும் பழமையான கருவாடு களின் நாற்றத்தையும் கவனித்து, இதன்முன் நான் எப்படி இவைகளை விருப்பத்துடன் பொறுத்துக்கொண்டிருந்தேனென்று அருவருப்படை கிறுள்.

775. அடுத்த வீதியில் மதம் பிடித்த யானைகளும் குதிரைகளும், கோவேறு கழுதைகளும் அழகான மாடுகளும், வேடிக்கையான மிருகங்களும் பறவைகளும் விற்பனைக்காக பிறநாடுகளிலிருந்து வந்திருக்கும்.

776. மற்றொரு வீதியில் பெண்ணை ஆணாகவும், ஆணை பெண்ணாகவும், கூலிக்காரனை அரசனாகவும், இன்னும் கழுதையாகவும், கரடியாகவும், மோகினிகளாகவும், பேய்களாகவும், தாடியைச் சிரைத்துக்கொண்டும், சடம்பினால் தாடி, மீசை, ஒட்டிக்கொண்டும் பலவித வேடம் போட்டு ஆடும், நாடக சாலைகளில் வெவ்வேறு சாதியாராலும் பல மொழிகளைப்பேசுவோராலும் மிகுந்த அழகாய் அமைக்கப்பட்ட கொடிகள் பறக்கும்.

777. தன் காரியங்களில் கவலையற்றுப் பிறர் பொருளைச் செலவு செய்து கொண்டிருக்கும் வேலையற்ற மனிதர்கள் கவலையற்று வேடிக்கையாக பொழுது போக்கக்கூடிய நடனசாலைகள் நிறைந்த மற்றொரு வீதியுமுண்டு.

778. தந்நாட்டு புறநாட்டு வாச்சியக் கருவிகளில் பலவகைப் பண்களைப் பாடும் இசை மண்டபமும் பலமரபினராலும் நிரம்பியிருக்கும்.

779. மற்றொரு பக்கத்தில் வேடிக்கையாகப் பொழுதுபோகக்கூடிய சதுரங்கமாடும் மண்டபங்களும், சூதாடும் மண்டபங்களும், சீட்டாடும் மண்டபங்களும் பந்தாடும் மண்டபங்களும், கைப்பிரட்டுவேடிக்கைகள் செய்யும் மண்டபங்களும், மோடி செய்யும் மண்டபங்களும், அறிவுறுத்தும் மேடைகளும், கதைகள் செய்யும் மண்டபங்களும், செப்படிவித்தை செய்யும் மண்டபங்களும் இருக்கின்றன.

780. மற்றொருவீதியில் பெரியவும் சிறியவுமான விலங்குகளையும் ஆணும் பெண்ணுமான மனிதர்களையும் பறவை இனங்களையும் பல அருமையான வித்தையில் பழக்கி வேடிக்கை காட்டும் கொட்டகைகள் ஏராளமாயிருக்கும்.

781. கரடிகள் துறந்த பைராகிகளைப்போல் உக்காகுடிக்கின்றன. பென்னம்பெரிய யானைகள் ஒரு சிறிய நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு தனக்கு முன் போட்டிருக்கும் மேசையில் தன் இரண்டு கால்களையும் வைத்துக் கொண்டு தேயிலைத்தண்ணீர் அருந்துகின்றன. ஒரு பெரிய மர உருண்டையில் யானை தன் நாலுகால்களையும் வைத்துக்கொண்டு உருட்டுகிறது.

782. ஒருவன் சிங்கத்தின் வாய்க்குள் தன் கை முழுவதையும் செலுத்தி அதன் நாக்கைப் பிடித்திழுக்கிறான்.

783. ஒரு குதிரையின்மேல் ஒரு நாயும் அதன்மேல் ஒரு குரங்கு மிருந்து சவாரி செய்கின்றன. ஒரு கழுதை குந்தியிருக்க அதன் தோளில் ஒரு நாய் ஏறியிருக்க அதன் தலையில் ஒரு பூனை உட்கார, பூனையின் தலையில் ஒரு சேவல் நிற்க எல்லாம் ஒருமித்துப் பாடுகின்றன.

784. கண்ணுக்குத் தெரியாத ஒரு சிறு கம்பியில் மிக உயரத்தில் ஒருவன் வேறு பற்றுக்கோடின்றி நடந்துபோகிறான்.

785. ஒருவன் நிற்கிறான். அவன் தோள்மேல் இருவர் கையைப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள். அவ்விருவர் தோள்மேல் மூவர் நிற்க அம்மூவர் நடுவில் நாலாவது அடுக்கில் ஒரு பெண்பிள்ளையும் நிற்கிறாள்.

786. ஒருவன் பத்துப்பேர் தூக்க முடியாத பாராங்கல்லைக் கயிற்றினால் கட்டிப் பல்லினால் கடித்து தூக்குகிறான். படுக்க வைத்த ஒரு மனிதன் மேல் தூக்கிவைத்த ஒரு பெரும் பாறையின் மேல் ஒரு யானை நிற்கிறது. வெளிச்சத்தில் வராத வௌவால்கள் பேர் சொல்லி அழைக்கப்பட்டு நூறுக்குமேலாக இலக்கங்களைக் கண்டு பிடிக்கின்றன. நெருப்பில்லாமல் சமைப்பதையும் பாத்திரமில்லாமல் தண்ணீர் நிற்பதையும் இன்னும் வியப்பான பலவகை சால வேலைகளையும் கண்டு பர்வத புத்திரி வியப்படைகிறாள்.

787. மற்றொரு இடத்தில் நகரத்திலுள்ள பெரியமனிதர்கள் சேர்ந்து மரங்களின் அடியிலும் கூடாரத்தின் நடுவிலுமாக வீற்றிருந்து சிற்றுண்டியை உண்டு நீரருந்தி பிறர் புறணியில் மகிழ்ச்சியாய்க் காலங்கழிக்கக் கூடிய பசும்புல் வெளிகளுள்ள நந்த வனங்களிருந்தன.

788. இன்னொரு வீதியில் கோடிக்கணக்கான பீப்பாய்கள் அல்லது மரப்பானைகளிலும் பீங்கான் சாடிகளிலும் குப்பிகளிலும் மதுபானங்கள் வகை வகையாயிருந்தன.

789. மற்றொரு வீதியில் வான நூல், நில நூல், வைத்திய நூல், குடித்தன நூல், உழவு நூல், வாணிப நூல், தர்க்க நூல், இசை நூல், கணித நூல், இலக்கண இலக்கிய நூல்கள் முதலிய நூல்களின் நுட்பங்களை ஆராய்வதற்கும் அவைகளைப் படிப்பதற்குமாகப் பல கல்லூரிகள் அல்லது கலாசாலைகள் ஏற்பட்டிருந்தன.

790. மற்றொரு பெரிய வீதியில் இராப் பகலாய் மாயாபுரியார் செய்யும் சண்டைகளையும் கலகங்களையும் கூக்குரல்களையும் வெறியருடைய கொட்டங்களையும் அடக்குவதற்கு நகர் காவல்களும் வாணிபம் கைத்தொழில்கள் கொடுக்கல் வாங்கல் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளும் இடங்களும் கொலை களவுகளுக்கேற்ற முறை செய்யும் நீதி மன்றங்களும் ஏராளம். அவைகளில் உள்ளதை உள்ளதாகவும் இல்லாததாகவும், இல்லாததை இல்லாததாகவும் உள்ளதாகவும் காட்டக்கூடிய நியாயவல்லோர்கள் பல கைகளுடன் கூடி இருந்தார்கள்.

791. சிலர் அறிவிற் சிறந்த பெரியோரைப்போலத் தண்டு, கமண்டலம், சடை, தாடிகளுடன், நிர்வாணமாகவும், கோவணம் உடுத்தவர்களாகவும்,

காவியாடை தரித்தவராகவும், பலவித மாலைகளைப் பிடித்துக்கொண்டு தவஞ் செய்பவர்களைப்போலப் பொய் வேடங்காட்டிச் சனங்களை ஏமாற்று கிறார்கள்.

792. இன்னும் இம் மாயாபுரி அரசனுக்குத் தொழில் செய்யும் யந்திர சாலைகளும் உணவு சாலைகளும் நவதானியக் கிடங்குகளும் காலாட்படை தங்கும் வீடுகளும் யுத்தசாலைகளும் பலவித பண்டசாலைகளும் அங்கங்கே நிறைந்திருந்தன.

793. மலையின் உட்புறமாக மாயாபுரியார் அத்தனைபேரும் தங்களுக்கு இடையூறு வந்த காலத்தில் ஒருவர் கண்ணிலும் படாமல் தங்கக்கூடிய பெரிய நிலவறையும் இருந்தது.

794. மாயாபுரியின் முச்சந்தி வீதியிலும் சன நெருக்கமான இடங்களி லும் அரமனை முகப்பிலும் மாயாபுரியாருக்கு நியாயங்களை எடுத்தோதி அவர்கள் தவறுகளைக் கண்டித்து உணர்த்தும் நீதிமான்களைக் கொன்று அவர்கள் பிரசங்கித்த இடத்திலேயே அவர்களைச் சமாதிசெய்து சமாதி யின்மேல் ஒரே கல்லினாலும் சலவைக்கற்களினாலும் காறைகளினாலும் அழகாகச் செய்துவைக்கப்பட்ட சிலைகளும் கட்டடங்களும் உண்டு.

795. இதைச் சுற்றிலும் பூந்தோட்டங்களும் கனி தரும் தோப்புகளும் தென்னை, பாக்கு முதலிய மரங்களும் அடர்ந்திருந்தன. மலையின் அடி வாரம் ஒளியின்றி மங்கலாயிருக்கும்.

796. இப்படி அழகு பொருந்திய நகரத்திற்கு முடிசூடும் அரசியாக விளங்கும் பர்வத புத்திரி அடிக்கடி தன் தாய் தந்தையர்களோடு நகர்வலம் வந்தும் அங்கங்கே இருக்கும் காட்சிகளைக் கண்ணுற்று மகிழ்ந் தும் வருவாள்.

797. தனது சிறு வயதில் தாய்தந்தையர் விருப்பப்படி மாயாபுரியின் இன்பங்களை நுகர்ந்து வந்தாலும் தனக்கு வேண்டியவைகளைக் கொடுக்க எல்லாரும் உடன்பட்டிருந்தபோதிலும் வயது வந்த காலத்தில் அவைகள் எல்லாவற்றிலும் வெறுப்பு உண்டாயிற்று.

798. தாயும் தந்தையும் சாராயக் கடைக்குள் புகுந்தால் அவைகளில் நல்லவை எவையென்று பார்க்க அவர்களுக்குப் பகல் முழுவதும் செல்லும். இவளோ நாற்றம் பொறுக்காமல் வீட்டிற்குப் போகவேண்டும் என்பாள்.

799. சதுரங்கமாடும் மண்டபம் போனால் எதிராளி மந்திரியை மறிப் பான். ஏழாம் வீட்டிலிருக்கும் பதாதியை எடுத்து மூலைச் சாய்வாக மூன் றாம் வீட்டில் போடுவதற்கு மூன்று சாமம் ஆகும். இவளோ தான் வீட்டிற்குத் தூங்கப் போகவேண்டும் என்பாள்.

800. இந்திரசால மண்டபத்திற்குப் போனால் பந்தின் விநோத மறைப்பை நோக்கி அதன் இரகசியத்தை அறிந்துகொள்ள திரும்பத் திரும்ப விளையாடச் சொல்லுவான். இரவு பதினைந்து நாழிகை ஆகி விடும்.

801. பலகாரக் கடையில் பலவிதமான பலகாரங்களையும் சுவை பார்ப்பதற்காக தட்டுத்தட்டாக எடுத்து விழுங்குவான். குழந்தையோ வீட்டிற்குப் போகவேண்டுமென்று சொல்லும்.

802. சீட்டாட்டத்தில் உட்கார்ந்தால் துருப்பைச் சொல்லிக்கொண்டு முதல் பந்தை விட்டுப்பார்ப்பான். எல்லாப் பந்தும் விழுந்துவிட்டால் எண்ணிக் கொண்டு வேறு சாதி இறங்குவான். இல்லாவிட்டால் சேவகனை அனுப்புவான். இதிலும் கணக்குச் சரிவராமல் போனால் துருப்புப் பாக்கிப் படுமானால் பத்தாம் பந்தைப் பத்திரப் படுத்துவான்.

803. ஒவ்வொரு பந்துமிறங்க ஒரு மணி நேரம் செல்லும். சில வேளைகளில் இவ்வளவு குரங்கு விழி விழித்தும் பேஸ்துவைக்க நேரிடும். இந்த அவமானம் பொறுமல் எல்லாச் சீட்டையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு எதிரியின் மூஞ்சியில் அறைவான். இவைகளைக் கண்டு பயந்து குழந்தை வீட்டிற்குப் போகவேண்டும் என்பாள்.

804. கொஞ்சம் வயது வர வர துரோபதை துயில் உரிதல் போன்ற கதையையும் அபிமன்னன் கல்யாணத்தில் அரக்கர்களால் அவமானப்படுவதுபோலொத்த கதைகளையும் மனதில் நினைத்து ஏறக்குறைய எல்லா உல்லாசக் கதைகளும் இப்படித்தான் இருக்கின்றனவென்று வெறுத்தாள்.

805. அவர்கள் கோயிலில் கொண்டாடும் பலவிதமான நடனங்களையும் வினியோகங்களையும் மற்றும் ஆபாசங்களையும் மூட வணக்கத்தையும் குருட்டுப் பத்தியையும் பலிகளையும் நினைத்து அருவருப் படைகிறாள்.

806. இப்படி நகரத்தாரும் தாய் தந்தையரும் செய்யும் செய்கைகளில் வெறுப்படையும் அரச செல்வியை அல்லது சீவான்மாவைத் தாய் தந்தையரும் மற்றும் சனங்களும் சற்று வெறுக்கத் தொடங்குகிறார்கள்.

807. இருந்தாலும் தங்கள் ஒரு மகளையே தங்கள் உயிரென்றும் இவள் போனால் நமக்கு இவ்வுலகில் ஒன்றுமில்லை. இவளாலேயே நாமிருக்கிறோம். இன்னும் கொஞ்ச நாளில் இவளைச் சரிப்படுத்திக் கொள்ளலாமென்று மனந்தேறி நடித்தார்கள்.

808. சில வேளைகளில் நயந்தும் சில வேளைகளில் பயமுறுத்தியும் கட்டாயப் படுத்தினார்கள். இவைகள் யாவிலும் வெறுப்புடையவளாய் இருந்தாலும் குடும்ப ஒற்றுமையுடையவளாகவே இருந்தாள்.

809. இதன்மேல் தன்னையும் தனக்கு உதவியான பரமான்மாவையும் அவர் தந்தையாகிய தெய்வத்தையும் அறியும்படியான காலம் நேர்ந்தது. அப்பொழுது தன் தந்தையாகிய அன்னகாம மன்னவனையும் தாயாகிய அஞ்ஞானவதியையும் தன் இனத்தாரையும் அமைச்சர் முதலியோர் களையும் அவர்கள் மறக்காவிடினும் தான் மறக்கும்படி கொஞ்சங் கொஞ்சமாகத் தனிக்கிறாள்.

810. தனித்து வருகையில் சுற்றத்தார்களும் இவளைக் கொஞ்சம் மறக் கிறார்கள். நகரத்திற்கு இவள் போனால் இவளைத் தங்கள் மாயவலையில் சிக்கிக்கொள்ளச் செய்யலாமென்று அழகான உடைகளையும் அணிகலங் களையும் உணவு முதலியவைகளையும் வலியக் கொடுத்து ஆசை உண்டாகும் படி செய்கிறார்கள்.

811. சில வேளைகளில் அவைகளை ஏற்றுக்கொண்டும் சில நேரங்களில் மறுத்தும் வெறுத்தும் வருகிறாள். தான் விரும்பிய பொருள்களில் ஒன் றிற்குப் பத்தாகக் கிடைக்கிறது. ஆனால் அவைகளினால் தனது பரமபதி யின் விருப்பம் குறைய ஏதுவாயிருக்கிறதென்று கண்டு கொள்கிறாள்.

812. தனக்கு அறிவு வந்தபின் இவை யாவும் அதாவது மாயாபுரியின் ஒவ்வொரு காரியமும் தனக்கு இடைஞ்சலாகவே இருக்கிறதென்று தன் பழக்கத்தால் அறிகிறாள்.

---

## 28. மாயாபுரியின் மக்களுக்கு நன்னெறி புகட்டும் முனிவர்.

813. இதன்மேல் தன் தாய்தந்தையருக்குத் தெரியாமல் சீயோன் பர்வ தத்தில் பரமான்மா வாழும்படியான நடு இடத்தில் அவரைக் கண்டு பிடிக்க முயலுகிறாள். மலையின் அடிவாரத்திலிருந்து மேல்போகும் வழியைக் கண்டறிந்து அதில் சிறிது தூரம் நடந்து தேடிச் சுற்றி வருகையில் மலை யின் நடுவில் தவம் செய்துகொண்டிருக்கும் பெரியோர்களில் ஒருவரைக் காண்கிறாள்.

814. இவரோ சடையும் தாடியும் வளர்த்தவர். ஒரு கம்பளியை இடுப்பில் கட்டியிருந்தார். காட்டிலுள்ள பழங்களையும் தேனையும் பசிவந்த வேளைகளில் உண்டு வற்றாமல் நீரோடும் ஆற்றினருகே ஒரு கற்பாறையின் மேல் உட்கார்ந்துகொண்டு மாயாபுரியில் உள்ள எல்லாரும் கேட்க பின் வருமாறு உரத்துச் சொல்லுகிறார்.

815. விரியன் பாம்புக்குட்டிகளே! வருங்கோபத்திற்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காண்பித்தவன் யார்? மனந் திரும்புதலுக்

சேற்ற கனிகளைக் கொடுங்கள், கொடாவிட்டால் நீங்கள் கோடரியினால் அடியோடே வெட்டப்பட்டு அக்கினியினால் சுட்டெரிக்கப்படுவீர்கள்.

816. பரமான்மா இதோ வருகிறார். மணியையும் பதரையும் பிரிக்கக் கூடிய தூற்றுக் கூடை அவர் கையிலிருக்கிறது. மணி எதென்று தெரிந்துகொண்டு தமது களஞ்சியத்தில் சேர்த்துக்கொள்வார். பதரையோ அவியாத அக்கினியில் சுட்டெரிப்பார்.

817. தீய குணங்களை விட்டுத்திரும்பி நன்மை செய்யுங்கள். வஸ்திர மில்லாதவனுக்கு இரண்டு வஸ்திரமுள்ளவன் ஒன்றைக்கொடுக்கட்டும். பசியுள்ளவனுக்குத் தானியமுள்ளவன் பகிர்ந்து கொடுக்கட்டும்.

818. எந்தக்காரியத்திலும் குறித்த அளவிற்குமேல் வாங்கவேண்டாம். பரிதானம் வாங்கவேண்டாம். பொய்சாட்சி சொல்லவேண்டாம். நியாய மில்லாமல் ஒருவர் பொருளையும் விரும்பவேண்டாம்.

819. பரமான்மா விருப்பப்படிச் செய்யுங்கள். நான் உயர்ந்த குலமென் றும் சீயோன் குமாரத்திக்குச் சொந்தமென்றும் சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள். இந்தக் காரணங்களை யிட்டு பரமான்மா உங்களைத் தப்பவிடார்.

820. இவர் இப்படிச் சொல்வதை பர்வத புத்திரியும் கேட்டு திகி லடைந்து தீமைகளை வெறுத்து பரமான்மாவுக்கு விருப்பமானவைகளைச் சிந்திக்கவும் சொல்லவும் செய்யவும் முடிவு செய்துகொண்டாள்.

821. இதுவரையும் கேட்டிராத பரமபதியின் குணங்களைப் பெரியவ ரின் வாய்பிறப்பாகக் கேட்டு இப்போதுதான் கண்டதுபோல் மகிழ்ச்சி யடைகிறாள்.

822. இதற்குள் அன்ன காம மன்னவனும் அவன் ஊராரும் தான் தனித்து வந்ததை எங்கே தெரிந்துகொள்ளப் போகிறார்களோவென்று அச்சம் அடைகிறாள்.

823. இப்படி பரமபதியைக்கண்டடைய வேண்டுமென்ற விருப்பம் ஒருபுறமும் தன் தந்தையும் அவர்களைச் சேர்ந்தவர்களும் எங்கே தன்னைத் தொடர்ந்து பிடித்து மாயாபுரிக்குக் கொண்டுபோய் விடுவார் களோவென்ற அச்சம் ஒருபுறமுமாகப் பிடித்திழுக்க தன் தாய் தந்தை களின் அறிவின்மையையும் மாயாபுரியின் மயக்கத்தையும் அருவருத்த இவள் மிக விரைவாய் முன்சென்று நடக்கிறாள்.

## 29. மாயாபுரியார்க்கு நன்னெறி உணர்த்தும் துறவி.

824. நடக்க நடக்க அவள் மனதைத் திடப்படுத்துவதற்கென்றே மலையின் வசதிகள் நன்நிமித்தங்கள் போல் காணப்பட்டன. அவள் நடந்த வழி குளிர்ந்த நிழலும் பறவைகளின் இனிய ஓசைகளின் மாறொலியும் இனிமையான கனிந்த பழங்களும் உடையதாக இருந்தது.

825. இவைகளைக் கடந்து சற்று வெளியுள்ள இடங்களுக்குப் போனால் பர்வத புத்திரியின் மெல்லிய உடம்பு வெயிலால் வாடாதபடிக்கு மெல்லிய மேகங்கள் நிழல் கொடுக்கும்.

826. அழகிய பூஞ்சோலைகளின்தோற்றமும்பூக்களின் நறுமணம்நிறைந்த தென்றலும் அவள் களைப்பை யாற்றும். கற்பாறைகளின் மேல் ஓயாது சலசலவென்று ஓடும் தெள்ளிய நீரோடைகளின் குளிர்ந்த காற்று அவள் தாகத்தைத் தீர்க்கும்.

827. வழிகளினருகே பல பெரியோர்கள் தவஞ்செய்து கொண்டிருந்ததாகவும் செபஞ்செய்துகொண்டிருந்ததாகவும் குறிப்பான அடையாளங்களினால் அறிந்தாள்.

828. இதற்கு முன் பல அன்பர்கள் இதே வழியில் நடந்திருக்கிறதாக அங்கங்கே கற்பாறைகளில் எழுதப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்வடைந்தாள்.

829. "ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன்" என்ற பரமான்மாவின் வாக்கியங்கள் அங்கங்கே கற்களில் வெட்டப்பட்டிருப்பதை அறிந்து ஊக்கமடைந்தாள்.

830. இப்படிச் சிலதூரம் நடந்து போகையில் வழியருகிலுள்ள ஒரு சிறு குன்றின்மேல் உட்கார்ந்திருக்கும் ஒரு பெரியோரைக் காண்கிறாள். அவருடைய உடம்பு மிகவும் மெலிந்து தளர்ந்திருந்தாலும் அவருடைய முகம் மிகவும் அழகிய தோற்றமுடையதாய் இருந்தது. பெருந்தன்மை பொருந்தியதாயும் இருந்தது.

831. ஒரு காலத்தில் அவர் மாயாபுரியின் அரசனாயிருந்திருக்கலாமென்றும் பரமான்மாவை விரும்பியே துறவியாகி இருப்பாரென்றும் நினைத்து சீயோன் குமாரத்தி தன் துறவைப் பற்றி மகிழ்ந்து அவர் இருக்கும் இடம் நோக்கி மெதுவாக நடந்து போகிறாள்.

832. குன்றின்மேல் உட்கார்ந்திருக்கும் அப்பெரியவர் அடிவாரத்திலிருக்கும் மாயாபுரியிலுள்ள தன் இனத்தார்களும் குடிகளுமான யாவரையும் பார்த்துப் பின்வருமாறு சொல்லுகிறார்.

833. என் அருமைச் சனங்களே! நீங்கள் மீட்கப்படுவதற்கான நன்மையான வழிகளைக் காண்பதற்கென்றே உங்களை விட்டுப்பிரிந்து அவைகளைத் தேடிக் கண்டடைந்து முடிவான காரியங்களை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

834. ஆதியில் இருள் இருந்ததாகவும் பிரமம் நினைத்தபோதே இவ்வுலகங்கள் உண்டானதாகவும் நூல்கள் சொல்லுகின்றன. நீங்கள் பிரமத்தையும் ஆதியையும் தேடவேண்டாம். ஒருவராலும் இந்த ஊனக் கண்களால் பார்க்க முடியாது. ஒருவன் பிரமத்தைக் காணப்போகிறேன் என்று போகப்போக வெறும் மாயையாகவே தோன்றும்.

835. நட்சத்திரங்கள் தம் வழியே சுழலுகின்றன. ஏனென்றும் எப்படியென்றும் கேட்கவேண்டாம். அதனால் உங்களுக்கு என்ன பயன். பிறப்பும் இறப்பும், ஆற்றைப்போல் எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் வாழ்வும், எப்போதும் உள்ளதென்று அறிவதேபோதும்.

836. ஆற்று நீர் ஒரே தன்மையாயிருந்தும் எப்பொழுதும் ஏற்றக்குறைவால் மாறுபட்டுக்கொண்டே இருக்கிறது. துளிதுளியாய்ப் பெருகி ஓடிக் கடலில் விழுகிறது. இப்படியே வாழ்வுமிருக்கிறதென்று அறியுங்கள்.

837. இந்த நிலமும் வானமும் வானத்திலுள்ள எண்ணிறந்த உலகங்களும் எப்பொழுதும் மாறுபட்டுக்கொண்டே இருக்கின்றன. எங்குப் பார்த்தாலும் ஓய்வின்றி சண்டையும் சச்சரவுமாயிருக்கிறது. இதை ஒருவராலும் தடுக்க முடியவில்லை.

838. என் சகோதரர்களே! சகோதரிகளே! நீங்கள் தெய்வங்களை வேண்டுதல் செய்ய வேண்டாம். அதனால் உங்களைச் சூழ்ந்திருக்கும் இருள் நீங்காது. முன்னேயே கவலைப் பட்டுக்கொண்டிருக்கும் நீங்கள் உங்கள் மனதை இன்னும் ஏன் வருத்தவேண்டும்?

839. தேவர்களிடமிருந்து பூசையினாலும் பலியினாலும் ஒன்றையும் அடைய விரும்பவேண்டாம். உங்களுக்கு வீடு உங்களிடத்திலிருந்தே உண்டாகவேண்டும். கரை சேரும் வழிதேடாமல் தன்னைத்தானே கட்டிக் கொள்ளும் ஆசையாகிய கயிற்றை ஏன் முறுக்குகிறீர்கள்?

840. உயர்ந்தவர்களுக்கும் தாழ்ந்தவர்களுக்கும் தங்கள் தங்கள் வாழ்நாளில் உரிமையுண்டு. தேவர்கள் முதல் எளிய சீவர்வரை எல்லாம் தங்கள் தங்கள் செய்கையினாலேயே தங்களுக்கு இன்ப துன்பங்களை உண்டு பண்ணிக்கொள்ளுகின்றன.

841. இதன் முன் இருந்தவைகளிலிருந்து இப்போதிருக்கிறவைகளும் இப்போதிருக்கிறவைகளிலிருந்து இனி வரப்போகிறவைகளும் தன் தன் நன்மை தீமைகளுக்குத் தக்கவிதமாகவே உண்டாகின்றன.

842. நன்மை செய்கிறவர்கள் இன்பத்தையும் தீமை செய்கிறவர்கள் துன்பத்தையும் அடைகிறார்கள். ஆனால் ஒன்றும் நிலையானதல்ல. நல்லறங்களும் நாளடைவில் குறைகின்றன. அப்படியே தீவினைகளும் நீங்குகின்றன.

843. அடிமையானவன் தனது நற்குண நற்செய்கைகளினால் அரசனாகவும் ஆகலாம். அரசனானவன் தகாதவைசெய்து ஆண்டியும் ஆகலாம். ஒருவன் தன் ஊக்கத்தால் உயர்ந்த நிலையையுமடையலாம். தன் சோம்பலால் புழுக்களை விட தாழ்ந்த நிலையையும் அடையலாம்.

844. இந்த உயர்வும் தாழ்வும் ஒரு சக்கரத்தின் ஆரங்களைப்போல் மேல் கீழாக ஓயாது மாறிவரும். இம்மாறுபாடாகிய சக்கரத்தில் நீங்கள் கண்டு உங்களைத் தப்புவித்துக்கொள்ள வகைதெரியாதிருப்பீர்களேயானால் உங்கள் முடிவில்லாத வாழ்வும் கொடிய சாபமாம்.

845. எல்லா உயிர்களும் இதனால் கொடிய துன்பமடையும்; ஆனால் நீங்கள் கண் கட்டுண்டிருக்கவில்லை. உங்களுக்குத் தெரியாமலே நீங்கள் துன்பப்படுகிறீர்கள். எவ்விதமான வாழ்வும் இன்பமாகவே இருக்கிறது. எவ்வுயிரும்இனிமையாகவே இருக்கிறது.

846. உங்களைப்போலவே அழுது இவ்வுலக துன்பத்தினால் மனம் விண்ட நான் இப்பொழுது மகிழ்ச்சியாயிருக்கிறேன். இத்துன்பத்திற்கு ஒழிவு உண்டென்று அறிந்துகொண்டேன்.

847. நீங்கள் வருந்துவதெல்லாம் உங்களாலேயே என்று அறிந்து கொள்ளுங்கள். வேறொருவரும் உங்களை வாழவும் இறக்கவும் கட்டாயப்படுத்தவில்லை. நீங்களே இந்த மாறுபாடாகிய சக்கரத்தைக் கட்டிக் கொண்டு துன்பமாகிய அதன் கைகளை முத்தமிடுகிறீர்களென்று உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

848. எல்லாவற்றிலும் மேலானதாய் முதலும் முடிவுமில்லாததாய் எங்கும் நிறைந்ததாய் எப்பொழுதும் நன்மையையே நாடுகிறதான ஒரு வல்லமையிருக்கிறது.

849. அதன் சட்டங்களே உறுதியானவைகள். இதோ நிற்கும் சிறு முல்லை மலரின் மணமும் தாமரை மலரின் அழகிய தோற்றமும் ஆடைகளின் அழகும் அதன் வேலைகள்.

850. ஒளிபடும் மேகங்களில் பொன் நிறத்தையும், மயில் தோகையில் பசிய நிறத்தையும் எழுதியது அதுதான். விண் மீன்களைப்போல் அதன் இடங்கள் மிகவும் உயர்வானது. இடியும், மின்னலும், காற்றும், மழையும் மற்றும் இயற்கையாவும் அதன் அடிமைகள்.

851. அது இரவு பகலாய் இடைவிடாமல் எப்போதும் வேலை செய்து கொண்டே யிருக்கிறது. அழிந்து போன பொருள்களிலிருந்து அழகான புதிய பொருள்களை உண்டாக்குகிறது. அதன் செயலை ஒருவரும் தடுக்க வும் திருப்பவும் முடியாது. காப்பதும் கொல்வதும் அதுதான். செய் வதும் அழிப்பதும் அதன் ஓயாத வேலை.

852. அதன் கட்டளைக்கு மாறுகச் செய்பவன் கேடடைகிருன். அதன் கட்டளை நிறைவேற வர முயல்பவன் நன்மையடைகிருன்.

853. ஒளிப்பிடத்தில் செய்த எந்த நன்மைக்கும் ஈடாக அமைதியை யும் இன்பத்தையும் அது கொடுக்கிறது. அப்படியே ஒருவருக்கும் தெரியாமற் செய்த தீமைக்கும் துன்பத்தைத் தருகிறது.

854. எங்கும் பார்த்து எல்லாவற்றையும் குறித்து வைத்துக்கொள்ளு கிறது. நல்லதைச் செய் உனக்கு நன்மையுண்டாகும். ஒரு தீமையும் செய்யாதே. செய்தால் அதற்குத் தகுந்த தண்டனையையே தவருமல் அடைவாய் என்று சொல்லுகிறது.

855. அது சினம்கொள்வதும் இல்லை. மன்னிப்புக் கொடுக்கிறதும் இல்லை. ஆனல் அவனவன் செய்கைகளுக்குத் தகுந்த பயனைக் கொடுக்க ஒவ்வொரு காரியத்தையும் சிறிதும்விடாமல் நிறுத்துக் கணக்கில் வைத் துக்கொள்ளுகிறது.

856. செய்கைகளுக்குத் தகுந்த பயனை இன்று கொடுத்தாலும் கொடுக் கும்; பலநாள் கழித்துக் கொடுத்தாலும் கொடுக்கும். காலமென்பது அதற்குக் கிடையாது.

857. இப்படிப்பட்ட வல்லமை நம்மெல்லாரையும் நன்மைக்கே வழி நடத்துகிறது. அதன் உள்ளம் அன்பு. அமைதியும் இன்பமும் அதன் முடிவு. அதனை எல்லாரும் பணியுங்கள்.

858. ஒருவன் தான் செய்த தீவினையால் துன்பமும், நல்வினையால் இன்பமும் அடைகிருன். அவனவன் விதைக்கிறதையே அறுப்பான். நெல்லை விதைத்தவன் நெல்லையும் எள்ளை விதைத்தவன் எள்ளையும் முள்ளை விதைத்தவன் முள்ளையும் அறுக்கிருன்.

859. நிலத்திலுள்ள முள்ளையும் நச்சுப்பூண்டுகளையும் வேரோடு களைந்து நிலத்தைப் பண்படுத்தி நல்ல வித்துகளை விதைப்பானேயானல் நல்ல பய னையே அடைவான்.

860. துன்பங்கள் உண்டாகுதற்குக் காரணங்களை அறிந்து அவைகளைப் பொறுத்து, தன்னால் கூடியவரையும் அன்பும் உண்மையுமாகவே நடந்து, அதனால் தான் முன்செய்த தீமைகளை ஒருவாறு போக்கிக்கொள்ள முயன்று, ஒருவருக்கும் சிறிதும் துன்பம் செய்யாமல் தன் மனதார ஆசையையும் பொய்யையும் ஒழித்து, எதையும் தாழ்மையுடன் ஏற்று பிறர் தீங்கு இழைத்தாலும் அதற்கு நன்மையே செய்து, ஒவ்வொரு நாளும் உயிர்களிடத்தில் இரக்கமும், மனத்தூய்மையும், ஒழுங்கும் உண்டாக வாழ்நாள் முழுவதும் ஆசையை வேரோடுகளைந்து நடந்து கொள்வானே யானால், அவன் இறக்கும்பொழுது அவன் வாழ்நாள் கணக்கில் தீமை யெல்லாம் குறைந்து நன்மையே நிறைந்திருக்கும்.

861. அவன் எதற்காகப் பிறவி எடுத்தானோ அக்காரியம் முடிந்து விட்டது. இனிமேல் ஆசையென்பதும் தீவினையென்பதும் அவனை அணுகாது. அவனுடைய அழிவற்ற பொறுமையையும் புகழையும் இன்ப துன்பங்கள் அழிக்கமாட்டா. அழியா நிலையை யடைகிறான். இன்ப துன்ப மற்ற உயர்ந்த நிலையையடைகிறான்.

862. கொடிய கொலையாளி இறக்கும்பொழுது அவன் செய்த தீவினை அவன் மரபினர்க்கும் நாட்டிலுள்ளோருக்கும் ஒட்டுவாரொட்டியைப்போலத் தொடர்ந்து பிணியையும் துன்பத்தையும் தீய எண்ணங்களையும் வளரச் செய்து கொண்டேயிருக்கிறது. அவனுக்குப் பின் வருபவர்களும் அதில் பங்கடைகிறார்கள்.

863. நீதிமான்கள் இறக்கும்பொழுதோ அவர்கள் உலகத்திற்குக் காட்டிய முன் மாதிரிகளும் போதித்த நன்மொழிகளும் அக்காலத்துள்ளவர்களுக்கும் அதன் பின் வருபவர்களுக்கும் சீவ மணமாக விளங்கி உலகத்தவரும் நல்லவர்களாகிக்கொண்டேயிருக்கிறார்கள்.

864. நீங்கள் வீடடைய வேண்டுமானால் துன்பம் இன்னதென்றும் துன்பத்தை நீக்கும் வழி இன்னதென்றும் துன்பத்தின் காரணம் இன்னதென்றும் துன்பத்தின் முடிவு இன்னதென்றும் அறியவேண்டும்.

---

## 30. துன்பம் இன்ன தென்பது.

865. நீங்கள் மிக விருப்பத்துடன் நினைக்கும் இவ்வாழ்வு ஒரு பெரிய துன்பம். அதில் வருத்தங்கள் உண்டாவது உண்மை. இன்பங்கள் மிகச் சிலவே. அவைகள் ஓரிடத்தில் தங்கி உடனே திரும்பப் பறந்துபோய் விடும் பறவைகளைப் போலிருக்கின்றன.

866. பிறக்கும் பொழுதுள்ள துன்பமும், குழந்தையா யிருக்கும் பொழுது நேர்ந்த இடர்களும், இளமையில் உண்டாகும் கலக்கமும், நடுவயதின் துயரங்களுமே வாழ் நாளில் நிறைந்திருக்கின்றன.

867. அன்பான காதல் இனியதுதான். ஆனால் காதலர்கள் மரித்த போது பிரிய நேரிடும். வல்லமை மிகவும் சிறந்ததே. ஆனால் அரசர்களும், வீரர்களும் போர்க்களத்தில் மரிக்க அவர்கள் தோள்களைக் கழுகுகள் கொத்த நேரிடுகிறது.

868. நிலம் மிக அழகாயிருக்கிறது. ஆனால் உயிர்கள் ஒவ்வொன்றும் தங்கள் வாழ்நாளின் மேல்வைத்த விருப்பத்தால் ஒன்றையொன்று கொன்று தின்கின்றன.

869. வானம் நீலக்கல்லைப்போல மிக அழகாய் விளங்குகிறது. ஆகிலும் பஞ்சநாட்களில் மனிதர் பசித்து, மெலிந்து தாகத்தினால் வருந்தும் பொழுது ஒரு சொட்டு மழையையாவது கொடுக்கிறதில்லை.

870. நோயாளிகளிடத்திலும் துன்பப்படுகிறவர்களிடத்திலும் ஒண்டியாய்த் தடியைப் பிடித்துத் தள்ளாடும் கிழவர்களிடத்திலும் போய் வாழ்வு எப்படியிருக்கிறதென்று கேளுங்கள். பிறந்தவுடனே அழுகிற குழந்தையே பெரிய ஞானியென்று சொல்லுவார்கள்.

## 31. துன்பத்தின் காரணம்.

871. உலகத்திலுள்ள எல்லாத் துன்பமும் ஆசையினாலேயே வருகின்றது. ஆசை ஐம்பொறிகளுடன் சேர்ந்தபொழுது பொருள்களை விரும்பும் மோகம் உண்டாகிறது. மோகத்தினால் உண்மையல்லாத நிழல்களை உண்மையென்று நம்பிக் கனவுகளை மெய்யென்று பாராட்டுகிறீர்கள்.

872. நானென்று ஒரு பொய் மனிதனை உண்டாக்கி அவன் வாழ ஒரு பொய் உலகம் ஏற்படுத்துகிறீர்கள். அதனால் அப்புறமிருக்கும் உண்மையின் முடிவைக் கண்ணெடுத்துப் பார்க்க முடியாமலும் பொய்த்தோற்றங்களைக் கடப்பவனுக்காக வைக்கப்பட்டிருக்கும் மெய்வாழ்வை அடையாமலும் போகிறீர்கள்.

873. இதனால் ஆசையும் சச்சரவும் இவ்வுலகத்தில் ஓயாத கூக்குரலை உண்டாக்குகின்றது. பொய்த்தோற்றங்களை நம்பி ஏமாந்துபோன உள்ளம் துன்பமடைகின்றது. பொறாமையும் பகையும் சினமும் மேற்படுகின்றன.

874. தானியங்கள் விளையவேண்டிய இடத்தில் முட்செடிகளும் நச்சு வித்துக்களும் உண்டாகின்றன. நல்ல வித்துக்கள் விழுந்து முளைப்பதற்கு இடமில்லாமல் போகிறது.

875. இப்படிப்பட்ட நச்சு விதைகளைத் தின்று மயக்கமெடுத்தாலும் துன்பமடைந்தாலும் திரும்பவும் அதைத் தின்ன வேண்டுமென்ற ஆவல் உண்டாகிறதே துன்பத்தின் காரணம்.

---

## 32. துன்பத்தை நீக்கும் வழி.

876. இது எல்லாரும் அடையக்கூடிய விதமாய் மிகவும் எளிதாயும் அருகிலுமிருக்கிறது. மலையின் உச்சியில் ஏறுகிறதற்கு முரட்டுவழியும் சுற்றிச் சுற்றிப் போகும் அமைதியான வழியும் இருப்பதுபோல மிகவும் வல்லவர்களே கைக்கொள்ளக் கூடிய கொடுமையான குறுக்கு வழிகளும் மற்றவர்கள் மெதுவாகச்செல்லும் அமைதியான வழிகளும் இருக்கின்றன. ஆனால் அதில் ஏறுவதற்கு முயற்சித்தவர்கள் எல்லாரும் ஒரே இடத்திற் போய்ச் சேருகிறார்கள்.

877. அந்நெறியில் செல்லுகிறவர்கள் கைக்கொள்ளவேண்டிய எட்டுக் காரியங்கள் உண்டு. முதலாவது:—**நற்கோள்கை;**—அற்நெறிக்கு அஞ்சி குற்றத்தை விலக்கி நடவுங்கள். மனிதராடையும் பயனுக்குக் காரணம் நன்மை தீமைகளே. ஆகையால் அதைக் கவனியுங்கள். புலன்களை அடக்கி ஆளுங்கள். அவைகளுக்கடிமையாக வேண்டாம்.

878. 2—வது **நல்லெண்ணம்;**—உயிர் வாழ்வன யாவற்றிற்கும் நன்மையையே கோருங்கள். கொடுமையும் பற்றுள்ளமும் சினமும் மடிந்து போகட்டும். அதனால் வாழ்வு இன்பமாகும்.

879. 3-வது **நல்வசனம்;**—அரசன் வாழும் அரமனைக் கதவுகளைப் போல உங்கள் வாய்களைக் காத்துக்கொள்ளுங்கள். உங்கள் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லும் பொறுமையாயும் மெதுவாயும் ஒருவர் மனதையும் புண்படுத்தாமலும் இருக்கட்டும்.

880. 4-வது **நன்னடக்கை;**—ஒவ்வொரு செய்கையும் ஒரு குற்றத்தை அழிக்கவோ அல்லது நன்மையைப்பெருக்கவோ செய்யப்படட்டும். படிக மணிகளைக் கோத்த நூல்கள் அம்மணிகளின் வழியாய்த் தெரிவது போல உங்கள் செய்கைகள் ஒவ்வொன்றிலும் அன்பு விளங்கட்டும்.

881. 5-வது **தூய்மை; 6-வது தனித்திருத்தல்; 7-வது சிந்தித்தல்; 8-வது இன்பம்.**

---

## 33. துன்பத்தின் முடிவு.

882. வாழ்நாளின் மேலுள்ள விருப்பத்தை வென்று மனக்கலக்கங்களை வேரோடு களைந்து எறிவதினால் அமைதியுண்டாகும்.

883. ஐம்புலன்களையும் அடக்கி ஆள்வதினால் தனக்குத்தான் அரசனு யிருக்கும் புகழும் விண்ணவரினும் மேலான இன்பமும் அடைகிறான். தன் னால் கூடிய அளவு பிறர் துயரை நீக்குதல், அறம் செய்தல், இனியவை கூறல் ஆகிய இவையாவும் தன் கடமையென்று குறைவின்றிச் செய்து, இவைகளே என்றும் அழியாத நிறைந்த செல்வம் என்று எண்ணும் உயர்ந்த நிலையை அடைவானானால் அப்போது துன்பம் முடிவாகிறது.

884. பழைய கடன்களெல்லாம் தீர்ந்து போய்விட்டன. புதிதாக ஒன்றை யும் சேர்க்கவில்லை. ஆகையால் இன்ப துன்பமற்ற நிலையையடைகிறான். எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல நினைத்துத் தூய்மையையடைகிறான். அவன் பந்தம் அறுந்து விட்டது. இவனே வீட்டின்பம் பெற்றவன்.

885. நன்னெறியில் நடக்கையில் இடையூறு செய்யும் தீவினை பத்து. (1) தன்னயம் பாராட்டுதல் (2) கெட்ட கொள்கை (3) ஐயம் (4) பகை (5) ஆசை (6) வாழ்வின் மேலாசை (7,) விண்ணுலகாசை (8) வீண்பெருமைபாராட்டுதல் (9) மயக்கம் (10) செருக்கு.

886. இவற்றை விட்டவனுக்கு விருப்பு வெறுப்புகள் இல்லை. ஆகை யால் எல்லாம் கிடைத்து விட்டது. தான் என்பதை மறந்ததினால் உலகம் முழுவதும் தானே ஆகிறான். மேலான வீட்டு நிலையைப் பெறுகிறான்.

887. நீங்கள் ஓருயிரையும் கொலை செய்ய வேண்டாம். ஒருவருக்கொரு வர் கொடுத்து வாங்கிக்கொள்ளுங்கள். பேராசையினால் கட்டாயப்படுத்தி யாவது ஏமாற்றியாவது பிடுங்கிக் கொள்ளவேண்டாம்.

888. செய்கையிற்றூய்மையிலிருந்தே மனத்தூய்மை உண்டாவதனால் பொய் சொல்லவாவது புறங்கூறவாவது வேண்டாம். அறிவை மயக்கும் பானங்களையும் மருந்துகளையும் விலக்குங்கள். நோயற்ற உடம்பும் தெளி வான மனதும் உடையவனாயிருக்க வேறொன்றும் வேண்டுவதில்லை. மறு மாதரைக் கனவிலும் நினைக்கவேண்டாம். ஒழுங்கீனமான சிற்றின்பங்களி லிருந்து விலகுங்கள்.

889. எல்லாருக்கும் அன்பான செய்கைகளையும் எண்ணங்களையும் வாரி இறையுங்கள். தாய் தந்தையருக்கும் ஆசிரியருக்கும் மனைவி மக் களுக்கும் சிநேகிதர்களுக்கும் சுற்றத்தார்க்கும் தாழ்ந்த ஜீவர்களுக்கும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அன்பான செய்கைகளையும் எண்ணங் களையும் வாரி இறையுங்கள்.

890. அப்பொழுது உங்கள் ஆறு இடங்களும் நன்றாயிருக்கும். தீமை நீங்கும் என்று மிகுந்த அன்புடன் கனிந்த மனதோடு கேட்பவர் உள்ளம் உருக உரைத்துச் சொன்னார்.

## 34. சீயோன் குமாரி உணர்வடைதல்.

891. அவர் பக்கமாய் நடந்துபோன சீயோன் குமாரி பெரியவர் மொழிவதை அவருக்கு அருகில் நின்று அவைகளில் ஒன்றும் விடாமல் கேட்டு யாவையும் உணர்ந்தாள்.

892. என் சிறு வயதில் வேடிக்கையாக எத்தனையோ உயிர்களைக்கொன்றேன். என் உணவிற்காகவும் என் இனத்தார்களின் விருந்து கொண்டாட்டத்திற்காகவும் எத்தனையோ சிறியவும் பெரியவுமான ஊர்வனங்கள் பறவைகள் விலங்கினங்களையும் கொன்றிருக்கிறேன்.

893. இரக்கமென்பதைக் கனவிலும் நினைத்தறியேனே! நான் நன்றாயிருக்கவேண்டுமென்றும் ஆசை முதலிய தீய தோழர்களை மகிழ்விக்கவும் எத்தனையோ முயற்சிகளைச் செய்தேன். இராப்பகலாய் உழைத்தேன். அதில் கடுகத்தனை கூட பிறருக்கு உதவிசெய்ய நினைத்தேனில்லையே!

894. நான் எந்த நன்மையைக்கொண்டு பரமான்மாவிடத்தில் செல்லுவேன்! எந்த நற்குணத்தையாவது நற்செய்கையையாவது எனக்கு அணிகலமாக அணிந்து கொண்டேனில்லையே.

895. பரமான்மாவுக்கென்றே செய்யும் அன்பான செய்கைகளாகிய மலரை என் தலையிற் சூடிக்கொண்டேனில்லையே என்று மனமுடைந்து சோர்ந்து நின்றாள்.

896. பின்னும் மனந்தேறி அழிவற்ற சீவ வழியில் இன்னும் பன்முறை நடக்கவேண்டும். அதாவது உயிர்களிடத்தில் இரக்கத்தை மேலும் மேலும் உண்டாக்கிக்கொள்ள வேண்டும் என்று உறுதி செய்துகொண்டு மிகவும் விரைவாய் முன் சென்றாள்.

897. இப்படி அவள் செல்லும் வழி மிகவும் நன்மையாகவே யிருக்கிறதென்று கண்டறிந்து மகிழ்வடைந்தாள். ஆன்மநாதனை நினைக்கும் எண்ணங்கள் இடைவிடாமல் உண்டாகிக்கொண்டே யிருந்தன.

898. தான் செய்யும் ஒவ்வொரு நன்மையும் தன் பரமனை அணுகச் செய்யும் தப்படிகளைப் போல் நெருங்கிக்கொண்டு போவதாகத் தெரிந்து விரைவில் சீயோன் ஆண்டவனைக் காண்போமென்று மனக்கிளர்ச்சி கொள்ளுகிறாள்.

---

## 35. பரமான்மாவின் பெருமையைச் சொல்லும் முனிவர்.

899. இப்படிக் கொஞ்சதூரம் நடந்துபோகையில் ஒரு சிறிய தெளிவான நீர்ச்சுனையையும் அதன் அருகில் ஓர் உயர்ந்த முனிவர் வாழுமிடமும் வளர்ந்த சோலையின் நடுவில் இருக்கிறதைக் காண்கிறாள்.

900. இதில் தன் இனத்தவரைத் தவிர வேறு எவராவது ஒரு பெரியோர் இருக்க வேண்டுமென்று நினைத்து அதன் முன்புறமாகச் செல்ல அஞ்சி அடிமேல் அடிவைத்துப் பைய நடந்து அதன் பக்கமாகக் கடந்துபோக நினைக்கிறாள்.

901. இப்படி நினைத்துக்கொண்டு அதன் பக்கமாக நடந்து போகையில் "பரமான்மாவுக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவர் நடந்து வரும் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள். மனக்குறைவாகிய பள்ளமெல்லாம் சாந்தமடையட்டும். மனமேட்டிமையாகிய குன்றுகள் தாழ்த்தப் படட்டும். நன்மை செய்வது விட்டு விலகும் கோணலான பாதைகள் நேராகட்டும். கோபமும் கொடூரமுமான கரடு முரடான பாதைகள் ஒப்புரவாக்கப்படட்டும். பிறரை துன்பப் படுத்தும் தீமையான சிறிய கற்களாகிய செயல்கள் விலக்கப்படட்டும். ஏனென்றால் இந்தப் பாதையில் பரமான்மா வரப்போகிறார். அவருடைய மகிமை எல்லாருக்கும் வெளியரங்கமாகத் தோன்றும். மாமிசமான யாவருடைய கண்களும் ஏகமாய்க் காணும்" என்று ஒரு ஒலி கேட்கிறதைக் கவனித்து முன்பின் அசையாமல் நின்று கொண்டிருக்கிறாள்.

902. இதற்கு சற்று நேரம் பொறுத்து அவளுக்கு அறிவு வந்து இவர் தனது பரமபதியின் ஊழியக்காரனும் அன்பனுமாயிருக்கவேண்டுமென்று தேறுதலடைந்து அவர்க்கு அருகே போகையில் வழுக்கைத் தலையும் நரைத்துத் திரைந்த முகமும் உடைய மிகுந்த வயது சென்ற ஒரு பெரியவர் குகையின் முன்னே விளங்கும் ஓர் கற்பாறையின் மேல் உட்கார்ந்து கொண்டு மாயாபுரியின் ஒரு திரளான கூட்டத்தாருக்குப் பின்வருமாறு சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்கிறாள்.

903. பரமான்மாவைக் கண்டடையத்தக்க வேளையில் அவரைத் தேடுங்கள். அவர் அருகிலிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

904. தீயநெறியிற்செல்பவன் தன் தீமையான வழியையும் ஒழுங்குதவறியவன் தன் கெட்ட நினைவுகளையும் விட்டுப் பரமான்மாவினிடம் திரும்பக்கடவன். அவர் மன உருக்கமும் இரக்கமுமுள்ளவர்; அவர் மன்னிக்கிறதற்கு அருளுடையவர்.

905. நிலத்திற்கும் வானத்திற்கும் எவ்வளவு உயரமோ அப்படி உங்கள் வழிகளைப் பார்க்கிலும் அவர் வழிகள் உயரமானவைகள். ஆகையால் உங்கள் ஒழுங்கற்ற நினைவுகளையும் தீய செயல்களையும் விட்டு மனந்திரும்புங்கள்.

906. நீங்கள் கர்த்தாவே கர்த்தாவே என்று கூப்பிட்டாலும் உங்கள் மனமானது பரமான்மாவைப் பற்றியிராவிட்டால் உங்கள் உதடுகளினால் அறிக்கையிட்டும் உங்கள் உள்ளத்தில் அவருக்குத் தூரமாயிருப்பீர்கள்.

907. உங்களைச் சீர்ப்படுத்தவும் நல் வழியில் கொண்டுவரவும் பரமான்மா என்னை உங்களிடத்தில் அனுப்பினார். தீமை செய்து சிறுமைப்பட்டவர்களுக்கு நன்மையைச் செய்யுங்களென்ற நற்செய்தியை அறிவிக்கவும் தீவினைகளினால் சிறைப்பட்டவர்களை விடுதலை செய்யவும் தீமையான செய்கைகளைச் செய்வதில் பழக்கப்பட்ட பாவக்கட்டுகளை அவிழ்க்கவும் தீமை செய்து ஒடுங்கின ஆன்மாக்களை நன்மை செய்யும் அகலமான பாதையில் விடவும் பரமான்மாவில் மகிழ்ச்சியாயிருக்கும் வெள்ளுடையை உடுத்தவும் பரமான்மாவைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர்கள் பாடவும் செய்விக்கிறதற்காக உங்களுக்குச் சொல்ல வந்தேன்.

908. நீங்களோ என்னைப்போல் உங்களுக்குச் சொல்ல வந்த பல அன்பர்களை கற்களால் எறிந்தும் வாளினால் வெட்டியும் மலையின் உச்சியிலிருந்து உருட்டியும் நெருப்பினால் சுட்டெரித்தும் விலங்குகளினால் கொன்றும் கொடுந் துன்பங்கள் புரிந்து வருத்தப்படுத்தியும் உங்கள் தீய செயல்களை மறவாதிருப்பதற்காக அவ்வன்பர்களின் சமாதியில் அடையாளங்களை நிறுத்தி அடிக்கடி நினைப்பூட்டி மகிழ்ந்து வருகிறீர்கள்.

909. அக்கிரமக்காரரே! மாயாபுரியின் மக்களே! ஆசைமுதலிய பதின்மூன்று கோத்திரத்தாரே! நான் சொல்வதைச் சற்று கவனியுங்கள். நீங்கள் மாயக்காரரைப்போல் நோன்பிருக்க வேண்டாம். உங்கள் நோன்பில் எனக்கு விருப்பமில்லை. உங்கள் வணக்கமும் செபமும் என் கண்களுக்கும் காதுகளுக்கும் மிகவும் அருவருப்பாயிருக்கின்றன.

910. உங்கள் விருப்பத்திற்கேற்ற பலிகளில் நான் பிரியப்படுவேனோ? உள்ளன்பில்லாத உங்கள் காணிக்கைகள் எனக்கு வேண்டாம். நீங்கள் தீய வழியில் தேடிய பொருளில் கொஞ்சம் எடுத்து என்னை ஏமாற்றுகிறீர்கள்.

911. நீங்கள் என்னை ஒரு விளையாட்டுப் பொருளாக வைத்து திருவிழாக் கொண்டாடுகிறீர்கள்; இவைகளினால் நான் மிகவும் சலிப்புற்றிருக்கிறேன்.

912. என் கோயிலில் உங்கள் பெருமையைக் காட்ட வருகிறீர்கள். உங்கள் உள்ளமோ கொள்ளையினுலும் கொடுமையினுலும் நிறைந்திருக்கிறது.

913. 'உங்களுக்காக குழல் ஊதினேம். நீங்கள் கூத்தாடவில்லை. உங்களுக்காக அழுதோம். நீங்கள் மாரடிக்கவில்லை' என்று சொல்லும் சிறு பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள்.

914. பரமான்மாவை அறியும் அறிவாவது அல்லது அவர் காட்டிய நல்வழிகளில் நடக்கவாவது உங்களுக்குத் தெரியாது. தீமையை வெறுக்கவும் நன்மையைச் செய்யவும் பரமான்மாவை மகிழ்விக்கவும் அவருக்கு விருப்பமானவைகளைச் செய்யவும் உங்களுக்குத் தெரியாது.

915. உங்கள் தீமையான செயல்களையும் குணங்களையும் விட்டு விட அறியீர்கள். ஆனாலோ உங்கள் சுற்றுப்பக்கங்களில் உண்டாகும் எந்த நன்மையையானுலும் ஒரு நொடிப்பொழுதில் அழிக்க நன்றாய்த் தெரியும்.

916. தீமையை விட்டு நன்மையைச் செய்யுங்களென்று சொல்லும் பெரியோர்களை மிக எளிதாய்க் கொல்லத் தெரியும். அவர்கள் சமாதியில் பழிப்புக்கிடமாக கட்டடங்களைக் கட்ட அதிலும் நன்றாய்த் தெரியும்.

917. இப்படி நீங்கள் செய்வீர்களென்று உங்கள் வீட்டின் சுவரிலுள்ள கற்களும், கைமரங்களும் ஒவ்வொன்றும் அறிவிக்கின்றன. தீமைகளால் உங்கள் வீட்டைப் பெரிதாக்குகிறீர்கள். குற்றமில்லாதவனுடைய இரத்தத்தினுல் உங்கள் வீட்டிற்கு வண்ணம் தீட்டுகிறீர்கள்.

918. ஆகாதவன் தன் நினைப்பையும் தீங்கன் தன் செய்கையையும் விட்டு பரமான்மாவினிடம் திரும்பக் கடவன். அடைந்தோரைக் காக்க முடியாதபடி அவர் கைகள் குறுகிப்போகவுமில்லை. அவர் கிருபை என்றுமுள்ளது.

919. உண்மையான உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களினுலும், நீதியைக் கூறி அறிவிக்கும் சொல்லினுலும், நன்மையான உங்கள் செய்கைகளினுலும் பரமான்மாவை மேன்மைப் படுத்துங்கள்.

920. நீங்கள் நோன்பிருக்கும் நாளில் பரமான்மாவைப் பற்றி அடிக்கடி நினைப்பதை விட்டு நன்மையானவைகளை எப்படிச் சொல்லுவேன், நன்மையானவைகளை எப்படிச் செய்வேன் என்ற நினைப் பில்லாமல், நான் பிறரை எப்படிக் கெடுப்பேன், எப்படி அவர்கள் பொருளை எடுத்துக்கொள்வேன், ஆதரவில்லாத சிறு குழந்தைகளையும் கைம் பெண்களையும் எப்படி ஏமாற்றுவேன், அவர்கள் வீடுகளையும் பொருள்களையும் எப்படி எடுத்துக் கொள்வேன், ஏழைகளை ஒடுக்கி அவர்களை எப்படி

தவிக்க விடுவேன் எந்தப் பலகாரம் எப்படிப் பக்குவம் செய்து தின்பேன், அதில் நெய்யையும் தித்திப்பையும் எப்படிச் சேர்ப்பேன் என்று நினைப்பதற்காக நீங்கள் நோன்பிருக்கிறீர்கள்.

921. பிறருக்குத் தீங்கிழைக்க வேண்டுமென்ற உங்கள் எண்ணம் முடிந்ததானால் உங்கள் வயிற்றை நிரப்ப பலகார வகைகள் ஆயத்தமாகி விட்டதானால் உங்கள் நோன்பு முடிந்தது.

922. "இந்த நாளில் உபவாசிக்கிறதுபோல இனி உபவாசியாதிருங்கள். அழுக்கு வஸ்திரம் உடுத்திக்கொள்வதும் சாம்பலிலும் தரையிலும் உட்கார்ந்திருப்பதும் முகத்தை வாடப்போட்டு 'இவன் மகா தவசி அடிக்கடி நோன்பிருக்கிறவன்' என்று பிறர் கண்டு மெச்சும்படியான உங்கள் கொள்கையை நான் விரும்பவில்லை.

923. உங்களைப் பிடித்திருக்கும் தீய இச்சைகளை விட்டு விடுகிறதும், பாவத்தின் நுகத்தடியை உதறிவிடுகிறதும், நொறுக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், பிறர் இடுக்கண்களைத் தீர்ப்பதும், பசியுள்ள ஒருவனுக்கு உன் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், ஆதரவில்லாமல் துரத்துண்ட சிறுமையானவனை வீட்டில் சேர்த்துக்கொள்வதும், உடையில்லாதவனுக்கு உடை கொடுப்பதும், ஆதரவற்ற சிறுவர்களின் நியாயத்தையும் கைம்பெண்ணின் நியாயத்தையும் விசாரித்து இரக்கம் செய்வதும், மாமிசமான எவனுக்கும் உன்னை ஒளிக்காமலும் பிறர் புறணி பேசாமலும் பிறனை அவமரியாதை செய்யாமலும் இருப்பதல்லவோ பரமான்மாவிற்கேற்ற நோன்பாகும்.

924. அப்பொழுது உங்கள் இருள் நீங்கி விடியற்கால வெளுப்பைப் போல உங்கள் வெளிச்சம் எழும்பி உங்கள் சுகவாழ்வு துளிர்த்து உங்கள் நீதி உங்கள் முன்னால் செல்லும்; பரமான்மாவின் கிருபை உங்களைப் பின்னால் காக்கும். அப்பொழுது பரமான்மாவைக் கூப்பிடுவீர்கள். அவர் இதோ நானிருக்கிறேன் என்று உங்களுக்குச் சொல்லுவார்.

925. அவர் உங்கள் ஆன்மாவை நன்மையினால் நிரப்பிச் சிவவழியில் உங்களை வழி நடத்துவார். நீங்கள் நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போலவும் வற்றாத நீர் ஊற்றுக்களைப் போலவும் இருப்பீர்கள்" என்று மாயாபுரியின் மக்களைப் பார்த்து உரத்துச் சொல்லுகிறார்.

926. இப்படி அவர் சொல்லிக்கொண்டிருக்கும் சொற்களில் ஒரு எழுத்தாவது தவறாமல் பர்வத புத்திரியின் காதில் படுகிறது.

## 36. பர்வத புத்திரிக்கு முனிவர் பரமான்மாவைப் பற்றிச் சொல்லுதல்.

927. இதை அறிந்த முனிவர் பர்வத புத்திரியைத் திரும்பிப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்து இவள் பரமான்மாவைத்தேடிவந்திருக்கிருள் என்றும் தன் இனத்தார் யாராவது தன்னைப் பின்தொடர்ந்து வருவார்களோவென்று பயந்து இருக்கிருளென்றும் அறிந்து அவளை உட்காரச் சொல்லி பரமான்மாவின் குணங்களையும் அவருடைய பெருமைகளையும் அவருக்கும் பர்வத புத்திரிக்கும் உள்ள உறவையும் எடுத்துச் சொல்லுகிருர்.

928. "ஏ! பர்வத புத்திரி! பரமான்மா உன்னையே விரும்பி மாயாபுரிக்கு ஒருதரம் வந்தார். அப்போது நீ அறியாத குழந்தையாயிருந்தாய். இந்த மலையின் நடுவிலுள்ள ஒரு குகையின் அருகே ஒரு குழந்தையாகப் பிறந்தார்.

929. கர்த்தத்துவம் அவர் தோள்களில் இருந்தது. அவர் முகமண்டலத்தில் தெய்வப் பிரகாசம் விளங்கிற்று. மிகவும் அதிசயமானவர். ஆலோசனைக்குக் கர்த்தன். மிகுந்த வல்லமையுள்ளவர். நித்திய பிதாவின் தற்சொரூபி. சமாதானப் பிரபு என்று சொல்வார்கள்.

930. சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்கவே பிறந்தார். நன்மையானவைகளை எப்படிச் செய்வதென்று உன் குலத்தாருக்கும் உனக்கும் முன் மாதிரி காட்டினுர். தனக்குரிய சகல மகிமைகளையும் மறந்து உன் குலத்திலே மிகவும் எளிமையாகப் பிறந்தார்.

931. ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பலனையும் அருளும் ஆவியும், அறிவையும் தெய்வத்திற்கு அஞ்சும் அச்சத்தையும் அருளும் ஆவியும் அவர்மேல் தங்கியிருந்தன. தெய்வத்திற்கு அஞ்சி நடத்தலே அவருக்கு உகந்த மணமாயிருந்தது.

932. அவர் தமது கண் கண்டபடி நியாயந் தீர்க்காமலும் காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும் நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து உண்மையின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களை ஆண்டுகொள்வார்.

933. அவர் கூக்குரலிடவுமாட்டார். அவர் சொல் வீதிகளில் கேட்கப் படவுமாட்டாது. அவர் நெறிந்த நாணலை முறியாமலும், மங்கி எரிகிற திரியை அணையாமலும் நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்.

934. தேசங்கள் அவருடைய சொல்லுக்குக் காத்திருக்கும். தீவுகள் களிகூரும். அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து இரட்சிப்பென்னும் பாகையைத் தமது தலையிற் சூடி, நீதி சரிக்கட்டுதலை உடையாக உடுத்தி, வைராக்கியமென்னும் சால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிருர்.

935. அவரவர் செய்கைக்குத் தக்க பயனை அளிப்பார். பூமியின் கடையாந்தரம் வரைக்கும் அவருடைய பெயர் எட்டியிருக்கும். அவருடைய காலத்தில் ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும்; புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும் காளையும் இளஞ்சிங்கமும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்.

936. பசுவும் கரடியும் கூடிமேயும்; அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும். சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்.

937. பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையின்மேல் விளையாடும். பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும். இந்த பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாரும் இல்லை; கேடு செய்வாரும் இல்லை. கடல் தண்ணீரினால் நிறைந்திருக்கிறது போல் இந்த மலை கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

938. இந்த மலையில் ஒரு பெரும் பாதை உண்டாகியிருக்கும். அது தூய்மையான வழியென்று சொல்லப்படும். தீமை செய்கிறவனும், தன் மனதை தீமையினால் தீட்டுப்படுத்துகிறவனும் அவ்வழியில் நடப்பதில்லை. நன்மையையே செய்கிறவன் பேதையாயிருந்தாலும் அவ்வழியில் திசை தவறிப்போவதில்லை.

939. அங்கே கொடிய விலங்குகளிருப்பதுமில்லை, போவதுமில்லை, காணப்படவுமாட்டா. தீமையினின்று விலகி நன்மை செய்யும்படி மீட்கப்பட்டவர்களே அவ்வழியில் நடப்பார்கள். அழிவற்ற மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும். கலக்கமும் தவிப்பும் ஓடிப்போம். பூமியில் விதைகள் முளைப்பதுபோல நீதியும் துதியும் அங்கே முளைக்கும்.

940. சீயோன் குமாரத்தியே! உன்பொருட்டாக என் மனம் பூரிப்பாய் மகிழுகிறது. என் பரமான்மாவுக்குள் என் உள்ளம் களிகூருகிறது. மணவாளன் அணிகலங்களினால் தன்னை அணிந்துகொள்வது போலவும் மணவாட்டி நகைகளினால் தன்னை அழகு செய்துகொள்வது போலவும் அவர் இரட்சிப்பின் உடைகளை உடுத்தி நீதியின் சால்வைகளை உனக்குத் தருவார்.

941. சாதிகள் உன் நீதியையும் சகல அரசர்களும் உன் பெருமையையும் காண்பார்கள். பரமான்மா சொல்லும் புதுப்பெயரினால் நீ அழைக்கப்படுவாய். நீ அவருடைய கையில் அழகிய அரச முடியாயிருப்பாய்.

942. நீ இனி கைவிடப்படுவதில்லை. உன்னை நோக்கி 'சீயோன் குமாரத்தியே! இதோ உன் இரட்சிப்பு வருகிறது. அவர் உன் நன்மைக்கு அருளும் பயன்களும் அவர் முன்பாக வருகின்றனவென்றும், உன்னைத் தம்முடைய சனமென்றும், தம்மை உனக்குத் தலைவனென்றும் சொல்லும் ஒலி பூமியின் கடையாந்தரம் வரைக்கும் முழங்குகிறது.

943. உன் வெட்கத்திற்குமாறாக இரட்சிப்பும் துயரத்திற்குமாறாக மகிழ்ச்சியுமிருக்கும். உன்மதில்களை இரட்சிப்பென்றும் உன் வாசல்களை துதியென்றும் சொல்லுவார்கள்.

944. இனி சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலும், சந்திரன் இரவில் தன் வெளிச்சத்தால் உனக்கு ஒளிகொடாமலும் பரமான்மாவே உன் அழிவற்ற வெளிச்சமும் மகிமையுமாயிருப்பார்.

945. உன் துயர நாட்கள் முடிந்துபோம். உன்னைச்சேர்ந்த எல்லாரும் நீதிமான்களாயிருப்பார்கள். நன்மையையே செய்து பூமியை உரிமையாக்கிக்கொள்வார்கள். நீயோ நான் நட்ட கிளையும், நான் மகிமைப்படும்படி என் கையினால் நாட்டின மனமகிழ்ச்சியின் நாற்றுமாயிருப்பாய். உன்னோடு என் நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்' என்று பரமான்மா சொல்லுகிற சொல் எதிரொலியிடுவதைப் பார்.

946. உனக்கு இனிமேல் வர இருக்கும் தீங்குகள் யாவற்றையும் நீ வெல்லும்படியாக பரமான்மாவின் அடியார்கள் அங்கங்கே உனக்குச் சொல்லுவார்கள். பெண்ணாயிருக்கிற உனக்குத் துணை நிற்கும்படி தமது பணிவிடைக்காரருக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

947. இந்த மலையின் குறுக்குப் பாதையாக மாயாபுரியின் உன் இனத்தார் உன்னைத் தேடக்கூடும். இதோ நீ காண்கிற இந்தக் குன்றுக்கப்பால் போவாயானால் அவர்கள் உன்னைத் தேடி வரமுடியாது.

948. அங்கங்கே தவம் செய்துகொண்டிருக்கும் அடியார்களையும் பாதை தெரியாத இடத்தில் வழிகாட்டுதற்குத் துணைநிற்கும் ஆவிகளையும் நீ காண்பாய்.

949. இந்த மலையில் பரமான்மாவுக்காக பசு மேய்த்துக்கொண்டிருக்கும் இடையர்கள் உனக்கு வேண்டும் உதவிகளையும் நன்மைகளையும் செய்வார்கள். மலையிலுள்ள ஒவ்வொரு சுனையும் குன்றும் மறைபொருளும் அவர்களுக்கு நன்றாய்த்தெரியும். உன்னைக் காத்துப் பரமான்மாவினிடம் வழி நடத்துவார்கள்.

950. நீ இந்தப் பாதையில் வருவாய் என்றும், உன் இனத்தாருக்கு அஞ்சி வருகிறாய் என்றும் தெரிந்து உனக்கு பரமான்மாவின் பெருமையைச் சொல்லவும் உன் அச்சத்தைச் சற்று தெளிவிக்கவும் என்னை இங்கே இருக்கச் சொன்னார்.

951. நீ பரமான்மாவிடம் போய்ச் சேரும் வரைக்கும் மாயாபுரியில் உள்ளவர்களுக்கு அவர்கள் தீமையை எடுத்துக் காட்டிக்கொண்டேயிருப்பேன். அவர்கள் என்னைக் கொன்று விடுவார்களென்று நீ அஞ்சவேண்டாம். நீ காண்கிற இந்தக் குன்றிலிருந்து மற்றக் குன்றுக்குத் தாவிப் போவேன்; அவர்களால் என்னைப் பின்தொடர முடியாது.

952. நான் அவர்கள் தீமையை அவர்களுக்கு உணர்த்துவதனால் அவர்கள் உன்னைப் பின்தொடர்வதில் நோக்கமாயிரார்கள்; நீ அஞ்சாமற் போ. உனக்கு நன்மையுண்டாகட்டும்" என்று வாழ்த்தி அனுப்புகிறார்.

---

## 37. நம்பியார்.

953. இனிமேல் தெளிந்த நீரோடைகளும் பூஞ்செடிகளும் நிறைந்த அழகான புல்லடர்ந்த ஒரு இடத்திற்கு வருகிறாள். அங்கே நம்பியார் பசுக்களை மேய்த்துக்கொண்டிருப்பதைக் காண்கிறாள்.

954. அவனுடைய சீரான உடையும் வஞ்சகமில்லாத மனமும் குளிர்ந்த முகமும் மிகவும் அழகாயிருந்தன. தலைவரைக்கும் உயர்ந்த தடியும் காற்றிற் பறந்தாடும் அவன்தாடியும் முடியக்கூடாதிருந்த அவன் பரட்டை மயிரும் ஒழுங்கில்லாத அவன் தொடுவார்ச் செருப்பும் மா உரிகளால் சுற்றப்பட்டுக் கண்ணியிடப்பட்ட கடையாலும் பார்வைக்குச் சற்று அழகில்லாதிருந்தாலும் அவனது குளிர்ந்த மனமும் இனிய சொல்லும் பர்வத புத்திரியின் அச்சத்தைச் சற்று தீர்த்தன.

955. அவள் நம்பியாரைப் பார்த்து "ஓ அண்ணா! நான் இந்த வழியாகப் பரமான்மாவைத் தேடிக்கொண்டு போகிறேன். என்னை அன்னகாம மன்னவன் மகள் என்பார்கள். மாயாபுரி என் ஊர். நான் என் தந்தைக்கும் தாய்க்கும் ஒரே பிள்ளை. அவர்களுடைய தீய செயல்கள் என் மனதிற்குப் பிடிக்கவில்லை. இந்த மலைக்கு அரசனான பரமான்மாவில் மெய்யாகவே நான் விருப்பங்கொண்டேன். அவரைத் தேடிப் போகிறேன். தாங்கள் நான் அவரைக் கண்டடையும்படி வழியைச் சொல்லுவீர்களானால் எனக்கு மிகவும் நன்மையாயிருக்கும். தாங்கள் யார்? தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? எனக்கு உதவி செய்யத் தங்களால் கூடுமா? என்று மிகுந்த வணக்கத்தோடும் மரியாதையோடும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறாள்.

956. இச்சொற்கள் நம்பியாரின் காதில் படவே அவர் மிக மகிழ்ந்து "அம்மணி! நீங்கள் நெடுந்தூரம் நடந்து அலுத்தவர்கள் போலிருக்கிறது. இந்த மரத்தினடியில் உட்காருங்கள்; முகம் கழுவுவதற்கு உங்களுக்குத்

தண்ணீர் கொண்டுவருகிறேன்" என்று தண்ணீர் கொடுத்துப் பசிக்கு உதவக்கூடிய கனிந்த காட்டுப் பழங்களையும் கலயத்திலிருந்த பாலையும் கொடுத்தான்.

957. பசியினால் களைத்த சீயோன் குமாரத்தி தன் களைப்பைத் தீர்த்துக் கொண்டு பசியாறினவுடன் நம்பியாரின் கனிந்த அன்பிற்காக நன்றி கூறினாள்.

958. இந்த முகமனைப் புன்னகையோடு கேட்டு "நான் இந்த முகமனை ஏற்றுக்கொள்ளத் தகுந்தவன் அல்லன். உன்னைப் போல் இந்த வழியில் நடக்கிறவர்களுக்கு உதவி செய்யும்படி பரமான்மா என்னை இங்கே வைத்திருக்கிறார்.

959. இதோ நீ காண்கிற பசுக்களை மேய்த்துக், கட்டிக், கறந்து கறந்த பாலைக் கடைந்து வெண்ணெயாக்கி வெண்ணெயைப் பரமான்மாவுக்கு நான் கொடுக்க வேண்டியவன். இதைத் தவிர அவரைத் தேடிவருகின்றவர்களுக்கு வேண்டும் உதவி செய்வது என் வேலை.

960. உனக்கு வேண்டியவைகளை என்னிடம் கேள். கூடியவைகளை உனக்குக் கொடுத்துச் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லுவேன். கொஞ்சமேனும் யோசிக்கவேண்டாம். என்னை வேறாக நினைக்காதே. உன்னுடன் பிறந்தவனாக உண்மையாக நம்பு. உன் பயணமும் எண்ணமும் விரைவில் வாய்க்கட்டும்" என்று இனிய மொழிகளால் விடைபகர்ந்தான்.

961. பர்வத புத்திரி அச்சம் நீங்கி மகிழ்ச்சியுடன் மனங்குளிர்ந்து "ஏ அண்ணா நம்பியாரே!" என்று பின்வருமாறு பேசத்தொடங்கினாள்.

---

## 38. சீயோன் குமாரத்தி நம்பியாரின் வரலாறு வினவுதல்.

962. சீயோன் குமாரி:—"நீர் யார்? உம்முடைய ஊர் எது? நீர் இங்கே தனியாய் மாடு மேய்த்துக்கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? இவற்றை அறியவிரும்புகிறேன். இதை எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள்.

963. நம்பியார்:—"ஒ அம்மா! நான் இம்மலை அடிவாரத்திலிருக்கும் மாயாபுரிக்கு அரசனாகிய அன்னகாம மன்னனுக்குச் சொக்காரன் மகன்; என்னைச் சேர்ந்தவர்களும் என்னுடன் பிறந்தவர்களும் உன்னைப்போலவே மாயாபுரியின் அரசாட்சிக்கு உரிமையுள்ளவர்கள்.

964. நாங்கள் அவ்வூரின் அமைப்பையும் அழகையும் இன்பத்தையும் நெடுநாள் அனுபவித்துக்கொண்டிருந்தோம். இப்படி யிருக்கையில் இம்மலைக்குத் தலைவராகிய பரமான்மா தாமிருக்கும் விண்ணுலகையும் அதன் எல்லாப்பெருமையையும் வெறுத்து இந்தத் தாழ்ந்த இடமாகிய மாயாபுரிக்கு வந்தார்.

965. ஒரு சந்நியாசியைப் போல சிலகாலம் தங்கியிருந்து மாயாபுரியின் கொடுமையை எடுத்து உணர்த்தி தீமைகளை விட்டு நன்மை செய்யும் படி தாம் உணர்த்தியபடியே செய்து காட்டி பகலில் நன்மை செய்வதற்காக நடப்பதும் இரவில் தனித்து கடவுளை வழிபடுவதுமாயிருந்தார்.

966. வியக்கத்தக்க பல விம்மிதங்களையும் செய்தார். எங்கள் அறியாமை களைக் கண்டு அறிவு உணர்த்தினர். அந்தக்காலத்தில் நாங்கள் அவர்மேல் வெறுப் புள்ளவர்களாகி அவரைப் பலவாறு துன்பப்படுத்திக் கொன்று விட்டோம்.

967. அவரோ தாம் சாகாமல் மறுபடியும் எங்கள் வீதிகளில் காணப் பட்டு எங்கள் தீமைகளை எடுத்து உணர்த்துவதைக் கேட்ட உடனே அச்சம் எங்களைப் பிடித்தது.

968. அவருக்குச் செவி கொடுத்தோம், எங்கள் மன இருள் நீங்கிற்று; பரமான்மா காட்டின நன்மாதிரியின்படி நடக்க விரும்பினேம். அவர் எங் களுக்கு 'நீ உன்னில் அன்புகூருவதுபோல் உன் பிறனில் அன்பு கூர வேண்டும்' என்ற மேலான வழியை உணர்த்தி இம்மையின் முடிவு வரை யில் உங்களோடிருப்பேன் என்று வாக்களித்து என் பெயரால் நீங்கள் எதைக்கேட்டாலும் கொடுப்பேனென்று உறுதி சொன்னர்.

969. அதுவுமன்றி நீங்கள் உலக மெங்கும் போய் இந்த நற்செய்தியைச் சொல்லுங்கள். என் வார்த்தைகளில் அன்பு வைத்து என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் வீடடைவான் என்று கற்பித்து இதோ உன் கண்ணெதிரில் காண்கிற மலையின் உச்சியில் பிதாவின் சந்நிதியில் போயிருக்கிறர்.

970. அப்போதைக்கப்போது எங்களிடம் வருவார். அவரைப் பார்ப் பதற்காக மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருப்போம். என் சீவனத்தின் பொருட்டு நீ காண்கிற இப்பசுக்களை மேய்த்துக்கொண்டிருக்கிறேன்.

971. எனது இனத்தார், உடன் பிறந்தவர்கள் தாய் தந்தையர் யாவரை யும் வெறுத்துவிட்டு வந்தேன்; ஆசை முதலிய பதின்மூன்று கோத்திரத் தாரையும் மற்றும் என் தோழர்களையும் விட்டு யாருமில்லாதவனுய் பரமான் மாவையே நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

972. நீயும் இப்படி வருவாயென்று எனக்குத் தெரியும். உன் வரவிற்காக எதிர்பார்த்திருந்தேன். கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முன்னே நீ என்னுடன் பிறந்தவள். நீயும் பரமான்மாவைத் தேடி வந்ததனால் பரமான்மாவுக்குள் இப்போது உடன்பிறந்தவளாகிறாய்; ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். உன் மனதில் தோன்றும் ஐயங்களைக் கேள். என்னால் கூடியவைகளைத் தெளிவாய்ச் சொல்லுகிறேன்'' என்றான்.

973. இதைக் கேட்ட பர்வத புத்திரி, நம்பியார் தன் சிற்றப்பன் மகன் என்பதைத் தெரிந்து மிகவும் மகிழ்ந்தாலும் பரமான்மா மாயாபுரிக்கு வந்ததும் தன் இனத்தார் அவரைக் கொன்றுவிட்டதையுங் கேட்டு மிகவும் அங்கலாய்த்து "என் அன்புள்ள அண்ணா! பரமான்மா எப்போது வந்தார்? அவர் என்னென்ன செய்தார்? அவரை எப்படிக் கொன்றுவிட்டார்கள்? இவற்றை விளங்கச் சொல்ல வேண்டுகிறேன்'' என்றாள்.

---

## 39. பரமான்மாவின் வரலாற்றுச் சுருக்கம்.

974. நம்பியார் இதைக் கேட்டவுடன் மிகவும் வருந்தி "அவருடைய வரலாற்றையெல்லாம் யாரால் சொல்லமுடியும்; என் அருமைத் தங்கையே! அவர் இளங்கிளையைப் போலவும் வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் இருந்தார்.

975. அவருக்கு அழகுமில்லை. மாயாபுரியார் விரும்பக்கூடிய ஒரு வடிவமும் இல்லை. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மாயாபுரியாரால் புறக்கணிக்கப்பட்டவரும் துயரம் நிறைந்தவரும் பாடனுபவிக்கிறவருமாயிருந்தார்.

976. அவருடைய எளிமையைக்கண்டு நாங்களெல்லாரும் முகத்தை மறைத்துக்கொண்டோம். கொஞ்சமாவது எண்ணாமற் போனோம்.

977. அப்படியிருக்கையில் மாயாபுரியாரின் தீமைக்காகவும் எங்கள் தீமைகளுக்காகவும் துன்புறுத்தப்பட்டார். அவர் காயப்பட்டு நொறுக்கப்பட்டார்.

978. தெய்வத்தோடு எங்களை ஒப்பரவாக்கும்படி தீமைக்கு நாங்கள் அடையவேண்டிய பாடுகள் யாவும் அவர் அடைந்தார். அறிவில்லாத ஆடுகளைப் போல எங்கள் தீமைகளில் துணிந்து நடந்தோம். அவைகள் எல்லாவற்றிற்கும் தண்டனை அவர் அடைந்தார்.

979. அவர் நொறுக்கப்பட்டும் மிகவும் ஒடுக்கப்பட்டுமிருந்தார். ஆனாலும் அவர் தமது வாயைத் திறக்கவில்லை. அடிப்பதற்குக் கொண்டு போகப்படும் ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும் மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக அடங்கி நிற்கிற ஆட்டைப் போலவும் இருந்தார்.

980. அவர் பேசாதிருந்தபோது அவருடைய நியாயம் மறக்கப்பட்டது. உழுகிறவர்கள் தங்கள் படைச்சால்களை அதிகமாக்குகிறது போல என் இனத்தாரால் மிகவும் இகழ்ச்சி செய்யப்பட்டார். என் இனத்தாரின் மீறுதலினிமித்தம் அவர் துன்புறுத்தப்பட்டார்.

981. மாயாபுரியின் மக்களைப் பார்க்கிலும் அவர் முகப்பார்வை அந்தக் கேடாயிற்று. பலரும் அதைக்கண்டு மலைப்படைந்தார்கள். தீயவரோடே அவருடைய பங்கை ஏற்படுத்தினார்கள்.

982. இப்படியெல்லாம் நாங்கள் செய்திருந்தும் எங்கள் நன்மைக் காகவே நாங்கள் ஈடேறும் பொருட்டு இவைகள் யாவையும் அடைந்தார். இதை முற்றிலும் உணராத கொடியரில் நானும் ஒருவனானேன்.

983. அவர் மிகுந்த துன்பமடைந்து 'தாகமாயிருக்கிறேன்' என்று சொன்னபோது கசப்புக் கலந்த காடியைக் குடிக்கக் கொடுத்தவன் நானே. அப்படியிருந்தாலும் அவர் 'பிதாவே இவர்களுக்கு மன்னியும் இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று தெரியாமல் செய்கிறார்கள்' என்று மிகுந்த உருக்கமாகப் பிதாவைப் பார்த்து விண்ணப்பம் செய்தார்.

984. அவர் இதை உண்மையாகவே கேட்டுக்கொண்டாரென்று அவர் முகத்தில் விளங்கிய பொறுமையினால் அறிந்து என் மனதில் துன்பமடைந்தேன். திரும்ப அவருடைய சொற்களைக் கேட்பேனோ என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்.

985. அவரைத் திரும்பக்கண்டவுடன் எனக்கிருந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அவர் சித்தத்திற்கு என்னை முற்றும் ஒப்படைத்தேன். அவர் காட்டிய மாதிரியின்படி என்னை நடக்கச் சொன்னார். அதன்படி நடந்து கொண்டு உன்னைப்போல் இங்கே வருகிறவர்களுக்குப் பரமான்மாவைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

986. கொஞ்சகாலம் பொறுத்து உன்னை மலையின் மேல்பாகத்திற்கு அழைத்துக்கொண்டுபோக வருவேன் என்றார் அம்மா" என்று மன வருத்தத்தோடும் அன்போடும் சொன்னான்.

987. பர்வத புத்திரி இதைக் கேட்டு இன்னும் அதிக உணர்வுடையவளாய் பரமான்மாவில் மிகுந்த ஆவலுடையவளாய் "ஏ அண்ணா! எனக்கு பரமான்மாவின் வரலாறுகளை விரிவாய்ச் சொல்லாமல் மிகவும் சுருக்க

மாகச் சொல்லுகிறீர்கள். அவரை அறியவேண்டுமென்று விருப்பங் கொண்ட எனக்கு இது போதாது. நானும் என் இனத்தாருமா அவருடைய சாவிற்குக் காரணமாயிருந்தோம் என்று பெருமூச்செறிந்து அவரைப் பற்றி உமக்குத் தெரிந்தவைகள் எவைகளோ அவைகள் யாவையும் கேட்க விரும்புகிறேன். அவற்றுள் ஒன்றும் விடாமல் உள்ளதைச் சொல் லும்'' என்று அன்போடு கேட்டாள்.

988. நம்பியார் "நல்லது அம்மா, அவருடைய வரலாற்றில் சிலவற்றைச் சொல்லுகிறேன்'' என்று அவர் பிறந்தது முதல் முக்கியமாக நடந்த சில வைகளைச் சொல்லத் துவக்கினன்.

---

## 40. பரமான்மா பிறந்தபொழுது தேவதூதர்கள் பாடியது.

989. "ஏ அம்மணி! இதோ உன் கண்ணெதிரில் தோன்றும் குன்றைச் சற்று உற்றுப்பார். அது இந்த மலையின் நடுவிலிருக்கிறது. அதன் உச்சிக்குக் கீழ் ஒரு குகையும் அதன் பக்கத்தில் மரங்களாலும் படர் கொடி களாலும் மூடப்பட்ட ஒரு அறச்சாலையும் அதற்கு அருகில் மாடுகள் கட்டும் படியான கொட்டில்களும் அதற்குச் சற்று கீழாக குடிகளுள்ள சிற்றூரும் இருக்கிறதைக் காணலாம்.

990. இச் சிற்றூர் மாயாபுரியின் எல்லையை அடுத்திருக்கிறது. இதை அப்பத்தின் வீடு என்று பொருள் கொள்ளும் பெத்தலேகேம் என்பார்கள். இது வழிப்போக்கராகவும் தவசிகளாகவும் வரும் யாவரும் வந்து தங்கி, வேண்டும் உணவுப்பொருள்கள் யாவும் பெற்றுச், சிறிது இளைப்பாறிப் போவதற்கு இடமாயிருந்தது.

991. இதன் ஓரமாய் பசுமாட்டின் முன்னணையில் அதுவும் உணவை விளைவிக்கும் புல்லணையில் பிறந்தார்.

992. 'நானே மெய்யான சீவ அப்பம்' என்று சொன்ன பரமான்மா இந்தப் புல்லணையில் சிறு குழந்தையாகப் பிறந்திருக்கையில் அவருடைய தந்தை யும் தாயாரும் அவருடைய பெருமையைத் தெரிந்துகொள்ளாமல் இந்தக் குழந்தை எப்படிப்பட்டதோ என்று வியந்தார்கள்.

993. புருடனை அறியாத கன்னிகையையும் கன்னியை அறியாத புரு டனையும் முன்னும் பின்னும் தெரியாத பசுக்கள் மோந்து நிற்பதையும் பார்க்க மிகவும் வியப்பாயிருந்தது.

994. இந்த மலையின் உச்சியிலிருந்த தேவர்களும் தூதர்களும் "உன்ன தங்களிலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியில் சமாதானமும் மனுடர் மேல் பிரியமும் உண்டாவதாக'' என்று ஆர்ப்பரித்துப் பாடினார்கள்.

995. அவ் வெளியில் இரவில் பதினெட்டே முக்கால் நாழிகைக்கு ஒரு பெரும் வெளிச்சமுண்டாயிற்று. அப்போது நானும் என் உறவினரும் ஆட்டுமந்தைகளைக் காத்துக்கொண்டிருந்தோம்.

996. வானத்தில் தோன்றிய தேவதூதர்கள் பாடி முடிந்தவுடன் " ஒரு நற்செய்தியை அறிவிக்கிறோம். உங்களெல்லாருக்கும் மீட்பை அருள பரமான்மா இதோ இந்த அப்பத்தின் வீட்டில் யாவரும் உணவுகொள்ளும் இந்த அறச்சாலையின் ஓரத்தில் பசுவின் முன்னணையில் புல்லின்மேல் பிறந்திருக்கிறார். கந்தைகளால் சுற்றப்பட்டிருக்கிறார். இதுவே உங்களுக்கு அடையாளம். நீங்கள் போய்ப் பாருங்கள் " என்று சொன்னார்கள்.

## 41. பரமான்மாவை மேய்ப்பர்கள் சந்தித்தல்.

997. இந்தத் தோற்றத்தைக் கண்டு மலைப்புற்ற நாங்கள், உடனே எழுந்திருந்து எங்கள் கைகளிலிருந்த பாலையும் உறை தயிரையும் வெண்ணையையும் பாலேட்டையும் அவருக்குக் காணிக்கையாக எடுத்துக்கொண்டு இந்த அறச்சாலைக்கு வந்து அவர்கள் சொன்ன அடையாளத்தின்படியே மாடுகளின் முன்னணையில் கந்தைகளால் சுற்றப்பட்டு விளங்கிக்கொண்டிருக்கிற குழந்தையைப் பார்த்தோம்.

998. ஐப்பசிமாதம் மழை மந்தாரமுள்ள இருண்ட இரவில் விளக்கில்லாத அந்தஇடம் குழந்தையின் ஒளியினாலேயே மிகவும் விளக்கமுற்றிருந்தது.

999. மந்தை வெளியில் நாங்கள் கண்ட ஒளியைப்பார்க்கிலும் இந்த ஒளி மிகுதியாயிருந்ததைக் கண்டு வியப்படைந்தோம். எங்கள் காணிக்கைகளை அவர் முன் வைத்து அடியற்ற மரம் போல் விழுந்து வணங்கினோம்.

1000. அவர் பிறந்தவுடன் முதல் முதல் எங்கள் மாடுகளும் நாங்களும் தான் அவரைக்கண்டோம். 'நானே நல்ல மேய்ப்பன்' என்று சொல்லும் அவரை நாங்களே முதல் முதல் வணங்கினோம்.

1001. இப்படி யிருந்தாலும் பின்னால் அவருடைய பெருமையைத் தெரிந்துகொள்ளாமற் போனோமே என்று, பிடரியில் ஆட்டைப் போட்டுக் கொண்டு ஆட்டைத் தேடும் எங்கள் புத்தியை நினைத்து மிகவும் வெட்கப் படுகிறேன்.

## 42. பரமான்மாவை மூவரசர் பணிதல்.

1002. நாங்கள் இப்படி பரமான்மாவை வணங்கித் திரும்புகையில் எங்கள் எதிரில் முதிர்ந்த வயதுடையவர்களாய் அரசர்க்குரிய தோற்றமும் அங்கமும் உடையவர்களாய்த் தோன்றும் மூன்று சாஸ்திரிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் ஒட்டகங்களில் ஏறிக்கொண்டு விரைவாக வருகிறதைக் கண்டேன்.

1003. அவர்கள் என்னைப் பார்த்து " ஓ நம்பி! தேவாதி தேவனாகவும் இந்த மாயாபுரிக்கு அரசனாக ஒருவர் பிறப்பார் என்பதை அவரைக் குறிக்கும் ஒரு நட்சத்திரத்தாலறிந்து மாயாபுரிக்கு (எருசலேமுக்கு) வந்தோம்.

1004. அங்கே அரசனான ஏரோதுவை (அன்னகாம மன்னனைக்) கேட்டோம். அவன் தன் நாட்டிலுள்ள மறை வல்லோரையும் அறிஞர்களையும் கேட்டதில் அப்பத்தின் வீடாகிய பெத்தலேகேமில் பிறப்பாரென்று சொன்னதை அறிந்து இங்கே வந்தோம். அவர் பிறப்பைக் குறிக்கும் நட்சத்திரம் இதோ விளங்குகிறதைப் பார்" என்றார்கள்.

1005. அப்போது நான் வானத்தில் கண்ட தோற்றத்தையும் அப்பத்தின் வீட்டில் கண்ட காட்சியையும் பரமான்மாவை நேரில் கண்டதையும் இப்போது அரசர்கள் சொல்வதையும் நினைந்து மிகவும் வியப்படைந்தேன்.

1006. அவர்களை நோக்கி" பெரியோர்களே! இந்த நட்சத்திரத்தினால் ஒரு அரசர் பிறப்பாரென்று எப்படி உங்களுக்குத் தெரிந்தது? அப்படியே ஒரு அரசர் பிறந்தாலும் அவர்கள் எல்லாரையும் பார்த்துக்கொண்டிருக்கிறது தானா உங்கள் வேலை? இதில் ஏதாவது புதுமையிருந்தால் எனக்குச் சொல்லுங்கள். நான் அந்த ஊரில் ஒரு நாழிகைக்குள்ளாக உங்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்" என்று மிகவும் வணக்கத்தோடும் அன்போடும் அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

1007. அதற்கு அவர்கள் 'இவன் உளவு தெரிந்தவன். நட்சத்திரத்தினுடைய நிலைகளையும் இவன் அறியக் கூடியவன்' என்று ஒருவாறு அந்த நட்சத்திரத்தினுடைய பெருமையைப் பற்றிச் சொன்னார்கள்.

---

## 43. மூவரசர்கள் நம்பியாருக்கு பரமான்மாவின் நட்சத்திரத்தைப்பற்றிச் சொல்லுதல்.

1008. "ஓ நம்பியாரே! இந்த நட்சத்திரம் தோன்றி இன்றுவரை ஒரு வருடமாகிறது. இன்றைக்கும் நாளைக்குமாக இரண்டேகால் நாள் மிக ஒளியோடிருக்கும். இன்றைக்குள் நாங்கள் அவரைப் பார்ப்போம்

என்பது எங்களுடைய கணக்கு. நாங்கள் அவரைக் கண்டபின் இந்த ஒளியும் மறைந்துவிடும்.

1009. தேவ குரு (வியாழன்) தனக்குரிய வீட்டிலும் ஆயுள்காரகனுகிய சனி மீனத்தில் குருவோடு கூடி ஒரே இராசி பாகை கலையிலிருக்கும் பொழுது செவ்வாய் சேருங் காலத்தில் இப்படி ஒருபெரிய வான ஒளி தோன்றுவது வழக்கம். இப்படிக் கிரகங்கள் கூடுகிறகாலத்தில் உலகத்திற் குதவி செய்யும் பெரியோர்கள் பிறக்கிறது உண்டு.

1010. இதோடு சந்திரன் சேருங்காலத்தில் மீன இராசியில் பிறக்க வேண்டும். அதாவது ராக்ஷஸ வருடம் ஐப்பசி மாதம் பதினெட்டாம் தேதி செவ்வாய்க்கிழமை திரையோதசி இராத்திரி நாற்பத்தெட்டே முக்கால் நாழிகைக்கு இரேவதி நட்சத்திரம் நாலாம் பாதத்தில் ஜனனம். புத மகாதிசையில் எட்டு நாள் பாக்கி. புதனும் சுக்கிரனும் குருவும் சொக்ஷேத் திரம். சூரியன் நீசன். சந்திர மங்கள யோகமும் குருச்சந்திர யோகமும் கூடின மீனத்தில் சனி இருந்தார். அவருக்கு நாலில் கேது. தனுர் ராகு. சிம்ம லக்கினத்தில் பிறந்திருக்கவேண்டும். எல்லாத் தீமைகளையும்வேரோடு நீக்கக் கூடிய வைராக்கியத்துடன் சிங்கத்தின் தன்மையுடையதாக பிறக்கும்.

1011. இரண்டில் புதன் உச்சன்; இரண்டாம் வீட்டிற்குக் குடும்பஸ் தானத்தில் ஸ்திரி காரகன் சுக்கிரன் சொக்ஷேத்திரத்தில் இருப்பதாலும் அவரோடு பிதுர் காரகன் சூரியன் நீசமாயிருப்பதாலும் இவருடைய குடும் பத்தார் பெண் வழி சனங்களாய் இருப்பார்களேயொழிய பிதுர்வழி சனங்களாக இருக்கமாட்டார்கள்.

1012. சகோதர ஸ்தானத்தில் பிதுர்காரகனுகிய சூரியன் மறைந்து நீச மாயிருப்பதாலும் அந்த இராசிக்குரிய சுக்கிரன் ஆட்சியாயிருப்பதாலும் இந்த ஸ்தானம் குடும்பத்திற்குக் குடும்பமாயிருப்பதாலும் குடும்பத்திற்குக் குடும்பத்தில் சுக்கிரன் ஆட்சியாக இருப்பதாலும் புதன் மாமன் காரகனு கவும் சுக்கிரன் களத்திர காரகனுகவும் இருப்பதாலும் அஷ்டவர்க்கிலும் வர்க்கோத்தமத்திலும் பலத்திருப்பதால் இவருக்குக் கூடப்பிறந்த சகோதர ராவது சகோதரிகளாவது இல்லவே இல்லை. ஆனல் இவர் சொல்லைக் கேட்டு அதன்படி செய்கிற யாவரும் இவருக்குச் சகோதரரும் சகோதரி களும் ஆகிறுர்கள். எல்லாப் பாஷைக்காரரிலும் எல்லாச்சாதியாரிலும் எல்லாத் தேசத்தாரிலுமிருந்து இவருக்கு உண்மையான சகோதர சகோ தரிகள் உண்டாகிக்கொண்டேயிருப்பார்கள்.

1013. மாதுர்காரகனுகிய சந்திரன் மாதுர் ஸ்தானுதிபதியாகிய செவ்வாயோடும் குருவோடும் ஒரே ராசி பாகை கலையில் சேர்ந்திருப்பதாலும் மாதுர் ஸ்தானத்திற்கு ஐந்தாம் இடத்தில் புத்திரகாரகனுகிய குரு இருப்பதாலும், மீன இராசிக்கு ஐந்தாமிடத்திற்குரிய சந்திரன், புத்திர காரகனேடு அஷ்டமத்திலிருப்பதாலும் மாதுர் ஸ்தானம் மாதுர்காரகனுகிய சந்திரனுக்கு நீச வீடாயிருப்பதாலும் இவர்களோடு சனி செவ்வாய் கூடியிருப்பதாலும் இந்தப் பிள்ளையைத் தவிர வேறு ஆண் குழந்தைகளாவது பெண் குழந்தைகளாவது இவருடைய தாயாரின் வயிற்றில் உண்டாகமாட்டார்கள்.

1014. மாதுர் ஸ்தானுதிபதி மாதுர் ஸ்தானத்திற்குத் திரிகோணத்தில் நிற்க அத்திரிகோணத்தில் குரு சொக்ஷேத்திரனுய் அதற்குத் திரிகோணமான கடகத்தையும் விருச்சிகத்தையும் பார்ப்பதாலும் அவ் வீட்டிற்குடையவர்கள் சேர்ந்திருப்பதாலும் மோட்ச ஸ்தானத்திற்குரிய சந்திரன் மாதுர்காரகனுகி தன் ஸ்தானத்திற்குத் திரிகோணமாகி குருவோடு சேர்ந்திருப்பதாலும் மோட்ச ஸ்தானத்தில் கேது நிற்க அவ்வீட்டிற்குடைய புதன் தன் ஸ்தானத்திற்கு சதுர்த்த கேந்திரத்தில் உச்சம்பெற்று மாதுர் காரகனேயும் குரு சனி செவ்வாயையும் பார்ப்பதாலும் இந்தச் சாதகனுடைய தாயார் மிகுந்த பாக்கியவதியாய் இக் குழந்தையினுல் பெரும் புகழடைந்து யாவராலும் வணங்கக்கூடிய உயர்ந்த நிலையை அடைவார்கள். வைதீக தன்மையில் யாவருக்கும் தாயாயிருக்கவேண்டும்.

1015. மாதுர் ஸ்தானுதிபதியாகிய செவ்வாய் மாதுர் ஸ்தானத்திற்கு மாதுர் ஸ்தானுதிபதி சனியோடு சேர்ந்து இலக்கினத்திற்கு அஷ்டமமடைந்து, ஆறும் வீட்டிற் கதிபன் சனியினுடைய சம்பந்தம் பெற்று, ஆறுக்கு ஆறும் வீட்டிற் குடையவன் பார்வை பெற்றிருப்பதால் இந்தத் தாய்க்கு இம்மகன் சாவினுல் ஒரு பெருத்த துயரம் நேரிடுமென்றும் கிரகங்கள் சொல்லுகின்றன.

1016. பிதுர் காரகனுகிய சூரியன் மூன்றும் இடத்தில் மறைந்தும், தந்தை ஸ்தானுதிபதியாகிய செவ்வாய் தந்தை ஸ்தானத்திற்குத் தந்தை ஸ்தானுதிபதியாகிய குருவோடு சேர்ந்து அஷ்டம மடைந்திருப்பதனுல் இந்தச் சாதகனுடைய தந்தை இருவரென்றும் இவர்கள் இருவரும் என் பிள்ளையென்று வெளிவர மாட்டார்கள் என்றும் இந்தச் சாதகன் பெற்ற தந்தையைத் தன் தகப்பனென்று அழைக்கமாட்டாரென்றும் தெரிகிறது.

1017. அஷ்டமாதிபதி குரு சொக்ஷேத்திரனுகவும் அஷ்டமத்திற்கு அஷ்டமாதிபதி சுக்கிரன் இவர்கள் இருவரோடும் பாவிகள் சம்பந்தமிருப்பதால் மாரகத்திற்கு சமானமாகிய அநேக கண்டங்கள் இவருக்கு உண்டா

கும்; இவைகளில் அஷ்டமத்தில் மாதுர்காரகனுகிய சந்திரன் இருப்ப தாலும் அஷ்டமத்திற்கு அஷ்டமத்தில் பிதுர் காரகனுகிய சூரியன் மறைந் திருப்பதாலும் இந்தச் சாதகனுக்கு ஏற்படும் கண்டங்களில் தாயும் தந்தை யும் எந்த விதமான உதவியும் செய்ய ஏலாமலிருப்பார்கள். சூரியனும் சந்திரனும் இவர் படுந்துயரைப் பார்க்கவும் மாட்டார்கள்.

1018. எட்டாம் இடத்தில் சனியினுடைய அங்கிசத்தில் செவ்வா யிருப்பதாலும் சனியோடு கூடிய செவ்வாய் சுக்கிரனைப் பார்ப்பதாலும். சுக்கிரனுடைய புத்தியில் சனிக்கு எட்டாம் வீட்டில் நீசனுயிருக்கும் சூரியனுடைய திசையில் இவர் ஒரு சூலாயுதத்தினுல் இறக்கவேண்டும்.

1019. அப்படி இறந்தாலும் குருவும் சந்திரனும் செவ்வாயும் சந்திர மங்கள யோகமும் குருச்சந்திர யோகமும் பெற்றுத் தேவ மண்டலத் தில் இருப்பதாலும் இரண்டாம் இடத்தில் புதன் உச்சனுயிருந்து குலா திக்க சமயம் பெற்று நோக்குவதாலும் உயிர் விடாமல் சூக்கும உடல் பெற்று மதிகதிர் உள்ளளவும் அழியா நிலையைப் பெறுவார்.

1020. ஐந்தாம் இடத்தில் இராகு இருப்பதாலும், ஐந்தாம் இடத்திற்கு ஐந்தாம் அதிபதி செவ்வாயாயிருப்பதாலும் ஐந்தாம் இடத்திற்கு நாலாம் இடத்தில் புத்திர காரகனுகிய குருவோடு சம்பந்தப்பட்டதாலும் கருமத் திற்கு கருமஸ்தானுதிபதி சனி சேர்ந்திருப்பதாலும் இவர் வைத்தியத்தில் சிறந்தவராய், இறந்தவர்களுக்கு உயிர் கொடுப்பதும் சப்பாணிகளையும் மூட வர்களையும் குணப்படுத்துவதும் குருடர்களுக்குப் பார்வை கொடுப்பதும், குட்டரோகங்களையும் சங்காதோஷங்களையும் போக்குவது மாகிய செய்கை களால் தன் தந்தை பெருமைப் படும்படி செய்வார்.

1021. இந்தச் சாதகனுக்கு களத்திரஸ்தானம் சனியினுடைய வீடா யிருப்பதாலும் களத்திரஸ்தானுதிபதி அஷ்டமம் அடைந்திருப்பதாலும் செவ்வாய் அவனேடு சேர்ந்திருப்பதனுலும் களத்திர தோடம் உண்டு. ஆனுல் களத்திரஸ்தானத்திற்கு களத்திர ஸ்தானுதிபதி மூன்றில் களத்திர காரகனுடைய வீட்டில் மறைந்திருப்பதால் தன் தாய் தந்தையரால் ஒரு கலியாணமும் ஆகாது.

1022. ஒன்பதாம் வீட்டிற்குடைய செவ்வாயும் தந்தை ஸ்தானத் திற் குரிய குருவும் களத்திரஸ்தானத்திற் குரிய சனியும் மீனத்தில் கூடி யிருக்க இலாபாதிபதி புதன் குடிநாதனுகி இரண்டாம் வீட்டில் உச்சம் களத்திர ஸ்தானத்திற்கு இரண்டாம் வீட்டில் கூடியிருக்கும் நால்வரையும் பார்ப்பதாலும் மோட்சஸ்தானத்திற் குரிய சந்திரன் இவர்களோடு சேர்ந் திருப்பதாலும் மோட்சஸ்தானுதிபதி புதன் சந்திரனைப் பார்ப்பதாலும் இச் சாதகன் வார்த்தையைக் கேட்டு இவர் சித்தப்படி செய்கிற எல்லாரும்

இவருக்கு ஞான மணவாட்டிகளாகிறார்கள். குருவும் சந்திரனும் கூடியிருப்பதால் இருவருடைய காரகத்தைக்கொண்டு கலியாணம் அளவின்றி நடக்கிறது. வைதீகத்தில் எந்நாளும் அழிவற்ற இன்பம் அனுபவிக்கக் கூடிய கன்னிகைகள் ஏராளம். சந்திரமங்கள யோகமும், குருச்சந்திர யோகமும் பெற்றிருப்பதனால் வைதீக முறையில் யாவருக்கும் ஞான மணவாளனாக விளங்குகிறார். வெகு களத்திர சாதகம்.

1023. புத்திரஸ்தானம் புத்திரகாரகனாகிய குருவினுடைய வீடாயிருப்பதாலும் புத்திரஸ்தானத்திற்கு புத்திரஸ்தானாதிபதி செவ்வாயாயிருப்பதாலும் இவர்கள் இருவரும் இலக்கினத்திற்கு அஷ்டமமாய்ப் புத்திர புத்திர ஸ்தானத்திற்கு விரயமாயிருப்பதாலும், ஆறு ஏழுக்கு உடைய சனி இவர்களோடு சேர்ந்திருப்பதாலும் இந்தச் சாதகனுக்கு புத்திர தோஷமுண்டு என்றும் புத்திரரே இல்லையென்றும் சொல்லவேண்டும்.

1024. பத்துக்குப் பத்தாம் இடத்ததிபதி சனி புத்திரகாரகனாகிய குருவோடும் புத்திர புத்திர ஸ்தானாதிபதி செவ்வாயோடும் சேர்ந்திருப்பதால் கருமத்திற்குப் புத்திரரே கிடையாது. சொந்த கர்மவானாயிருப்பார். கர்மஸ்தானாதிபதி சுக்கிரனாகி அவர் பத்துக்கு ஆறில் மறைந்திருப்பதினிமித்தமும் சூரியன் அவரோடு நீசமாயிருப்பதினிமித்தமும் ஸ்திரிகாரகனாகிய சுக்கிரன் அவ்விடத்திலேயே சொக்ஷேத்திரனாக இருப்பதினிமித்தமும் மாமன் காரகனாகிய புதன் கருமஸ்தானத்திற்கு சமாதுஸ்தானத்தில் உச்சனாயிருப்பதினிமித்தமும் இவரிடத்தில் அதிக அன்புள்ள மூன்று பெண்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் இவர் இறக்கும்பொழுது கூடவேயிருப்பார்கள்.

1025. கர்மஸ்தானத்திற்கு இரண்டாம் வீட்டில் கேது இருப்பதனால் இவர் கல்லறையைச் சுற்றிலும் காவலேற்படும். கரும கரும அதாவது பத்துக்குப் பத்தாம் ஸ்தானத்திற்கு இரண்டாம் வீட்டில் குரு சந்திரன் இருப்பதனால் தெய்வமும் தேவதூதர்களும் இவரைச் சுற்றிலும் காத்திருப்பார்கள்.

1026. பத்துக்குப் பத்தாம் இடத்ததிபதி சனியாயிருப்பதாலும் அவர் குருவோடும் சந்திரனோடும் சேர்ந்திருப்பதாலும் இவர் பெரிய சந்நியாசியாயிருப்பார். பத்துக்குப் பத்தாம் இடத்ததிபதி சனி சொக்ஷேத்திரனாகிய குருவோடு சம்பந்தப்பட்டதாலும் இவர்களோடு சந்திரன் செவ்வாய் சேர்ந்திருப்பதாலும் புதன் அவர்களை முழுப் பார்வையாய்ப் பார்ப்பதாலும் இவர் சந்நியாசியில் மிக மேலான நிலையை யடைந்து உலகத்தைக் காப்பவராக விளங்குவார்.

1027. இலக்கினத்திற்கு இரண்டாம் இடம் புதனுடைய வீடாகவும் வாக்குஸ்தானமாகவும் அதில் புதன் உச்சனுகவும் வித்தியாஸ்தானமாகிய காலாம் வீட்டிற்கு இரண்டாம் இடம் குருவினுடைய வீடாகவும் வித்தியாஸ்தானத்திற்கு வித்தியாஸ்தானம் அதாவது நாலுக்கு நாலு சனியினுடைய வீடாகவுமிருந்து நாலுக்குடைய செவ்வாயும் நாலுக்கு நாலுக்குடைய சனியும் இரண்டு நாலுக்கும் அதாவது நாலுக்கும் ஏழுக்கும் வாக்குஸ்தானுதிபதி குருவாகி எட்டாம் வீட்டில் சொக்ஷேத்திரனுக இருந்து உச்ச புதன் பார்வை பெற்றிருப்பதனுல் இவர் தெய்வத்தினுடைய சித்தத்தையே சொல்லுவார். ஓதாமலே உணருவார். மறை முதலிய நூல்களில் வல்லவர்களுக்கும் சிறு வயதிலேயே குருவாய் விளங்குவார். உண்மையைத் தவிர வேறென்றும் சொல்லமாட்டார். உலகத்தார் நன்னிலையடைய வேண்டியவைகளையே சொல்லுவார். தெய்வமே அவருடைய நாவில் இருக்கிறதென்றுல் வேறென்றும் சொல்லவேண்டியதில்லை.

1028. இலக்கினத்திற்கு ஐந்து ஒன்பது ஆகிய திரிகோணத்திற்கு உடைய குருவும் செவ்வாயும் நாலு ஏழு என்னும் கேந்திரங்களுக்குரிய செவ்வாயும் சனியும் சந்திர லக்கினத்திற்கு ஒன்று, ஐந்து, ஒன்பது, ஆகிய திரிகோணங்களுக்குடைய குரு, சந்திரன், செவ்வாயும், ஒன்று, நாலு, ஏழு, பத்து, என்னும் சந்திர கேந்திரத்திற்குடைய குருவும், புதனும் நாலுக்கும் ஏழுக்கும் உடைய புதன் தன் வீட்டிலிருந்து பார்ப்பதன் காரணமாய் மீனத்தில் கூடியிருப்பதினுல் இவர் உலகத்திற்கே அரசர்க்கரசனுயிருப்பாரென்றும் இதைப் பார்க்கிலும் உயர்வான வைதீக இராச்சியமே இவர் ஆண்டு உலகத்தார் யாவரையும் நியாயந் தீர்ப்பார் என்றும் அண்டாண்ட புவனங்கள் யாவற்றையும் அளவெடுத்து நீதியின்படி நியாயத்தீர்ப்புச் செய்யக்கூடியவரென்றும் கிரக நிலைகள் சொல்லுகின்றன.

1029. சத்துரு ஸ்தானுதிபதி சனியாயும் சத்துருவுக்குச் சத்துரு ஸ்தானத்தில் கேது இருப்பதாலும் ஆறு ஆறுக்குடையவர் புதனுகி குடும்பஸ்தானத்தில் உச்சமாயிருப்பதாலும் இவருடைய இனத்தார்களே இவருக்குப் பகைவர்களாவார்கள். சத்துருவுக்குச் சத்துரு ஸ்தானுதிபதி புதன் சனியையும் செவ்வாயையும் பார்ப்பதால் சனி செவ்வாயினுடைய காலங்களில் இவருக்கு சத்துரு தோஷம் ஏற்படும்.

1030. இவைகள் யாவையும் மிகவும் கருத்தாய்க் கேட்டுக்கொண்டிருந்த நான் ஓ கணித வல்லோரே! பரமான்மா பிறந்த காலத்திலிருந்த கிரகவரிசைகளின் பலன்களைத் தாங்கள் சொல்லக்கேட்டு நான் மிக சந்தோஷமடைகிறேன். தாங்கள் சொல்வதைக் கவனிக்கும்பொழுது அவருடைய

பிறப்பும், வளர்ப்பும், அவருடைய திருச்செயல்களும் மிகவும் வியப்பாயிருக்குமென்றும் இதிலும் அதிகம் அறிந்து கொள்ளக்கூடியதாயிருக்கிறதென்றும் அறிகிறேன். ஆனால் ஒரு சிறு சந்தேகம் என் மனதில் தோன்றுகிறது.

1031. புத்திர ஸ்தானத்தில் இராகு இருக்க புத்திர காரகனாகிய குரு எட்டில் மறைந்திருக்க வித்தியாஸ்தானாதிபதியும் பூமிகாரகனுமாகிய செவ்வாய் எட்டிலிருக்க ஆறுக்கும் ஏழுக்குமுடையவரும் ஆயுள்காரகனுமாகிய சனி எட்டில் மறைந்திருக்க இவரோடு விரையாதிபதி சந்திரனும் நிற்க எப்படி நல்ல பலன் சொல்லக்கூடும் ?

1032. அஷ்டமத்தில் பாபரும் சுபரும் கலந்திருக்கிறார்களே. அஷ்டமத்துக்கு அஷ்டமத்தில் சூரியனும் சுக்கிரனுமாக நிற்பதையும் சூரியன் நீசமாயிருப்பதையும் கவனிக்கும்பொழுது சற்று மலைப்பு உண்டாகிறது.

1033. அந்தகிரகங்களின் பலன்களை அந்தந்த இராசியோடு ஒப்பிட்டு சில குறிப்புகள் சொன்னால் நான் பூரணமாய் அறிந்துகொள்ளக்கூடும் என்று மிகவும் பணிவாய்க் கேட்டுக்கொண்டேன்.

1034. அதற்கு மூவரசராகிய கணிதவல்லோர், ஏ நம்பியாரே! இவர் பிறந்தநாளின் கிரகவரிசையைக்கொண்டு பலன் எழுத இடம் போதாது. வாக்குஸ்தானத்தில் புதன் உச்சனாயிருப்பது ஒன்று மாத்திரம் தங்களுக்கு நல்லதாகத் தோன்றும். உண்மையில் அவர் சத்தியத்தையே சொல்லுவார். அவ்வாக்கு மண்ணும் விண்ணும் உள்ளவரையும் நிலைத்திருக்கும். அவைகள் உலகத்தாருக்கு நித்திய சேவனைத் தரக்கூடியவை.

1035. ஆனால் அஷ்டமத்தில் நின்ற பாபரும் சுபரும் அஷ்டமத்திற்கு அஷ்டமத்தில் நின்ற சூரியனையும் சுக்கிரனையும் சப்தமத்தில் நின்ற புதனையும் பார்ப்பதினால் அவர் சத்தியவாக்கைச் சிலர் பொய்யென்றும் சிலர் மெய்யென்றும் சொல்லுவார்கள்.

1036. அதுதவிர பிதா காரகனாகிய சூரியன் நீசனாகி மூன்றில் மறைந்திருப்பதைக்கொண்டு அவர் பிதுர்வழி சனங்கள் தகப்பன் இல்லாத பிள்ளையென்று கொஞ்சம் குறைவாய்ச் சொல்லுவார்கள் என்பதும் உண்மையே.

1037. வித்தியாஸ்தானாதிபதியாகிய செவ்வாய் பூமி காரகனாகிய சனியோடு அஷ்டமமடைந்திருப்பதால் அவருக்கு சொந்த வீடு வாசல்கள் இல்லாமல் பரதேசி போலிருப்பார் என்பதும் உண்மையே.

1038. புத்திரஸ்தானத்தில் இராகு இருக்க புத்திர காரகனாகிய குரு அஷ்டமமடைந்திருக்க புத்திரரும், களத்திர ஸ்தானத்திற்குரிய சனி களத்திர ஸ்தானத்திற்கு குடும்பத்தில் செவ்வாய் சம்பந்தம் பெற்றிருப்பதினால் களத்திரமும் இல்லை.

1039. ஒரு சாதகனுக்கு பலத்திருக்கவேண்டிய ஆயுள், வாக்கு, சகோதரர், வீடு, வாசல், புத்திரர், களத்திரம் முதலியவையில்லாமற்போனால் அல்லது அஷ்டமமடைந்தால் உலகப்பிரகாரமாக என்ன நல்ல பலனை நாம் சொல்லக்கூடும்.

1040. உலகப்பிரகாரமாக யாவையும் இழந்து பரதேசியாய் வீடு வாசல் குடும்பம், மனையாள், சகோதரர் இல்லாமல் போனவர்களே வைதீக பலனை அடைவார்கள்.

1041. இதன் முன்னிருந்த தீர்க்கதரிசிகளும் முனிவர்களும் இப்பலனை யொத்தவர்களாயிருந்தார்கள் என்பதை தாங்கள் நன்றாய் அறிவீர்கள்.

1042. குரு, செவ்வாய், சந்திரன், சனி அஷ்டமமடைந்திருப்பதினால் யாவரும் இவ் வரிசையைப் பார்க்கும் பொழுதே அற்ப ஆயுள் சாதகமென்றும், அவமிருத்து சாதகமென்றும் அஷ்ட தரித்திர சாதகமென்றும் சொல்வார்கள். அவை யாவும் உண்மையே.

1043. ஆனால் உலகப் பிரகாரமாக மிகப் பலவீனம் பெற்ற கிரகங்கள் வைதீக விஷயமாக மிகப் பலம் பெற்ற காரணத்தை நீங்கள் அறிவீர்களானால் மிகுந்த சந்தோஷமடைவீர்கள். இப்படிப்பட்ட வரிசைகள் தோன்றுவது மிக அபூர்வம்.

1044. ஒரு இராசியின் முப்பது பாகைகளில் பத்துப் பாகை பூர்வமென்றும் அதன் மேல் பத்துப் பாகை மத்தியென்றும் அதன் மேல் பத்துப் பாகை அந்தமென்றும் சொல்வார்கள். இதில் மத்தியமாகிய பதினைந்தாவது கலை அதி உச்சமென்று சொல்லப்படும்.

1045. இப்படி அதி உச்சமான பாகையில் கிரகங்கள் நிற்குமானால் அக் கிரகத்தினால் மிகுந்த நல்ல பலன் உண்டாகும். ஒரு கிரகம் ஒரு இராசியில் உச்சமென்று சொல்லப்பட்டாலும் அதி உச்சமாகிய பதினைந்தாவது பாகையிலில்லாமல் போனால் அது பூரண பலனைக் கொடுக்கமாட்டாது.

1046. இம் முறையில் நாம் கவனிப்போமானால் சந்திரனும் செவ்வாயும் ஒன்று சேர்ந்து உச்ச பாகையில் நிற்கிறதினால் ஒரு வான சோதி தோன்றும். இருவரும் நின்ற உச்ச பாகையில் குருவும் சனியும் சேர்ந்ததினால் மிகுந்த பிரகாசம் உண்டாகும்.

1047. இப்படி கிரகங்கள் அதி உச்சம் பெற்றுப் பிரகாசிக்கும் காலத்தைக் கணிதத்தினால் அறிந்தவர்கள் தங்கள் கணிதம் சரியாயிருக்கிறதோ இல்லையோ என்று தகுந்த இடத்தில் ஒன்றுகூடி பார்ப்பது வழக்கம். அம்முறையே நாங்களும் இங்கே வந்தோம்.

1048. இவ் வரிசைக்குத் தெய்வீக பலனை நீங்கள் சொல்லத் திறமை யுள்ளவர்கள் அல்ல.

1049. இலக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் இராகு இருப்பதாலும் ஐந்தா மிடத்திற்கு ஐந்தாமிடத்திற்குரிய செவ்வாய் ஐந்தாமிடத்திற்குரிய குரு வோடு சேர்ந்து ஆயுள் ஸ்தானத்திலிருப்பதாலும் ஆயுள் காரகனாகிய சனி ஆயுள்ஸ்தானத்திலேயே இருப்பதாலும் இவர் இறந்து போனவர்களை உயிர்ப்பிப்பதும் தீராப்பிணியைத் தீர்ப்பதும் பிசாசுகளைத் துரத்துவதும் அறியாமையை நீக்குவதுமாகிய அநேக பிணிகளைப்போக்குவார்.

1050. வாக்குஸ்தானத்தில் நின்ற உச்ச புதன் அட்டம தானத்திலிருந்த குருவைப் பார்ப்பதனால் குருவைக்கொண்டு தம் வார்த்தையினால் உயிர் கொடுப்பதும் சந்திரனைக்கொண்டு தன் ஜெபத்தினால் சங்காதோஷங்களை நிவிர்த்திப்பதும் செவ்வாயைக்கொண்டு மண்ணினாலும் சனியைக்கொண்டு தண்ணீரினாலும் அநேக வியாதிகளைப் போக்குவாரென்றும் தெரிகிறது.

1051. இலாபஸ்தானத்தில் கேதுவும் லாப லாபஸ்தானத்திற்குடையவன் செவ்வாயுமாயிருப்பதால் மூத்த சகோதரர்கள் கிடையாது. இலாபத்தில் கேது இருப்பதாலும் இலாபத்திற்கு உடைய புதன் குடும்பத்தில் உச்சமா யிருப்பதாலும் இலாப லாபத்திற்குடைய செவ்வாய் குருவோடு சேர்ந் திருப்பதாலும் இவர்களை உச்ச புதன் பார்ப்பதாலும் ஞானபதமாக உல கத்தார் யாவரையும் தன்னை நம்பினவர்கள் யாவரையும் எல்லாச்சாதியாரை யும் பாஷைக் காரரையும் இலாபமாகவும் சுதந்தரமாகவும் அடைவார். நாங் களும் அவருக்குச் சொந்தமாகிறோம்.

1052. இலாப லாபபதியோடு தேவ குரு இருப்பதனால் இவர் மெய்யான அரசனாகவும் செவ்வாயிருப்பதனால் அசுரக் கூட்டங்களாகிய ஆசைமுதலிய பதின் மூன்று கோத்திரத்தாரை அழித்து தம்மையே பலி கொடுக்கும் மெய்யான ஆசாரியனாகவும் சனி இருப்பதனால் உலக முடிவில் நியாயந் தீர்க்கும் நியாயாதிபதியாகவும் சந்திரனிருப்பதனால் தேவ சித்தத்தை வெளிப்படுத்துகிற தீர்க்க தரிசியாகவும் இருப்பார். இதை நிச்சயமாய்த் தெரிந்துகொண்ட நாங்கள் இதோ நீ காண்கிற ஒட்டகங்களில் பொன்னை யும், வெள்ளைப் போளத்தையும், தூபவர்க்கத்தையும் அவருக்குக் காணிக் கையாகக் கொண்டுபோகிறோம்.

1053. இன்னும் இவர் பிறந்த காலத்தைக் கவனிக்கும் காலத்தில் கிரகங் கள் இருக்கும் நிலையைக் குறிக்கும் வியப்பான பயன்கள் மிக உண்டு. இவரை ஒருதரம் கண்டால் இந்தச் சீவனுக்கு உடனே நன் னெறி கைகூடும். உலகத்தில் அடையவேண்டிய சித்திகள் யாவும் குறை

வற உண்டாகும். உன் முகத்தைப் பார்த்தால் அவரைத் தரிசித்தவன் போல் தெரிகிறது. அவர் பிறந்திருக்கும் வீட்டை எங்களுக்குக் காட்டு வாயா? சீக்கிரம் போகவேண்டும்'' என்று சாஸ்திரிகள் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். நானும் அப்படியே அவர்களை குழந்தை பிறந் திருக்கும் இடத்தில் கொண்டுபோய் விட்டேன்.

---

## 44. மூவேந்தரும் பரமான்மாவைக் கண்டு வணங்குதல்.

1054. அவர்கள் குழந்தையைக் கண்டவுடன் மனமகிழ்ந்து தம்மை மறந்து இரண்டு கைகளையும் குவித்துக்கொண்டு "எல்லா உலகிற்கும் கர்த்தனே! ஆதரவற்றவருக்கு அடைக்கலமே! உமது கருணை நிறைந்த தோற்றத்தை எங்கள் கண் காணும் பேறு பெற்றோம். நாங்கள் உம்மைக் காணப் பெற்றதைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். உம்மைத் துதிக்கிறோம். உமது அருட்பார்வை எப்போதும் எங்களில் வைக்க வேண்டுகிறோம்.

1055. உம்மைப் பார்க்கவேண்டுமென்று விருப்பங்கொண்ட எங்கள் எண்ணப்படி இன்று நீர் காட்சிக்குரியவரானீர். உம்முடைய திரு உருவம் எப்போதும் எங்கள் மனதை விட்டு நீங்காது. அண்டாண்டங்களைக் காக் கும் உம்முடைய வல்லமையை உமது முகத்தில் விளங்கும் ஒளியால் காண்கிறோம்.

1056. நாங்கள் உம்முடைய அடியார்; எல்லாச் சீவர்களுக்கும் அன்பாய் நடக்கும் முன் மாதிரியை உமது பிறப்பாலறிகிறோம். எங்கள் கண்ணே! கருணை வடிவே அடியார்க்கருளே! அன்பர் தேடும் பொருளே!'' என்று இன்பக் கண்ணீர் சொரிய வாயாரத் துதித்துத் தாங்கள் கொண்டுவந்த பொன், தூபவர்க்கம், வெள்ளைப் போளம் என்னும் காணிக்கைகளை வைத்து தரையில் விழுந்து வணங்கினார்கள்.

1057. ஏ அம்மணி! இதைக் கண்ட நான் மிகுந்த வியப்படைந்து, அரு ளிலும் பொருளிலும் இவ்வளவு உயர்ந்த பெரியோர்கள் இத்தனை அன்பும் பணிவும் உடையவர்களாயிருக்கிறார்களென்று மனதில் எண்ணிக் குழந்தை யினுடைய பெருமையைச் சிந்தித்து நின்றேன்.

## 45. பரமான்மாவைக் காண வாக்குப்பெற்ற ஒருவர் குழந்தையைக் காணல்.

1058. அப்படி நிற்கையில் மிகுந்த வயது முதிர்ந்த ஒரு பெரியவர் வந்து தள்ளாடின கைகளால் குழந்தையை ஏந்திக் கண்களில் ஒற்றிக் கொண்டு, "உலகத்திலுள்ள யாவருக்கும் இருளைப் போக்கும் ஒளியே! சீவான்மாக்களின் மகிமையே! தீமையினின்று உலகத்தாரைக் காத்துக் கொள்ள முன்மாதிரி காட்ட வந்திருக்கும் உமது தோற்றத்தை என் கண்கள் கண்டன.

1059. உலகத்தார் தீமைக்கு இரங்கி, அவர்கள் அடையும் துன்பங் களுக்காக வருந்தி, துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் செய்ய நோக்கும் உமது கண்களில் கருணை விளங்கிக்கொண்டிருக்கின்றது

1060. நன் மறையின் உள்ளுறைகளைச் சொல்லி, துயரப்படுகிறவர்களைத் தேற்றி, துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்லும் உமது உள்ளத்தில் நிறைந்துள்ள அருட்பெருக்கு உதடுகளில் ததும்பி நிற்கிறது. உமது அடி யானுக்கு வாக்குக் கொடுத்தபடி உம்மைக் கண்ட இப்போதே மன அமைதி அடைகிறேன்; சாந்தி பெறுகிறேன்.

1061. சத்தியத்தை அறிவிக்க வந்த சத்திய வாசகா! எத்திசைக்கும் ஒளியாயிருப்பவரே! உம்முடைய பகைவர்கள் அழிந்து போவார்கள். நம்பின யாவருக்கும் அழிவற்ற பயனைத்தரும் நீதியின் வடிவே! சிறிய நன்மையையும் பெரிதாக எண்ணும் இரக்கமுள்ள கர்த்தனே! அடியேனை யும் நினைத்துக்கொள்ளும்" என்று துதித்துக் குழந்தையை முத்தமிட்டுத் தாயின் கையில் கொடுத்து 'மிகவும் கவனமாய் வளர்த்து வாருங்கள் அம்மா. ஆனாலும் இந்தப் பிள்ளையினிமித்தம் மிகக் கவலை உங்களுக்கு நேரிடும். இவர் உங்களுக்குப் பிள்ளையல்ல' என்று சொன்னார்.

---

## 46. பரமான்மாவாகிய குழந்தையை அன்னகாம மன்னவன் கொல்ல வழிதேடல்.

1062. இப்படிப் பெரியோர்களாலும் அன்பர்களாலும் தொழுது தோத் திரிக்கப்பட்ட பரமான்மாவாகிய குழந்தை நாளொரு மேனியாய்ப் பொழு தொரு வண்ணமாய் அடியார் புடை சூழ வளர்ந்து வருகையில் அந்த நாடு முழுவதும் 'நம்மெல்லாரையும் ஒரே குடையின் கீழ் ஆண்டு நடத்தும் சமாதானப் பிரபு பிறந்திருக்கிறார்; அவருடைய மகிமை மிகவும் பெரிதா யிருக்கிறது' என்ற பேச்சுண்டாயிற்று.

1063. அக்காலத்தில் மாயாபுரியாகிய சாதிகளின் பட்டணமென்று அழைக்கப்படும் எருசலேமில் ஆண்டுகொண்டிருந்த அன்னகாம மன்னவன் அல்லது எரோது தன் மனதில் நடுக்கமுற்று இதற்கு முன்னும் இப்படிப்பட்ட பேச்சு நம்முடைய காதிற்கு எட்டியது. இப்போது நேர் நேராகவே நேரிட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

1064. இதனை இப்போதே போக்க முயல வேண்டுமென்று மிகவும் ஆர்ப்பரித்துச் சினமுற்று சாஸ்திரிகளால் குறிக்கப்பட்ட பரமான்மாவின் பிறந்த நாள் முதற்கொண்டு இரண்டு வருடத்திற்குள் அதாவது இரண்டு வயதிற்குட்பட்ட நற்குணமுடைய குழந்தைகள் யாவரையும் பரமான்மாவோடு கூட கொன்றுவிட ஆட்களை அனுப்பினான்.

1065. அன்னகாம மன்னவன் கைக்குள் அகப்பட்ட அல்லது அவனுக்குக் கீழடங்கிய நாட்டிலுள்ள குற்றமில்லாத குழந்தைகள் கொல்லப்பட்டாலும் இவைகள் யாவற்றுக்கும் காரணமாயிருந்த பரமான்மாவோ எவர் கைக்கும் அகப்படவில்லை.

1066. அவர் தேவர்களும் மீட்கப்பட்ட அன்பர்களும் இவர்களுக்கு நாயகனாக விளங்கும் தெய்வமும் வீற்றிருக்கும் தமக்கு உரிய இடமாகிய மேலுலகத்தை விட்டுத் தீமையையே உருவாக உள்ள மாயாபுரியில் அல்லது கடைச் சேரியில் கீழோர்களை மீட்டுக்கொள்ளும்படி அவர்கள் இடமாகிய கீழுலகத்தில் பிறந்தார்.

1067. அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துக் கொல்லத் தேடின காலத்தில் நடு உலகமாகிய இந்த எங்கள் இடைச் சேரியில் அவர் வளர்ந்து வந்ததை நாங்கள் யாருக்கும் சொல்லவில்லை. ஆகையால் அவர் சாகாமல் தப்பிக்கொண்டார்.

---

## 47. சீவர்களின் நன்மையாவும் பரமான்மா அடைதல்.

1068. சிறு வயதில் அவர் விளையாடின திருவிளையாட்டை நினைக்க நினைக்க மிகவும் வியப்பாயிருக்கிறது. எங்கள் வீடுகள் தோறும் எங்கள் பிள்ளைகளோடு அவர் விளையாடுவார். நாங்கள் எல்லோரும் அன்புடன் கொண்டாடும் மலர்ந்த முகமும் புன்னகையுமுடைய குழந்தையாகவே காணப்பட்டார்.

1069. நாங்கள் எங்கள் பசுக் கூட்டங்களை மேய்த்து வீட்டிற்கு வந்தவுடன் பால் கறந்து தோய்த்துக் கடைந்து வெண்ணெய் எடுப்போம். திரண்டவெண்ணெய் அத்தனையையும் எப்படியாவது எங்களுக்குத்

தெரியாமல் அவர் எடுத்துக்கொள்வார். அவர் எடுக்காதபடி நாங்கள் எவ்வளவு விழிப்பாயிருந்தாலும் எப்படியோ மாயமாக வெண்ணெய் அத்தனையும் அவர் கையிலிருக்கிறதை நாங்கள் காண்போம்.

1070. பசுவிற் கறந்த பாலாகிய நற்செய்கைகளில் பழக்கம் என்னும் உறை குத்தி ஆராய்ச்சி என்ற கடைதல் செய்கையில் இருவினைக்கும் ஒட்டாத நன்மைகள் யாவும் பரமான்மாவுக்கென்றே மிதக்கும் வெண்ணெயாகின்றன. இவ் வெண்ணெயை ஒத்த நற்செய்கைகள் யாவும் பரமான்மாவை அடைகின்றன. தெரியாமற் செய்த எந்த நன்மையையும் அவர் தன்ன தாக்கிக் கொள்ளுகிறார்.

1071. நாங்கள் முயன்று தேடிய வெண்ணெய் யாவையும் அவர் அடைகிறதை நினைத்துச் சில நேரங்களில் பொறுமைப்படுவோம். இப்படித் திருடுவதை நிறுத்தும்படி மாடுகளை மறித்து அடக்கும் கோணத்தடிகளாகிய அஞ்ஞான கற்பனைகளால் அவரை நன்றாய் அடித்து மாடுகளின் கால்களைக் கட்டவும் அவைகளிலிருந்து பால் கறக்கவும் உதவியாயிருக்கும் நாலு முழ நீளமுள்ள பரிக் கயிறுகளாகிய நாலு மறைகளாலும் உலகத்திலுள்ள உணவுப்பொருள் அத்தனையையும் இடித்து மாவாக்கும் அல்லது அறைக்கும் அன்னமயகோசமாகிய இந்த உரலில் அல்லது மரத்தில் சேர்த்து இறுக்கிக் கட்டி விடுவோம். அவர் இதை ஒரு பொருளாக நினையாமல் இடுப்பில் கட்டின ஒரு சலங்கையைப் போல் நினைத்து ஓடி விடுவார்.

1072. அவரைக் கட்டி அடித்து வருத்திய சில நேரங்களில் அவர் வாய் விட்டு அழ ஆரம்பித்தபொழுது இந்த அண்டமும் இந்தச் சீயோன் மலையும் எங்கள் இடைச் சேரியும் நாங்களும் அவருக்குள் இருக்கிறதைக் கண்ட உடனே "எங்கள் அருள் மூர்த்தி எங்களையும் எங்கள் நன்மையாகிய செயல்களையும் உமது திரு உள்ளத்திலா பாதுகாத்துக்கொண்டு இருக்கிறீர்! எங்கள் எல்லா நற்செய்கையையும் அதனால் உண்டாகும் புகழையும் கர்த்தனாகிய நீரே அடைந்து வர நாங்கள் மனதார ஒப்புக் கொடுக்கிறோம். வேறு கைம்மாறு செய்ய அறியோம். எங்கள் பிழையை மன்னிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டதோடு கூட அவர் விருப்பத்திற்கே விட்டு விட்டோம்.

1073. அது முதற்கொண்டு அவர் எங்களால் கடைந்தெடுக்கப்படும் வெண்ணெய் யாவையும் தடையின்றி உண்ணத் தொடங்கினார். மதலையாகிய அவர் வாய் நிறைய வெண்ணெய் இருக்கும். இரு கைகளிலும் திரளை திரளையாய் வெண்ணெய் இருக்கும். உடையில்லாத அவர் உடம்பு முழுதும் வெண்ணெய் மயமாய் இருக்கும்.

1074. இதை வாசிக்கும் அன்பனே! நீ இந்தச் சீவனுகிய பசுவி லிருந்து நன்மையாகிய பால் சுரக்கும்படி செய்தாயா? அல்லது மேய்த் தாயா? அல்லது நன்மை செய்கிறதற்கென்றே இவ்வுடம்பை வளர்த்தாயா? பல இடங்களுக்கு ஓடவும் உதைக்கவும் கூடிய கால்களை அன்பாகிய கயிறுகளினல் கட்டிப் பால் கறந்தாயா? நன்மையையே செய்வ தாகிய பழக்கமென்னும் உறை குத்தி வைத்தாயா? ஆராய்ச்சியாகிய கடைதல் செய்து இருவினையும் உன்னை அடையாதிருக்கும்படி பரமான்மாவின் புறமாக மிதக்கும் வெண்ணெயை எடுத்தாயா? பரமான்மாவுக்கென்றே செய்யும் நன்மையாகிய வெண்ணெயை அவருக்குக் கொடுத்தாயா? முழு தும் அவர் உண்டாரா?

1075. நீ அப்படிச் செய்திருப்பாயேயானல் அவர் வாயிலும் கைகளிலும் உடம்பிலும் வெண்ணெய் அடையாளம் தோன்றுவது போல உன் செய்கைகளும் நீயும் அவருடைய ஒளி வடிவில் காணப்படுவாய்.

1076. வானங்கள் பரமான்மாவின் மகிமையையும் உன் பெருமையையும் வெளிப்படுத்தும். வானவிரிவிலும் அவைகள் அழிவின்றி எழுதப்படும்.

1077. ஒரு பகல் மற்றொரு பகலுக்கும் ஒரு இரவு மற்றொரு இரவிற்கும் ஒரு யுகம் மற்றொரு யுகத்திற்கும் உன்னையும் பரம பிதாவின் ஊழியக் காரன் என்று சொல்லி வைக்கும்.

1078. அப்படிச் சொல்லும் சொல்லை நீ கேட்காதிருந்தாலும் அவை களுக்குப் பேச்சில்லாதிருந்தாலும் அவைகளின் ஒலி பூமியெங்கும் பூமி யின் கடைசி வரைக்கும் கேட்கப்படுகிறது.

1079. உன் நற்செய்கைகளாகிய வெண்ணெயை உண்ட பரமான்மா உன் நற்செய்கையோடும் அதற்குரிய பயனேடும், மிக நன்றாய் விளங்கும் சூரியனைப் போல் வருகிறதைப் பார். அவருடைய பெருமைக்கு மறைவா னது ஒன்றுமில்லையென்று உறுதியாய் அறியக்கடவாய்.

---

## 48. பரமான்மா சீவர்களைக் காத்து அலங்கரித்தல்.

1080. ஓ பர்வத புத்திரி! இப்படி அவர் சிறு வயதாயிருக்கையில் நாங்களும் எங்கள் இடைச்சேரியும் எங்கள் பசுக் கூட்டங்களும் இந்த மலை யோடு முழுகிப் போகும்படியாக ஒரு பெருமழை வந்தது.

1081. இராப்பகலாய் பெய்த அந்த மழையினலும் அதனல் உண்டான வெள்ளத்தினலும் நாங்களும் இந்த மலையும் முழுகிப் போகும்படியான வேளையில் அதாவது இந்த உடம்பு எங்கள் அறியாமையினலும் அஞ் ஞானத்தினலும் தீய பழக்கங்களினலும் உண்டான நோய் என்னும் பெரு

வெள்ளத்தினல் இறக்குந்தருவாயில் இருக்கையில் சீயோன் மலையாகிய இந்த உடம்பையே தமது திருக் கரங்களினல் ஏந்தி நாங்கள் அழிந்து போகாதபடி வெகுநாள் அருள் புரிந்தாரம்மா.

1082. எங்கள் குலத்திற்கு விளக்காய் விளங்கின அவரைக் காணும் தோறும் எங்கள் உள்ளம் பூரித்து மகிழ்வடைவோம். அவர் எங்கள் வீடு வராமற்போனல் உண்ணவும் உறங்கவும் முடியாமல் பித்துக்கொண்டவர்கள் போலாவோம்.

1083. எங்களாலாகிய செயல்கள் ஒவ்வொன்றிலும் அறுபத்து நான்கு கலைகளில் ஒவ்வொன்றாய் அங்கங்கே நிறைந்திருப்பார். எங்கள் இயல்பின் படி அந்தக்குறைவான எங்கள் சக்திகளின் செயல்களின் தீய எண்ணங்களாகிய அழுக்கு உடைகளை நீக்கி நீதியின் வெள்ளுடைகளை அழகாய் உடுத்திவைப்பார்.

1084. சக்திகளின் தலையில் அதாவது எங்கள் செய்கைகளின் முடிவில் மணமுள்ள மலர்களினல் நிறைந்த நீதியின் முடி சூட்டி வைப்பார்.

1085. சக்திகளின் முகத்தை நன்றாய்த் தூய்மை செய்து நெற்றிகளில் 'மீட்கப்பட்டவர்கள்' என்று பொருள்படும் பொட்டும் இடுவார்.

1086. அவர் எங்கள் சக்திகளுக்குச் செய்த அலங்காரத்தால் எங்கள் இடைச்சேரி விண்ணுலகம் போல் விளங்கிற்று.

---

## 49. பரமான்மா சீவர்களை மகிழ்வித்து விருத்தியாக்கல்.

1087. இப்படி விளங்கிக்கொண்டிருக்கும்பொழுது அவர் சிறு குழந்தையாயிருந்தாலும் எங்கள் பசுக்களையும் கன்றுகளையும் மேய்க்க நாங்கள் போகும்பொழுது அவரும் கூட வருவார்.

1088. பகற் பொழுதில் மாடுகளை மேய்த்துத் தண்ணீர் காட்டி மாலைப் பொழுதில் வீட்டிற்குக் கொண்டுவருவோம்.

1089. அவர் மாடு மேயும் இடங்களுக்கு முன்னல் இதோ நீ பார்க்கும் கற்பாறைகளில் உயர உட்கார்ந்துகொண்டு மிகவும் இனிமையாய்ப் புல்லாங்குழல் ஊதுவார்.

1090. அன்னமயகோசத்தால் உண்டான அக் குழலில் ஒன்பது துளைகள் உண்டு. பத்தாவது துளை அடைக்கப்பட்டிருக்கும். அக் குழலின் மேற்புறத்தில் இருக்கும் ஏழு துளைகளில் தமது மெல்லிய விரல்களை வைத்து ஆரோகண (ஏறும் முறை) அவரோகண (இறங்கும் முறை) முறைப்படி சுருதி தவருமல் பல பண்களை வாசிப்பார்.

1091. அவைகளில் ஆரோகண சுரங்கள் ஆன்ம அம்சத்தையும், அவரோகண சுரங்கள் மாயையின் அம்சத்தையும் அல்லது அஞ்ஞான அம்சத்தையும் உடையதாயிருக்கின்றன.

1092. ஆரோகண அவரோகணமாகிய இரண்டு அம்சங்களும் வானம் பூமியைப் போலவும் உப்புப் புளியைப் போலவும் நாத விந்தைப் போலவும் சேர்ந்து ஒரு உடலாகி ஒரு இராக பேதம் அல்லது ஒரு சீவபேதம் உண்டாகிறது.

1093. அவைகளில் தாரம் மத்திமம் மந்தரம் என்ற மூன்று ஸ்தாயிகளும் சுவர்க்கம் மத்தியம் பாதாளமென்ற மூன்று உலகங்களையும் குறிக்கின்றன.

1094. அவைகள் ஒவ்வொன்றிற்கும் ஏழு ஏழாக இருபத்தொரு மூர்ச்சனைகளை உடைத்தாயிருக்கின்றன.

1095. ஒவ்வொரு ஆரோகண அவரோகணத்திலும் மத்திமத்திற்கு முன்னுள்ள பூர்வ பாகமும் மத்திமத்திற்குப் பின்னுள்ள உத்தர பாகமுமாக இரண்டு பாகங்கள் அடங்கியிருக்கின்றன.

1096. ஆரோகண அவரோகண கதிகளில் சுத்த தத்துவமும் அசுத்த தத்துவமும் ஆக மாறி மாறி வருகின்றன.

1097. உத்தமம் மத்திமம் அதமம் என்ற மூன்று ஸ்தாயிகளிலும் ஏழு சுரங்களும் அல்லது எழுவகைத் தோற்றங்களும் இருபத்தொரு மூர்ச்சனை பேதத்தை அடைகின்றன.

1098. இவைகள் தவிர பூர்வ பாகத்தில் முப்பத்து நான்கு தத்துவங்களும் உத்தர பாகத்தில் முப்பத்து நாலு தத்துவங்களும் சேர்ந்து ஆயிரத்து நூற்று ஐம்பத்தாறு வகையும் நால்வகைப் பிறப்பிற்கும் வரும்போது நாலாயிரத்து அறுநூற்று இருபத்து நாலு சுருதி பேதம் அல்லது தாயான சீவ பேதங்கள் உண்டாகின்றன.

1099. ஒவ்வொரு இராகமும் சம்பூரணம் ஷாடவம் ஔடவம் என்ற சுர பேதங்களோடு சுத்தம் வக்கிரம் என்ற முறையில் ஆறு பேதங்களையும் அடைகின்றது.

1100. இவைகளும் ஆரோகணத்தில் ஒருவகையாயும் அவரோகணத்தில் ஒருவகையாயும் ஆக இரண்டு வகையாகின்றன.

1101. சுத்த சம்பூரணம் ஒன்றும், வக்கிர சம்பூரணம் முப்பத்தெட்டும் சுத்த ஷாடவம் ஆறும், வக்கிர ஷாடவம் நூற்று நாற்பத்து நாலும் சுத்த ஔடவம் பதினைந்தும் வக்கிர ஔடவம் இருநூற்றுப் பத்தும் ஆக இனம் ஆறும் ஆரோகணத்தில் இதே விதமாக ஒவ்வொன்றும் சேர்ந்து பெருகி நிற்கும்பொழுது லக்ஷத்து எழுபத்தோராயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற்றாறு ஆகிறது.

1102. இவை இருபத்தொரு மூர்ச்சனைக்கும் முப்பத்தைந்து லக்ஷத்துத் தொண்ணூற்றைன்பதினாயிரத்து முந்நூற்றுப் பதினாறு ஆகிறது.

1103. ஒரு தாயான சீவநிலை பேதத்திற்கு சீவநிலை பேதம் ஒன்றிற்கு முப்பத்தைந்து லக்ஷத்துத் தொண்ணூற்றைன்பதினாயிரத்து முந்நூற்றுப் பதினாறுக்கும் நாலாயிரத்து அறுநூற்று இருபத்து நாலுக்கும் ஆக ஆயிரத்து அறுநூற்று அறுபத்து நாலு கோடியே முப்பத்திரண்டு லக்ஷத்து முப்பத்தேழாயிரத்து நூற்று எண்பத்து நாலு சீவபேதங்களாகின்றன.

1104. இவைகளோடு சுவராந்தம், சாமீகம், காதிகம், ஆர்ச்சிகம் என்ற சுரபேதங்களினால் உண்டாகும் சங்கர சீவ பேதங்களையும் கணக்கெடுத்தால் முன் தொகை அதிகமாகும்.

1105. இப்படி எழுவகைத் தோற்றத்தாலும் உண்டாகும் சீவகோடிகள் அத்தனையும் ஏழு சுரத்தில் பிரஸ்தரித்துக் கல்லும் கரையும்படி ஆலாபிப்பார்.

1106. ஓரறிவுள்ள தாவரங்களும் ஈரறிவுள்ள சிப்பி சங்கு நத்தை முதலிய ஊர்வனவும் மூவறிவுள்ள நீர்வாழ்வனவும் நாலறிவுள்ள பறவைகளும் ஐந்து அறிவுள்ள விலங்குகளும் ஆறறிவுடைய மனிதர்களும் ஏழறிவும் மனுடவடிவும் பெற்ற தேவர்களும் ஆக ஏழு நிலைகளில் சீவனும் செயலும் பெற்றுப் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பும்படித் தமது மூச்சை ஊதிப் புதிது புதிதாகப்படைத்து ஒவ்வொரு இனமும் உருகும்படி 'சரிகமபதநி' என்ற ஏழு சுரங்களிலும் அந்தந்த இனங்களுக்குரிய சுரங்களைச் சீவசுரமாக வைத்து வாதி சம்வாதிப் பொருத்தத்துடன் இராகம் ஆலாபிப்பார்.

1107. மரங்கள், மலைகள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, எங்கள் பசுக் கூட்டம், எங்கள் இடையர் கூட்டம் யாவும் லயப்படும்படி ஏழு தாளங்களிலும் ஐந்து சாதி நடைகளிலும் தீர்மானங் கொடுக்கும்பொழுது எங்கள் மனது நாத பிர்மத்திலேயே ஒடுங்கி வேறு நினைவின்றிச் செயலற்றுப் போவோம்.

1108. தானே நாத சொரூபியாயிருந்து இராகபேதங்கள் போலவே சீவபேதங்களையும் ஓயாது உண்டாக்கிக் கொண்டும் நடத்திக்கொண்டும் இருக்கிறாரென்று தெரிந்த உடனே நாங்கள் மிகவும் நடுக்கமுற்று 'எல்லா உயிர்களையும் படைத்துக்காத்தருளும் ஆதிமூர்த்தி! உமது வல்லமையையும் வடிவத்தையும் யார் அறிவார்? இந்த இடையர் குடிசையா உமக்கு உகந்த இடமாயிற்று' என்று மகிழ்ந்து கொண்டாடுவோம்.

1109. இவைகளைக் கண்ட நாங்கள் அவரையே எங்களுக்குத் தெய்வமாகக் கொண்டு உள்ளம் பூரித்திருந்தோம். அவர் எங்களிடம் வளர்ந்து வருகையில் எங்கள் எல்லோரையும் எங்கள் பசுக்களையும் நன்குயறிவார். எங்கள் செயல்களில் ஒன்றுவது அவருக்கு மறைவாயிருக்கவில்லை.

1110. எங்களில் அவரும் அவரில் நாங்களும் கலந்து மிகவும் மகிழ்ச்சியாயிருப்போம்.

1111. எங்கள் மாடுகள் ஒவ்வொன்றையும் பேர் சொல்லி அழைப்பார். அவைகள் அருகில் வந்து அவர் கையினால் தடவிக் கொடுக்கும்பொழுது தங்கள் மிருகத் தன்மையை மறந்து தலைகளை உயர்த்திக் கொண்டும் தங்கள் இச்சையாகிய வால்களை மேலே தூக்கி ஆட்டிக்கொண்டும் களிப்பினால் துள்ளிக் குதிக்கும்.

## 50. பரமான்மாவால் கொடுக்கப்பட்ட நீதியின் வெள்ளுடைகள்.

1112. எங்கள் மீட்கப்படும் நாள் வரைக்கும் அடையாளமாக பரமான்மாவினால் எங்களுக்கு கொடுக்கப்பட்ட நீதியின் செய்கைகளாகிய வெள்ளுடையை நாங்கள் "எங்களது" என்று செருக்கினால் அங்கங்கே சில வேளைகளில் பல இடங்களில் அழுக்குப்படுத்தியிருந்தோம். எங்களுக்கே அது பொறுக்கக் கூடாத விதமாய்த் தோன்றிற்று.

1113. பரமான்மாவாகிய சிறு குழந்தை சில வேளைகளில் கண் சாடையாக இருந்தாலும் சில வேளைகளில் நாங்கள் வெட்கப்படும்படி முகக்குறி காட்டுவார்.

1114. இதை யறிந்த நாங்கள் அவருக்கு அருகில் அவர் இருக்கும் இடத்திலிருந்து ஓடி வரும் சிவ நதியில் எங்கள் உடைகளைத் துவைத்துக் குளிக்கப் போனோம்.

1115. அவர் எங்களுக்குத் தெரியாமல் ஓடிவந்து நாங்கள் துவைத்து உலர்த்திய உடைகளில் ஒன்றையும் விடாமல் சுருட்டிக்கொண்டு இதோ நீ காண்கிற இந்தச் சிவ விருட்சத்தின் மேல் ஏறிக்கொண்டார்.

1116. நாங்கள் உடுப்பதற்கு உடையின்றிக் குளிரால் வருந்தினோம். நாங்கள் வீட்டிற்கும் போவதற்குக் கூடவில்லை. மாடுகளைப் பட்டினியாய்ப் போட்டுவிட்டு வெகு நேரம் ஆற்றிலேயே இருந்தோம்.

1117. உடைகளைக் கொடுக்கும்படி கெஞ்சிக் கேட்டும் அவரோ கொடுக்காமல் "நாங்கள் நீதிமான்கள்; மற்றவர்கள் யாவரிலும் நாங்கள் உயர்ந்தவர்கள்; எங்கள் உடைகளே அதை மெய்ப்பிக்கின்றன. இனி நாங்கள் செய்ய வேண்டுவது ஒன்றுமில்லை; நாங்கள் மோட்சத்திற்கு ஆளாகி

விட்டோம் என்று அகங்கரிப்பதற்கு இந்த உடைகளே அல்லது உங்கள் செய்கைகளே காரணமாயிருந்தன; இந்த நீதியின் செய்கைகள் யாவும் அல்லது உங்கள் வெள்ளுடைகளை எல்லாம் நானே உங்களுக்குக் கொடுத்தேன்; உங்கள் நற்செய்கைகள் யாவற்றுக்கும் நானே காரணமாயிருந்தேன்; நீங்கள் இவைகளை நினையாமல் நான் என்ற செருக்கால் நற்செய்கைளை அழித்து நீதியின் வெள்ளுடைகளைத் தீட்டுப்படுத்தினீர்கள்.

1118. வெள்ளுடைகளைத் தீட்டுப்படுத்தும் நானென்னும் அழுக்குப் போகிற வரைக்கும் இந்தச் சீவகாருண்ய வாரியிலேயே இருங்கள்.

1119. உங்கள் சாதிபேதம், மதபேதம், கல்விச்செருக்கு, கலை வல்லமை செயலின் தடிப்பு, சொல்லின் புரட்டு, மனதின் வஞ்சகம் யாவும் உப்பைப் போல் கரைந்து போகட்டும்.

1120. எல்லாத் தீமைக்கும் இருப்பிடமாகிய அன்னமயகோசம் தன் செயல் இழந்து, தீமை நீங்கிச் சினமும் ஆசையும் ஒழிந்து, எல்லாச் சீவர்களுக்கும் இரங்கவும் இடர் தீர்க்க முந்தவும் என்னிலேயே நிலைத்திருக்கவும் கூடியதாக நன்றாய்க் குளிரட்டும். சாந்தமடையட்டும்'' என்று இருவினையில் ஒரு வினையான எங்கள் நன்மையையும் அதன் பயனையும் தாமே கைக்கொண்டு எங்களை நிர்வாணமாக்கினார்.

1121. பற்று நீங்கிய நிலையில் கொண்டுவந்து விட்டார். ஒன்றும் அறியாமல் விழித்தோம். என்ன செய்வதென்று திகைத்தோம். இப்படி வருமென்று நாங்கள் நினைக்கவில்லை.

1122. எங்கள் மாடுகள் உணவில்லாமல் எலும்பெலும்பாய் இளைத்துப் போனதை மரத்திலிருந்து பார்த்து அவைகளின் மேல் இரக்கமுற்று அவைகள்பொருட்டு மரத்திலிருந்து இறங்கிவந்து 'இனிமேல் இப்படி அகங்கரிக்கவேண்டாம். நான் கொடுத்த இந்த நீதியின் வெள்ளுடைகளை உங்கள் செருக்கால் அழுக்குப்படுத்தவேண்டாம். அழுக்குப்படுத்துவீர்களானால் உடைகளை இழந்துபோவீர்கள்' என்று எச்சரித்து எங்களுக்கு உடைகளைக் கொடுத்து எங்களோடு கூட வந்தார்.

---

## 51. அன்னமயகோசம் நற்குணங்களைச் சிறைப்படுத்தலும் பரமான்மா அவற்றை விடுவித்தலும்.

1123. இது தவிர கீழ் உலகத்திற்கு அரசனாகிய அன்னகாம மன்னவன் தன் நாட்டிலும் அயல் இடங்களிலுமிருந்து அநேக உயர்குல மக்களாகிய நற்குண கன்னிகைகளைச் சிறை எடுத்து வந்து தன்னை மணஞ்செய்து கொள்ள வேண்டுமென்று பரிந்து கேட்பான். பயமுறுத்துவான்.

1124. உத்தம குணவதிகளாகிய இக் கன்னிகைகள் பரமான்மாவின் செய்கைகளையும் நற்குணங்களையும் சீவகாருண்யத்தையும் சிறந்த அழகையும் பல நாள் கேள்விப்பட்டு புருடரில் சிறந்தவராகிய அவரையே அடைய வேண்டுமென்று விரும்பி இருந்தார்கள்.

1125. இப்படி பரமான்மாவை நினைத்துக்கொண்டிருந்த உத்தம கன்னிகைகள் நரகாசுரனாகிய அன்னகாம மன்னவன் வீட்டில் எப்படிக் குடித்தனம் செய்வார்கள். அவன் எடுத்த முயற்சி யாவும் வீணாகின்றன. எப்போதாவது இவர்கள் நம்மில் விருப்பங் கொள்வார்களென்று கீழ் உலகத்தின் ஒரு பக்கத்தில் தன் அரமனைக்கு அருகில் ஒரு பெரிய அரமனையில் ஆயிரம் பதினாயிரங்களாகச் சிறைப்படுத்தி வந்தான். அவர்களுக்கு வேண்டும் உணவு முதலியவை நடந்துகொண்டு வந்தன.

1126. நாளுக்கு நாள் பரமான்மாவை அடைய வேண்டுமென்ற எண்ணமே வளர்ந்துகொண்டு வந்தது. அது போலவே அன்னகாம மன்னனிடத்தில் வெறுப்பும் வளர்ந்துகொண்டேயிருந்தது.

1127. பல கன்னிகைகளைத் தான் கொண்டுவந்தாலும் அவர்களில் ஒருவராவது தன்னை விரும்பவில்லை என்று கண்ட அன்னகாம மன்னன் அப்பத்தின் வீட்டில் நற்குணங்களாகிய குழந்தைகளைக் கொன்றதுபோலவே நற்குணங்களாகிய கன்னிகைகளையும் கொன்றுவிடுகிறதென்று நாளையும் குறிப்பிட்டான்.

1128. திக்கற்றவர்களான இக் கன்னிகைகள் என்ன செய்வார்கள்? தீமையே உருவெடுத்த இந்த அன்னகாம மன்னனோடு எதிர்த்து நிற்கும் வல்லமை அங்கிருந்த யாருக்கும் இருந்ததில்லை.

1129. சீயோன் மலைக்குத் தலைவராகிய பரமான்மா ஒருவரே நம்மை மீட்கக் கூடியவரென்று நம்பி தங்களுடைய மீட்புக்காக நோன்பிருந்து தங்கள் ரக்ஷகனாக அவர் வர வேண்டுமென்று ஒரு மனதாய் வேண்டிக் கொண்டார்கள்.

1130. எல்லாச் சீவர்களின் உள்ளத்தையும் அவர்கள் நினைக்கும் எண்ணங்களையும் அப்போதே அறியும் பரமான்மாவுக்கு இக் கன்னிகைகளின் விண்ணப்பம் கவனத்திற்கு வந்தது.

1131. உடனே இருள் நிறைந்த இரவைப் போக்க வரும் சூரியனைப் போலவும் ஈரமற்ற செத்தைகளைப் பற்றி எரிக்கும் நெருப்பைப் போலவும் கொடியவர் நடுங்கி அஞ்சும்படியான வடிவங்கொண்டு கீழ் உலகிற்குப் போய் நரகாசுரனையும் அவன் படைகளையும் அழித்துத் தமது வெற்றிக் கொடியை நாட்டினார்.

1132. நரகாசுரனும் அவன் வன்மை மிகுந்த படைகளும் அவன் இனத்தாரும் அவனுக்குத் துணையாயிருந்த கொடியோர்களான அவன் குடிகளும் மாண்டார்கள். மீந்தவர்கள் யாவரும் பரமான்மாவை அடைக்கலம் புகுந்தார்கள்.

1133. கன்னிகைகளை வைத்திருந்த அரமனையின் காவலும் காவற்காரரும் அழிக்கப்பட்டுக் காவல் கதவுகள் திறக்கப்பட்டன.

1134. அதில் காவலில் வைக்கப்பட்டிருந்த கன்னிகைகள் யாவரும் தாங்கள் விரும்பிய இடத்திற்குப் போகலாமென்று விளம்பரமும் செய்யப்பட்டது. நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நற்குணங்கள் வாய்ந்த அக் குணவதிகள் இனி எங்கே போவதென்று திகைத்தார்கள்.

1135. சிலர் இது உண்மையாயிருக்குமோ வென்று மலைத்தார்கள். சிலர் எங்களுக்கு மீட்பை அருளிய பரமான்மாவைப் பார்க்கவில்லையே என்று பதைத்தார்கள்.

1136. சிலர் பரமான்மாவே வந்து 'உங்களை சிறை மீட்டிருக்கிறேன்' என்று சொல்லும் வரையும் இவ்விடத்தை விட்டு நகரமாட்டோம் என்றார்கள்.

1137. சிலர் 'இந்த நரகாசுரன் எங்கள் நற்பருவத்தை எல்லாம் இந்தச் சிறைச் சாலையில் நாங்கள் போக்கும்படி செய்தான். இனிமேல் பிறந்த இடத்திற்குப்போய் என்ன செய்வோம் இங்கேயே சாவோம்' என்றார்கள்.

1138. மனந்துணிந்த சிலர் 'நாங்கள் உம்மையே நினைத்து உம்மையே அடையக் காத்திருக்கிறோம். உம்மை யல்லாமல் வேறு கதி எங்களுக்கில்லை என்று அவரைப் பணிந்து கேட்டுக்கொள்வோம் வாருங்கள்' என்றார்கள்.

1139. மிகுந்த பக்தியும் வைராக்கியமுமுள்ள சிலர் 'நாங்கள் அவரை அடைய வேண்டுமென்று நினைத்தது உண்மையானால் அவரே இங்கே வருவார் நீங்கள் என் ஆளுக்கொன்று சொல்லுகிறீர்கள்' என்றார்கள்.

1140. உண்மை நிலையுள்ள உத்தமிகளிற் சிலர் 'நம் எண்ணங்களை அவர் அறிந்திருக்கிறார். நாம் செபித்தவைகளும் அவர் திருச்செவியில் எட்டியிருக்கின்றன. நரகாசுரனையும் அவன் படையையும் நொடிப் பொழுதில் அழித்திருக்கிறார். அவருடைய வெற்றிக் கொடிகளும் இதோ வானத்தில் பறக்கின்றன. காவல்கள் யாவும் அழிவுற்றன. மங்கள வாச்சியங்கள் முழங்குவதனால் அவர் வென்றி வேந்தனாய் வீதி வருகிறார் என்று தெரிகிறது. நமக்கு மீட்புப் பறை முழங்குகிறது. நாம் விரும்பிய

படி அவரை அடைவது ஒன்றுதானே இன்னும் பாக்கியாயிருக்கிறது. அதுவும் விரைவில் நடக்கும்' என்று சொல்ல, எல்லாரும் அவாவுடன் பரமான்மாவின் வருகைக்கு எதிர்பார்த்திருந்தார்கள்.

1141. உள்ளத்தின் நல் விருப்பங்கள் யாவையும் நிறைவேற்றுவதில் மிகுந்த விருப்பமுள்ள பரமான்மா அங்கே வந்து தமது திருவுருக்காட்சி கொடுத்து கை அமர்த்தி "நீங்கள் அஞ்சவேண்டாம்; உங்கள் பகைவர்களை நீங்கள் விரும்பியபடியே அழித்து விட்டேன்; இனி ஒன்றுக்கும் மலைக்கவேண்டாம்; உங்கள் இனத்தாருடன் இனிதாக வாழ்ந்திருங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

1142. இதைக் கேட்ட உடனே பலர் திகைப்படைந்தவர்கள்போல் நின்றார்கள். பலர் பெருமூச்சு விட்டார்கள். மற்றும் பலர் மனம் தாளாமல் கால்கள் நடுங்கத் தரையில் உட்கார்ந்து 'நாங்கள் இனி என்ன செய்வோம். பரமான்மாவே இப்படிச் சொல்லுகிறாரே' என்று கண் கலங்கினார்கள்.

1143. இதைக் கேட்டுக்கொண்டிருந்த சீயோன் குமாரத்தியும் அதேவிதமாகக் கலக்கமடைந்தாள். நம்பியார் சற்று தைரியப்படுத்தி ஏ அம்மணி! இப்படி நற்குண கன்னிகைகள் யாவரும் தன்னை விடமாட்டார்கள் என்று அறிந்த பரமான்மா அவர்களுக்குப் பின் வருமாறு சொல்லுகிறார்.

1144. பெண்மணிகளே! "நான் உங்களுக்கு நாயகனாக இருக்க என்னால் முடியாது. நீங்கள் பதினாயிரத்திற்கு மேற்பட்டிருக்கிறீர்கள். அவரவர்க்குரிய இடத்திற்கு நீங்கள் போகலாம். என் விருப்பமும் உங்கள் விருப்பமும் ஒத்து வராது" என்று இல்லறத்தை அதாவது நற்செய்கைகள் யாவும் பரமான்மாவுக்கு ஒப்புக்கொடுக்கும் விதத்தை அங்கே உணர்த்துகிறார்.

1145. இல்லறத்தைக் கேட்ட அக் கன்னிகைகள் "நாங்கள் யாவரும் நல்லறத்தில் தவறாமல் இருப்போம். நாங்கள் உமது மனங்கோணாமல் உமது விருப்பத்தின்படி நடந்து கொள்ளுவோம். நாங்கள் சிறு வயதாய் இருக்கையில் உமது வடிவத்தையும் உமது பிறப்பு வளர்ப்பு குலத்தையும் அறிவதற்கு முன்னமே உம்முடைய புகழை மட்டும் கேள்விப்பட்டு உம்மை அடைய நினைத்தோம். உம்மை விடுவதைப் பார்க்கிலும் எங்கள் உயிரையே விட்டு விடுவது எங்களுக்கு நலமாயிருக்கும்" என்று மிகவும் வேண்டிக்கொண்டார்கள்.

1146. என் தங்கையாகிய சீயோன் குமாரத்தியே! சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்வதாகிய அமாவாசை அடுத்த நாள் வரப் போகிறது. இதற்குள் சூரியனைப் போன்ற முகமுள்ள பரமான்மாவுக்கும் சந்திரனை

ஒத்த முகமுடைய நற்குணக் கன்னிகைகள் யாவருக்கும் மணம் ஆகித் தீரவேண்டும். அதாவது சீவான்மாவின் நற்செய்கைகள் யாவும் பரமான்மாவை யடைந்து என்றும் பதினாறாய் நிறைந்த கலையுடன் இருக்கப் போகிறது.

1147. ஒரு நாளின் ஒரு பாகம் மட்டும் அதாவது இராத்திரியின் பின் பாகம் மட்டும் மிச்சமிருக்கிறது. இவர் உடன்படுவார் என்ற உறுதியை ஒருவாறு குறிப்பினால் தெரிந்துகொண்டு வெற்றி வேந்தனாகிய தங்கள் உயிர்த்துணைவனுக்கு ஆலத்தி எடுக்கத் தொடங்கினார்கள்.

1148. அவர்கள் அந்தரங்கங்களை அறிந்த பரமான்மா அவர்களுடைய நற்செய்கைகளாகிய தீபங்களைக் கண்டு மகிழ்ந்து தமது திருக்கரங்களினால் அவைகளை அருமையாகத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டார்.

1149. இப்படியே எல்லாப் பெண்களும் ஆலத்தி எடுத்தார்கள். ஒவ்வொருவர் தீபத்தையும் கையினால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டார். கொண்டுவந்தவர்கள் யாவருக்கும் ஒரே விதமாக 'உங்களைக் கைவிடுவதில்லை'. என்று விளக்கில் சத்தியம் செய்து கொடுக்கிறதாக அவர்கள் நினைத்தார்கள்.

1150. பரமான்மாவின் புன்னகையினால் அவர் உள்ளத்திலிருக்கும் எண்ணங்களையும் அவர்கள் கண்டுகொண்டு மகிழ்ச்சியுடனும் நாணத்துடனும் தலைவணங்கி நின்றார்கள்.

1151. நிறைந்த நற்குண சீலராய் விளங்கும் பரமான்மா அவ்வுத்தம கன்னிகைகளைப் பார்த்து "உங்கள் நல் விருப்பங்களையும் எண்ணங்களையும் நானே நிறைவேற்றுகிறேன். நீங்கள் எப்போதும் இப்படியே இருங்கள். உங்கள் சீவ நாளில் நற்குணங்களாகிய தீபம் சிவகாருண்யத்தில் விளங்கும் பொழுது தண்ணீரில் விட்ட விளக்குகளைப் போல் மிகுந்த ஒளியை அடையும். ஒன்று கோடி கோடியாகப் பெரிதாகும் என்பதை இப்போதே இந்த விளக்கைத் தண்ணீரில் விட்டுப் பாருங்கள்" என்று அழைத்துக் கொண்டு தண்ணீர்க்கு அருகே போனார்.

1152. பரமான்மா சொன்னபடியே அவ் விளக்குகள் யாவும் மிதந்து தண்ணீரில் நெடுந்தூரம் போவதையும் போகப் போக பிரதிபிம்பம் (எதிர் ஒளி) பெரிதாகி மிகுந்த ஒளியோடிருப்பதையும் கண்டு வியப்படைந்தார்கள்.

1153. அந்த இடத்தில் "இப்படியே உங்கள் வாழ்க்கை விளக்கத்தோடிருக்கட்டும். சிவகாருண்யத்திலேயே உங்கள் ஆயுளைச் செலவு செய்யுங்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் மிகுந்த விருப்பமாய் இரவு பகல் இணை பிரியாமல் இருப்பேன்" என்று வாக்குறுதி கொடுத்தார்.

1154. இந்த வேளையில் நானும் அங்கிருந்தால் மிக எளிதாய்ப் பரமான் மாவை நாயகனாக அடைந்திருப்பேன் என்று சீயோன் குமாரி உள்ளம் உருகுகிறாள்.

1155. இவ் வுத்தம கன்னிகைகள் உம்மையே அடைய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள என்னால் முடியாதென்று சொன்ன காலத்தில் 'நீர் எங்கள் நடுவிலிருந்தாலும் போதும். உமது திருவாய் மொழியைக் கேட்டும் உமது அழகைப் பார்த்தும் உமக்குப் பணிவிடை செய்தும் உம்மைப் புகழ்ந்தும் எங்கள் பொழுதை மகிழ்ச்சியாய்க் கழிப்போம்' என்று கேட்டுக்கொண்ட அவர்களிடத்தில் குறைவற்ற நற்குணங்கள் யாவற்றுக்கும் நாயகனாய் அவற்றின் நிறைவாய் மகிழ்வாய் அலங்காரமாய் விளங்கிக்கொண்டிருந்தார்.

---

## 52. சீவான்மா சிறு பிரா்யமாயிருக்கையில் பரமான்மாவின் பிரியப்படி செய்ய விரும்புதல்.

1156. ஏ அம்மணி! இப்படிச் சிறு வயதில் திருவிளையாடல் புரிந்த அவர் பன்னிரண்டாவது வயதில் மாயாபுரியில் பல மனிதர் கூடும் பட்டணத்தில் கலை வல்லோரும் மறைவல்லோர்களும் கூடியிருந்தபொழுது அங்கே போய் அவர்களோடு பேசினார்.

1157. பரமான்மாவின் வாக்கு வன்மைக்கு முன் மாயாபுரியின் கலை வல் லோரில் ஒருவராவது எதிர்த்து நிற்கவும் மறுமொழி சொல்லவும் கூட வில்லை. "தந்தையாகிய பிரமத்தின் பெருமைகளையும் அவரை அடையும் வழியையும் நான் உங்களுக்குச் சொல்ல வந்தேன்" என்று இரண்டு மூன்று நாள் இரவு பகலாய் எடுத்தோதிக்கொண்டிருந்தார்.

1158. அவர்கள் யாவரும் குழந்தையாகிய பரமான்மாவின் அறிவு நுட் பத்தைக்குறித்து வியந்து தங்கள் ஐயப்பாடுகள் யாவையும் அவரிடத்தில் தீர்த்துக்கொண்டிருந்தார்கள்.

1159. திருவிழாக் கொண்டாட்டத்திற்காக பரமான்மாவைக் கூட்டி வந்த தாய்தந்தையர் மூன்று நாள் தேடிவிட்டு ஆலயத்தில் பேசிக்கொண் டிருந்த அவரிடத்தில் வந்து "ஏன் இப்படி செய்தாய் மகனே; உன் தாயும் தந்தையும் உன்னை எங்கெல்லாம் தேடினோம்" என்றார்கள்.

1160. அதற்கு அவர் "நீங்கள் என் என்னைத் தேடினீர்கள். என் பிதா வுக்கு விருப்பமான வேலைகளை நான் செய்யவேண்டாமா"? என்று சொன்னார்.

1161. அதுபோல் சீவான்மா குழந்தையாயிருக்கையில் தான் தெய்வ உண்மை தெரிந்துகொள்ளாதவனுய் இருந்தாலும் தெய்வ வணக்கம், திருவிழா, கோயிலில் நடக்கும் கொண்டாட்டங்கள் ஆகிய இவைகளைக்கண்டு உள்ளத்தில் இவை யாவும் உண்மையென்றே உணருகிறுன்.

1162. தெய்வத்திற்கு இன்னது விருப்பமென்று தெரிந்து கொள்ளாத காலத்திலேயே மூட நம்பிக்கையால் ஒரு உறுதி யுண்டாகிறது. திருஷ்டாந்தமாக, தெய்வம் வானத்திலேயே இருக்கிறுரென்றும், அவர் மிகுந்த வல்லமை யுடையவரென்றும், தப்பிதம் செய்யும் பிள்ளைகளை உடனே நரகத்தில் போட்டுவிடுவாரென்றும், அவர் உரத்த சத்தமுடையவரென்றும், அவருடைய வாயிலிருந்து நெருப்புப் புறப்படுகிறதென்றும், அது பொல்லாதவர்களை அழிக்கிறதென்றும் சொல்லி, வானத்தில் தலையும் காலுமாய்த் தோன்றும் ஒரு முகிலைக்காட்டி, அதில் உண்டாகிற இடி முழக்கத்தை அவர் சத்தமென்றும், மின்னல்களை அவர் வாயிலிருந்து வரும் நெருப்பு என்றும் பயமுறுத்தி வைக்கிறுர்கள்.

1163. இதைக்கொண்டு, மூட நம்பிக்கையால் உண்டான உறுதியால், ஒருவாறு தெய்வத்திற்கு விருப்பமானவைகளைச் செய்ய சீவான்மா விரும்புகிறுன்.

---

## 53. சீவான்மா மாயாபுரியின் மயக்கத்தை வெறுத்து ஞானதீட்சை பெற்று சோதிக்கப்படுதல்.

1164. இதற்குப் பின் உலகத்தின் நடை பழகப் பழக வீண் எண்ணங்களும் உலகப் பற்றும் மிகுதியாகி அவைகளுக்கேற்ற முயற்சிகள் செய்யவும் அவற்றை அடையவும் ஆசிக்கிறுன்.

1165. தன் முயற்சியின் பயனுக முப்பது வயதிற்குள்ளாக உலகத்தின் மாயை இன்னதென்று அதாவது மாயாபுரியின் மயக்கத்தில் பல காலமும் உழன்று சற்றுத் தேறி ஒருவாறு அதினின்று கரையேற முயற்சிக்கிறுன்.

1166. தூல தத்துவங்கள் வலுப்படாத காலத்தில் சுத்த தத்துவங்கள் பரமான்மாவின் உணர்ச்சியோடு இருந்ததாகவும் தூல தத்துவங்கள் பூரண செயலுக்கு வரும்பொழுது பரமான்மாவின் நினைப்பையே மறந்து உலக சம்பந்தமான அசுத்தனுகிறுன்.

1167. இப்படிச் சில காலம் செல்ல உலகப் பற்றுக்களினுல் துன்பப்பட்ட இவன் தூல தத்துவம் இளைத்து வலுக் குறைந்து தான் அடைந்த துன்பத்திலே உணர்ச்சியடைந்து பழையபடி பரமான்மாவை நினைக்கவும் அவர் விருப்பப்படி செய்யவும் புது வலுவையும் தெய்வ அருளையும் பெறுகிறுன்.

1168. தெய்வ பலமடைந்த இவன் மாயாபுரியின் மக்களுக்கு தீமையினின்று விலகுங்களென்றும் நன்மையைச் செய்யுங்களென்றும் போதிக்கத் தக்கவனுகிறுன். அதாவது தன் தீய குணங்களை விடவும் புலன்களின் விருப்பப்படி நடவாமல் தெய்வ விருப்பப்படி நடக்கவும் வேண்டுமென்று தானே உணர்ந்து சீலனுகிறுன்.

1169. சீவான்மா புது வலுக் கொண்டு பரமான்மாவின் விருப்பப்படி நடக்க அபிஷேகம் பண்ணப்படுகிறுன். தீய செய்கைகள் அழிந்து நீதிக் குரிய செயல்களைச் செய்யத் தகுந்தவனென்று திடப்படுத்தப்படுகிறுன்.

1170. உடலின் ஆசைகளெல்லாவற்றையும் அழித்தேனென்றும் நீதிக்குப் பிழைத்தேனென்றும் ஞானமுழுக்குப் பெறுகிறுன்.

1171. பரமான்மாவின் அருளை முற்றிலும் அடைகிறுன். புதியவலுப் பெற்று ஆவிக்குரியவாறு வாழத் தீர்மானிக்கிறுன்.

1172. நன்மையைச் செய்யவேண்டுமென்ற உள்ளக்கிளர்ச்சி உண்டாகிறது. தீமையை அருவருத்து நன்மையின்மேல் அல்லது உண்மையின்மேல் விடாய் கொண்டு இடைவிடாது சீவ வழியில் செல்லும் சுத்த ஆவி அவனில் நிறைகிறது.

1173. இப்படிச் சீவ வழியில் செல்லவேண்டுமென்று முடிவு பண்ணிக் கொண்ட சீவான்மாவுக்குத் தான் இது வரை நன்றென்று நினைத்துக் கொண்டிருந்த இன்பங்கள் யாவும் இன்பமில்லாத ஒரு காடு போலத் தோன்றுகிறது.

1174. இராகம் முதலிய தீய செயல்களைத் துணையாகக்கொண்ட இவன் இனிமேல் செல்லும் சீவ வழி வெறுமையாய் இருக்கிறதாக அறிகிறுன்.

1175. இதுவரைக்கும் தீமையை புசிப்பாக உடைய இவன் தீமையின் புசிப்பிழந்தவனுய் நன்மையை எப்படிச் செய்வதென்று தெரியாத ஓரிடத்திற்கு வருகிறதாகக் காண்கிறுன்.

1176. இந்த வேளையில் நல்லெண்ணங்களும் புதிய விருப்பங்களும் தேவ அடியார்கள் போல வந்து அவனைத் தாங்குகின்றன.

1177. கண்டவுடன் தின்று விடுவதாகிய தீய குணமென்னும் காட்டு விலங்குகளின் நடுவில் குடி இருக்கிறுன்.

1178. இப்படி ஒருவருக்கும் தெரியாமல் நல் வழியில் செல்ல வேண்டுமென்று நினைத்த இவன் இராகம் முதலிய தீய செயல்களை வெறுத்து உள்ளத்தில் உறுதிகொண்டு நல்லெண்ணங்கள் வலுப்பட வலுப்பட உலகப் பழக்கங்கள் யாவும் குறைகின்றன.

1179. இதற்கு முன் இவனுக்கு உற்ற தந்தையாயிருந்த தீங்கனாகிய அன்னகாம மன்னவன் சீவான்மாவை வசப்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறான். தான் எவ்வளவு முயன்றும் பழைய தீய வழிக்குச் சீவான்மா திரும்பமாட்டானென்று திட்டமாய் அறிகிறான்.

1180. உலகப்பற்றை ஒழிக்க வேண்டுமென்று விரதங் கொண்டு சீவான்மா உலகப் பொருள்களில் எவ்வித குறையிருந்தாலும் அவைகளைக் கருதாமல் பரமான்மாவிலேயே நாட்டங்கொண்டிருக்கிறதாகக் கண்டு வருந்துகிறான்.

1181. உலக சிந்தனை யொழிந்த சீவான்மாவுக்கு ஊண், உடை, வீடு முதலியவைகளில் சற்றுக் குறைவு நேரிடுகிறது.

1182. இப்படிக் குறைவு நேரிட்டிருக்கிறதை அன்னகாம மன்னவன் அறிந்து தன்னுடைய ஆடம்பரத்தோடு அவனிடத்திற் சென்று சீவான்மாவைச் சோதிக்கத் தொடங்குகிறான்.

## 54. சோதனைக்காரன்.

1183. இத் தீங்கன் நல் வழி யடைந்த பல மேலோர்களை இதற்கு முன் சோதித்துக் கைதேர்ந்தவன். இவனுக்குச் சோதனைக்காரன் என்று பேர்.

1184. இவன் சோதிக்கும் சோதனைகளில் தேர்ந்தவர்கள் புடமிட்ட தங்கம் போல் நன்னிலையடைவது உலகந் தோன்றியது முதல் வழக்கம்.

1185. தங்கத்தைத் தவிர வேறு உலோகங்கள் எப்படி உப்புக்கும் காவிக்கும் நிலை நில்லாமல் அல்லது மிஞ்சாமல் காவியோடு கலந்து உருத் தெரியாமல் மண்ணாகிப்போமோ அதுபோல் உறுதியில்லாத சீவான்மா பழையபடி இவனோடேயே சேர்ந்து போவான்.

1186. ஒருவகையில் இவனை நல்லவனென்று சொல்ல வேண்டும். தங்கத்தில் சேர்ந்த உலோகங்களை காவியானது இழுத்துக்கொண்டு தங்கத்தைப் பத்தரை மாற்றாக்குவது போல் சிவ வழியில் செல்ல இருப்பவர்களின் அழுக்கைப் போக்க இவன் ஒரு காரணமாயிருக்கிறான்.

1187. சாணைபிடிக்காத வைரம் எப்படி ஒளியடைவதில்லையோ அதுபோல இவனுடைய சோதனையில்லாத அடியார்கள் நன்றாய் விளங்குவதுமில்லை.

1188. கரும்பிலிருந்து சாறு எடுக்கப்படுவது போலவும் எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவது போலவும் உண்மையான அடியார்கள் தங்கள்

பாவ உடல் நீங்கிச் சிவ உடல் பெறுகிறார்கள். பாவிகள் குகையில் (நிரடையில்) தீய்ந்த ஈயம்போலவும் நெருப்பில் எரிந்த விறகைப்போலவும் அவன் மயம் ஆகி அழிவடைகிறார்கள்.

1189. இவன் விண்ணுலகத்திற்கும் போவான், பூமியிலும் திரிவான், கீழுலகத்திலும் அரசாட்சி செய்வான்.

1190. இவன் சோதனைகள் ஒருவிதம் அல்ல; அவரவர்களுக்குத் தக்கவித மாக காலத்துக்கு ஏற்றவாறிருக்கும். ஒரேவிதமாக இருக்குமானால் தன்னுடைய சோதனையை சீவர்கள் வென்று விடுவார்களென்று மிகுந்த எச்சரிக்கை உடைவனாயிருப்பான்.

1191. மனிதர்களில் எவன் எந்த நல்ல காரியத்தில் உறுதியுடையவனா யிருக்கிறானோ அவனை அந்த இடத்தில் தகுந்த கேள்விகேட்டு மடக்குவது இவனது வழக்கம். இதில் இவனுக்கு ஒப்பானவர்கள் ஒருவருமில்லை.

1192. இப்படிப்பட்ட ஒருவனுடைய கேள்விகளுக்கு மறுமொழி சொல்ல முடியாதென்று நீங்கள் நினைக்க வேண்டாம்.

1193. கேட்கும் கேள்விகளுக்கு ஏற்ற விடை சொல்லிவிட்டால் ஒரு நொடிப்பொழுது அங்கே இருக்கமாட்டான். இல்லையானால் மறுமொழி சொல்லுகிறவரைக்கும் விடமாட்டான்.

1194. ஒன்று மறுமொழி சொல்லவேண்டும் அல்லது அவன் விருப்பப் படி நடக்கிறதாக ஒப்புக்கொள்ளவேண்டும். பலர் இவன் சோதனையில் தோற்றுப்போனார்கள்.

1195. இவன் தன் இயல்பை அறியாத சீவான்மாவுக்குத் தலைவனாகவும் தன்னை அறிந்த அடியார்களுக்குப் பகைஞனாகவும் இருக்கிறான்.

1196. சிவவழியில் செல்ல இருக்கும் தொண்டர்களைத் தன் வசப்படுத்திக் கொள்வதற்குச் சாதகமாக தன்னையே மூன்று கேள்விகளில் உருவகப்படுத் திக் கேட்பான்.

1197. இவைகள் இன்னவென்று தெரிந்திருக்குமானால் இந்தப் பொல்லா தவனை வெல்ல நமக்குத் தைரியமுண்டாகும். இவன் கேள்விகளுக்குத் தக்க மறுமொழி கிடைத்துவிட்டால் இவனும் அங்கே நிற்கமாட்டான்.

1198. நீங்கள் இத் தீங்கனின் சோதனையை வெல்லவும், சிவ வழியில் இடையூறின்றி நடந்து வீடு பெறவும் விரும்புவீர்களானால் அம்மூன்று கேள்விகளின் மறுமொழியும் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும்.

1199. அம் மூன்றும் பழக்கத்திற்கு வந்திருந்தாலொழிய வெறும் சொல்லோடு போகிறவனல்ல. உள்ளும் புறமும் இவன் நன்றாயறிவான்.

1200. பாதாளமே உருவாக எடுத்த இவன் மூன்று தீய குணங்கள் நிறைந்தவனாயிருக்கிறான். ஆணவம், காமம், மாயை என்ற மும்மலமும் ஒரு உருவாகி உலாவுகிறதாக நீங்கள் அறியவேண்டும்.

1201. நீங்கள் அறிந்திருக்கிறபடி இவன் சுத்த தத்துவமுடையவனாய் பரமான்மாவின் சந்நிதியிலிருந்த பொழுது அவருக்கு உகந்த தொண்டனாக இருந்தான்.

1202. படிப் படியாய் தான் என்ற ஆணவமும், தனக்கு என்ற இச்சையும் அல்லது காமமும் தனக்கு இத் தீய எண்ணங்களினால் இன்னது வரும் என்ற அறியாமையையும் உடையவனானான்.

1203. இப்படி ஆனதை அறிந்த பரமான்மா இவன் விருப்பப்படி விட்டுத் தன் முன்னிலையிலிருந்து இவனை விலக்கிவிட்டார். இவன் ஆயுள் முழுவதும் தீராத துன்பமும் ஓயாத அழுகையும் உடைய துன்ப நாட்களை உடையவனானான்.

1204. தனக்கு எவரும் வசப்படாதிருந்தால் அவர்களை எப்படியாவது கெடுத்து தன்னைப்போலாக்க வேண்டுமென்று முயலுவான்.

1205. தான் எந்தத் தீய குணங்களினால் இந்த நிலையை அடைந்தானோ அந்தக் குணங்களையே தான் கற்ற பெரிய கல்வியாக நினைத்துச் சீவான்மாவின் ஆயுள் காலத்தில் இடறி விழும்படி செய்வான்.

1206. இவனுடைய கேள்விகள் யாவும் இம் மூன்றினுடைய சாரமாகவே இருக்கும். இந்த வழியில் பரமான்மாவையும் சோதிக்கப் புறப்பட்டான்.

1207. இவன், தீய குணங்கள் யாவும் ஒன்று கூடிய வடிவனென்று நீங்கள் நன்றாயறியவேண்டும். சுவர்க்க, மத்திய, பாதாளமென்ற மூன்று உலகங்களின் தன்மையில் சுவர்க்கலோகத்திலிருந்து கீழ் நோக்கமுடையவனாக இருக்கிறான்.

1208. அதுபோலவே முக்குணங்களிலும் பூதங்களிலும் மூன்று உடல்களிலும் மேல் பாகத்திலிருந்து கீழ் நோக்குடையவனாய், அந்தக்கரணங்களைச் சேர்த்துக்கொண்டு தீமையையே விளையாட்டாகச் செய்து கொண்டிருக்கிறான். சீவர்களை மேல் நோக்க விடாமல் கீழ் நோக்கச் செய்வதே இத் தீங்கனுடைய வேலை.

1209. தான் தெய்வத்தினுடைய பிள்ளையென்றும், தெய்வத்தினுடைய வடிவமென்றும், தெய்வம் தன்னில் வாழ்ந்திருக்கிறானென்றும், தான் தெய்வத்தை உடையவன் என்றும், தெய்வ சித்தப்படி நன்மை செய்யவே

உலகத்திற்கு வந்திருப்பவன் என்றும், சீவான்மாவுக்குத் தோன்ற விடாமல், அதற்கு மாறாகத் தீமை யாவையும் செய்யும்படி ஓயாது முயற்சி செய்துகொண்டேயிருக்கிறான்.

1210. தூல உடம்பின் குற்றமாகிய அல்லது மலமாகிய நான் என்ற ஆணவத்தையும், சூக்கும உடலின் குற்றமாகிய தனக்கு என்று சொல்லும் இச்சையாகிய காமத்தையும், காரண உடலின் மலமாகிய அறியாமை என்னும் மாயையையும் தனக்கு உறுப்பாக உடையவன்.

1211. தான் என்று அகங்கரிக்கச் செய்வான் தனக்கு என்று எல்லாப் பொருளையும் விரும்பச்செய்வான்.

1212. தன்னைப் போலவே ஒவ்வொரு சீவான்மாவும் பெருமையும் இச்சையும் கொள்ளவேண்டுமென்று அறிவை மயக்கி யாவற்றிற்கும் நானே கர்த்தனென்று இறுமாப்படையும்படி செய்வான்.

1213. ஆணவம், இச்சை, அறியாமை என்ற இம் மூன்றையும் தனக்கு படைத்தலைவர்களாகவும், இராக முதல் பதின்மூன்று பேரையும் அவர்களின் இனத்தவரையும் படைகளாகவும் கொண்டவன்.

1214. உலகத்தை வெறுத்துப் பரத்தை விரும்பும் சீவான்மாவுக்கு இவனும் இவன் படைகளும் மிகவும் கொடிய பகைவர்கள்.

1215. இவன் சீவர்களுடைய ஊண், உறக்கம், நடை, உடை பழக்க வழக்கங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டு அவர்கள் செல்லும் சீவ வழியில் அவர்களைக் கெடுக்கப் பதிவிருப்பான்.

1216. வெறுக்கும் தீமைகளில் விருப்பமும், விரும்பும் நன்மையில் வெறுப்பும் அவர்களுக்கு உண்டாகும்படி அறிவை மயக்கி இடைவிடாது நடித்துக் காட்டுவான்.

1217. தன்வசப்பட மாட்டார்களென்று தோன்றும் சீவான்மாக்களிடத்தில் அடியார் வேடத்துடன்சென்று நய வஞ்சகத்தால் அவர்களை வசப்படுத்த முயலுவான்.

1218. தன் சோதனைக்கு உட்படுவார்களென்று அறிந்த சீவான்மாக்களிடத்தில் தன்னுடைய ஆடம்பரத்தை முழுதும் காட்டி அச்சுறுத்தி ஆண்டுகொள்ளுகிறான்.

1219. இவன், பொதுவாக அறிவும் ஆராய்ச்சியுமுடைய அறிஞர்களிடத்தில் நெருங்குகிறதில்லை. ஆனால் 'மானைக் காட்டி மானைப்பிடிப்பது போல' அவர்களோடு சம்பந்தப்பட்ட அறிவில்லாத பேதைகளை முதலில் வசப்படுத்திக்கொண்டு பின் அவர்களைக் கொண்டு அறிவாளிகளையும் தன் சொல்லைக் கேட்கும்படிச் செய்வான்.

1220. எல்லா வளப்பமும் பொருந்திய ஏதேன் என்னும் சிங்காரத்தோட்டத்தில் ஒரு குறையுமின்றித் தேவ தரிசனம் பெற்று வாழ்ந்துகொண்டிருந்த நமது ஆதித் தாய் தந்தையரின் வாழ்வைக் கண்டு பொறாமை அடைந்தான். நல்லவர்கள் மேல் பொறாமை கொள்வதே இவன் இயல்பு.

1221. மன உறுதியுள்ள ஆதித் தந்தையினிடத்தில் இவன் போகாமல் பேதையாகிய ஆதித் தாயைச் சோதித்தான். முதல் முதல் தேவகட்டளையை மீறும்படியான ஆணவத்தை உண்டாக்கினன். ஏழை என்ன செய்வாள்? இவன் மாயத்திற் சிக்கிக்கொண்டாள்.

1222. தின்பதற்கு நல்லதென்றும் பார்வைக்கு இன்பமானதென்றும் எண்ணும்படியாய் ஐம்புலன்களும் இச்சையில் அகப்படும்படி தீயகனியைப் புகழ்ந்துபேசினன்.

1223. பேதைப் பெண்பிள்ளை இன்னதென்று தெரியாமல் தியக்க முற்ருள். நீங்கள் தெய்வத்தைப்போல் இருப்பீர்களென்று திடன் சொல்லி அவளை அறியாமைக்குள் அல்லது மாயைக்குள் கொண்டுவந்து விட்டான்.

1224. இவன் சோதனைகள் மூன்றிலும் நமது ஆதித் தாய் அகப்பட்டுக் கொண்டாள். இவனை எதிர்த்து இவனது மூன்று தீய குணங்களும் தன்னை அணுகாதபடி செய்துகொள்ளத் திறமையற்றுப் போனள். அதனல் அவளை வசப்படுத்திக்கொண்டான். அவளோ நமது ஆதித் தந்தைக்கு பலவிதத்திலும் விருப்பமூட்டி அவனும் தேவ கட்டளையை மீறும்படி வசப்படுத்திக்கொண்டாள்.

1225. இதனல் ஆணவமே உருவெடுத்த இத் தீங்கன் தலை நசுக்கப்படவும் இச்சையே உருவெடுத்த ஆதித் தாய் வேதனையை அடையவும் அறிவீனமுடைய புருஷன் சாபம் அடையவும் வேண்டுமென்று பரமான்மா கட்டளையிட்டார்.

1226. இவனுடைய செருக்கால் பெண் வழியும் பெண்ணின் இச்சையினல் ஆண் வழியும் ஆதாமின் அறியாமையினல் உலகத்திலுள்ள யாவும் சாபத்தை அடைந்தன.

1227. நன்மையைச் செய்யும் பேற்றை இழந்தார்கள். தீமையைச் செய்யும் மரணத்தை அடையக்கூடியவர்களானர்கள். மற்றும் தேவசாயலான எல்லா நற்குணங்களையும் நல் வரங்களையும் இழந்து போனர்கள்.

1228. பொறுமையும் மகிழ்ச்சியுமுடைய தேவ சந்நிதியை விட்டுத் துரத்தப்பட்டார்கள். துன்பமும் அங்கலாய்ப்பும் உடைய தீங்கனேடு இருக்க வழக்கப்பட்டார்கள்.

1229. நமது ஆதித் தந்தையின் மரபினராகிய நம்மையும் இந்த மூன்று குணங்களினால் சோதிக்கப்படக் கூடிய இயல்பு தொடரவும் செய்தான்.

1230. வழி வழியாய்ப் பெற்ற இந்த இயல்போடு தன் பருவம் தொடங்கும் காலத்தில் இத் தீங்கன் முன் போலவே மூன்று கேள்விகளினால் மேற்கொள்ள முயற்சிக்கிறான்.

1231. பிறப்பினால் பாதி வலுவை இழந்து தீயகுணத்திலேயே உருவான ஒவ்வொரு சீவான்மாவும் இவனுடைய மாய வலையில் மிகவும் எளிதாகச் சிக்கிக் கொள்ளுகிறான்.

1232. ஆணவம் காமம் மாயை என்கிற மூன்று தீய குணங்களையும் தன் இயல் உருவாய்ப் பெற்ற ஒவ்வொரு சீவான்மாவும் உலகத்தில் வாழ நேரிடும் தன் வாழ் நாளில் அதே குணங்களை மேற்கொண்டு மேல் போக வலுவற்றவனாக இருக்கிறான்.

1233. சீவான்மா தெய்வத்தோடு சஞ்சரிக்காமலும், சீவ விருட்சத்தின் கனியைத் தின்னாமலும் இருக்கும்படி செய்த இம் மூன்று தீய குணங்களையும் வேரோடு நீக்க முயற்சிக்கவேண்டும்.

1234. இம் மும்மலமும் அற்று நிறைந்த நற்குணன் ஆனாலொழிய சீவான்மா தூய்மையுள்ள தேவ சந்நிதியைக்காண தகுதியற்றவனாயிருக்கிறான்.

1235. தகுதியில்லாத சீவான்மாவைத் தகுதியுள்ளவன் ஆக்குவதற்காகவே பரமான்மா நடு உலகத்திற்கு வந்தார்.

1236. அவரிடத்திலும் இத்தீங்கன் இந்த மூன்று கேள்விகளையும் கேட்கத் துவங்கினான். அவர் கீழ் உலகத்தாரின் தீமைகளைக் கண்டித்து நல் வழியில் செல்ல உணர்த்துவதும், அவர்கள் பிணிகளை நீக்குவதும், இறந்தவர்களுக்கு உயிர்கொடுப்பதும், ஒடுக்கப்பட்டவர்களை மீட்பதுமாகிய வேலைகளைச் செய்யத் துவங்கினார்.

1237. வேலையின் துவக்கத்திலேயே இவர் இந்த வேலைக்குத் தகுதி உள்ளவரோ அல்லவோ என்று சோதிப்பது போல மூன்று கேள்விகளையும் கேட்கிறான்.

---

## 55. திருமறையியல் முடிவுரை.

1238. திருமறை உணர்த்தும் மேலான பொருளை நாம் ஒருவாறு அறிந்து கொள்வதற்கு அம்மறையின் சில வசனங்களையும் கருத்துகளையும் உவமான உவமேயங்களையும் இங்கே பார்த்தோம்.

1239. இதில் சீவன், சீவான்மா, பரமான்மா, பிரமம் என்பவைகளைப்பற்றி யும் பரிசுத்த ஆவி, அசுத்த ஆவி அல்லது பொல்லாத ஆவி என்பவைகளைப் பற்றியும் அவற்றின் உட்பொருள் இன்னது என்பதைப்பற்றியும் வேத வசனங்களில் சொல்லப்படும் கருத்தும் சொல்லியிருக்கிறேன்.

1240. அதன் பின் இவ் வுடல் தேவ ஆலயமாகவும் தேவ இராச்சியமாக வும், சீவ விருட்சமாகவும் தெய்வ பர்வதமாகவும் தெய்வ சிங்காசனமாகவும் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறேன்.

1241. கடவுளைப் பற்றி அறியும் நல்லறிவே ஞானமென்றும் தீமைக்குப் பயப்படுதலே கர்த்தருக்கு பயப்படுதலென்றும் ஞானமென்றும் நன்மை செய்வதே நல்லறிவென்றும் நன்மறை உணர்த்தும் வசனங்களைக்கொண்டு சொல்லியிருக்கிறேன்.

1242. நன்மறையினால் உணர்த்தப்படும் வசனங்களைக்கொண்டு தனக்குத் தலைவனாய் அமர்ந்த தெய்வத்தைத் தான் கண்டு உண்மையில் வணங்கு வதே நன்னெறியாகுமென்றும் அந்த நன்மறையில் சொல்லப்படும் யாவை யும் கைக்கொண்டு நடப்பதே அதற்கு முன்னெறியாகும் என்றும் தெளி வாகச் சொல்லியிருக்கிறேன்.

1243. இவைகள் நன்றாய் விளங்குவதற்கு அநுகூலமாகும்படி நமது உடம் பைப் பற்றியும் நமது உடம்புக்கும் பரமான்மாவுக்கும் உள்ள சம்பந்தத் தைப்பற்றியும் கடவுளுக்கும் உடலுக்குமிருக்கும் சம்பந்தத்தைப் பற்றியும் 77 ஆம் பக்கம் முதல் சொல்லியிருக்கிறேன்.

1244. அதன் பின் நமது உடலும் நம் உள்ளத்திலிருக்கும் கடவுளும் அவரை ஆராதிக்கும் முறையும் நாம் காணக்கூடிய மண் ஆலயத்திற்கும் அதில் நடக்கும் ஆராதனைகளுக்கும் ஒத்திருக்கின்றனவென்று காட்டியிருக் கிறேன்.

1245. இவ்வுடல் தெய்வத்தின் பூந்தோட்டமாயிருக்கிறதென்றும் தெய் வம் வசிக்கும் பரிசுத்த பர்வதமாயிருக்கிறதென்றும் உவமித்து அடி யார்கள் சொன்னதையே இங்கே சொல்லியிருக்கிறேன்.

1246. சீயோன் மலையின் அழகையும் அதின் அடிவாரத்தின் இயல்பையும் அடிவாரத்தில் நடக்கும்வேள்வியையும் வேள்வி நடத்தும் அன்னகாம மன் னனையும் அவன் குமாரத்தி பர்வத புத்திரியையும், மாயாபுரியின் சந்தை யையும், மாயாபுரியை விட்டுப் பர்வத புத்திரி பரமான்மாவைத் தேடிப் போவதையும், மாயாபுரியாருக்கு முனிவர்கள் நன்னெறி புகட்டுவதையும், சீயோன் குமாரத்திக்கு ஒரு முனிவர் பரமான்மாவைப் பற்றிச் சொல் வதையும் இங்கே சொல்லியிருக்கிறேன்.

1247. சீயோன் மலையில் சிறிது தூரம் சென்ற பின் பரமான்மாவின் தாசனாக விளங்கும் நம்பியாரை சீயோன் குமாரத்தி கண்டு பரமான்மாவின் வரலாற்றை விசாரித்ததும் சொல்லப்படுகிறது.

1248. அதன்மேல் 147 ஆம் பக்கமுதல் பரமான்மா பிறந்த பொழுது தேவதூதர்கள் பாடியதும், பரமான்மாவை மேய்ப்பர்கள் சந்தித்ததும், பரமான்மாவை மூவரசர் பணிந்ததும், மூவரசர் பரமான்மாவின் நட்சத்திரத்தின் மகிமையைச் சொல்லியதும், பரமான்மாவை வயது சென்ற ஒரு கிழவர் கையிலேந்தி ஆசீர்வதித்ததும், அன்னகாம மன்னவன் பரமான்மாவாகிய குழந்தையைக் கொல்லத் தேடியதும் சொல்லப்படுகின்றன.

1249. சீவர்களின் நன்மை யாவும் பரமான்மா அடைவதும், பரமான்மா சீவர்களை மகிழ்வித்து விருத்தியாக்குவதும், பரமான்மா சீவர்களுக்கு நீதியின் வெள்ளுடைகளைக் கொடுப்பதும், அன்னகாம மன்னன் சிறைப்படுத்திய நற்குணங்களைப் பரமான்மா விடுதலை செய்தலும், பரமான்மா ஞான தீட்சை பெறுதலும் சோதிக்கப்படுதலும், சோதனைக்காரன் தோன்றுவதும் சொல்லப்படுகின்றன.

1250. எனக்கு அருமையானவர்களே! திருமறையில் சொல்லப்படும் இரகசியங்களை அறிந்து கொள்வதற்குப் போதுமானதாக திருமறையின் வசனங்களை அப்படி அப்படியே சேர்த்துச் சொல்லியிருக்கிறேன். அவை பூரணமாய் விளங்குவதற்கு ஏதுவாக சில உவமானங்களையும் சொல்லியிருக்கிறேன்.

1251. இனிமேல் சொல்லப்படும் வேத இரகசியங்களும் நன்னெறியும் நன்றாய்விளங்கும்படி தன்னை அறிந்த சீவான்மாவை பர்வத புத்திரியாகவும் அவளுடைய சந்தேகத்தை நீக்கிவைக்க பரமான்மாவைப்பற்றிச் சொல்லும் தன்னையறிந்த உண்மையான தேவபக்தனை நம்பியாராகவும் உவமித்து இருவரும் வேத இரகசியங்களை அறிந்துகொள்ள வின்வுவதும் உத்தரம் சொல்வதுமாக எழுதியிருக்கிறேன்.

1252. பரமான்மாவின் பிறப்பும் அவர் வளர்ப்பும் சிறு வயதில் அவர் செய்த திருவிளையாடலும் அவர் ஞான தீட்சை பெறுதலும் சோதனைக்காரன் வருவதும் சோதிப்பதுமாகிய யாவும் பரமான்மாவில் எப்படிக் காணப்பட்டனவோ அப்படியே சீவான்மாவில் பிறக்கும் பரமான்மாவுக்கும் இருக்கின்றனவென்று நீங்கள் அறியவேண்டும்.

1253. உலகத்தை பாவத்தினின்று மீட்டு இரட்சிக்க வந்த பரமான்மாவின் சீவிய முறைப்படியே உங்களில் பிறக்கும் கிறிஸ்து பரமான்மாவின் சரிதையும் இருக்குமென்று நீங்கள் கண்டுகொள்ள வேண்டுமென்று நான் மிகவும் விரும்புகிறேன்.

1254. அப்படியானால் இனிமேல் சொல்லப்போகிற யாவும் உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். அதாவது வேதத்தினால் சொல்லப்படுகிற வசனங்கள் யாவும் உங்களுடையதாயிருக்கும்.

1255. தெய்வம் உங்களுடையவராகவும் நீங்கள் அவரையுடையவர்களாகவும் காணும்பொழுது மிகுந்த பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

1256. கிறிஸ்து பரமான்மாவை சோதிக்க வந்த சோதனைக்காரன் உங்களையும் சோதிக்க வருவான். அவன் கிறிஸ்து பரமான்மாவை எந்தக் கேள்வியினால் வெல்லவந்தானோ அந்த மூன்று கேள்விகளினாலேயே உங்களையும் தன் வசப்படுத்திக் கொள்ளலாமென்று வருவான்.

1257. அம்மூன்றும் உங்களுக்குத் தெரிந்திருக்குமானால் அதோடு அனுபோகத்திற்கு வருமானால் அவனைத் தோற்கடித்து வெற்றிவேந்தராய் விளங்குவீர்கள். நித்திய சீவனையும் பெறுவீர்கள். பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயும் இருப்பீர்கள்.

1258. பிசாசின் தந்திரங்களினால் வசப்பட்ட மனிதனை இரட்சிக்க வந்த பரமான்மாவை சோதிக்க அவன் மூன்று கேள்விகள் கேட்கிறான்.

1259. இம்மூன்று கேள்விகளுமே வேதத்தின் சாரம். இம்மூன்று கேள்விகளின் கருத்தே வேதத்தின் கருத்து.

1260. அதோடு மூன்று கேள்விகளின் பதிலே வேதத்தில் சொல்லப்படும் உபதேசம். இந்த மூன்று கேள்விகளின் கருத்தை விளக்குவதற்கே வேதம் எழுதப்பட்டது.

1261. மூன்று கேள்விகளினால் உணர்த்தப்படும் தீய குணங்களை நீக்குவதற்கே பரமான்மா உலகத்தில் அவதரித்தார்.

1262. இம்மூன்று விதமான தீய குணங்களை நீக்குவதற்கு போதித்தும் சாதித்தும் தியானித்தும் வந்தார்.

1263. இம்மூன்று தீய குணங்களைப்பற்றி நாம் சொல்லவும் நினைக்கவும் நம் வாக்கிலும் மனதிலும் அவை அடங்கா.

1264. இந்த மூன்று தீயகுணங்கள் நீங்கி பரிசுத்தமாகும்பொழுது அவன் எல்லா நன்மைகளுக்கும் ஆதிகாரணமாகிய தெய்வத்தையுடையவனாகிறான். மோட்சத்தையடைகிறான். (நிர்விகற்பசமாதி) நீ, நான் என்ற பேதமின்றி தன்னைப்போல் பிறனை நேசிக்கும் நன்னிலை பெறுகிறான்.

1265. இம்மூன்று தீய குணங்களும் உள்ளவன் எவனோ அவன் எந்த நன்மையையும் அடையத்தக்கவனல்லன். மோட்ச பதத்திற்கு தூரமானவன் ஆகிறான்.

1266. பிசாசிற்கு அடிமைப்பட்டவனாகிறான். துன்பமே அடையும் இயல்புடையவனாகிறான். பிசாசையே தலைவனாக அடைந்தவனாகிறான்.

1267. இம் முக்கியமான மூன்று தீய குணங்களை முற்றிலும் ஒழித்து அவற்றிற்கு எதிரான நற்குணங்கள் மூன்றையும் நாம் அடைந்து பேரின்பமடைய வேண்டியவர்களாயிருப்பதினால் ஷை மூன்று சோதனைகளையும் அவைகளால் நாம் அடையவேண்டிய மூன்று நற் குணங்களையும் வேதவசனங்களினால் பார்ப்பது நமக்குப்பிரயோஜனமாயிருக்கும். ஆதலால் அவற்றை மூன்று பாகமாக்கி இதன் பின் சொல்லுவோம்.

1268. இவைகளிற் சொல்லப்படும் மெய்ப் பொருள் பூரணமாய் விளங்கி அதனால் யாவரும் நன்னெறியில் நடக்கப் பரமான்மாவே வழி காட்டுவாராக.

1269. நெறிந்த நாணலை முறியாமலும் மங்கி எரிகிற திரியை அணைக்காமலும் கனி கொடா மரத்தை வெட்டிப்போடாமலும் ‘இன்னும் சில காலம் இம் மரமிருக்கட்டும். வெட்டிக் கொத்தி உரம் போட்டுத் தண்ணீர் விடுவேன்’ என்று வேண்டிக்கொண்ட பரமான்மா நமக்காகவும் வேண்டிக் கொண்டிருக்கிறார்.

1270. நம்மைச் சுற்றிலும் நமக்குப் பாரமாயிருக்கும் நுகத்தடிகளையும் தீமைகளையும் விலக்கி நன்மறையினால் காட்டப்படும் நன்னெறியில் விரைந்து நடக்கப் பிரயாசப்படுவோமாக.

---

முதற் பங்கு முற்றிற்று.

77254